T.N.L.A. Debates

Official Report

Vol. XII No. 2

8th July 1945

V211,31 N85
N85.12.8
136416

?ஓ 27-2-1986 Issued 27—2-1986

721/86.

2879
25 ஆக..86

# தமிழ்நாடு
# ..டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜூலை 8, 1985 - தொகுதி XII எண் 2

Monday, the 8th July 1985 - Volume XII No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St, George.
Madras - 600 009

..ரூ. 3-00 காசுகள்] [Priec Rs. 3-00 paise

136416
சென்னை-600 008

# உள்ளடக்கம்.

8—7—1985

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் .. 211–252

2. தகவல் கோரல் :

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை .. 252

(ஆ) இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகாண திம்புவில் பேச்சு வார்த்தை தொடங்கி இருப்பது .. .. .. 252–253

(இ) இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியில் நன்கொடை வாங்குவதாக வந்துள்ள செய்தி. 253

3. அறிவிப்புகள் :

(அ) பேரவை முன்னாள் செயலாளர் திரு. கி. மு. அழகர்சாமியிடமிருந்து நன்றி தெரிவித்து வரப்பெற்றுள்ள செய்தி .. .. .. 253–254

(ஆ) பேரவை அலுவல் .. .. .. 331–332

4. அறிக்கை அளித்தல் :

(அ) விதி 238-இன் கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை .. 254–255

(ஆ) விதி 111-இன் கீழ் பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை .. 330

(இ) விதி 112-இன் கீழ் பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை .. 330–331

5. கவன ஈர்ப்புகள்:

(அ) கோபிச்செட்டிபாளையம் வட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் மூலம் ஆதி திராவிட மக்கள் வீடுகள் கட்டிக் கொள்ள கடன் வழங்குவது .. .. .. 255–258

128–200—1

கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி பக்கங்கள்.

(ஆ) கூவம், அடையாறு ஆறுகளின் முகத்துவாரங்கள் மேடிட்டு, கழிவுநீர் தேங்கி நிற்பதால் நகர பொதுச் சுகாதாரம் பாதிக்கப்படுவது. 258–262

6. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு :

(அ) கோரிக்கை எண். 15—காவல் துறை .. 263–330

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப்பணிகள். 332–365

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 263–265

திரு. என்.எஸ்.வி. சித்தன் 266–285

திரு. எம். இராசரத்தினம் 286–288

திரு. கு. ரமணி 288–303

திரு. சா. துரைசாமி 303–312

திரு. அ. ரகுமான்கான் 312–330

திரு. கூடலூர் இ.வி. வேலு 332–340

திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் 341–351

திரு. மு. பாண்டுரங்கன் 351–358

திரு. பி.கே.எம். முத்துராமலிங்கம் 358–360

திரு. கே. அன்பழகன் 361–365

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 366

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூலை 8, திங்கட்கிழமை

ஆனி 24, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை"

எல்லா உறுப்புகளும் நிறைந்ததாய் இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை, அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கோவையில் திவான் பகதூர் சாலை.

534—(*வினா எண். 512) **திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகர எல்லைக்குள் திவான்பகதூர் ரோட்டை நேராக பாரஸ்ட் காலேஜ் வழியாக நீட்டித்துப் போடுவதன் மூலம் நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஆம், கோவை கௌலிபிரவுன் சாலையிலிருந்து, திவான்பகதூர் சாலையையும், பாரதி பூங்கா சாலையையும் இணைக்கும் பொருட்டு வனக் கல்லூரி நிலத்தின் வழியாக பாதை அமைக்க, மாநகராட்சியால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. சாலை அமைக்கத் தேவையான நிலத்தை வனக் கல்லூரியிடமிருந்து பெற, மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, இந்த திவான் பகதூர் ரோடு என்று சொல்வது கோவை மாநகரத்தின் மொத்த போக்குவரத்து நெரிசலில் ஆறில் ஒரு பங்கை நினைவு படுத்துகிற ரோடாக இருக்கிறது. நீண்டகாலமாக பாரஸ்ட் காலேஜ் வழியாக பாரதியார் பூங்கா சாலையை இணைக்கிற இந்தச் சாலை போடப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டு அரசுக்கு, மாநகராட்சி நகராட்சியாக இருந்த போதே குறிப்பு அனுப்பப்பட்டது. ஆனாலும் பாரஸ்ட் காலேஜ் மத்திய அரசின் கண்ட்ரோலில் இருக்கிறதால், மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டுமென்று ஒரு நிலையில் இதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவை நகரத்தைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள். வளர்ந்து வருகிற இந்த நகரத்தில் போக்குவரத்து நெரிசல் எந்த அளவிற்கு மக்களுக்கு இடையூறாக இருக்கிறது என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆகவே விரைவாக இந்தச் சாலையை போடுவதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக்கவனம் செலுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் அத்தனையும் ஏற்புடைய கருத்துக்கள் தான். நிலத்தை கையகப்படுத்துவதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொள்வதற்கு அரசு முயன்று வருகிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கோவை நகரிலே மெயின் ரோடு என்று சொல்லப்படுகிற பிரதான சாலையாக மேட்டுப்பாளையம் — ஊட்டி சாலை இருக்கிறது. அதற்கு இணையாக மேற்கு நோக்கி செல்கிறது இந்த திவான் பகதூர் ரோடு. அந்த ரோடின் அவசியத்தை அமைச்சர் அவர்களுக்குச் சொல்வதோடு, இதே போல 9,10,11 ஆகிய ஸ்கீம் ரோடுகள் பாலாங்குளம் வழியாக பேரூர் செல்லக்கூடிய, கிழக்கு மேற்காக செல்கிற ரோடு மண்போடப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. இதுபோலவே பல ரோடுகள் பெண்டிங்கிலே இருந்து வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை வருகை தந்தாவது, போக்குவரத்து நெரிசலைப் போக்குகிற முறையில் பிரதான சாலைகளைப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதையும் இத்தோடு இணைத்துக் கேட்க விரும்புகிறேன்.







மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற சாலைகளைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. விரைவில் கோவை வந்து மாநகராட்சியைக் குறித்து பரிசீலித்து பேசுவதாக இருக்கிறோம். அப்போது இவைகள் பற்றியெல்லாம் பேசலாம்.

### கங்கையூரில் நீர்த்தேக்கம்.

535—(*வினா எண் 887) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுகா அய்யலூர் பகுதியில் கங்கையூர் அருகில் நீர்த்தேக்கம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், கட்டுமானப் பணி எப்பொழுது தொடங்கும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,
(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### நகராட்சி நிதிக் கழகம்.

536—(*வினா எண் 927) திரு. தி. அன்பழகன், திருமதி பா. வளர்மதி மற்றும் திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி நிதி கார்ப்பரேஷன் தற்போது செயல்படுகிறதா ?

(ஆ) அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) நகராட்சி நிதி கார்ப்பரேஷன் அமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1985 ஜூலை 8

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, நகராட்சிகளில் செய்ய வேண்டிய பணிகளை செய்வதற்கு இயலாமல் நிதிப்பற்றாக்குறை காரணமாக அல்லல்படுகிறார்கள். பல நகராட்சிகளின் வருவாயில் பெரும்பகுதி அங்கே இருக்கிற பணியாளர்களின் சம்பளத்திற்கே சரியாகப் போய்விடுகிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு நிதி வழங்குவதற்காக அரசு இதில் விரைவாக நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நிதிப்பற்றாக்குறை இருக்கிற நகராட்சிகளுக்கு கடன் வழங்குவதற்காக இந்தக் கார்ப்பரேஷன் வாரியம் அமைக்கப்படவில்லை. நகராட்சிகளுக்கு வருவாய் வரக்கூடிய இனங்களுக்காக கடன் கொடுப்பதற்காகத்தான் இந்த வாரியம் அமைக்கப்படவிருக்கிறது. எனவே, நிதிப் பற்றாக்குறைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. விரைவிலே அரசு முடிவெடுத்து இந்த வாரியம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் எத்தனை நகராட்சிகள் நிதிப் பற்றாக்குறையால் இயங்கிக் கொண்டு இருக்கின்றன என்பதையும் நகராட்சி வளர்ச்சிப் பணிகளுக்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து அளிக்கப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷனால் வழங்கப்படும் நிதிகளுக்கு ஏதாவது நிபந்தனைகள் விதிக்கப்படுகிறதா ? தற்போது எத்தனை நகராட்சிகள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அரசிடம் கடன் வாங்காமல் நடந்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வாரியம் இன்னும் அமைக்கப்படவில்லை. அதற்குப் பிறகுதான் அதற்கு வேண்டிய விதிமுறைகள் என்ன என்பதைப் பற்றிச் சொல்லமுடியும். தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் என்னிடத்தில் தற்போது விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்து அளிக்கப்படும்.



1985 ஜூலை 8]

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு அதிக அளவில் வருமானம் வரக்கூடியதாக இருப்பது திரையரங்குகள் மூலம் வரக்கூடிய வருமானம் ஆகும். அதிலே உள்ள மொத்த சீட்டுகளின் அளவைக் கணக்கிடாமல், இப்போது எல்லாம் ஒட்டு மொத்தமாக ஒரு காட்சிக்கு எவ்வளவு என்று கணக்கிடுகிற நிலைமை இருக்கிறது. அதே நேரத்தில் டோட்டல் கெபாசிட்டி ஆப் தி தியேட்டர் என்று கணக்கில் கொண்டு வருகிறார்கள். அப்படி வரும்போது, வருவாய்த்துறை அதிகாரிகள் செக் பண்ணுகிற அதிகாரத்தை வைத்திருக்கின்ற காரணத்தால், அவர்கள் சீட்டுக்களை குறைத்து வைத்துக் கொண்டு, அந்தந்த நேரங்களில் நாற்காலிகளைப் போட்டுக் கொள்வதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். ஆகவே நகராட்சி ஆணையாளர்கள் அதைப் போய் கண்காணிக்கும் உரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து அளிக்கலாம்.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளில் நகராட்சிகளின் எல்லைக்கு உட்பட்ட சொத்துக்களின் மதிப்பு 10, 20 மடங்கு இன்றைக்கு உயர்ந்திருக்கின்றது. ஆனால் 10 ஆண்டுக்காலமாக நகராட்சிகளில் உள்ள சொத்துக்களுக்கு வரி ரிவிஷன் முறை கொண்டுவரப்படவில்லை. இதனால் நகராட்சிகளுடைய வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதனால் நகர மக்களுக்குத் தேவையான குடி தண்ணீர் வசதி, விளக்கு வசதி, மற்றும் சுகாதார வசதி போன்றவைகளை செய்ய முடியாத நிலைமையில், நகராட்சிகளுடைய நிதி நிலைமை மிக மோசமாக இருக்கிறது. எனவே, அவற்றைப் போக்குவதற்கு நலிந்த நகராட்சிகளுக்கு நிதி உதவி செய்யக்கூடிய வகையில் அரசின் பரிசீலனை உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது நகராட்சிகளுக்கு கார்ப்பரேஷன் அமைப்பது சம்பந்தமான கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றவைகளுக்கு தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் சேகரித்து அளிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு என்று நிதிக் கார்ப்பரேஷன் அமைக்கும் போது, நகராட்சிகளுடைய வருமானத்தைப் பெருக்குகின்ற அளவில் தியேட்டர்கள் கட்டுவதற்கு நிதி கொடுப்பதற்கு அரசு அனுமதி கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதிக் கார்ப்பரேஷன் அமைந்ததற்குப் பிறகு செய்யப்பட வேண்டிய யோசனை. அது அமைந்ததற்குப் பிறகு இதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த நிதிக் கார்ப்பரேஷனுக்கு எந்த வகையில் நிதி ஆதாரம் திரட்டப்படுவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய ஒரு பங்குத் தொகை 100 என்றும், மொத்தப் பங்குகள் 2 இலட்சம் என்றும், ஆகவே 2 கோடி ரூபாய் நிதி திரட்டுவது என்றும், அரசு இதைப்பற்றி பரிசீலித்து வருகிறது. அரசின் பங்காக 51 சதவீதமும், நகராட்சி, நகரியங்களின் பங்காக 49 சதவீதமும் இருக்கும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, மாநகராட்சி போன்றவைகளுக்கு நிதிக் கார்ப்பரேஷன் அமைக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுபோன்ற நகரசபைகளிலும், முதல் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம் என்றும் உள்ள நகரப் பஞ்சாயத்துக்களும், நகரசபைகளும், இன்றைக்கு விகிதாசார முறைப்படி இயங்கி வருகின்றன. பல நகரசபைகளிலே நிதி நிலைமை தட்டுப்பாடு காரணமாக பல நல்ல வேலைகள், விளக்கு வசதி, ரோடு வசதி, குடிநீர் வசதி போன்ற வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. எனவே, இந்த நிதிக் கார்ப்பரேஷன் அமைக்கும்போது, அவைகளுக்கும் நிதி வழங்கக்கூடிய வகையில் எதிர்காலத்திலே இடம் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியினுடைய நிதி வருவாய் பற்றாக்குறை இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. சொத்துக்களின் விலைகள் உயர்ந்தும் கூட நகரசபை அதற்கான வரி விதிப்பை விதிக்காமல் தள்ளிப்போடப்பட்டு இருப்பது ஒரு காரணம். அரசு ஊழியர்களுக்கு சம்பளம் உயர்வு ஏற்படும் போது நகராட்சி ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கும்போது அவர்கள் வரியை உயர்த்தாமல் ஊதியம்





மட்டும் கொடுத்துக் கொண்டே வருவதால் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால் நிதி பற்றாக்குறைக்கும் இந்த நகராட்சி நிதி கார்ப்பரேஷனுக்கும் சம்பந்தம் இல்லை. இந்த கார்ப்பரேஷன் ஏற்படுத்துவதன் நோக்கம் வருவாய் வரக்கூடிய இனங்களுக்கு நகராட்சிகளுக்கு கடன் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட இருக்கின்ற கார்ப்பரேஷன் ஆகும்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் மணப்பாறை நகராட்சி ஒரு பேரூராட்சிக்கு உரிய தகுதியை விட நிறைய தகுதிகளை பெற்று இருக்கிறது. அங்கே இருக்கின்ற சுகாதார பணியாளர்களுக்குக் கூட, நகர சுத்தி தொழிலாளர்களுக்கு கூட, ஊதியம் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. பல்வேறு சிக்கல் உள்ள நகராட்சியாக இருப்பதால் அதை மீண்டும் பேரூராட்சியாக ஆக்கும் பரிசீலனை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்து நொந்து போய் இருக்கின்ற நகராட்சிகளில் மணப்பாறையும் ஒன்று என்பதை நான் உணர்கிறேன். ஆனால் இப்போது பேரூராட்சியாக ஆக்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொண்டுவார்பட்டி பள்ளிக் கட்டிடம்.

537—(*வினா எண். 2257) திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், கோசுகுறிச்சி பஞ்சாயத்து கொண்டுவார்பட்டியில் பள்ளிக் கட்டிடம் கட்டப்பெற்று, திறக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், பள்ளியைத் திறக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் ஊராட்சி ஒன்றியம், கோசுகுறிச்சி பஞ்சாயத்து, கொண்டுவார்பட்டியில் ரூபாய் 96 ஆயிரம் மதிப்பீட்டில் பள்ளிக்கு ஒரு கட்டிடம் கட்டப்பட்டு 31–10–1984-ல் மேற்படி கட்டிட வேலை முடிவடைந்து இருக்கிறது. பள்ளிக் கட்டிடத்தின் சாவி மேற்படி பள்ளி தலைமை ஆசிரியர் திரு. பெரியசாமி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் 10–1–1985-ல் திறக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

[1985 ஜூலை 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள். 538, 539 மற்றும் 540 ஆகியவை மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

வினா எண்கள் 541 மற்றும் 542 மாண்புமிகு சட்ட அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப் படுகின்றன.

தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி.

543—(*வினா எண். 1982) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 ஆம் ஆண்டு மத்திய அரசு தேசிய நெடுஞ் சாலை திட்டத்திற்காக தமிழ்நாடு அரசுக்கு அளித்த தொகை எவ்வளவு ?

(ஆ) அவை அனைத்தும் செலவு செய்யப்பட்டு விட்டனவா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1984—85-ஆம் ஆண்டில், மத்திய அரசு, தமிழ்நாடு அரசுக்கு தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகளுக்காக அளித்த தொகை (பாம்பன் பாலத்திட்டத்தையும் சேர்த்து) ரூ. 860.61 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) அவை அனைத்தும் செலவு செய்யப்பட்டுவிட்டன.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகை யானைப்பசிக்கு சோளப் பொரி என்பது போல் மைய அரசின் நிதி இருக்கின்ற காரணத்தால், இந்த நிதியை உயர்த்திக் கேட்க மாநில அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் முயற்சிக்கிறது. அவர்களும் முடிந்த அளவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி கொடுத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். 1985—86-ல் கொஞ்சம் உயர்ந்து வருகிற வாய்ப்பு இருக்கிறது.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி பகுதிகளில் இன்றைய தினம் நிதி பற்றாக்குறை காரணமாக எல்லா வீதிகளும் சீர் அழிந்து இருப்பது முன்னிட்டு, இதை தேசிய நெடுஞ்சாலை செப்பனிட முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 8]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதல் கேள்வியில் இதனுடைய நிதி நிலைமையைப் பற்றி சொன்னார் கள். இப்போது நகராட்சிகளுடைய சாலைகளையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள் அது இன்னும் கொடுமையாக போய்விடும் என்று கருதுகிறேன். எனவே இப்போது உள்ள நிதியை வைத்துக்கொண்டு, ஏற்கனவே இருக்கின்ற நெடுஞ்சாலையில் இருக்கின்ற அந்த சாலைகளை மட்டும் பராமரிப்பது என்பது மிகவும் சிரமமாக இருக்கின்ற காரணத்தால் இந்த சாலைகளை உள்ளாட்சியே கவனிக்கும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி மயிலையைப் பற்றி இருந் தாலும் கூட, சைதையை தொட்டு ஆயிரம் விளக்கு வரை பதில் சொல்லக்கூடிய திறன் மாண்புமிகு அமைச்சருக்கு இருக்கின்ற காரணத்தால் நான் இந்தக் கேள்வியைத் தொடுக்கிறேன். இதற்கு அமைச்சர் அவர்கள் சிறப்பாக பதில் சொல்வார்கள் என்று நம்புகிறேன். இதற்கு முன்னால் நடந்த நிகழ்ச்சியை நினைவுப்படுத்துகிறேன். எனவே இதற்கு முன்னால் இந்த மன்றத்தில் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது சொகுசு பேருந்து, படுக்கை வசதி கொண்ட குளு குளு பேருந்து பற்றி பதில் அளிக்கும்போது அந்த பஸ் புறப்படுகின்ற நேரம் இரவு 10 மணியாக இருக்கவேண்டும் என்றும், அப்போது தூக்கமும் வரவேண்டும் என்றும் அது வந்து சென்னையை சேருகின்ற போது காலை மணி 6.00 மணியாக இருக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு அமைப்பு இருந்தால் நிச்சயமாக அந்த பஸ் விடுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டு இருக்கிறார்கள். திருச்சி மாநகரம் தமிழகத்தினுடைய மையத்தில் அமைந்து இருக்கின்ற ஊர். தமிழக முதலமைச்சர் அவர்கள் இதயத்தில் எந்த நேரமும் குடிக்கொண்டு இருக்கின்ற ஊர். தமிழக அமைச்சர் களுடைய கடைக்கண் எப்போதும் அதன் மீது பட்டுக்கொண்டு இருக்கின்ற ஊர். அங்கிருந்து ஒரு சிறப்பு பேருந்து விட்டால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இளமையானவர், இனிமையானவர், புதுமையானவர். எனவே இந்த கேள்விக்கு ஒரு நல்ல பதிலை அளிப்பதன் மூலம் சோழ மண்டல மக்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்குவதைப் பற்றிய கேள்வி இது. எனவே, இந்தக் கேள்விக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பேருந்தைப் பற்றிச் சொல்லும்போது, இந்த அரசாங்கத்தைப் பற்றி இவ்வளவு

[1985 ஜூலை 18

நன்றாகவும், திருச்சி மாவட்டத்தின் மீது இந்த அரசாங்கம் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையும் இனிமையாகச் சொல்லி இருக்கிறார்கள். எனவே, அது பற்றி தனியாகப் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலைகளைப் பராமரிக்கிற பொறுப்பு இப்போது யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது, பராமரிப்புக்கென்று மத்திய அரசு ஏதேனும் தனியாக நிதி ஒதுக்கம் செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, புதிதாக அமைப்பதற்கும், பராமரிப்புக்கும் எல்லாம் சேர்த்துத்தான் மத்திய அரசு நிதியை ஒதுக்குகிறது. பராமரிப்பினை மாநில அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளே, நம்முடைய அதிகாரிகளை வைத்து கவனித்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, தேசிய நெடுஞ்சாலைத் துறைச் சாலைகள் எல்லாம்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு பதில் சொல்கிறபோது, ரோடுகள் எல்லாம் நன்றாக இல்லை, எனவே பேருந்துகள் அடிக்கடி கெட்டுவிடுவதாக சொன்னார். இதைக் கருத்தில் கொண்டாவது— 1984—85-ல் மத்திய அரசு கொடுத்திருக்கக் கூடிய நிதி, பற்றாக்குறை நிதி என்று சொன்னார்கள்; எனவே, 1985—86-க்காவது, தமிழகத்தில் இருக்கக்கூடிய இந்த தேசிய நெடுஞ்சாலைகள் எல்லாம் நன்றாக, சிறப்பாக சரி செய்யக்கூடிய அளவுக்கு, எவ்வளவு நிதி கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள்? தமிழக அரசு எவ்வளவு கேட்டிருக்கிறது? பற்றாக்குறையாக இருந்தால் மேலும் கேட்க அரசு ஏதேனும் பரிசீலனை செய்ய இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1,250 இலட்சங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் கூடுதலாக வேண்டும் என்ற உணர்வைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, ரயில்வே பிரிட்ஜுக்கு மேலே மேம்பாலம் கட்டுதல், பல பாலங்களை அமைத்தல் என்று ஒவ்வொன்றும் தனித்தனியாக எழுதிக்கொண்டிருக்கிறோம். மொத்தமாக அந்தத் தொகை இப்போது கொடுப்பதாக ஒப்புதல் வந்திருக்கிறது. அதற்குப் பின்னாலேதான் கூடுதலாக கேட்பதைப் பற்றி மேலும் யோசிக்கவேண்டும்.



1985 ஜூலை 8]

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில் டெல்லியிலிருந்து-சண்டிகார் வரை எப்படி ஒரு வழிச் சாலையாக இருக்கிறதோ, அதுபோல், சென்னையிலிருந்து-உளுந்தூர்பேட்டை வரை தேசிய நெடுஞ்சாலையை ஒரு வழிச் சாலையாக அமைக்கிற உத்தேசம் இருக்கிறதா? அதற்கென்று தனியாக மத்திய அரசிடமிருந்து மாநில அரசு நிதி பெறுமா? காரணம், சென்னையிலிருந்து-உளுந்தூர்பேட்டை வரைதான் தமிழகத்திலே அதிகமான விபத்துக்கள் நடைபெறுகின்றன. எனவே, அந்தத் தேசிய நெடுஞ்சாலையை ஒரு வழிச் சாலையாக அமைத்துத் தர வேண்டும் என மாநில அரசு, மத்திய அரசை வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அவர்கள் கேட்பது, டபுள் ரோடு என்று நான் நினைக்கிறேன். போவதற்கு ஒரு பாதை, வருவதற்கு ஒரு பாதை; ஒரு வழிச் சாலை என்பது சிங்கிள் ரோட்டைக் கூட அப்படிச் சொல்வார்கள். எனவே, இதிலே நாம் குழப்பிக் கொள்ளக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இப்போது தேசீய நெடுஞ்சாலை 45-ல் 27/8 கி.மீட்டரிலிருந்து 67/0 கி.மீ. வரை அகலப் படுத்த வேண்டும் என்பதற்காக இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்கு மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்குவதற்கான ஏற்பாடு செய்து இருக்கிறது. அந்த வேலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், உளுந்தூர் பேட்டை வரை என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. இப்போது அ தச் செய்வதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இதற்கு முன்பு திருவாங்கூர்—கொச்சி இருந்த காலத்தில், ஆரல்வாய்மொழியிலிருந்து திருவனந்தபுரம் வரை சிமென்ட் ரோடு போடப்பட்டிருந்தது. அப்படி வருகின்றபோது, அதற்கு மெயின்டனென்ஸ் செலவு குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதன் அடிப்படையில் தமிழகத்தில் அதேபோல சாலைகளை சிமென்ட் ரோடாக மாற்றுகின்ற திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா? இதனால் பராமரிப்புச் செலவு மிச்சம் ஆகும். எனவே, இவற்றை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, பராமரிப்புச் செலவு குறைவுதான். ஆனால், ஆரம்பத்திலே வரும் ' இனிஷியல் காஸ்ட் ' மிகக் கடினமான, அதிகமான அளவில் இருக்கிறது. எனவே, அதைச் சந்திப்பது என்பதே மிகவும்

கடினம். இப்போது வருகின்ற ஆய்வின்படி, சிமெண்ட் ரோடுகளை விட தார் ரோடுகள்தான் சிறப்பாக இருக்கும் என்று சொல்கிறார்கள். காரணம், சிமெண்ட் ரோடுகள் உடைந்து விடுகின்றன. மீண்டும் சிர் செய்வது கடினம். எனவே, அது அவ்வளவு சரி அல்ல என்று இப்போது ஆய்விலே கூறப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேசீய நெடுஞ்சாலைகளில் வளைவுகள் அதிகமாக இருப்பதால் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான போக்குவரத்து ஊர்திகளைச் செலுத்தும் போது, அதிகமான செலவுகள் ஏற்படுகின்றன என்றும், மேடு, பள்ளத்திலேயும், உயர்ந்த இடங்களிலேயும் போக்குவரத்து வாகனங்கள் செல்லுகின்ற பொழுது, அந்த பஸ்களுக்கு அதிகமான அளவிற்கு நஷ்டம் ஏற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறதே, அதை மனத்தில் வைத்துக் கொண்டு அந்தப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விரைந்து செயல்படவும், அந்தக் கழகங்கள் இலாபத்தில் இயங்கவும் மத்திய அரசாங்கத்தினிடத்தில் சொல்லி, நிதியை அதிகமாகப்பெறுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவரவர்களே, பலயிடங்களில் தேசீய நெடுஞ்சாலைகளில் உள்ள அந்த வளைவுகளை நேர் ஆக்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கபட்டு, செய்யப்பட்டிருக்கிறது. மேலும் தொடர்ந்து அப்படிச் செய்ய வேண்டுமென்பதுதான் ஆசை. இப்பொழுது ஓரளவுக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை அதிகமாகச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நாம் தொடர்ந்து வைக்கலாம்.

திரு. [illegible]. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1984 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் ஒதுக்கிய நிதியைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பணிகளுக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்கிய நிதியைத் தவிர மாநில அரசாங்கம் ஏதாவது செலவு செய்து இருக்கிறதா? அப்படியென்றால் மாநில அரசாங்கத்தின் பங்கு எவ்வளவு ? மேலும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் சொன்னது, ஒரே வழித்தடத்தில் போவதற்கும், வருவதற்குமான நிலைமை இருக்கிறது, எனவே, அந்தச் சாலையை அகலப்படுத்தாத காரணத்தினால் விபத்துக்கள் அதிகமாக நடந்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் அந்தச் சாலைகளை அகலப்படுத்தி, திருச்சி வரையில் நீட்டித்து, இரண்டு பாகமாகப் பிரித்து, ஒன் வே என்ற முறையில் செய்வதற்கான செயற்குறிப்பு தற்பொழுது அரசினிடத்தில் இல்லையென்றாலும், எதிர்காலத்தில்



உண்டாகக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் கருதி, அந்தப் பணியை செய்து மக்களைப் பாதுகாக்கக்கூடிய திட்டமான இந்தப் பணியைத் தொடங்குவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவரவர்களே, தேசீய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில், அது தேசீய நெடுஞ்சாலையாக இருப்பதால், அதில் மாநில அரசின் பங்கு இல்லை ; மத்திய அரசின் பணத்திலிருந்துதான் செய்து கொண்டிருக்கிறோம். மாநில அரசைப் பொறுத்த வரையில் நம்முடைய ஸ்டேட் ஹைவேஸ்க்குப் பணம் ஒதுக்கிக் கொண்டிருக்கிறது. பாதையை அகலப்படுத்தும் திட்டத்தைத் திருச்சிவரையில் கொண்டு போகலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்; திருச்சி வரையில் மட்டுமல்ல, பல்வேறு ஊர்களுக்குப் போகின்ற அத்தனை பாதைகளையும் அகலப்படுத்த வேண்டுமென்பதுதான் நம்முடைய ஆசை; ஆனால் அதற்கான பணம்தான் இல்லை. அதற்கு வழியிருந்தால் எல்லாவற்றையும் செய்ய ஆரம்பித்து விடலாம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முதலிலே பதில் சொன்ன பொழுது, மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகளுக்காக 842.6 இலட்சம் ஒதுக்குவதாக, அதாவது 8 கோடியே 42 இலட்சம் ரூபாய் ஒதுக்குவதாகத் தெரிகிறது. அதுவும் பாம்பன் பாலத்திட்டத்தையும் சேர்த்து என்று தெரிவித்தார்கள். நிதி ஒதுக்குகின்றபொழுது இந்த இந்தக் காரியங்களுக்கு என்று ஏதாவது வகைப்படுத்தி நிதியை ஒதுக்குகிறார்களா ? பாம்பன் பாலத்திட்டத்திற்கு என்று எவ்வளவு நிதி ஒதுக்குகிறார்கள், மற்றச் சாலைகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தத் தொகையைப் பொறுத்தவரையில், மொத்தமாகத்தான் என்னிடத்தில் கணக்கு இருக்கிறது. பாம்பன் பாலத்திற்கு எவ்வளவு என்று இப்பொழுது சரியான கணக்கு இல்லை. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக நிதி ஒதுக்கப்படுகிறது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தேசீய நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகையைப்பற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தத் தொகை முழுவதும் மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது அந்தத் தொகை .மாநில அரசுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 8

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தச் சாலை பூராவும் மத்திய அரசுக்குச் சொந்தமான சாலைகள். இந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கான அந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பணத்தை மட்டும் பெறுகிறோம் ; அவர்களுக்குச் சொந்தமான சாலைகளுக்கு அவர்கள் செலவு செய்கிறார்கள். எனவே, இதிலே மானியமா அல்லது கடனா என்ற பேச்சே இல்லை.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் இப்பொழுது சரியான முறையில் அமைப்பு இல்லாமல் இருந்தும்கூட, ரோடுகளில் மரங்களை வைக்கிறார்கள். அதற்காகப் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை அரசு செலவு செய்கிறதே, அந்தப் பணத்தைக் கொண்டு அந்த ரோடுகளை நல்ல முறையில், சரியான முறையில் செயல்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஒவ்வொரு திட்டத்தையும் சில நன்மைகளைக் கருதி நாம் செய்கிறோம். மரம் வைப்பது என்பது நல்ல திட்டமாக இருப்பதால் அது நாட்டுக்குத் தேவையானதாக இருக்கிறது. இதுபற்றிக்கூட வனத்துறையில் கேள்வி வந்திருந்தால் மரம் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்களே கூட ஒரு கேள்வியைக் கேட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே, அவசியம் என்பதால்தான் செய்துகொண்டு இருக்கிறோம்

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் எவ்வளவு மோட்டல்களை வைப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது ? இதுவரையில் எத்தனை கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன ? நடப்பாண்டில் எவ்வளவு கட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது ? ஹைவேசில் உள்ள மரங்களைப் பராமரிப்பதற்கான பொறுப்பு வனத்துறையிடம் ஒப்படைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மோட்டல்களைப் பொறுத்தவரையில் என்னிடத்தில் குறிப்பு தற்போது இல்லை. இது சம்பந்தமாகத் தனிக்கேள்வி போட்டால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ள கடலோர இடங்களையெல்லாம் தேசிய நெடுஞ்சாலையில் சேர்த்து, அதை முழுமையாக பராமரிக்க, செப்பனிட, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



[1985 ஜூலை 8

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது 1883 கிலோ மீட்டர் மத்திய அரசின் நெடுஞ்சாலை துறையோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் கொஞ்சம் கிலோ மீட்டரை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் இப்போது எடுத்து கொள்வது கடினம் என்று திருப்பி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் மேலும் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். ஆனால், எந்தப் பகுதி என்று சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தை மனதிலேகொண்டு நடவடிக்கை எடுக்க முயற்சிப்போம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலே உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன. விருதுநகர்-அருப்புக்கோட்டை, அருப்புக்கோட்டை திருச்சுளி செல்லும் பாதையில் ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. இதிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே செல்வாக்கு படைத்தவர்கள் ஈடுபட்டிருப்பதாக அறிகிறோம். இதிலே அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எவ்வளவு பெரிய செல்வாக்கு படைத்தவர்களாக இருந்தாலும், நல்ல ஆதாரத்தோடு தகவல் கிடைக்கின்றபோது நாங்கள் கடுமையான நடவடிக்கையை எடுக்கிறோம். ஆனால், பல நேரங்களில் அவர்களைக் காட்டிக் கொடுக்க பலர் தயாராக இல்லை. அவர்களைப் பிடிப்பது என்பது சிரமமாக இருக்கிறது. ஆனால் யார் கிடைக்கின்றார்களோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைத் தடுக்க வேண்டுமென்பதற்காக புதிதாக ஏதாவது முயற்சிகள் எடுக்கலாமா என்பதைப் பற்றி இந்தத் துறை ஆய்வு செய்துகொண்டிருக்கிறது.

திருமதி எ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேசிய நெடுஞ்சாலை சம்பந்தப்பட்டவரை சென்னை-டு-கன்னியாகுமரி இடையிலுள்ள லெவல் கிராஸ் இருக்கும் இடங்களில, சமயநல்லூர்-டூ-மெட்டூர், பிட்வீன் திண்டுக்கல் அண்ட் அம்மையநாயக்கனூர், இதற்கு இடையில் உள்ள இடங்களிலே எல்லாம் பாலம் கட்டுவதற்கு, நிலத்தை கையகப்படுத்துவதற்கும் 6.98 இலட்சம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. அது இந்தத்.தொகையோடு சேர்ந்திருக்கிறதா ? அப்படி தகவல் வந்திருந்தால், அந்த வேலையை இந்த ஆண்டிலே எடுத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன் .

[1985 ஜூலை 8

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது சம்பந்தமான குறிப்பு இல்லை. இந்தக் கேள்விக்கும், அதற்கும் சம்பந்தம் இருந்தாலும், எல்லாத் தகவல்களையும் கொண்டுவருவது என்பது சிரமம். எனவே, தனிப்பட்ட முறையில் எழுதிக் கொடுத்தால், விவரமாக பதிலளிக்க இயலும். பணம் கொடுத்திருந்தால், உடனடியாக அந்த வேலையைத் துவக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசையும்கூட, அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

திரு. க. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேசீய நெடுஞ்சாலையில் பல இடங்களிலே ரயில் பாதை குறுக்கிடுவதால், அடிக்கடி கேட்டை அடைத்து விடுகிறார்கள். ஆகவே போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. வாகனங்கள் செல்வதற்கும் கால நேரம் அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் மேம்பாலம் அமைப்பதற்கு, இந்த நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளாமல், தனியாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ரெயில்வே மேம்பாலங்களைப் பொறுத்தவரையில் தனித்தனியாக, ஒவ்வொன்றாக நாம் கேட்டு, அதற்குத் தனியாக பணம் ஒதுக்குகிறார்கள். அப்படி பல இடங்களில் கட்டப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் அடுத்த ஆண்டு என்று தள்ளிப்போடப்படுகிறது. எனவே, தனியாகக் கேட்டால் ஒதுக்குவதற்கு சில நேரங்களில் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, மாநில சர்க்காரின் ரோடுகளை மத்திய அரசாங்க தேசிய நெடுஞ்சாலை எடுத்துவருவதாகச் சொன்னார்கள். அந்த வகையில் மதராஸ்—டி—கும்பகோணம், தஞ்சாவூர் சாலைகளை வருகிற ஆண்டிலாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்துவார்களா என்றுஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எந்தெந்த சாலைகள் பக்கத்து மாநிலத்தைத் தொடுகிறதோ, அந்தச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கொள்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த சாலைகளும் ஏற்கனவே சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். அப்படி சேர்க்கப்படாமல் சில பகுதிகள் இருக்கலாம். அதற்கு தனியாக பார்த்துதான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.



1985 ஜூலை 8]

திரு. வே. கு. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேசிய நெடுஞ்சாலைகளை சீரமைக்கின்ற நேரத்தில், வளைவு ரோடுகள் நேராக்கப்படுகின்றபோது, சில ஏக்கர் நிலங்கள் காலியாக இருக்கின்றன. அப்படி காலியாக உள்ள இடங்களை பொதுமக்கள் உபயோகத்திற்கு, கூலி வேலை செய்கிறவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வீடுகள் கட்டுவதற்கு, அவர்கள் உபயோகத்திற்குக் கொடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதை எந்த காரியத்திற்கு பயன்படுத்துவதாக இருந்தாலும், மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் பயன்படுத்தும் வசதியிருக்கிறது. இப்போது அப்படியிருக்கின்ற பெரும்பாலான இடங்களை எடுத்து, அதிலே மோட்டல்கள் கட்டவும், போக்குவரத்துப் பயணிகள் பயன்படுத்துவதற்கான அடிப்படையில் தற்போது நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். அது மட்டுமல்லாமல், நெடுஞ்சாலை துறையினர் கோடவுன் கட்டுவதற்கும், பல பொருள்களைக் கொண்டுவந்து வசதியாக வைப்பதற்கும் இடம் தேவைப்படுகிறது. அதற்குப் போக மீதியிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை யோசித்துப் பார்க்கவேண்டும். ஆனால், அந்த அளவுக்கு இடம் இருக்கிறதா என்பது சந்தேகத்திற்கு உரியதாகும்.

(முற்பகல் 9-30)

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த நெடுஞ்சாலைகளிலுள்ள பாலங்கள் அத்தனையும், பெரும்பான்மையாக அகலமாக இருந்தாலும், பல முக்கியமான இடங்களிலே வளைவான பகுதிகளிலே கூட குறுகலான ஒரு வழிப் பாதையாக இருக்கிறது. அந்த முறையிலே இருக்கக்கூடிய மதுரை-தேனி சாலையில் உள்ள 2, 3 பாலங்களிலே 15 நாட்களுக்கு ஒரு முறை சிறுவர்கள் விபத்துக்குள்ளாகிற, இறக்கிற சூழ்நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதை மாற்றியமைக்கிற முறையிலே கூடிய விரைவிலே அந்தப் பாலங்கள் அத்தனையையும் அகலப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, குறுகலாக இருக்கிற பாலமாக இருந்தாலும், பழுதடைந்த பாலமாக இருந்தாலும், வலிவிழந்த பாலமாக இருந்தாலும், அந்தப் பாலங்களையெல்லாம் புதிதாகக் கட்டவேண்டுமென்பது சரிதான். ஆனால் நமக்கு எவ்வளவு நிதி வருகிறதோ, அதை வைத்துக் கொண்டு, இருக்கின்றவற்றில் மிகவும் மோசமான நிலையில் உள்ள

பாலத்தை முதலிலே எடுத்துக்கொண்டும், மற்றவற்றை அடுத்தடுத்துப் படிப்படியாக எடுத்துக்கொண்டும் வருகிறோம். ஆகவே, அது வருகிறபோது அது கட்டவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்பற்றி அவர்கள் விவரமாக எழுதிக்கொடுப்பார்களானால், அது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும் பார்த்து அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தங்கவேலு : தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஏழைகள் முகத்திலே இருக்கிற மேடு பள்ளங்களைப் போல தேசிய நெடுஞ்சாலைகளிலே மேடு பள்ளங்கள் இருக்கின்றன. மலைப்பகுதியான இடங்களிலே உள்ள சாலைகள் நெடுஞ்சாலைகளாக இருக்கின்றன. சமீபத்திலே பெய்த கடுமையான மழையின் காரணமாக வால்பாறை பகுதியிலே மழையால் அடித்துக்கொண்டு போகப்பட்டு விட்டது. எனவே, அவைகளையெல்லாம் பார்த்து ஆராய ஓர் ஆய்வுக் குழுவை ஏற்படுத்தி சேதங்களை உடனுக்குடன் பார்த்து, நிவாரணம் செய்வதற்கு ஆலோசனை கூறுவார்களா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர் மேடுபள்ளங்களுக்கு நல்ல உதாரணம் சொன்னார்கள். மத்திய அரசாங்கம் எவ்வளவு பணம் ஒதுக்குகிறதோ அதை வைத்துக்கொண்டுதான் நாம் மேடு பள்ளங்களை நிரப்பிகொண்டிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் கூடுதலாக அங்கிருந்து கிடைத்தால் மேடுபள்ளம் இல்லாமல் நாம் செய்யமுடியும். மாண்புமிகு உறுப்பினர் மாநில நெடுஞ்சாலைத் துறை, தேசிய நெடுஞ்சாலை இரண்டையும் சேர்த்து சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தேசிய நெடுஞ்சாலையாக இருந்தால் அவர்கள் ஒதுக்குகிற பணத்தை வைத்து நாம் அதைச் செய்கிறோம். இங்கே இருக்கிற நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரை இங்கே எவ்வளவு பணம் இருக்கிறதோ அதை வைத்துக்கொண்டு நாம் செய்கிறோம். அவர்கள் சொல்கின்ற சாலையைப் பொறுத்தவரையில், இருக்கின்ற நிர்வாகத்தை வைத்து, எந்த அளவு அது மோசமாக இருக்கிறது என்று பார்ப்பதற்கு நமக்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டி என்று போட்டால் அவர்கள் ரிப்போர்ட் வருவதற்கு 3 ஆண்டுகள் ஆகும். ஆகவே தற்போது இருக்கிற முறையில் அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

பொறுந்தலாற்றின் குறுக்கே பாலம்.

544—(*வினா எண். 2131) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனி தொகுதியில் தாமரைக்குளம், இராஜாபுரம் கிராமங்களை இணைக்கும் வகையில்





பொறுந்தலாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அந்தப்பாலத்தைப் பற்றி நான் அமைச்சர் அவர்களிடத்திலே பல முறைகள் சொல்லியிருக்கிறேன். அது மாத்திரமல்லாமல் இரண்டு தடவைகள் அது பார்ட்-2 ஸ்கீமிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை தூக்கியெறிந்துவிடாமல்— அந்த மக்கள் எல்லாம் உங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்—அவர்களுக்கு இந்த உதவியைச் செய்ய வேண்டும். தாமரைக்குளத்திலே மழை பெய்து 2 மாத காலமாக ஆற்றுக்குள் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் எல்லாம் அந்த வழியாக வரவேண்டும், அவர்களும் இப்போது 8 மைல்கள் சுற்றித்தான் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் மனதிலேகொண்டு மீண்டும் இதை மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டு அந்த வேலையை எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதற்காக 25 லட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். வருகிற ஆண்டு நிதி வசதியைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பாலத்திற்காக 14 லட்ச ரூபாய் எஸ்டிமேட் போட்டு சம்பந்தப்பட்ட இலாகாவினர் இங்கே அனுப்பிவைத்தார்கள். மீண்டும் அதை மறுபரிசீலனை செய்கிறபோது 40 லட்ச ரூபாய் எஸ்டிமேட் போட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் இரண்டும் இல்லாமல் 25 லட்ச ரூபாய் என்று சொல்லுகிறார்களே, எது உண்மை என்று அறிய விரும்புகிறேன். எப்படியாகிலும் அதை விட்டுவிடாமல், இந்த ஆண்டு எடுத்துக்கொள்வேன் என்று ஒரு உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் என்னிடம் ஓரலாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஓரலாகச் சொன்னதை உண்மையிலேயே இந்த ஆண்டு எடுத்துக்கொள்கிறேன் என்று உத்திரவாதமாக அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[1985 ஜூலை 8

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இங்கே கொடுத்த குறிப்புப்படி ரூ. 25 இலட்சம்தான் சரியான குறிப்பு என்று நான் நம்புகிறேன். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் ஓரல் உத்தரவாதம் கொடுத்திருக்கிறேன் என்று சொல்கிறார்கள். அந்த உத்தரவாதத்தைக் காப்பாற்றுவதற்காக, இப்பொழுது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஓரல் உத்தரவாதம் சொல்ல ஆசைப்படுகிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர் ரெக்கார்ட் செய்ய வேண்டுமென்று நினைத்திருக்கிறார்கள். நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். நிதி வசதியைப் பொறுத்தவரை எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். எனவே அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஸ்டான்லி மருத்துவ மனையின் அருகில் மேம்பாலம்.

545—(*வினா எண் 2157) திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்டான்லி மருத்துவமனை அருகில் உள்ள ரயில்வே லெவல் கிராசிங்கில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அங்கு மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அருகில் உள்ள இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் அமைக்கும் பணியை செயல்படுத்துவது குறித்து சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஸ்டான்லி மருத்துவ மனைக்குப் பக்கத்திலே மேம்பாலம் அமைப்பதற்காக மாநகராட்சித் திட்டம் தீட்டுவதாகச் சொல்கிறார்கள். ஆனால், நான் அறிந்த வரையில், மேம்பாலம் கட்டப்போவதாக இல்லையென்றும், சப்–வே கட்டப்போவதாகவும் தான் தெரிகிறது. அதிலே எது உண்மை? அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறோம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டுவது என்பது மத்திய அரசாங்க அனுமதியோடு, மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கிய பின்பு நாமும் சேர்த்து செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. எனவே, மேம்பாலம் கட்டுவதற்காக மத்திய அரசாங்கத்திற்கு எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சப்–வேயும் கட்டுகிறார்கள். அதற்காக, ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டதில், ரூ. 10 இலட்சம் இப்பொழுது ஒதுக்கப்பட்டு, அந்த வேலை துவங்க இருக்கிறது. எனவே, இரண்டுமே செய்கிறார்கள். அதிலே அவர்களுக்கு வருத்தம் இருக்காது என்று கருதுகிறேன்.



1985 ஜூலை 8]

திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஆரம்பத்திலே நான் சொன்னேன். ஒரு பக்கம் சப்-வே என்றும் சொல்கிறார்கள், இன்னொரு பக்கம் மேம்பாலம் என்றும் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் பணம் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். சப்-வே கட்ட மொத்தம் ரூ. 1 கோடி ஒதுக்கவும், முதலிலே ரூ. 10 இலட்சம் செலவிடவும், திட்டம் தீட்டியிருப்பதாக நான் அறிகிறேன். அந்த வேலையை எப்பொழுது துவக்கப் போகிறார்கள்? உடனடியாக துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த சப்-வே மக்கள் நடந்து செல்வதற்காக; மேம்பாலம் என்பது வாகனங்கள் செல்வதற்காக. மேம்பாலம் கட்டுவதற்கு அதிகத் தொகை ஆகும். அதிலே பாதியை மத்திய அரசாங்கமும், மீதிப் பாதியை நாமும் போட்டுக்கொள்வோம். அந்த அடிப்படையிலேதான் மேம்பாலம் கட்டப்படுகிறது. எனவே மத்திய அரசாங்கத்திலேயிருந்து எப்பொழுது நிதி கிடைக்கிறதோ அப்பொழுது தான் அந்த வேலை தொடங்கப்படும், மேம்பாலத்தைப் பொறுத்தவரை. சப்-வே மாநகராட்சியினுடைய சார்பாக இருக்கிற காரணத்தால், ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், சில வேலைகள் அதிலே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் எனக்குக் குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அதிலே ஏறத்தாழ ரூ. 1 கோடி செலவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டான்லி மருத்துவ மனைக்கும், ராபின்சன் பார்க்கிற்கும் இடையிலே மேம்பாலம் கட்டப்படுவது என் தொகுதியில் இருக்கிற இடத்திலே. உள்ளாட்சித் துறை அமைச்சராக திரு. குழந்தைவேலு இருந்தபொழுது,ஒரு குறிப்பிட்ட அளவு தொகை அனுமதிக்கப்பட்டுவிட்டதாகவும் 'only the consent has to be obtained from the Railways, என்று இங்கே பதில் அளிக்கப்பட்டு ரெக்கார்ட் ஆகியிருக்கிறது. ஆகவே, அந்தத் தொகை எவ்வளவு? கன்செண்ட் பெற்று பாலம் கட்டப்படும் என்று அவர் சொல்லி, 3, 4 வருடங்கள் ஆகிவிட்டன. உள்ளாட்சித்துறை அமைச்சரின் கொள்கை விளக்கக் குறிப்பிலே,தற்போது சப்-வே கட்ட ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்த ஆண்டு ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது வேறு. நாங்கள் கேட்பது மேம்பாலம் கட்டுவதுபற்றி. அந்த மேம்பாலம் கட்டுவதற்காக மத்திய சர்க்கார் ஏற்கனவே தொகை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'whether consent has been obtained' பெற்றாகிவிட்டதா, ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அனுமதி கொடுத்த பின்புதான் மத்திய அரசாங்கம் பணம் ஒதுக்கும். அந்த அனுமதி இல்லாமல் அதற்கு முன்னாலே பணத்தை ஒதுக்கிவிட்டு அதற்குப் பின்பு அனுமதி பெறுவது என்பது நடக்காது. ஆனால், முன்னாள் அமைச்சர் அவர்கள் சொல்லியது எதற்காக என்றால், சப்-வேக்கு, மத்திய அரசாங்க அனுமதியைப் பெற்றுத்தான், ரெயில்வே துறை அனுமதியைப் பெற்றுத்தான் ஆக வேண்டும். ரெயில்வே லைனுக்குக் கீழே போடுகிற காரணத்தால், அதற்கும் அனுமதி தேவை. ஒரு வேளை, அதைத்தான் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அதைப் பற்றி சரியான குறிப்பு என்னிடத்திலே இல்லை. என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பு, மத்திய அரசாங்கத்திலே, மேம்பாலத்தைப் பொறுத்தவரை கேட்டிருக்கிறோம், என்பதுதான். சப்-வேயைப் பொறுத்தவரை ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே, ரூ. 10 இலட்சம் ஆரம்பப் பணிகளுக்காக, இந்த ஆண்டு செலவழிக்கப்பட கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பு என்னிடத்திலே இருக்கிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அருகில் உள்ள பாதையில் போக்குவரத்தும் அதிகம் இல்லை; லெவல் கிராசிங் இருக்கிற காரணத்தால், வண்டிகள் ஏராளமாக நின்றுகொண்டு மருத்துவமனைக்கு இடையூறாக இருக்கிறது. இந்தக் காரணங்களால் அந்தப் பாதையை, ஸ்டான்லி மருத்துவ மனையை விரிவு படுத்துவதற்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அந்தப் பாதையினுடைய இரண்டு ஓரங்களிலும் 1/2 கிலோ மீட்டருக்குள்ளாகவே 2 மேம்பாலங்கள் இருக்கின்ற காரணத்தால், அதை கன்சிடர் பண்ண அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அது இப்போது மருத்துவமனையா, பாதையா என்ற பிரச்சினை எழுந்திருக்கிறது. அதுபற்றி தனியாகப் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, இப்போது ஒரு பதிலை முழுமையாகச் சொல்லிவிட முடியாது. அந்தப் பாதையிலே மருத்துவமனை கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். அதுபற்றி தனியாகப் பேசி, பாதையை அடைப்பது பொருத்தமாக இருக்குமா என்று பார்த்து, பின்னால் முடிவு செய்யலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, அங்கே இருக்கிற மருத்துவமனைக்குச் செல்ல இப்போது பெருத்த இடையூறு இருக்கிறது. அந்த லெவல் கிராசிங்கைக் கடந்துதான்





தென்பகுதியில் இருக்கிற மெட்டர்னிட்டி பகுதிக்குச் செல்ல வேண்டும். அதைப்போன்று இஞ்சுரி சம்பந்தப்பட்ட சிகிச்சைக்கு நார்த்தன் சைடு செல்ல வேண்டும். அதற்கு எல்லாம் இது இடையூறாக இருக்கிறது. அண்மையில் கூட ஒரு கலவரத்தில் ஒரு பையனுடைய கால் வெட்டப்பட்டது. வடபகுதியிலிருந்து ஸ்டான்லி மருத்துவமனைக்கு ரிக்ஷாவில் அந்தப்பையன் கொண்டுவரப்பட்டான். லெவல் கிராசிங் மூடப்பட்டிருந்ததால் ரிக்ஷாக்காரன் அங்கே இறக்கி போட்டுவிட்டுப் போய்விட்டான். ஓவர் பிளீடிங் ஆகி, அந்தப் பையன் செத்துப்போனான். ஆகையால் அந்தப் பாதை மிக மிக அவசியமானது. மருத்துவ மனைக்கு இடம் வேண்டுமென்றால் பக்கத்தில் இடம் இருக்கிறது. அதை எடுத்துக்கொள்ளலாம். அரசாங்கம் முயற்சிசெய்தால்—அதிகாரிகளுக்கு அந்த இடம் தெரியும்—இடம் கிடைக்கும். அந்த லெவல் கிராசிங் இடையூறாக இருப்பதால், நோயாளிகளைக் கொண்டு செல்ல மிகவும் சிரமம் இருப்பதால், உடனடியாக அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து அங்கே பாலம் அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில தகவல்களைக் கொடுத்ததற்கு நன்றி. அரசாங்கம் ஆய்வு செய்து என்ன தேவையோ, அதை எப்படி செய்ய வேண்டுமோ, அப்படி முறையாக வேகமாகச் செய்யும்.

**நகரங்கள் அபிவிருத்திக்கு உலக வங்கி உதவி.**

546—(*வினா எண் 1254) திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கியின் உதவியுடன் 350 கோடி ரூபாய் செலவில் மதுரை, கோவை, சேலம் போன்ற நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களை அபிவிருத்தி செய்ய தேவைப்படும் பொருளாதார உதவியை, உலக வங்கியிடமிருந்து பெறுவதற்கான செயற்குறிப்பை இவ்வரசு மைய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இத்திட்டம் மைய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

திரு. எ. தெய்வநாயகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது இந்தத் திட்டம் செயற்குறிப்பில் உள்ளது என்று கூறினார்கள். இந்தத் திட்டத்திற்கான கடன் உதவி 350 கோடி ரூபாய் நமது அரசுக்கு வந்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, வருகின்ற ஜூலை மாதம் 18-ந் தேதி உலக வங்கிக் குழு ஒன்று சென்னைக்கு வரவிருக்கிறது. அதன் பிறகு எப்போது பணம் வரும் என்ற முடிவு தெரியும்.

திரு. மு. இராமநாதன் : தலைவரவர்களே, உலக வங்கி உதவி மூலம் சுமார் 350 கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு கிடைக்கவிருப்பது குறித்து அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்த அவையில் சொல்லி இருக்கிறார்கள். கோவை மாநகரைப் பொறுத்தவரையில், இதில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு செலவு செய்வதற்கும் திட்டம் இருக்கிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறார்கள். முக்கியமாக வின்சென்ட் ரோட்டில், வாரங்குளம், போளையந் தோட்டம் பகுதியிலுள்ள குடிசைகள், செல்வசிந்தாமணி குளம், குமாரசாமி குளம் ஏரிப்பகுதிகளிலுள்ள குடிசைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. நரக லோகம் என்று சொல்வதை நாம் பார்த்தது கிடையாது. ஆனால் இங்கே அந்த அளவுக்கு மோசமாக இருந்து கொண்டிருப்பதால் இந்தத் திட்டத்தின்கீழ் அந்தக் குடிசைப் பகுதி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: தலைவரவர்களே, அக்டோபர் 1985-ல் திட்டம் தீட்டி, முடிவு செய்து, எடுக்கவிருக்கிறோம். கோவை மாநகராட்சியில் இருக்கிற குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்க உலக வங்கி அதிகமாகச் செலவிட தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளின் உண்மையான நிலைமைகளைத் தெரிந்து, அரசு உதவி செய்யும்.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியுடன் வீட்டுவசதி வாரியம் மேற்கொள்ளவிருக்கக் கூடிய திட்டங்களில் சேலம் மாவட்டத்தின் அபிவிருத்திக்கான ஏதாவது சிறப்புத் திட்டம் இருக்கின்றதா ? அதன் மூலம் இந்த உதவித் தொகையுடன் சேலத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவிடப்படுகின்றது ? வீட்டுவசதி வாரியம் நிலத்தை கையகப்படுத்துவதற்கான காரியத்தை மேற்கொள்கின்றபோது, நிலத்தினுடைய உடைமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை பெற்று விடுகிறார்கள். சேலத்தில் 200 ஏக்கருக்கு



மேலே இருக்கின்ற கோயில் நிலங்களை வீட்டு வசதி வாரியம் மூலம் கையகப்படுத்தி உலக வங்கி உதவியுடன் சிறப்புத் திட்டத்தைப் பயன்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகரத்தைப் பொறுத்தவரையில், குடிநீர், உறைவிடம், குடிசைவாசிகள் மேம்பாட்டுத் திட்டங்கள் எல்லாம் 33 கோடி ரூபாய். குடிநீர் வழங்குகின்ற திட்டத்தின் அடிப்படையிலும், குடிசைவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் 130 இலட்சம் செலவில் குடிசை மேம்பாட்டுக் கழகம் எடுக்க இருக்கின்றது. அவர்கள் குறிப்பிட்ட கோயில் நிலத்தை எடுக்கிற பணியைப் பொறுத்த வரையில், அந்த இடம் நகரத்தில் உள்ள பொது மக்களுக்குப் பிடித்த இடமாக இருந்தால், நிச்சயமாக வீட்டுவசதித் துறையைப் பொறுத்த வரையில், அவர்களை அணுகி அதற்கான நடவடிக்கை எடுக்க இருக்கின்றது. சேலத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு நல்ல திட்டங்கள் உலக வங்கி மூலமாக வர இருக்கின்றன.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, 30 கோடி ரூபாய் செலவில் நடைபெறக் கூடிய இந்தத் திட்டம் ஒரு பெரிய திட்டமாக இருக்க வேண்டும். அந்த முறையில் கோவை மாநகரத்தில் என்னென்ன திட்டங்களை முதன் முதலாக எடுத்துக்கொள்ள வேண்டும் ? அவை ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு பணம் அந்த நகரத்திற்காகச் செலவழிக்கப்பட உள்ளது என்பதைப் பற்றி மத்திய அரசுக்கு நமது அரசு கொடுத்திருக்கும்படியான திட்டங்கள் என்னென்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தைப் பொறுத்த வரையில், பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. நான் அதிக நேரம் சொல்ல வேண்டியிருக்கும். தொடர்ந்து திட்டங்கள் வருகின்றன. குடிநீர் தருகின்ற திட்டத்தைப் பொறுத்த வரையில் 21.25 கோடி ரூபாய் அரசு செலவு செய்ய இருக்கின்றது. 65 மில்லியன் லிட்டர் தண்ணீர் நகருக்கு வழங்குவதாக செயற் குறிப்பு இருக்கின்றது. உறைவிடம் என்பதைப் பொறுத்தவரையில், குடிசைவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1,807 கோடியே 40 இலட்சம் ரூபாய் என்று திட்டமிடப்பட்டிருக்கின்றது. இப்படி கழிவு நீர்த்திட்டம், நகர அபிவிருத்தித் திட்டம், இன்னும் மற்ற திட்டங்கள் எல்லாம் வரைவு அளவில் இருந்து கொண்டிருக்கின்றன.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற 350 கோடி ரூபாயில் மதுரை நகரத்திற்கு ஒதுக்கப்பட்ட பங்கு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 8

மாண்புமிகு திரு. என் நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தைப் பொறுத்த வரையில் 80 கோடி, 85 கோடி அளவில் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட வேண்டும் என்ற வகையிலே திட்டக் குறிப்பிலே நாங்கள் வகைப்படுத்தி வைத்திருக்கிறோம். குடிநீர், உறைவிடம், குடிசைவாசிகள் மேம்பாட்டுத் திட்டம், நகர அபிவிருத்தி, கழிவு நீர் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் முன்னுரிமை தரப்படும்.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்திடம் இருந்து வருங் காலத்தில் நிறைய திட்டங்கள் எல்லாம் நெல்லை மாவட்டத்தில் பெருமளவில் செயல்படுத்தப்பட இருப்பதாக மானியக் கோரிக்கையின் மூலமாகத் தெரிந்து கொண்டோம். எனது தொகுதியான திருச்செந்தூர் தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வீட்டுவசதி வாரியத்தின்கீழ் நிறைவேற்ற திட்டம் ஏதாவது செயற் குறிப்பில் இருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் செயற் குறிப்பு இல்லாவிட்டாலும் நெல்லை மாவட்டத்திலே தூத்துக்குடி முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருப்பதன் காரணத்தால் மேலும் திருச்செந்தூரைப் பொறுத்த வரையில் அருள்மிகு முருகன் திருத்தலம் இருப்பதன் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லதொரு இடத்தைப் பெற்று தருகின்ற வகையில் உதவினால் வீட்டுவசதித் திட்டங்கள் மூலமாக ஏதாவது திட்டங்களைப் போடத் தயாராக இருக்கிறோம்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டிலே நான்கு நகரங்களில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக உலக வங்கியின் மூலம் 350 கோடி ரூபாய் வர இருக்கின்றது என்றும் இப்படி நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன என்றும் சொன்னார்கள். இந்த 350 கோடி ரூபாய் தானா ? இன்னும் அதிகமான நிதியுதவி உலக வங்கி அளித்திருக்கின்றதா ? அப்படி அளிக்கின்ற நிதியில் திருச்சி நகரத்திற்கும், அதைச் சுற்றிய ஸ்ரீரங்கம், திருவரம்பூர், லால்குடி போன்ற பகுதிகளுக்கும் மொத்தம் எத்தனை கோடி ரூபாய் சிறப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட இருக்கின்றது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரமாக அறிவிப்பார்களா ?



1985 ஜூலை 8] [முற்பகல் 9—50]

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உலக வங்கியிடமிருந்து மைய அரசின் மூலமாக ஆரம்பத்திலே தெரிவிக்கப்பட்ட கருத்தின் அடிப்படையில் 350கோடி என்று வாங்குவதாக இருக்கிறது. அதற்காக ஒரு குழு வரப்போவதாக நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அவர்களோடு அக்டோபர் 1986-லேதான் இறுதிப் பேச்சு வார்த்தை நடக்க இருக்கிறது. அதற்கு முன்னர் பிரிப்பரேஷன் பார் ஸ்கீம் என்ற அடிப்படையில் இந்த ஆண்டு அக்டோபருக்குள்ளே அதற்கான முழு விவரத் திட்டங்களும் எங்களுக்குக் கிடைக்கும்.

திருச்சி நகரைப் பொறுத்த வரையில் அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளுக்கு, திருவரங்கம், பொன்மலை போன்ற பகுதிகளில் உலக வங்கியின் மூலமாக சில பணிகள் நடத்த இருக்கிறோம். அதில் கோல்டன் ராக் எனப்படும் பொன்மலைப் பகுதியில் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்காக 510 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தயாராக வைத்திருக்கிறோம். உலக வங்கி வந்தால் கொடுப்பதற்கான திட்டம், அதைப்போல திருவரங்கம் பகுதியிலே குடிசைப்பகுதி மேம்பாடு திட்டங்கள் இருக்கின்றன. திருச்சி நகரைப் பொறுத்தவரையில் கூட கழிவு நீர் வெளியேற்றும் திட்டத்திற்காக 150 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் இருக்கிறது. இப்படி சிறு தொழில், வேலை வாய்ப்பு, போக்குவரத்துத் துறை, குடிசைகளைப் பொறுத்தவரையில், புதியதாக குடியிருப்புகள் உருவாக்குவதற்கும், குடிசைப்பகுதி மேம்பாட்டிற்காகவும் பல திட்ட வேலைகள் தொடங்க இருக்கின்றன. இந்த திட்டங்கள் எல்லாம் முக்கியமான நாலு நகரங்களுக்கு வர இருக்கின்றன. ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்லிய லால்குடி பகுதிக்கு இந்தத் திட்டங்கள் வருவதற்கு வாய்ப்பு இல்லை. திருச்சியை சுற்றியிருக்கிற குறிப்பிட்ட சில பகுதிகளுக்குதான் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதான கருத்தை நாம் அவர்களிடம் தெரிவித்திருக்கிறோம்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் வாயிலாக சென்னை மாநகரத்தில் குடிசைப் பகுதிகளை மாற்றி உரிய குடியிருப்புக் கட்டுதல், மற்றும் குடிசைகளை மேம்பாடு அடையச் செய்கிற அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, உலக வங்கியிடமிருந்து, குடிசை மாற்று வாரியத்திற்கு இந்த ஆண்டு, சென்னை மாநகரத்திற்காக மட்டும் கிடைத்த நிதி எவ்வளவு? அதிலே குடிசைகளை அகற்றி உரிய குடியிருப்புகளை கட்டுவதற்காகவும், அவைகளை பராமரிப்பதற்காகவும் ஒதுக்கிய நிதி எவ்வளவு? குடிசைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் புதியதாக எடுக்க இருக்கிற குடிசைகளுக்கு ஒதுக்கி இருக்கிற நிதி எவ்

வளவு? ஏற்கெனவே உலக வங்கியின் வாயிலாக குடிசை மேம்பாடு திட்டத்தின் கீழ் நாம் கட்டிய அந்த குடிசைகளுக்கு மீண்டும் செப்பனிட ஒதுக்கிய நிதி எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அப்படி அந்த நிதி குறைவாக இருந்தால், சென்னை மாநகரம் தமிழகத்தின் தலைநகரமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, அதற்கு அதிகமாக நிதி ஒதுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைநகரமாக சென்னை இருக்கிற காரணத்தால் 500 கோடியிலே 300 கோடியை மற்ற மாவட்டங்களுக்கு பிரித்தாலும் 150 கோடியை சென்னைக்கு பிரத்தியேகமாக தேவை என்ற அடிப்படையில் தான் அந்தக் குறிப்பை நாம் அனுப்பியிருக்கிறோம். குடிசை மாற்று வாரியப் பணிகளைப் பொறுத்தவரையில் 5 திட்டங்களுக்காக மட்டும் உலக வங்கியிடமிருந்து நிதி உதவி கொடுக்கப்படுகிறது. இந்தக் குடிசைகள் மேம்பாடு திட்டப் பணி என்பது அந்த 5-லே ஒன்றாக இருக்கிற காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை ஏற்கெனவே உலக வங்கியும் கொண்டிருக்கிற காரணத்தினாலும், அதற்கு முன் உரிமை அளிக்க வாய்ப்பு இருக்கிறது.

### சீர்காழி நகராட்சி அபிவிருத்தி

547—(*வினா எண் 2166) திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகள் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சீர்காழி நகராட்சியை அபிவிருத்தி செய்ய வீட்டுவசதித் துறையின் மூலம் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) சீர்காழி நகரத்தில், பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடம் ஒன்று அமைக்க ரூ. 50,000 முருகன் பூங்காவில் கட்டணக் கழிப்பிடம் கட்ட ரூ. 50,000, மற்றும் வணிக மையம் அமைக்க ரூ. 1.20 லட்சம் ஆகிய தொகைகள் மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. கட்டணக் கழிப்பிடங்கள் தொடர்பான பணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுவிட்டன. வணிக மையத் திட்டத்தின் பெரும்பகுதி முடிவடைந்து விட்டது.





திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன போது, இரண்டு கட்டண கழிப்பிடங்களும், வணிக மையம் அமைக்கவும், வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. என்று தெரிவித்தார்கள். வருமானம் குறைவாக உள்ள சீர்காழி நகராட்சியில் இப்படிப்பட்ட நல்ல பணிகளுக்காக உத்திரவு பிறப்பித்து, சீர்காழி நகராட்சியை மேம்பாடு அடையச் செய்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தப் பணிகளை எல்லாம் விரைவிலே முடித்து, அந்த நகராட்சிக்கு இன்னும் பல பேருந்து நிலையங்களையும், மாற்றி அமைத்தல் மற்றும் புகை வண்டி நிலையத்திற்கு செல்லக்கூடிய சாலைகள் செப்பனிடுதல் போன்ற பணிகள் தாமதமாகியிருக்கின்றன. இந்தப் பணிகளை விரைவிலே முடிக்க அவைகளை இந்தத் திட்டத்திலே சேர்ப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலைகளைப்பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் போடப்படுகிற திட்டங்கள் விரைவாக முடிக்கப்பட வேண்டுமென்ற ஆவல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருப்பதால் பணிகள் சீக்கிரம் முடிக்கப்படும். வணிக மையத்தைப் பொறுத்தவரையில் முதல் மாடியில் சதுர ஓடுகள் பதித்தல் வேலை மட்டும் தான் பாக்கி இருக்கிறது. எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கப்படும். சீர்காழி நகரத்தினைப் பற்றிய பல்வேறு திட்டங்கள் குறித்து சொல்லி இருக்கிறார்கள். நிதிநிலையை அனுசரித்து அவைகள் குறித்து முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சீர்காழி என்றாலே தமிழகத்தில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. காரணம் மூன்று வயது பாலகனாக திருஞானசம்பந்தர் பாடல் பாடி, அதனால் தகப்பனாரிடத்தில் அடிபட்டு வெளியேறினார். 16 வயதிலே தன்னுடைய வாழ்க்கையை அவர் முடித்துக் கொண்டாலும் உலகத்திற்கு சைவ சித்தாந்தத்தைக் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1959-ஆம் ஆண்டில் காலில் அடிபட்டு, கால் சரியாகி வந்த பிறகு 16 வருடங்கள் முடிந்தபிறகு முதல்வர் பொறுப்பை ஏற்றார்கள். இன்றைக்கு பல நல்ல திட்டங்களை அவர்கள் சீர்காழிக்கு அளித்து வருகிறார்கள். அப்படிப்பட்ட அந்த நகராட்சிக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல-சீர்காழியில் குடிதண்ணீர் வசதி சரியானதாக இல்லை. அதைப்போன்ற இன்னும் பல நல்ல வசதிகளைச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணுகி நிலுவையில் இருக்கிற காரியங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, கடந்த முறை சட்டமன்றத்தில் நான் கூறியதாக நினைவு இருக்கிறது. சீர்காழி நகரத்தைப் பொறுத்தவரையில் மாஸ்டர் பிளான் ஒப்புதலை இரண்டு திங்களுக்கு முன்னால் அளித்ததாக நினைவிருக்கிறது. இருந்தாலும் நம்முடைய மாநில அரசு திட்டத்தின் மூலமாக, ஸ்டேட் ஐ.யு.டி.பி. திட்டத்தின் மூலமாக சீர்காழி நகரத்தில் கடைகள் மையம் அமைக்கவும், கட்டணக் கழிப்பிடங்கள் கட்டவும் பணியை எடுத்திருப்பதாக குறிப்பு இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சுற்றுலா வாரியத்தின் தலைவராக இருப்பதால் நிச்சயமாக அவர்கள் மூலமாக பல பணிகளை செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகாசியில் ஆதிதிராவிட மாணவர் விடுதி.

548—(*வினா எண். 2195) திரு. வீ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு இதுவரை வேலை தொடங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) விரைவில் விடுதி கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) சிவகாசியில் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்கு அரசு ஆணை எதுவும் இதுவரையில் பிறப்பிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிலே ஆதி திராவிட மாணவியர்களுக்கு விடுதி கட்ட அரசாணை பிறப்பிக்கப்பட்டதாக அதிகாரிகள் மூலம் அறிகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே அந்த வேலையைத் தொடங்குவதற்கு முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருக்கிற கேள்வி ஆதி திராவிடர் மாணவர்கட்கு விடுதி கட்டுவதற்குரிய திட்டத்தைப் பொறுத்ததாகும். இருந்தாலும் ஆதி திராவிடர் மாணவியர்களுக்கு அங்கே இரண்டு ஹாஸ்டல்கள் இருக்கின்றன. ஆதி திராவிடர் மாணவியர் ஹாஸ்டலில் 60 பேர்கள் பயின்றுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு 11 இலட்சம் ரூபாயில் விடுதி கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு நிதிநிலைமை காரணமாக சென்ற ஆண்டில் அதனை எடுத்துக் கொள்ள முடியவில்லை. இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மாணவியர்களுக்கு 11 இலட்சம் ரூபாயில் விடுதி கட்டுவதற்கு உத்தரவை பிறப்பித்தமைக்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு மதிப்பீடு 11 இலட்சம் ரூபாயாக இருக்கிறது. திருத்திய மதிப்பீட்டில் அந்தத் தொகை மேலும் உயரலாம் என்று கருதுகிறேன். ஆகவே விரைவிலே திருத்திய மதிப்பீட்டைத் தயாரித்து அந்த வேலையைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே தொடங்கினாலும் அந்த நிலைமை ஏற்படும். எனவே, இந்த ஆண்டிலே கட்டுவதற்கு முயற்சியெடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**மேலூர் தொகுதியில் கைமுறை காகிதத் தொழிற்சாலை.**

549—(*வினா எண். 2304) **திரு. க. வெ. வீரானம்பலம் :** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் அல்லது கொட்டாம்பட்டியில் கைமுறை காகிதத் தொழிற்சாலை துவங்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மேலூர் தொகுதி, மேலூர் அல்லது கொட்டாம்பட்டியில் கைமுறை காகித தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கை ஏதும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வரவில்லை. அவ்வாறு கோரிக்கை வரும் பட்சத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மதுரை மாவட்டம் கட்டளைக்கோம்பை நீர்த்தேக்கம்.**

550—(*வினா எண். 376) **திரு. இரா. முத்தையா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் கட்டளைக்கோம்பை நீர்த் தேக்கத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத் திட்டம் செயல்படுத்தப் படும்?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**திரு. வே. இரா. ஜெயராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டளைக்கோம்பை நீர்த் தேக்கத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆய்வில் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். சில நீர்ப் பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் ஆய்வு ஆய்வு என்று கூறி மிகக் காலக் கெடுவு ஆகி, அதனால் அதிகமான நாட்கள் ஆகின்றன. ஆகவே ஆய்வுப் பணிகளுக்கு குறிப்பிட்ட காலக் கெடு நிர்ணயிக்கிற குறிப்பு அரசிடம் உள்ளதா ? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப் போல ஆய்வுப் பணிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்றால், விளைவுகள் மோசமாக இருக்கும். அரசின் பணமும் பாழாகும் என்பதன் காரணமாகத்தான் ஆய்வுகள் விளக்கமாகவும், தெளிவாகவும் நடத்தப்படுகின்றன. நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் ஆய்வுகளை சரியாக நடத்தவில்லை என்றால், தேவையான அளவிற்கு தண்ணீரைத் தேக்கி வைக்க முடியாது. அல்லது தேக்கி வைக்கப்பட்ட தண்ணீர் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்படும். ஆகவே, தெளிவான, விளக்கமான ஆய்வுகளுக்குப் பிறகுதான் எந்தப் பணியையும் நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் மேற்கொள்ள முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொன்னாறு நீர்ப்பாசனம்.**

551—(*வினா எண். 401) **டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி பொன்னாறு தலைப்பு மணல் மேடிட்டு நீர்ப்பாசனம் தடைபடுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பொன்னாறு வாய்க்காலை நவீனப்படுத்த ஒருங்கிணைந்த திட்டம் தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாய்க்காலின் தலைப்பில் மண் மேடிட்டு பாசனம் தடைப்படுவதைத் தடுக்க மேற்படி திட்டத்தில் வழிவகைச் செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொன்னாறு என்ற ஒரு ஆறுதான் கொள்ளிடத்திலேயிருந்து பிரிகின்ற ஒரு கிளை நதியாக என்

[1985 ஜூலை 8

னுடைய தொகுதியில் பாய்கிறது. கிட்டத்தட்ட 17 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது. இப்போது இந்தத் திட்டத்தை அமுல்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு ? இந்தத் திட்டம் எப்போது துவங்கப்படும் ? எப்போது முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரப்பட்டு விட்டார்கள். நான் சொன்னதெல்லாம், இந்தத் திட்டம் கொள்ளிடத்தில் உள்ள இடது கரையிலே இருக்கக்கூடிய உடையார்பாளையம் பக்கத்தில் உள்ள குருவாடி என்ற அந்தக் கிராமத்திற்கு அருகே 47-ஆவது மைலிலே, 6-ஆவது பர்லாங்கிலே அமைந்திருக்கிற அந்தப் பொன்னாறு வாய்க்கால் பிரிவின் மொத்த நீளம் 24 கிலோ மீட்டர் ஆகும். அந்த 24 கிலோ மீட்டர் நீளமான வாய்க்காலின் வாயிலாக 5,183.42 ஏக்கர் நிலங்கள் பயன் அடைந்து வருகின்றன. இவைகளை எல்லாம் சீர்படுத்த ஒருங்கிணைந்த விரிவாக்கத் திட்டம் ஒன்றினை இந்தத் துறை ஆய்வு செய்துகொண்டு வருகிறது. அதற்குப் பிறகுதான் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விரிவான ஆய்வுகள் நடைபெற்று வருகின்ற காரணத்தால், ஆய்வு முடிவுகள் விரைவிலே கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

டாக்டர் ந. மாசிலாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொன்னாறு வாய்க்கால் என்பது அந்தக் கொள்ளிடத்தின் இடது கரையிலிருந்து ஆரம்பிக்கிற குருவாடி என்ற கிராமத்தில் ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு முறையும் நீர் வருகின்றபோது, கொள்ளிடத்திலே இருக்கின்ற மணல் அந்தத் தலைப்பிலே மேடிட்டு விடுகிறது. அதனால் தண்ணீர் அந்த வழியாகச் செல்வதில்லை. அதனால், பாசனம் சரியாகப் செய்யப்படுவதில்லை. இது ஒன்றுதான் இதிலே ஏற்படுகின்ற குறை. எனவே, இதை நவீனப்படுத்தி, இதை ஆழப்படுத்தி, இந்த மணலை வெளியே எடுத்து, கீழே சிமெண்ட்டால் பிளாட்பார்ம் போன்று போட்டு, பக்கத்தில் இருக்கின்ற கரைகளுக்கு எல்லாம் பிளாட்பார்ம் சிமெண்ட்டால் போட்டால் சிறப்பாக இருக்கும் என்ற நவீன திட்டத்தை அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை விரைவிலே மேற்கொண்டு, விரைவிலே இதை முடிப்பதற்கு—நீர்ப்பாசனம் என்ற ஒரு வார்த்தைத்தான் விவசாயிகளுக்கு பால் வார்க்கின்ற வார்த்தை —ஆய்வு செய்து, நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா ? என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 8]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத்துறை பாலை வார்க்காது, தண்ணீரைத்தான் வார்க்கும் என்று சொல்லிக்கொண்டு, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் என்னுடைய மூலக்கேள்விக்குரிய விடையிலே சொன்னதைப்போல, நீண்ட காலத்திற்குப் பிறகு ஆய்வில் இருக்கிறது. இந்த ஆய்வு முடிந்து விரைவிலே அறிக்கை கிடைக்கும். அது கிடைத்த பிறகு, உரிய நடவடிக்கைகள் உரிய முறையிலே எடுக்கப்படும்.

### பவானி பகுதிகளுக்கு மேட்டூர் பாசன கழிவு நீர்.

552—(*வினா எண். 1649) திரு. பு. கோ. நாராயணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பவானி பகுதியில் உள்ள வரண்டு கிடக்கும் ஏரிகளுக்கு மேட்டூர் பாசனத் திட்டத்தில் வீணாகும் கழிவு நீரைத் திருப்பிவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இம்மாதிரியானத் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. பு. கோ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி பகுதியில் உள்ள ஏரிகள் வறட்சியின் காரணமாக வருடம் பூராவும் வறட்சியாக இருப்பதால் குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் தண்ணீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்ற நிலை தொடர்ந்து அந்தப் பகுதியில் இருக்கிறது. அவசர அவசியத்தை உணர்ந்து மறு பரிசீலனை செய்து அல்லது வேறு மாற்று ஏற்பாட்டின் மூலம் ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பவானி பகுதியில் மேட்டூர் வலது கரை கால்வாய் பாய்கிறது. இந்தக் கால்வாய் நில அளவைக்கு ஏற்ப கட்டப்பட்டு இருக்கிறது. ஆக இந்தக் கால்வாயின் கழிவு நீர் காவேரி ஆற்றில் செல்கிறது. மேலும், இந்த கால்வாய்ப் பாசனப் பகுதியில் பெய்யும் மழையின் அளவைக் கருத்தில் கொண்டு வேண்டிய தண்ணீர் மட்டுமே அந்தக் கால்வாயின் வழியாக அனுப்பப்படுகிறது. ஆக, அதிகமான அளவுக்கு நீர்ப்பாசன பகுதிகள் எதிர் பார்க்க முடியாது. தண்ணீர் இல்லாத காரணத்தால் தான் இந்த அளவுக்கு இந்த பதில் இந்த அரசால் சொல்ல முடிகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்ளிடத்தில் வெள்ளத்தடுப்பு நடவடிக்கை.

553—(*வினா எண். 2177) திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக அதன் இரண்டு கரைகளையும் சித்தமல்லி, சி. அரசூர் ஆகிய இடங்களிலிருந்து கடலில் கலக்கும் வரை சீர்செய்யும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காகும் செலவு என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) சித்தமல்லி மற்றும் சி. அரசூர் கிராமங்களுக்கு கீழ், வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக, தேவையான இடங்களில் மட்டும் சீர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் ஆலக்குடி கிராமத்தில் ரூ. 60 இலட்சத்திற்கு கொள்ளிடத்தின் வலது கரையில் 5 பர்லாங் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பெரும்பாலும் முடிக்கப்பட்டுவிட்டன.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஆலக்குடி கிராமத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கொள்ளிடத்தினுடைய வலது கரையில் 60 இலட்ச ரூபாய்க்கு கட்டப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், சித்தமல்லி வலது கரையில் உள்ளது. சி. அரசூர் கொள்ளிடத்தின் இடது கரையில் உள்ளது. அந்த கரைகள் இரண்டும் ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் தூரம் வந்து கடலில் கலக்கிறது. இது ஒரு பாதுகாப்பான கரை ஆகும். நடுவில் பலயிடங்களில் அங்கே கரைகள் சீர் இல்லாத காரணத்தால் வழியில் வெள்ள அபாயம் அடிக்கடி ஏற்படுவதால் அதை ஒரு மாஸ்டர் பிளான் ஆவது தயார் செய்து அந்தக் கரையை பலப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடத்தின் வலது கரையில் சித்தமல்லி கிராமம், இடது கரையில் சி. அரசூர் கிராமமும் இருப்பது இந்த அரசுக்குத்தெரியும். இன்னும் சொல்லப்போனால்





கொள்ளிடத்தின் 80 ஆவது மைலில் சித்தமல்லியும், 80 ஆவது மைல் மற்றும் 5 பர்லாங்கில் சி. அரசூர் கிராமமும் இருக்கிறது என்பதையும் இந்த அரசு அறிகிறது. மேலும், 20 மைல் கடந்து சென்றுதான் இந்த ஆறு கடலில் சேர்கிறது என் பதையும் இந்த அரசு அறியும். என்றாலும் இவற்றை எல்லாம் மாற்றுவதற்குதான் முதல் கட்டமான மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் தேவையான இடங்களில் தேவை யான அளவுக்கு கரைகளை பாதுகாக்கின்ற பணிகளை மேற் கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் இந்தத் துறையால் எடுக்கப்பட்டு வந்து இருக்கின்றன. முதல் கட்டமாக 97 ஆவது மைல் 1 ஆவது பிரிவிலிருந்து 97 ஆவது மைல் 6 ஆவது பிரிவு வரை இருக்கக்கூடிய 5 பர்லாங்கு நீளம் உள்ள அந்தப் பகுதியில் உள்ள கரைகளை பாதுகாப்பதற்குகாக 60 இலட்ச ரூபாய் செலவு செய்து இருக்கிறது. இது நீங்கலாக மேலும் 3 திட்டங்கள் தள அதிகாரிகள் அளவில் இருக்கிறது. அவையாவன, நடுவன்படுகை கிராமத்தின் அருகில் உள்ள கொள்ளிடம் வலது கரை மைல் 93, பிரிவு நாலிலிருந்து மைல் 94 வரை இருக்கக்கூடிய அந்தப் பகுதி களையும், வரனூர் கிராமத்திற்கு அருகில் கொள்ளிடம் இடது கரையில் மைல் 98 பிரிவு 3-லிருந்து மைல் 98 பிரிவு 5 வரையும், மகேந்திரப்பள்ளி கிராமத்தின் அருகில் உள்ள கொள்ளிடத்தின் வலது கரையில் மைல் 100 பிரிவு 1-லிருந்து பிரிவு 2 வரை உள்ள பகுதிகளில் இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆய்வுகளை தள அதிகாரிகளால் நடத்தப்பட்டு வருகிறது. ஆய்வு அறிக்கைகள் அனுப்பப்பட்டப் பிறகு அரசு அதற்கு உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 இல் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, கடுமையான வெள்ளம் வந்து, கொள்ளி டத்திலே கரைகளைத் தொடுகின்ற அளவுக்கு தண்ணீர் வந்து, அதனால் என்னுடைய தொகுதியில் பல்லாயிரக்கணக்கான ஆடு மாடுகளும், அப்போது மீட்புப் பணியில் ஈடுபட்ட 18 வயது இளைஞர் ஒருவர் கூட இறந்து விட்ட சூழ்நிலை அங்கு ஏற் பட்டது, ஆனால், அதே போல் ஒவ்வொரு ஆண்டிலும், கொள்ளிடத்திலே வெள்ளம் என்றாலே, சீர்காழி தாலுக்கா வுக்கே அபாயம் என்ற நிலைமை தஞ்சை மாவட்டத்திலுள்ள பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும், தென்னாற்காடு மாவட் டப் பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கும் தெரியும். மாண்பு மிகு அமைச்சர் அவர்கள், இங்கே சில இடங்களில் பணிகள் துவங்குவதாக ஆய்வில் இருப்பதாக தெரிவித்தார்கள். நான் கேட்க விரும்புவது, சித்தமல்லியிலிருந்து வருகின்ற அந்த ஆறு

நேராக பனங்காட்டன்குடி என்ற இடத்திலே கரையைத் தகர்க்கிற அளவுக்கு இருக்கிறது. எனவே, பனங்காட்டன்குடி, வடரங்கம், மாதுரிவேலூர், திட்டப்படுகை ஆகிய இடங்களிலே தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ? இல்லையெனில் இனி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதிகள் எவையேனும் இருக்குமானால், அவற்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவாரானால், உரிய ஆய்வுகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். வெள்ளத் தடுப்பைப் பொறுத்தமட்டிலும், அவற்றில் மிகவும் அக்கறை செலுத்தி, அத்தகைய பணிகளில் மிகவும் தீவிரமாக செயல்படுத்தவேண்டும் என்பது தான் இந்தத் துறையின் செயல் முறைகளில் ஒன்றாகும்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளத் தடுப்புப் பற்றி அரசு எடுத்துக் கொள்ளும் அக்கறையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நன்றி. காவிரியில் எப்போது தண்ணீர் வரும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினால், விவசாயிகளுக்கு அது நன்மையாக இருக்கும் என்று அது பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, காவிரியைப் பொறுத்த மட்டிலும், இன்றைய நீரின் அளவு நமக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியதாக அமைந்து இருக்கிறது. இன்று 68.75 அடிகள் நீர் மட்டம் இருக்கின்றது. இன்றைய நீரின் கொள்ளளவு 37.63 டி.எம்.சி. ஆகும். ஆகவே, நாம் ஓரளவுக்கு குறைந்த பட்ச தேவை இலக்கினை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கி. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடத்தில் வெள்ளம் ஏற்படுகிற போது, கல்லணையில் கொள்ளிடம் பிரிகிற இடத்தில் கூகூர் என்ற கிராமம் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. அதற்கு, அந்தக் கொள்ளிடக் கரையில் தகுந்த தடுப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமா? காவிரியில் தண்ணீர் எப்போது திறந்து விடப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கொள்ளிடத்தினைப் பொறுத்தவரையிலும், முன்பே நான் சொன்னது போல், கொள்ளிடம் 100 மைல் உள்ள ஒரு





ஆறாகும். ஆகவே, அந்த ஆற்றிலிருந்து எந்தந்தப் பகுதிகளிலே எந்தந்தப் பணிகள், எப்போது மேற்கொள்ளப்படும், என்கிற விவரங்கள் என்னிடத்திலே தற்போது இல்லை. எந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்படுகின்றது என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களோ, அந்தப் பகுதியில் உடனடியாகப் பார்வையிட்டு, உண்மையிலேயே பாதிக்கப்பட்டதுதானா, அப்படி பாதிக்கப்பட்டிருந்தால் அந்தப் பாதிப்பை நீக்கக்கூடிய அளவுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமா என்று பார்வையிட்டு, அதற்கான வாய்ப்புக்கள் இருக்குமானால், அந்த இடங்களில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

காவிரியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே சொன்னது போல், குறைந்தபட்ச 40 டி.எம்.சி. தண்ணீர் கொள்ளளவு இருக்குமானால், காவிரியைத் திறந்து விடக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கிறது என்று சொன்னேன். இப்போதைய கொள்ளளவையும் நான் சொல்லியிருக்கிறேன். எனவே, நிலைமைகள் சீர் ஆகிக் கொண்டிருக்கின்றன, நம்பிக்கை ஊட்டக்கூடிய அளவிலே அமைந்து இருக்கின்றது என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில், கொள்ளிடத்தின் வலது கரையில் 5 பர்லாங் தூரத்திற்கு கரையை பலப்படுத்துவதற்கு ரூ. 60 இலட்சம் ஆகும் என்று கூறினார்கள். அதே சமயத்தில், கொள்ளிடத்தின் இடது புறத்திலுள்ள சி. அரசூர் கிராமம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கிராமம் ஆகும். வல்லம்படுகை, மாவரசூர், பருத்திக்குடி., அணைக்கரை வரை 31 கி.மீ. வரை சீர் செய்ய வேண்டும் என்று இதற்கு முன்பு மாண்புமிகு அமைச்சரவர்கள் உறுதி கூறி இருக்கிறார்கள். இப்போது அதற்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. கொள்ளிடம் இடது புறத்திலுள்ள கொள்ளிடக் கரையை பலப்படுத்த அரசு ஆலோசிக்குமா, முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவரவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் கரைகளை அழகுபடுத்துவது என்பது இந்தத் துறையின் நோக்கம் அல்ல. அந்தப் பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்குத் தேவையான பாசனத்திற்கு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவது, நீர்நிலைகள் கெட்டுப்போய் அதன் வாயிலாக ஊர்மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக வெள்ளப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவது போன்றவைகள் தான் இந்தத்

துறையின் நோக்கமே தவிர வேறொன்றுமில்லை. அழகுபடுத்துவதைப் பொறுத்தவரையில் இந்தத் துறை நிச்சயமாக மேற்கொள்ளாது. வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் ெரிதவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது மேட்டூர் அணையில் 68 அடி தண்ணீர் இருக்கிறது, அது மன நிறைவு அளிப்பதாக இருக்கிறது என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு இப்படிப்பட்ட காலங்களில் பல்வேறு சோதனைகள் ஏற்பட்ட நேரத்திலேயெல்லாம்கூட மாண்புமிகு முதல்வரவர்கள் கர்நாடக அரசோடு தொடர்புகொண்டு, திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்தின்ஒரு பகுதி ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீரைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் இன்றைக்கு நான்கு மாவட்டங்களிலேயும் இருக்கின்றவர்கள், பண்டைக் காலத்தில் அரசர்கள் ஆண்ட நேரத்தில் போர்க்காலங்களில் இருப்பதைப்போல, இந்த நான்கு மாவட்டங்களிலேயும் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் விவசாயத்தில் முனைந்து, போர்க்கால அடிப்படையில் விவசாயத்தை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். இதை மனத்திற்கொண்டு தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை தர வேண்டுமென்ற நோக்கத்தோடும், தமிழகத்திற்கே உணவை வழங்கக்கூடிய தஞ்சை மாவட்டத்து மக்கள் அந்த உற்பத்தியை அதிகப்படுத்தி, பசுமைப் புரட்சியை ஏற்படுத்தித் தந்த அந்த மாவட்டம் இந்த ஆண்டும் உணவு உற்பத்தியைப் பெருக்கி, தமிழகம் உணவில் தன்னிறைவு பெற்றுவிட்டது என்று சொல்லுகின்ற நிலையை உருவாக்குகின்ற அளவிற்கு அதை மனத்திற் கொண்டு, இது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களிடத்தில் சொல்லி, இன்னும் ஒரு வார காலத்திற்குள் மேட்டூர் அணை திறக்கப்பட்டால், அந்தத் தண்ணீரைக் கொண்டு இருபோக சாகுபடியை மேற்கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும், அந்தத் தொழிலாளர் பெருமக்களுடைய உள்ளங்களிலே இருக்கின்ற கோரிக்கைகளும் நிறைவேறும் என்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களின் திறமையும், சாமர்த்தியமும் இந்த அரசு அறிந்த ஒன்றாகும்.



அவர்களுக்கே நேரடியாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களோடு பேசக்கூடிய தகுதியும், வாய்ப்பும் இருக்கிறது. அதையும் பயன்படுத்திக்கொள்ளலாம்; நானும் பேசி இந்தத் துறையின் நிலைமைகளை எடுத்துக்கூறி, புரட்சித் தலைவரவர்களிடமிருந்து உரிய கட்டளையைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடத்தில் ஒவ்வோராண்டும் வருகின்ற கடுமையான கரைபுரண்டு ஓடுகின்ற வெள்ளத் தண்ணீரின் காரணமாக ஆயிரக்கணக்கான குடிசைகளும் பாதிக்கப்பட்டு சேதாரம் ஏற்படுகிறது; விவசாயத்தையும் அந்த வெள்ளம் பாதிக்கிறது. இப்பொழுது இரண்டு பக்கங்களிலேயும் கரை அமைப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, இந்தத் திட்டம், காவிரி மேம்பாட்டிற்காக 102 கோடி ரூபாய்க்கான திட்டம் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதே, அந்தத் திட்டத்தின் மூலமாக இந்தக் கரைகளை மண் மட்டும் போடாமல், இரு பக்கங்களிலும் கல் சுவர் கட்டி, கீழேயும் பிளாட்பாரம் போட்டு இரண்டு கரைகளையும் பலமாகக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார்களா அல்லது வேறு திட்டத்தின் மூலமாக இந்த வேலை நடக்கிறதா என்பதோடு, இந்த மேட்டூர் அணையைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது நம்பிக்கை ஊட்டும் அளவிற்கு அமைச்சரவர்கள் சொல்லாமல் நம்பிக்கை இழக்கின்ற அளவிற்கு இருக்கிறதே, இப்பொழுது நம்முடைய அரசு குறிப்பிட்டுக் காட்டுவதைப்போல ....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே; கொள்ளிடத்திற்கும் காவிரிக்கும் இணைப்புப் பாலம் போட்டு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவிரியைப் பொறுத்தவரையில் நான் ஒவ்வொரு முறையும் சொல்லுகின்ற நேரத்தில் நாளுக்கு நாள் நம்பிக்கை அதிகமாக ஆகும் அளவிற்குத்தான் அறிக்கைகளைத் தந்து கொண்டிருக்கிறேன். இன்றைய நிலவரத்தைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கின்ற நிலைமைகளைப்பற்றிச் சொன்னேன். குறைந்தபட்சம் 40 டி. எம்.சி. தண்ணீர் இருந்தால் தண்ணீர் விடுகின்ற வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். நேற்று அல்லது அதற்கு முன்தினம் தந்த அறிக்கையைவிட இன்றைக்குத் தந்திருக்கின்ற அறிக்கை நம்பிக்கை ஊட்டுகின்ற அளவிற்குத்தான் இருக்கும். ஏனென்றால், 37.63 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். இன்னும் சுமார் இரண்டரை டி.. எம்.சி. தண்ணீர்

தான் பாக்கியிருக்கிறது. ஆகவே, காவிரியைப் பொறுத்தவரையில் நம்பிக்கை ஊட்டவில்லை என்பது தவறான கருத்து. விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அது நீங்கலாக கொள்ளிடக் கரைகளைப் பொறுத்தவரையில் கொள்ளிடக் கரைகளை வலுப்படுத்துகின்ற இந்தத் திட்டங்களுக்கும் காவிரி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இந்தத் திட்டம் தனியாக திட்டம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10–20)

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம் காரியாபட்டி போலீஸ் சரகம், கல்லாங்குளத்திலே போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி, 20 பேர்கள் பலியாகி இருக்கிறார்கள்.. (மணியடிக்கப்பெற்றது)

திரு. என். எஸ். வி. சித்தன் : இது சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குத்தான் காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறது. ஆகவே, அதில் பேசலாம்.

(ஆ) இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண திம்புவில் பேச்சுவார்த்தை தொடங்கி இருப்பது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் வேண்டுகோள்படியும், பாரதத்தினுடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய முயற்சியினால் இலங்கைத் தமிழர்கள் பிரச்னை குறித்து, பர்மாவின் தலைநகரான திம்புவில், இலங்கை அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும்..



மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே போய் ஜியாகிரபியைப் படித்துவிட்டு வரவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திம்பு பர்மாவினுடைய தலைநகர் அல்ல, பூட்டான் தலைநகர்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையிலே நடைபெறுகிற அந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெற தமிழக அரசின் சார்பிலும் மன்றத்தின் சார்பிலே, பேரவைத் தலைவர் வாழ்த்து சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வாழ்த்து சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் பேச்சு வார்த்தையை இன்றுதான் தொடங்குகிறார்கள். தொடர்ந்து அந்தப் பேச்சு வார்த்தைகள் சிறப்பாக நடைபெற்று முடிந்து, நாம் எல்லாம் மகிழத்தக்க அளவுக்கு நல்லதொரு முடிவு ஏற்படுமானால் அப்பொழுது வேண்டுமென்றால் நாம் பாராட்டவும் செய்யலாம், புகழவும் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பேச்சுவார்த்தை அதிபர் பெயரே, என் பெயர்தான், ஹெக்டர்.

(இ) இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியில் நன்கொடை வாங்குவதாக வந்துள்ள செய்தி.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி 1—7—1985 அன்று திறக்கப்பட்டு, ஒரு மாணவனுக்கு ரூ. 2-1/4 இலட்சம் நன்கொடை வாங்குவதாக செய்தித்தாள்களிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோட்டீஸ் கொடுத்துவிட்டுப் பேசலாம்.

3. அறிவிப்புகள்.

(அ) பேரவை முன்னாள் செயலாளர் திரு. கி. மு. அழகர்சாமியிடமிருந்து நன்றி தெரிவித்து வரப்பெற்றுள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையில் 28—6—1985 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்ற தீர்மானம் குறித்து முன்னாள் பேரவைச் செயலாளர் திரு. கி.மு. அழகர்சாமி அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திவரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

''பேரன்புடையீர்,

தங்கள் 5—7—1985–ஆம் நாளிட்ட கடிதமும் பேரவையில் ஜூன் 28–ஆம் நாள் நிறைவேற்றிய பாராட்டுத் தீர்மானமும் கிடைக்கப் பெற்றேன். என்பால் வைத்துள்ள அன்பினால் நிறைவேற்றிய தீர்மானத்திற்கும், பேரவையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும், தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பேரவை உறுப்பினர்கள் எல்லோரும் ஜனநாயகத்தில் திட்பமாகப் பணிபுரிய அவர்கள் எல்லா நலன்களும் பெற்றுத் திகழவும் வேண்டுகிறேன்.

வணக்கம்.

தங்கள் அன்புள்ள.
கி.மு. அழகர்சாமி,

## 4. அறிக்கை அளித்தல்.

(அ) விதி 238-இன் கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் 238–வது விதியின்கீழ் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம் 1—4—1985-ல் துவக்கப்பட்டதன் விவரம். பொது மக்களுடைய கோரிக்கையை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்வில் 600-க்கு மேற்பட்ட பேருந்துகளைக் கொண்ட போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் முதலில் பாண்டியன், சேரன், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு முறையே மருது பாண்டியர், ஜீவா, நேசமணி என்ற போக்குவரத்துக் கழகங்களாக ஏப்ரல் 1983 முதல் இயங்கி வருகின்றன.

சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் 874 பேருந்துகளைக் கொண்டு இரண்டு பெரிய மாவட்டங்களிலே, தஞ்சாவூர், திருச்சி, ஆகியவற்றில் இயங்கி வந்தன. இந்தக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, அதன்படி, திருச்சிராப்





பள்ளி மாவட்டத்தில் 349 பேருந்துகளுடன் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் 1—4—85 முதல் ஒரு தனிப் போக்குவரத்துக் கழகமாக இயங்கி வருகிறது. சோழன் போக்குவரத்துக் கழகம் தஞ்சை மாவட்டத்தில் 525 பேருந்துகளுடன் இயங்கி வருகின்றது.

## 5. கவன ஈர்ப்புகள்.

(ஆ) கோபிச்செட்டிபாளையம் வட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மூலம் ஆதி திராவிட மக்கள் வீடுகள் கட்டிக் கொள்ள கடன் வழங்குவது.

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பெரியார் மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் வட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மூலம் 30 கிராமங்களில் 514 வீடுகள் கட்டும் பணி துவக்கப்பட்டு வங்கிக் கடன் கிடைக்கப் பெறாமல் தொடரப்படாததால் அப்பகுதி ஆதி திராவிட மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 1980–81 முதல் தொடங்கிய ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஆண்டொன்றுக்கு 40,000 வீடுகள் வீதம் '' இரண்டு இலட்சம்'' வீடுகள் கட்டி முடிக்கப்படவேண்டுமென அரசு இலக்கு நிர்ணயித்தது. திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் 1,58,516 வீடுகள் (அவற்றில் 1,32,151 வீடுகள் ஆதி திராவிடர்களால்) கட்டப்பட்டன. ''இரண்டு இலட்சம்'' இலக்கை அடைய திட்டத்தின் கடைசி ஆண்டான 1984–85-ல் 41,484 வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டும். 1983–84 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தை புதுடில்லியிலுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கழகம் (ஹட்கோ) நிதியுதவியினை கொண்டு செயல்படுத்தல் வேண்டுமென அரசு கொள்கையளவில் முடிவெடுத்துள்ளது.

2. 31–3–1984 அன்று கட்டுமானத்திலிருந்த 15,044 வீடுகள், இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசு ஒப்பளித்தபொழுது திட்டத்தின் கீழ் கட்டப் பட்டிருந்த

5,000 வீடுகள் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழக நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் மூன்றாவது திட்டத்தின் இரண்டாவது பகுதியாக கட்டப்படவிருந்த 15,000 வீடுகள் ஆகியவற்றை கொண்டு இலக்கை அடைய இயலாதென்பதாலும், மேலும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக நிதியுதவிபெற்று இலக்கை அடைய தேவையான வீடுகள் கட்டி முடிக்க இயலாதென்பதாலும், 1984–85 ஆம் ஆண்டு இலக்கை அடைய எஞ்சிய வீடுகள் கட்டி முடிக்க தேவையான நிதியை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனாக திரட்ட கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) மற்றும் தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் 30–6–1984-ல் அறிவுறுத்தப்பட்டார்கள். 1984–85 ஆம்ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தொய்வின்றி அடையவேண்டுமென்ற ஆர்வத்தால் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் தனி அலுவலர், கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் கடனுதவிபெற்று வீடு கட்ட விழையும் ஆதிதிராவிட பயனீட்டர்களிடம் கடன்மனுக்களைப் பெற்று தயார் நிலையில் வைக்கும்படி அனைத்து வீட்டுவசதி துணைப்பதிவாளர்களுக்கு அறிவுரை வழங்கினார். அதற்கேற்ப பெரியார் மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் வட்ட கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் 514 கடன் மனுக்களை பெற்று கடன் தொகையை வழங்குவதற்கு தயார் நிலையில் வைத்திருந்தது. கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 24,000 வீடுகள் கட்ட ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு கடன் வழங்க தேவையான ரூ. 840 இலட்சம் கடன் கோரி நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் அணுகியது. மேற்படி கடனை ஒப்பளிக்க இந்திய ரிசர்வ் வங்கி 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தான் அனுமதி வழங்கியது. இதனால் மேற்படி கடனை பெற்று 1984–85 ஆம் ஆண்டு இலக்கினை அடைய இயலாத சூழ்நிலை உருவாகியது. அதனால் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் இலக்கு 28,000 ஆக குறைக்கப்பட்டது. 20 அம்ச திட்டத்தின் கீழ் ஒரு அம்சமாகும் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் ஏற்பட்ட குறைவை (shor fall) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு பொறுப்புறுதி திட்டத்தின் கீழ் முழுமை செய்யப்பட்டது.

3. பல்வேறு திட்டங்களின் கீழ் கிராமப்புறங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு வீடுகள் கட்ட வழங்கப்படும் பலவகையான கடன் மற்றும் மானியம், அதனால் ஏற்படும் பின் விளைவுகளை ஆராய்ந்து ஆதி திராவிடர்களுக்கு வீடுகட்ட வழங்கப்படும் சலுகை ஒரே விதமாக இருக்கவேண்டுமென அரசு முடிவெடுத்து, 1985–86 ஆம் ஆண்டு முதல் தொடங்கியுள்ள ஏழாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில், கிராமப்புறங்



களில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்ட தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு பொறுப்புறுதி திட்டம் மற்றும் ஆதி திராவிடர் வீட்டு வசதி திட்டம் ஆகியவை வாயிலாக அத்திட்டங்களில் நடைமுறையிலுள்ள விதிகளின்படி நிதியுதவி அளிக்கப்படும் எனவும், கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் பிற இனத்தைச் சார்ந்த கிராமப்புறங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் நிதியுதவியின் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு 5,000 வீடுகள் வீதம் கட்ட கடன் வழங்கப்படும் எனவும் 19—6—1985-ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

4. மேற்கூறிய நிலையில் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்திற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன்பெற அவசியமில்லை என அரசு முடிவெடுத்து கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி)க்கு தெரிவிக்கப்பட்டது.

5. இருப்பினும், கோபிச்செட்டிபாளையம் வட்ட கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலம் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் நிதியுதவியுடன் வீடு கட்ட முன்வந்த 514 ஆதி திராவிட உறுப்பினர்களுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு பொறுப்புறுதி திட்டம் மற்றும் ஆதி திராவிடர் வீட்டு வசதி திட்டம் ஆகியவற்றின் கீழ் வீடு கட்ட நிதியுதவி வழங்க பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி ஏற்பாடு செய்யுமாறு சேலம் மண்டல துணைப் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு வே. கு. சின்னசாமி : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் கோபிச்செட்டிப்பாளையம் வட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலம் 514 வீடுகள் கட்டப்படுவதற்கு அவர்களுடைய டிபாசிட் தொகையாக சங்கத்திற்கு 100 ரூபாய் வீதம் கட்டியிருக்கிறார்கள். பட்டா நிலத்தையும் அடமானம் செய்து கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் அந்த 514 வீடுகளைக் கட்டி முடிக்கும் பணி எப்பொழுது, தொடங்கி முடியும் என்று தெரியவில்லை. ஆர். எல். இ. ஜி. பி., என். ஆர். இ. பி. திட்டங்களின் கீழ் அந்தப் பணி எடுத்துக் கொள்ளப்படும் என்று விவர அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் வட்டத்திற்கு 20 வீடுகள், 25 வீடுகள் என்று முடிவு செய்து நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே அந்த 514 வீடுகள் கட்டும் பணியை எப்படி செய்ய இருக்கிறார்கள் ? தனியாக நிதி ஒதுக்கி இருக்கிறார்களா ? பெரியார் மாவட்டத்தில் பவானி, ஈரோட்டில்

(திரு. வே. கு. சின்னசாமி) [1985 ஜூலை 8

பெருந்துறை. அதைப் போன்று சேலம் மாவட்டத்திலும் இதைப் போன்ற நிலைமை இருக்கிறது. அந்தப் பணிகளும் எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். நல்லுசாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு இந்திய ரிசர்வ் வங்கி 1985-ல் காலதாமதமாக நிதியை கொடுத்திருக்கிறது. ஆகையால்தான் இடையிலே நிதிப் பற்றாக்குறை மூலம் காலதாமதம் ஏற்பட்டது. அதன் பிறகு இந்தப் பணிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற சூழ்நிலையைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் சேலம் மண்டல வீட்டு வசதித் துறை துணைப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது நியாயமான கோரிக்கை. கோபிச்செட்டிப்பாளையத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் இருக்கிற ஆதிதிராவிட மக்கள் ஏற்கெனவே வீடு கட்டும் திட்டத்தின்கீழ் முறைப்படி மனு செய்திருப்பதால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, எவ்வளவு விரைவாகச் செய்து முடிக்க வேண்டுமோ அவ்வளவு விரைவாக வீடு கட்டும் பணி நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வே. கு. சின்னசாமி : தலைவரவர்களே, இந்த 514 வீடுகளுக்கும் வங்கியின் அனுமதி பெற்றுத்தான் பணம் டிபாசிட் செய்யப்பட்டது. அதன் பிறகு பட்டா நிலங்களை அடமானம் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த 514 வீடுகளையும் முழுமையாகக் கட்டி முடிக்க இந்த ஆண்டே அந்தப் பணி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். நல்லுசாமி : தலைவரவர்களே, முடிந்த அளவு இந்த ஆண்டிலேயே அந்த 514 பேர்களுக்கும் உதவ அரசு தயாராகஇருக்கிறது. சேலம் மாவட்டத்தில் பல்வேறு ஊர்களில் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால், அதுபற்றி வீட்டு வசதித் துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கை எடுத்து, எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு பணியாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கூவம், அடையாறு ஆறுகளின் முகத்துவாரங்கள் மேடிட்டு கழிவு நீர் தேங்கி நிற்பதால் நகர பொதுச் சுகாதாரம் பாதிக்கப்படுவது.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''கூவம் ஆற்றிலும், அடையாறு ஆற்றிலும் கடல் நீரை செலுத்துகின்ற பணியினைப் பொதுப் பணித்துறை சரியான முறையில் மேற்கொள்ளாத காரணத்தினால் அவ்விரு ஆற்றிலும்



1985 ஜூலை 8] (திரு. சா. துரைசாமி)

பெருமளவு கழிவுநீர் தேங்கி அதன் மூலம் கொசு உற்பத்தி மற்றும் துர்நாற்றம் வீசுகின்ற நிலைமையினால் சென்னை மாநகர் மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் மற்றும் அடையார் ஆற்று முகத்துவாரங்களில் மணல் மேடுகள் தோன்றுவதனால் ஆற்றுக் கழிவு நீர் கடலில் சேருவதற்கு தடையேற்பட்டு இவ்விடங்களில் துர்நாற்றமும், கொசுத் தொல்லையும் பெருகுவதை தவிர்ப்பதற்காகவே கூவம் ஆற்று முகத்துவாரத்தில் ஒரு ட்ரெட்ஜரும், ஒரு டிராக்லைன் எஸ்காவேட்டரும் (தூர்வாரிகள்) ஏற்கனவே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எனவே கூவம், ஆற்றில் கழிவு நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள. ஆற்றுப் படுகையில் நீரில் மூழ்கியுள்ள மணல் மேடுகளை மேற்சொன்ன இரு இயந்திரங்களால் தேவைப்பட்டபோது தடைகள் நீக்கப் பட்டு கழிவு நீர் கடலில் சேர தடை இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது.

அடையாறு ஆற்று முகத்துவாரத்தில் அவ்வப்போது தோன்றும் மணல் மேடுகள் தொகுதியாக கூலியாட்களை வைத்து அகற்றப்படுகின்றன. எனவே அங்கேயும் கழிவு நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் சென்னை நகரில் பல்வேறு இடங்களில் கழிவு நீர் கூவம் ஆற்றில் விடுவதை தடுத்து கூவம் மற்றும் அடையாறு ஆறுகளில் ஏற்படும் தூய்மைக் கேடுகளை குறைப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பொதுப்பணித்துறை ஆகியவைகளின் அலுவலர்களுடன் 31–5–1985 அன்று மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் விவாதித்து முடிவெடுத்துள்ளார். இதன்படி மேற்கொண்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 10–30)

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விவர அறிக்கையில் கடந்த சட்ட மன்ற கூட்டத் தொடரில் நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்த போது சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குப் பேரவைத் தலைவர் வாயிலாக

கொண்டு வர விரும்புவது இந்தப் பணி சரியாக நடைபெறவில்லை என்பதைச் சுட்டி காட்டவும், அந்தப் பணி முறையாக நடைபெற்றிருந்தால் இத்தகைய துர்நாற்றம் வீசக்கூடிய சூழ்நிலை இருந்திருக்காது என்பதையும் மேலும் மாண்புமிகு உறுப்பினர்களும், பேரவைத் தலைவர் அவரகளும் வருகின்ற வழியில் அண்ணா சமாதியை விட்டு அந்த மேம்பாலத்தை கடக்கின்ற நேரத்தில் கடுமையான துர்நாற்றம் வீசுகின்ற சூழ்நிலை இருப்பதை உணருகின்ற நிலைமை தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருக்கின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்வது இந்தத் தூர் வாரி இயந்திரம் தினமும் தொடர்ந்து பணியாற்றினால் இந்தச் சூழ்நிலை இருக்காது. ஆனால் அவ்வாறு தொடர்ந்து பணியாற்றுவதற்கான வகையில் அங்கே பொறுப்பில் இருக்கின்ற அதிகாரிகள் பணியாற்றவில்லை என்பதையும் அவர்கள் தொடர்ந்து இங்கே இதுபோன்ற தவறான தகவலைத் தெரிவித்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாமே உணருகின்ற வகையில் துர்நாற்றம் தினமும் அடிக்கின்ற காரணத்தால் இந்தப் பணியை முறைப்படுத்தி அதிகாரிகள் செயலாக்கவில்லை என்பதை உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

அதே நேரத்தில் அடையாறு போன்ற பகுதிகளில் ஆட்களை வைத்து வேலை செய்கின்ற அந்த முறையை மாற்றி அங்கெல்லாம் நவீன இயந்திரத்தைப் பயன்படுத்தி இந்தக் கழிவுகள் எல்லாம் கடலிலே கலக்கின்ற வகையில் ஏற்பாடு செய்தால் கொசுத் தொல்லை குறைந்து சென்னை மாநகர மக்களையும் பாதுகாக்க முடியும். அந்த வகையில் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் ஆற்றில் வீசுகின்ற துர்நாற்றம் என்பது கடலில் கலக்க வேண்டிய கூவம் ஆற்றில் மணல் திட்டுகள் ஏற்பட்டதன் வாயிலாகக் கடலில் கலக்காததால் மட்டும் அந்தத் துர்நாற்றம் வீசுகின்றது என்றில்லை ; சென்னை மாநகரத்தில் உள்ள பல்வேறு பெரிய, பெரிய திட்டங்களுக்கெல்லாம் இந்தக் கூவம் ஆறு வடிகாலாக அல்லது கழிவு போக்கியாக அமைகின்ற காரணத்தாலும்தான் இந்தத் துர்நாற்றம் வீசுகின்றது என்பதைக் கருத்தில் கொண்டுதான் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நான் முன்பே சொன்னது போன்று தல அதிகாரிகளும், மாநகராட்சி, வீட்டு வசதி வாரியம் போன்றவற்றின் அத்தனை அதிகாரிகளும் ஒன்றாக அமர்ந்து ஒரு சில முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள். அந்த முடிவின் அடிப்படையில் ஏற்கெனவே இருந்த 15 நீரேற்று இயந்திரங்களுடன் மேலும் 17 நீரேற்று இயந்திரங்களை நவீனப்படுத்தி பணிக்குக்





கொண்டு வர சென்னை கழிவு நீர் மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதையும் அந்த வகையில் ஒரு திட்டத்தை அரசின் ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டும் என்றும் கழிவு நீர் கண்டிப்பாகக் கூவம் ஆற்றில் கலக்கக் கூடாத அளவுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்படக் கூடிய இல்லங்களுக்கும், வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்படக்கூடிய இல்லங்களுக்கும் இது பொருந்தும் என்ற முறையில் அந்தந்தத் துறைகளிலே நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும் என்றும் இவ்வாறு பல்வேறு யோசனைகளைக் கூறி அதற்கான முடிவுகளை எல்லாம் எடுத்திருக்கிறார்கள்.

மேலும் சென்னையில் இருக்கின்ற சென்ட்ரல் இரயில் நிலையம் மற்றும் எழும்பூர் இரயில் நிலையம் ஆகியவற்றின் அதிகாரிகள் நேரடியாகத் தங்கள் கழிவு நீர் இந்தக் கால்வாய்களில் சேர்வதைக் குறைத்துக்கொள்ள, சென்னை கழிவு நீர் மற்றும் குடிநீர் வாரியத்தின் கழிவு நீர் மெய்ன் இணைப்போடு கலக்கும் படி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற வகையில் இத்தகைய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு வருகின்றன. ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் நம்முடைய கூவம் ஆற்று முகத்துவாரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்தக் கழிவு நீர் சீராகச் செல்வதற்காக வைக்கப்பட்டிருக்கின்ற இயந்திரங்கள் எல்லாம் உரிய முறையில் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பொறுத்தமட்டிலும் நேரடியாகவே எத்தனை நாட்களுக்கு அந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற கணக்குகள் இருக்கும், அவற்றை எல்லாம் பார்த்து அவை சரியாகப் பயன்படுத்தப் படாமல் இருந்திருக்குமேயானால் நிச்சயமாகச் சரியான முறையில் அவற்றைப் பயன்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதையும் மீறி யாரேனும் தவறு செய்வதாக ஆய்வுகளிலிருந்து தெரிந்தால் மிகக் கடுமையான உரிய நடவடிக்கை துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற வாரியங்களோடு மாநகராட்சி குடிநீர் வழங்கு துறை இணைந்து எதிர்காலத்தில் பணியாற்றி கொசுத் தொல்லை ஏற்படாவண்ணம் இந்தக் கூவம் நாற்றத்தைக் குறைக்கின்ற வகையில் எடுக்கப்பட இருக்கின்ற நடவடிக்கை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக நன்றி. ஆனால் இப்போது இருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் இந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்று நிறைவேற்றுகின்ற காலம்

வரையில் இந்த இரண்டு முகத்துவாரங்களிலும் இருக்கின்ற கடல் நீரோடு இந்த ஆற்று நீர் கலந்தால் கொசுத் தொல்லையும் குறையும், துர்நாற்றமும் குறையும் என்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் தினமும் இந்தத் தூர்வாரும் இயந்திரம் பணியாற்றுகின்றதா, அடையாறு முகத்துவாரத்தில் தினமும் ஆட்களை வைத்து அந்த மணல் மேட்டை எடுக்கிறார்களா என்கிற அந்த முறையைக் கண்காணிக்க தலைமைப் பொறியாளருக்கு ஒரு உத்தரவு வழங்கி தினமும் அந்தப் பணி நடை பெறவேண்டும் என்பதை ஒரு கருத்தாகக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த மணல் வாருகின்ற இயந்திரங்கள் பழுதடைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அவ்வாறு இருந்தால் அவற்றைப் பழுதுபார்த்து விரைவாக வடவடிக்கை எடுத்து இந்த முக்கியமான இதயமாக இருந்துகொண்டிருக்கின்ற இந்தச் சாலையை நாம் பாதுகாக்கின்ற அந்தப் பணியைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் கீழே இருக்கக் கூடிய தல அதிகாரிகள் எல்லாம் சரியாகப் பணியாற்றுகிறார்களா இல்லையா என்பதைக் கண்காணிக்கக் கூடிய பொறுப்பு தலைமைப் பொறியாளர்களுடைய பல்வேறு பணிகளிலே ஒன்றாகும். அந்த முறையிலே தனியாக அரசு ஆணையிட்டு தலைமைப் பொறியாளருக்கு அத்தகையப் பணிகளைச் செய்யச் சொல்லவேண்டிய அவசியம் தற்போது இல்லை. இருக்கிற அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொண்டு அவரே அத்தகைய ஆய்வுகளை மேற்கொள்ளலாம். ஆனால் இந்த மாமன்றத்திலே சொன்னது போல நானே நேரிலே பார்வையிட்டு அங்கே இருக்கக்கூடிய விவர அறிக்கைகளையும், மற்ற விளக்கங்களையும் பெற்று, அன்றாடம் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய வேலைகளின் கணக்குகளையும் பார்வையிட்டு, அந்தப்பார்வையின் வாயிலாக, ஆய்வின் வாயிலாக, கொடுக்கப்பட்டிருக்கிற கருவிகளையும், சாதனங்களையும் ஒழுங்காக செயல்படுத்திக் கொண்டு வருகிறார்களா என்பதையும், அவைகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றனவா என்றும், அப்படி பயன்படுத்தாமல் இருந்தால் பழுதடைந்ததன் காரணமாக அவ்வாறு இருக்கிறதா என்றும், அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமேயானால், உடனடியாக பழுது பார்க்கின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டும், இனிமேலும் அப்படி பழுது அடைந்து, அவைகளை பழுது பார்க்காததன் காரணமாக பணிகள் தடுக்கப்பட்டன என்ற நிலமைக்கு வராமல்



இருக்கும் வகையில் அந்தத் துறைக்கு ஆணைப் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 6. வரவு செலவுத் திட்டம் 1985-86, வாக்கெடுப்பு.

#### கோரிக்கை எண் 15—காவல் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 91,90,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

THIRU N.S.V. CHITTAN: Mr. Speaker Sir, To discuss about the need to clear all pavement shops and vendors in Madras City, I move "that the allotment of Rs. 91,00,13,000 under Demand No. 15-Police be reduced by Rs. 100/-"

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களுக்கு மனு கொடுக்கச் செல்லும் பாதிக்கப்பட்டவர்கள் மீதே வழக்கு போடுவதால் ஏற்படும் நிலைமைகள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15.—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 91,90,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ச்சியாக நடைபெற்று வருகிற காவல் துறையினரின் சட்ட விரோத நடைமுறைகள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15.—காவல் துறை என்று தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 91,90,13,000-இல், ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. என். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களில் எல்லா இடங்களிலும் சினிமா விளம்பர போஸ்டர்கள் ஒட்டப்படுவதை தடுத்து குறிப்பிட்ட இடங்களில் மட்டும் ஒட்டுமாறு முறைப்படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 15.—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 91,90,13,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,35,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். "

THIRU N. S. V. CHITTHAN : Mr. Speaker Sir, To discuss about the larger participation and training to women to fight fires in domestic places, I move—

" that the allotment of Rs. 7,35,37,000 under Demand No. 16-Fire Services, be reduced by Rs. 100/-"

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தீயணைப்பு நிலையங்கள் இல்லாத வட்டத் தலை நகர்களில் தீயணைப்பு நிலையங்கள் துவக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,35,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. என். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் பகுதியில் குக்கிராமங்கள் அதிகம் உள்ளதாலும், குடிசைகள் மிக அதிகமாக உள்ளதாலும் சாத்தான்குளத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,35,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை பற்றிய குறிப்புகளும், தீயணைப்புப் பணிகள் பற்றிய குறிப்புகளும்* மாண்புமிகு மன்ற உறுப்பினர்களுக்கு முன்னரே வழங்கப்பட்டு இருக்கின்றன. அவற்றையெல்லாம் நான் படித்தாக நிகழ்ச்சி நிரல்களிலே சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறி, விவாதம் முடிந்ததற்குப் பிறகு விடை தருகிறேன் என்பதையும் சொல்லி அமர்கிறேன்.

(முற்பகல் 10–40).

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீதும், தீயணைப்புத் துறை மானியத்தின் மீதும் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நாட்டை காப்பதிலே இராணுவம் சிறப்பான பணியை ஆற்றி வருகிறது. அதைப்போலவே உள்நாட்டிலே மக்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பதிலே காவல் துறைக்கு நிரம்பப் பொறுப்புண்டு. ஆனால் எப்போதுமே காவல் துறையைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே விவாதம் வருகிறபோது, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சியிலே இருந்தாலும் கூட, எதிர் வரிசையிலே இருப்பவர்கள் கடுமையாக அதனைச் சாடுவது என்பது வழக்கமாக இருந்து வருகிறது. எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும் கூட, எதிர்க்கட்சிகள் ஆர்பாட்டம், போராட்டங்கள், வேலை

---

*.........-ம் பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஜூலை 8

நிருத்தங்கள் போன்றவைகளை நடத்துகிறபோது காவல் துறையிலே இருக்கிறவர்கள்தான், அதிலே பணியாற்று கிறவர்கள்தான், அப்படி ஆர்ப்பாட்டங்கள் நடத்துபவர்களால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

இன்றையதினம் நம்முடைய காவல் துறையிலே உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்குப் பின்னாலும் கூட நேர்மையாக, தூய்மையாக கடமையிலே கண்ணும் கருத்துமாக பணியாற்றிக் கொண்டிருக்கிற அதிகாரிகளை நான் மனமார பாராட்டுகிறேன். மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களின் மறைவிற்குப் பின்னாலே, டெல்லியிலே பாதுகாப்பிற்கு ஒரு சவால் வந்தபோது, அமைச்சர்கள் வீடுகளையும், அலுவலகங்களையும் காப்பதற்கு தமிழகத்திலேயிருந்து காவல் துறை போயிற்று. அந்தப் பணிகளை திறம்பட தமிழக காவல்துறை செய்தது என்பதை நான் உள்ளபடியே பாராட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே குற்ற நிகழ்வுகளில் தமிழகத்தை உலுக்கிய அடுக்கடுக்கான கொலை வழக்கிலே, ஜெயபிரகாஷ் கொலை வழக்கிலே நம்முடிய காவல் துறை திறம்பட ஆய்ந்து குற்றவாளியைக் கண்டு பிடித்து தண்டனை வாங்கிக் கொடுக்கக் கூடிய நிலையில் இன்றைக்கு நம்முடிய காவல் துறை பணியாற்றி இருக்கிறது. அதைப்போலவே, இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கிற எங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் இளங்கோவன் அவர்கள் தன்னுடைய துணைவியாருடன் ரெயிலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, 30 பவுன் நகை களவு போய், அதிலே மிக விரைவாக நம்முடிய காவல் துறை செயல்பட்டு கண்டுபிடித்ததை நான் பாராட்டுகிறேன்.

இப்படி பல நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அந்த அளவிற்கு நம்முடைய காவல் துறை சிறப்பாக பணியாற்றுகிறது. ஏன் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக பல்வேறு வசதிகளை பெற்று இருக்கிறது. தொலைபேசி, மைக்ரோ வேவ் வசதிகள் எல்லாம் இருக்கின்றன. அதைப்போல மிராக்கோடு என்று முறை கூட தமிழகத்தில்தான் முதல் முறையாக செயல்பட்டு வருகிறது என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் இன்னமும் சொல்வேன். 2, 3 தினங்களுக்கு முன்னால் டெல்லியில் ஒரு மாநாடு நடந்தபோது, இந்தியாவின் இளைய பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள், சட்டம்–ஒழுங்கு நிலையை சமாளிக்கிற பணிக்கு இராணுவத்தை பயன்படுத்துவதை குறைக்க வேண்டிய அவசியத்தையும், போலீஸ் படையை மேலும் வலுப்படுத்துவதன் அவசியத்தையும், வலியுறுத்தி பேசியிருக்கிறார்கள்.



1985 ஜூலை 8] [திரு. என். எஸ். வி. சித்தன்]

தேசப்பிதா காந்தியடிகள் ஒருமுறை சொன்னார்கள். இந்தியாவில் உண்மையான சுதந்தரம் இருக்க வேண்டுமென்றால் ஒரு பெண் இரவு நேரத்தில் நகைகளை அணிந்து கொண்டு யாருடைய துணையும் இல்லாமல் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு போகக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அந்த நிலை இன்றைக்கு இல்லாவிட்டாலும் கூட, நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே அந்த நிலையை நோக்கி நாடு போய்க்கொண்டிருக்கிறது. காவல்துறை அந்த வகையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் மெச்சத்தகுந்த வகையில் எல்லா மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய தமிழகக் காவல்துறையின் திறமைக்கு தற்போது ஒரு சோதனைக்காலம், அல்லது சவால் வந்ததைப்போல இப்போது தோன்றுகிறது. நாளுக்கு நாள் பெருகி வருகிற குற்றங்கள், குற்றப் புலனாய்விலே மெத்தனப் போக்கு தோன்றியும், களவுபோன பொருட்களை கைப்பற்றுவதில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு எண்ணிக்கை குறைந்துள்ளது அதாவது இன்வெஸ்டிகேஷன் அண்டு ரெக்கவரி குறைந்திருக்கிறது என்பது வேதனையும் கவலையும் அளிப்பதாக இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு குறைபாடுகள் போக்கப்பட வேண்டும் என்பதை முதலாவதாக குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டம் ஒழுங்கு நிலையை பராமரிப்பது பொறுத்தவரையில் தமிழக காவல்துறையினுடைய பணியை குறை கூறுவதற்கில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சம்பவங்கள் நடைபெற்று இருக்கலாம். அது பெரிய அமைப்பிலே அது சாதாரணமானதாக இருக்கலாம். வாக்குரிமைச் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்கிற தமிழர்களின் பண்பாடும் ஒரு முக்கிய காரணம் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். குற்றப்புலனாய்வுத் துறை, போலீஸ் போக்குவரத்துத் துறை ஆகிய துறைகளில் பணி மன நிறைவு அளிப்பதாக இல்லையென்பதை தெரிவிக்கவிரும்புகிறேன்.

போலீசாரிடையே இன்று ஒரு சுணக்க நிலை இருப்பதாக நான் அறிகிறேன். அந்தச் சுணக்கத்திற்குக் காரணம் தலைமை அதிகாரிகள் தங்களைக்காப்பாற்ற மாட்டார்கள் என்ற ஒரு அச்ச உணர்வு, இன்றைக்கு கீழ் மட்டத்திலே இருக்கிற காவலர்கள் மத்தியிலே இருந்து வருவதாக எனக்குத் தெரிகிறது. இந்த ஒரு நிலையைப் போக்க வேண்டும். அதற்கான காரணங்கள் என்ன என்பதை துறையினர் ஆராய வேண்டும். எடுத்ததற்கு எல்லாம் விசாரணைக் கமிஷன், புலன் விசாரணை மீது

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஜூலை 8

தற்காலிக வேலை நீக்கம், பதவி நீக்கம் போன்றவைகள் கடந்த காலத்திலே எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இந்தக் காவல் துறையில் கட்டுப்பாடும், கட்டுக் கோப்பும் இன்றைக்கு சீரழிந்து இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தங்களுக்கு அராசாங்கத்தில் உள்ள மேல் அதிகாரிகள் பாது காப்பும், அரவணைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கை காவலர்கள் மத்தியிலே அறவே போய்விட்டது. இதுதான் இம்மாதிரியான நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

உதாரணமாக கடந்த காலத்தில், தென் மாவட்டங்களின் கோடியிலே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது என்று சொன்னால், அந்த நிகழ்ச்சிகள் ஒரு போராட்டமோ, ஆர்ப்பாட்டமோ, கலவரமோ நடக்கிறது என்று சொன்னால், அதனை ஆய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரங்கள் அந்த இடத்திலே இருந்த அதிகாரிகளுக்கு இருந்தன. Man on the spot will be the best Judge என்று சொல்வார்கள். அந்த நிலை போய், இப்போது சென்னையிலே இருக்கிற அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, இங்கேயிருந்து உத்தரவு போனதற்குப் பின்னாலே தான் அந்த நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய சூழ்நிலை உருவாகி வருகிற காரணத்தால், பல நேரங்களில் உடனடியாக அந்த இடத்திலே இருக்கிற அதிகாரிகள் உரிய முடிவுகளை எடுக்க முடியாத காரணத்தால், விளைவுகள் விபரீதமாக ஆகிக் கொண்டு இருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையிலே இருப்பவர்களுக்கு உணவு, மலிவு விலையில் பல்வேறு சலுகைகள் அவர்களுடைய செயலுக்காக வீரப் பதக்கங்கள் போன்றவைகள் இந்தத் துறைதிலெ அளித்தும் கூட இன்றைக்கு இந்தக் காவல் துறையிலே ஒரு உத்வேகம் இல்லை என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். எனவே இதனைப் போக்குவதற்கு, மாண்புமிகு அமைச்சரவர்களே துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். ஒரு போலீஸ் கமிஷனை நியமிக்க வேண்டும் என்று காவல்துறையில் கீர்த்தி மிக்க வகையில் பணியாற்றி இன்றைக்கு ஓய்வு பெற்று இருக்கிற அதிகாரிகள், மதிப்பிற்குரிய அருள், சிங்காரவேலு, நரசிம்மன், பரமகுரு போன்றவர்களை உறுப்பினர்களாக நியமித்து, நீதித்துறையிலெ, விரும்பினால் சட்ட மன்றத்தில் உள்ளவர்களைப் போட்டு, ஒரு உயர்மட்டக் குழுவை நியமித்து, அதிலே அரசுத் துறையிலே இருக்கிற உயர் அதிகாரிகளை எல்லாம் உறுப்பினர்களாகப் போட்டு, கமிஷன் அமைத்தால், அதைப்பற்றி விரிவாக விசாரித்து, அவர்கள் அறிக்கை கொடுப்பதற்கான நிலைமை ஏற்படும்.



1985 ஜூலை 8] [திரு. என். எஸ். வி. சித்தன்]

1980 ஆம் ஆண்டிலேயிருந்து காவல்துறைக்கு புதிதாக ஆள் சேர்க்கப்படவில்லை. அது வேதனைக்குரிய வருந்தத்தக்க விஷயம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஓய்வு பெற்றவர்கள் பணி மூப்பு காரணமாக பணியிலேயிருந்து ஓய்வு பெற்றவர்கள் இடங்கள் எல்லாம் இன்றைக்குக் காலியாக இருக்கிறது, ஆட்களை எடுக்க முடியாத ஒரு நிலை உருவாகியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், ராணுவத்திற்கு ஆட்களை எடுப்பதைப் போன்று ஆட்களை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு இருக்கிற கவலை என்னவென்றால், காவல்துறைக்கு ஆள் எடுப்பீர்கள் என்று சொல்லி, அதற்காக இளைஞர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் பணத்தைச் செலவழித்து தங்களிடம் உள்ள பத்திரங்களை எல்லாம் கொடுத்தும்கூட இன்றைக்குக்கூட அவர்களை வேலைக்கு எடுக்க முடியாத நிலை இருக்கிறது. கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். வளர்ந்து வருகிற சமுதாயத்திலே தொழிற்சாலைகள் பெருகி வருகின்ற நேரத்திலே நகர்ப்புறங்களில் வீடுகள் அதிகமாகிக் கொண்டு இருக்கிற நேரத்திலே, காவல் துறையின் பணிகள் அதிகமாகிக் கொண்டு இருக்கிற நேரத்திலே, இன்றைக்கு காவல் துறையிலே வேலைக்கு ஆள் எடுக்காமல் இருப்பதை கண்டிக்கத் தக்க ஒரு விஷயமாக நான் கருதுகிறேன்.

மேல்நாடுகளில், அல்லது வட மாநிலங்களில் உள்ள கணக்கை எடுத்துக்கொண்டால் தமிழகத்தில் இருக்கிற காவலர்களின் எண்ணிக்கை, ஏறக்குறைய 5 கோடி மக்கள் இருக்கிற தமிழகத்தில் நம்முடைய காவல்துறையினரின் எண்ணிக்கை 50 ஆயிரம்தான், இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சில இடங்களில் 400, 500 ஜனத்தொகைக்கு ஒரு காவலர் என்ற நிலை மாறி இன்றைக்கு அதிகமான அளவிலே காவலர்கள் இல்லாத காரணத்தால்தான் இன்றைக்கு சமுதாயத்திலே குற்றங்கள் அதிகமாக வளர்ந்து வருகின்றன.

அதைப்போலவே எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்கள் எல்லாம் காவல்துறையில் புகார்கள் கொடுத்தால், அவைகள் அத்தனையும் பதிவு செய்யப்படுவதில்லை. ஒரு ஆங்கிலப் பத்திரிக்கையில் வந்ததைப் போல, 4 புகார்கள் கொடுத்தால், அதிலே ஒரு புகார்தான் பதிவு செய்யப்படுகிறது. காரணம் தங்களுடைய வேலைப் பளுவை குறைக்க வேண்டும் என்பதற்காக அல்லது தமிழகத்தில் குற்றங்கள் குறைந்து இருக்கின்றன என்பதைக் காட்டுவதற்காக குற்றங்களை பதிவு செய்யாத ஒரு

நிலை இருக்கிறது என ஆங்கிலப் பத்திரிகை சுட்டிக்காட்டியிருக்கிறது. இதன் மூலமாக அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

சில நாட்களுக்கு முன்னாலே தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலமாக காவல்துறைக்கு அதிகாரிகள் நியமிக்கின்ற தேர்வு நடைபெற்றது. இதுபற்றி கூட தமிழ் தினசரிகளிலே செய்திகள் வந்ததை நான் பார்த்தேன். அதிலே 15 பேர்களை இந்தத் தேர்வாணைக்குழு மூலமாக நேரடியாக உயர் பதவிக்கு டி.எஸ்.பி. பதவிக்கு தேர்வு செய்தார்கள். அதிலே ஒரு விசித்திரம் என்னவென்றால், எஸ். ஐ. ஆகி பணியாற்றுகிற நேரத்திலே ஒழுங்கீனமாக, முறைகேடாக புகாருக்கு ஆளாகி சஸ்பெண்ட் செய்யப்பட்டு, வீட்டுக்கு அனுப்பப்பட்ட ஒருவர், டி.எஸ்.பி. தேர்விலே தேர்வு பெறுகிறார். ஆகவே நான் உங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இது மாதிரி ஒரு நிகழ்ச்சி இருந்தால், ஏன் அந்தத் தேர்வாணைக் குழுவிலே இருப்பவர்கள் இந்தக் காவல் துறை மூலமாக விசாரித்து இந்தப் பதவிக்கு அவர்கள் தகுதியானவர்கள்தானா என்று தெரிந்து கொள்ளவில்லை. இந்தச் செய்திகள் எல்லாம் வந்ததற்குப் பிறகு இப்போது நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இது உண்மையாக இருக்குமானால், காலங் கடந்த அந்த புத்திசாலித்தனத்தை நான் பாராட்டுகிறேன்.

(முற்பகல் 10–50)

ஆனால் இதே மாதிரியான நிகழ்வுகள் தொடரக் கூடாது என்பதற்காகத் தான் இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுபோலவே தமிழகத்தை சில நாட்களாகவே பரப்பரப்பாக இருக்கக்கூடிய வழக்கு இந்த நீலப் பட வழக்கு என்பதை சொல்லவிரும்புகிறேன். இதிலே இன்றைக்கு சினிமாத் துறையில் பிரபலமாக இருக்கின்றவர்கள் அல்லது அவர்களுக்கு துணையாக இருப்பவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கின்ற காரணத்தால் இது செய்தித் தாட்களில் அதிகமான அளவுக்கு விளம்பரப்படுத்தப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் பெண்களை இழிவுப்படுத்துகின்றவர்கள், அவர்களுடைய இயலாத தன்மையை பயன்படுத்திக் கொண்டு கற்பழிக்கின்றவர்கள் அல்லது அநாகரிகமாக நடத்துகின்றவர்கள் யாராக இருந்தாலும் சரி இப்போது இருக்கின்ற சட்டங்கள் மட்டும் அல்ல இன்னும் சட்டத்தை கடுமையாக்கி தண்டிக்கப்பட வேண்டும். எவ்வளவு அதிகமான தண்டனை கொடுத்தால் கூட அது தகும். அது மாதிரியான குற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்





என்பதில் நாங்கள் மிகவும் தீவிரமாக இருக்கிறோம். ஆனால் இன்றையதினம் என்ன நடைபெற்று இருக்கிறது என்றால் குண்டர்கள் சட்டத்தின்கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் நான் முன்பே சொன்னேன், கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்று. ஆனால் அதே நேரத்தில் குற்றம் செய்யப்பட்டவர்கள் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். அதனுடைய விளைவு என்ன? மக்கள் மத்தியில் என்ன பேசிக்கொள்கிறார்கள், செல்வமும், செல்வாக்கும் பெற்றவர்கள் குடும்பத்தினர் சம்பந்தப்பட்டு இருப்பதன் காரணமாக வேறு சட்டங்களில் வழக்கு போடாமல் இந்தச் சட்டத்தின் மூலமாக அவர் கைது செய்யப்பட்டு இருப்பதால் வழக்கு மன்றத்திற்கு குற்றம் சாட்டப்பட்டவர்கள் வர முடியவில்லை. அதனால் விசாரிக்கப்படவில்லை, சாட்சிகள் சொல்ல முடியவில்லை என்று மக்கள் மத்தியில் சொல்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம், இந்த மாதிரியான குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அதே நேரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கின்ற அளவுக்கு வேறு சட்டத்தின் கீழ், வேறு இனங்களின் கீழ் இந்த வழக்கை எடுத்துக் கொள்வதற்கு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் இந்த குண்டர் சட்டம் எதற்காக பயன்படுத்த வேண்டும் தெரியுமா? சமுதாயத்தில் புற்று நோயாக புரை ஓடிக் கொண்டு இருக்கின்ற, சமுதாயத்தின் பொருளாதாரத்தை சீர் குலைக்கின்றவர்கள் மீது இதே அக்கறையோடு இதே முனைப்போடு, ஆர்வத்தோடு காவல் துறை பணியாற்றி, நடவடிக்கை எடுக்குமானால் அது பாராட்டத்தக்க ஒன்று என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டு இருக்கிறேன்.

2 நாட்களுக்கு முன்னால் எங்களுடைய மாவட்டத்தின் அருகில் உள்ள காமராஜர் மாவட்டத்தில் மேலக்கல்லன்குளத்தில் துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்று இருக்கிறது. நான் இந்த காவல் துறை அறிக்கையைப் பார்க்கும் பொழுது புள்ளி விவரத்தைப் பார்க்கும் பொழுது கொஞ்சம் மன மகிழ்ச்சியை அடைந்தேன். நம்முடைய ஆய்வில் இருக்கின்ற இந்த ஆண்டில் அதிகமான துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவில்லை அதிக பேர் இறக்கவில்லை என்று இருப்பதை படிக்கும் போது 2 நாட்களுக்கு முன்பு எனக்கு கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. ஆனால் 2 நாட்களுக்கு முன்னால் ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்து அதிலே 2 பேர் இறந்து இருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூற விரும்பு

இறேன், அந்தப் பகுதியில் முன்பு ஒரு கொடிய பழக்கம் இருந்து விவசாயிகள் பம்பு செட்டுகளை திருடி விடுவது அல்லது கால் நடைகளை பிடித்துக் கொண்டு போய் விடுவது, கொண்டு போய் எங்காவது ஒளித்து விடுவது. பின்னால் இந்த விவசாயி தேடிக் கொண்டு அங்கே போனால் அதற்கு இடைத் தரகர்கள் வருவார்கள். என்ன, எவ்வளவு பணம் தருகிறாய் என்று கேட்பதும் 2 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரம் ரூபாய் என்று பேசி வாங்கிக் கொண்டு பிறகு என்ன சொல்வார்கள் தெரியுமா ? அந்த பம்பு செட் வேறு எங்கும் போகவில்லை, உன்னுடைய நிலத்தில் இந்த செடியின் அருகில், மரத்தின் அடியில் புதைத்து வைத்து இருக்கிறோம். எடுத்துக் கொண்டு போ என்று சொல்லி விடுவார்கள்.

அதே போல் கால் நடைகளை ஓட்டிக் கொண்டு போய் வேறு எங்காவது ஒரு ஊரில் கட்டி வைத்துவிட்டு பணத்தை வாங்கியதற்கு பின்னால் இந்த ஊரில் இந்த இடத்தில் கட்டி வைத்து இருக்கிறோம், போய் பிடித்துக் கொள் என்று சொல்வார்கள். போலீசுக்கு ஒரு சவாலாக இருந்த ஒரு நிகழ்ச்சி அந்தப் பகுதியில் நடந்து வந்தது. அதற்கு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு மன்றங்களில் சொல்லியிருக்கிறோம். ஆனால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் கள்ளன்குளத்திலே நடந்து இருக்கிறது. ஆனால் இந்த ஊரில் இந்த நிகழ்ச்சி 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் நிறுத்தப்பட்டு விட்டது. ஊரில் இருப்பவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பஞ்சாயத்து வைத்து, கட்டுப்பாடு வைத்து இனிமேல் திருட்டு கூடாது, இது ஒரு அநாகரிகமான கொடிய பழக்கம், நாம் முன்னேற வேண்டும் என்று சொல்லி ஊரில் இருப்பவர்கள் முடிவு செய்த பிறகு காவல் துறை அங்கே திடீர் என்று வந்து 3, 4 பேரை கைது செய்வது அவர்கள் மீது வழக்குப்போடுவது என்ற முறை தொடர்ந்ததால் அப்போதே சொல்லியிருக்கிறார்கள், நாங்கள் ஊரில் கட்டுப்பாடு வைத்து இருக்கிறோம். அதிலே கூட சென்ற ஆண்டு இந்த மாதிரி ஒரு நிகழ்வு நடந்த போது ஊர்க்காரர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டு அதற்கான பணத்தை கொடுத்து இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஊரில் இந்தக் காவல் துறை போய் கைது செய்கின்ற காரணத்தால் ஊர்க்காரர்கள் மத்தியில் கொஞ்சம் கோபம் வந்து இருக்கிறது. நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புவது ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தக் கூடிய அளவுக்கு அங்கே என்ன நடந்து இருக்கிறது ? கைது செய்வதற்கு காவல் துறை அதிகாரிகள், அதிகாலை, நேரத்தில் போகிறார்கள். 2 பிரிவாக பிரிந்து போகிறார்கள், ஒரு பிரிவு குறிப்பிட்ட பேர்களைக் கைது செய்து விட்டு திரும்பி விடுகிறார்கள்.





இன்னொரு பிரிவு அங்கே எஸ்.ஐ., கான்ஸ்டபிள், எட்-கான்ஸ்டபிள் எல்லாம் அங்கே இருக்கிறார்கள். திரும்பி வந்தவர்கள் பின்னர் பார்க்கிறார்கள். ஓகோ மக்கள் மத்தியில் சிலர் மாட்டிக் கொண்டார்கள் போல் இருக்கிறது என்று இவர்கள் ஏதோ நடந்து விடுமோ என்ற எண்ணத்தின் காரணமாக திடீர் என்று போய் சுடுகிறார்கள். அப்படி காவல் துறையினர் மீது ஏதாவது தாக்கியதையோ அல்லது அங்கே உயிர் போகும் அளவுக்கு அவர்களுக்கு கடுமையான காயம் இருந்ததாகவோ தகவல் இல்லை. அந்த ஊர்க்காரர்கள் சொல்கிறார்கள் நாங்கள் எல்லாம் பேசிக் கொண்டு இருந்தோம், அந்தப் பள்ளியில் பேசிக் கொண்டு இருந்தோம், ஆனால் திடீர் என்று சுட ஆரம்பித்து விட்டார்கள். எந்த விதமான முன் அறிவிப்பும் இல்லாமல் சுடுவதற்கு காரணமே இல்லாமல் காவல் துறையின் காட்டு தர்பார், கட்டு அவிழ்க்கப்பட்டு மூர்க்கத்தனமாக நடந்து இருக்கிறது என்பதை நான் வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எந்த விதமான காரணமும் இல்லாமல் முன் அறிவிப்பும் இல்லாமல் சுட்டு இருக்கிறார்கள். திண்ணையில் படுத்து இருந்தவர்கள் எல்லாம் பலி ஆகியிருக்கிறார்கள். ராமன் என்ற ஒருவர் அதே போல் முனியம்மாள் என்ற ஒருவர், சின்னக் குழந்தை திண்ணையில் படுத்துக் கொண்டு இருக்கிறது சின்னப்பொண்ணு, வயது 13, ஜானகி வயது 7, தங்கம் என்ற பையன் மீது கூறை வழியாக குண்டு வந்து உள்ளே விழுகிறது இது என்ன நியாயம்?

ஒரு ஜனநாயக அமைப்பிலே இப்படியா துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவது ? துப்பாக்கிப் பிரயோகம் வேண்டாம் என்று சொல்லவில்லை, காவலர்கள் உயிரைக் காக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஆனால், அதே வேளையிலே, ஒரு தவறான எண்ணம் கொண்டு, துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அந்தப் பகுதியிலே இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது. அந்த இரண்டு சடலங்களை எரிக்கக் கூட முடியாத அளவுக்கு மக்கள் பயந்து போய் இருக்கிறார்கள். அங்கே ஒரு மயான அமைதி இருக்கிறது. யாரும் அங்கே போக முடியவில்லை. இது சம்பந்தமாக விரிவான ஒரு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். குண்டடி பட்டு இறந்தவர்களுக்கும், காயம் அடைந்தவர்களுக்கும் அரசாங்கம், நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல, துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் மக்களுக்குக் காவல்

188—800—9

துறையின் மீதும், இந்த அரசின் மீது ஒரு நம்பிக்கை வரும். அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லாக்கப்பிலே மரணம்; ஒரு வாரத்திற்கு முன்னாலே, நம்முடைய சேலம் மாவட்டம் ஓமலூரிலே காவல் நிலையத்திலே கண்ணன் என்பவர் ஒருவர் இறந்து இருக்கிறார். இதற்கு முன்பாகவே, இந்த வரிசையிலே இருக்கிற நாங்கள் விரிவாகப் பேசி இருக்கிறோம். லாக்கப்பிலே மரணம் என்று சொன்னால், அது தற்கொலை அல்ல. கொலை என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் போல லாக்கப்பிலே ஒருவர் விசாரிக்கப்படுகிறார் என்று சொன்னால், வெளியிலே ஒரு பட்டியல் போட வேண்டும்.

இன்னாரை, இன்ன காரணத்திற்காக லாக்கப்பிலே வைத்து இருக்கிறோம். இத்தனை நாட்களுக்குள் விசாரிக்க வேண்டும் என்று ஒரு பட்டியல் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கு முன்னாலும் தொங்க வேண்டும். அப்போது தான் என்ன காரணத்திற்காக, யார் லாக்கப்பிலே இருக்கிறார்கள் என்று வெளியில் இருப்பவர்கள் தெரிந்துகொள்ள முடியும்.

நாங்கள் விசாரிக்கிறோம், விசாரிக்கிறோம் என்று சொல்லி, லாக்கப்பிலே வைத்து விட்டு, பின் லாக்கப்பிலே இறந்து விட்டார். மர்மமான முறையிலே இறந்திருக்கிறார் ; கழுத்து நெறிக்கப்பட்டு இறந்து இருக்கிறார் என்று செய்திகள் வருகின்றன. அன்றைக்கு ஊரே கூடி திரண்டு இருக்கிறது. அன்றைக்கு எங்களுடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன் அவர்கள் அங்கே இருந்த காரணத்தினாலே, அங்கே கூடி இருந்தவர்களை எல்லாம் சமாதானப்படுத்தி, அவர்களை எல்லாம் அமைதிப்படுத்தி, நல்ல சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்.

இதிலே எனக்கு இருக்கின்ற வேதனை என்ன தெரியுமா ? காவலர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். விசாரணை வேண்டும் என்று சர்வ கட்சியினரும் சொல்லி இருக்கிறார்கள். நேற்றைய தினம் அங்கே ஒரு உயர் போலீஸ் அதிகாரி , டி. ஜி. பி. என்ன சொல்கிறார் தெரியுமா ? ஆர். டி. ஓ. நியமனம் செய்து, விசாரணை நடந்துகொண்டு இருக்கும் போது, இது கொலை அல்ல தற்கொலை தான் என்று பத்திரிகையிலே போலீஸ் அதிகாரி பேட்டி கொடுத்திருப்பதாக அந்தத்தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்னிடம் சொல்கிறார்.



இப்படி விசாரணைக்கு ஆள் நியமனம் செய்து விட்டு, விசாரணைக்கான ஏற்பாடுகள் செய்யும் நேரத்திலே ஒரு காவல் துறை தலைமை அதிகாரி பேட்டி கொடுத்தால் விசாரணை எப்படி நேர்மையாக இருக்க முடியும். இதற்கு உண்மையிலேயே அரசாங்கம் இன்றைக்கு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது விசாரணையைத் திசை திருப்புவதாக ஆகாதா என்றும் கேட்க விரும்புகிறேன்.

அண்மைக் காலத்திலே தமிழகத்தில் காவல்துறை நடவடிக்கையைப் பற்றி ஆங்கில ஏடான 'பிளிட்ஸ்' பத்திரிகை சில நாட்களுக்கு முன்னாலே சில செய்திகளைச் சொல்லியிருக்கிறது.

தமிழ்நாட்டில் இன்றையதினம், காவல்துறை, போலீஸ் ராஜ்யமாக மாறிக்கொண்டு இருக்கிறது என்று சொல்லி, ஒரு கட்டுரையை எழுதி இருக்கிறார்கள். அதனை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டுக் காவல் துறை குற்றத்தை துப்பறிவதை முக்கியமான காரியமாக எடுத்துக் கொள்ளவில்லை. குறிப்பாகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த நிலைமை குறைந்து வருகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். அதைப் போலவே, காவல் துறையிலே அதிகமான காவலர்கள் நியமனம் செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்திலே பல வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை என்றும் அந்தப் பத்திரிகை எழுதி இருக்கிறது.

அதைப்போலவே மேல் அதிகாரிகளாக பதவி உயர்வு பெற்று போகிறவர்கள் உதாரணமாக ஆங்கில மொழி அறிவு சரியாக இல்லாதவர்கள், அரை குறை அறிவு உடையவர்கள், சட்டமே தெரியாதவர்கள், மக்களோடு ஒன்றிப் போகாதவர்கள் ஆகியோருக்கு இன்றையதினம் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொரு பிரச்சினை என்ன தெரியுமா ? காவல் துறையிலே இருக்கிறவர்களுக்கு அதிகமான ஊதியம் கொடுக்கப்படவேண்டும், நல்ல நிலையிலே வைக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது காவல் துறை கீழ்நிலை அலுவலர்களில் 60 விழுக்காடு அங்கத்தினர்கள் தங்களுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடிய வருவாய்க்கு மேலாக, ஆடம்பர வாழ்க்கையிலே உள்ளார்கள்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, வி. சி. ஆர் போன்றவை வைத்து இருக்கிறார்கள். இன்னும் ஆய்வாளர்களின் நிலையிலே இருக்கிறவர்களில் 33 விழுக்காடு பேர், நியாயமான

ஊதியத்தின் மூலம் பெற முடியாத நிலையிலே இருக்கிறவர்கள், அழகான பங்களாக்கள் கட்டி இருக்கிறார்கள். காவல் துறை கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்று இருக்கிற 85 விழுக்காடு ஆய்வாளர்கள், அவ்வாறு உயர்வு பெற்றதால், கீழே உள்ள அலுவலர்கள் தங்கள் மனம் போனபடி நடந்து கொள்வதைக் கண்டும் காணாதது போல் இருக்கிறார்கள் என்றும் அந்த ஏடு சுட்டிக் காட்டியுள்ளது. இது கவனிக்கப்பட வேண்டியது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே, இன்றையதினம் பல்வேறு இடங்களிலே சம்பந்தப்பட்ட ஒரு வழக்கு அல்லது நிகழ்ச்சி நடைபெறுமேயானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரியாகத் தண்டிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவிலலை என்பதற்கு உதாரணமாக, மதுரையிலே சில நாட்களுக்கு முன்னாலே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

அங்கே பம்பாய் உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் திரு வி. எம். தார்க்குண்டே அவர்கள் தாக்கப்பட்டார்கள். மேலும் அதைக் கண்டித்து ஆயிரமாயிரம் பேர்கள், மதுரையிலே ஊர்வலமாக வந்தவழக்கறிஞர்கள், டாக்டர்கள், பத்திரிகையாளர்கள், வியாபாரிகள் ஆகியவர்களை காவல் துறையினர் அடித்து துன்புறுத்துவதற்கு ஆணையிட்டவர், மேலும் அவர்கள் மீது உண்மைக்கு மாறாக வழக்குகளை போட்டவர்— இப்படி சமுதாயத்திலே இருக்கின்ற ஒவ்வொரு இனத்தவராலேயும், எல்லாக் கட்சிகளாலேயும் சொல்லப்பட்டவர்மீது இந்த அரசாங்கம் கடுமையான தண்டனை விதித்து இருக்கிறது என்ன தெரியுமா?

அந்தப் போலீஸ் அதிகாரி முகமது அலி என்பவரை, அவருடைய விருப்பத்திற்கேற்ப பல்வேறு ஊருக்கு மாற்றி இருக்கிறது. இதை விட கடுமையான தண்டனை என்னவென்றால் அவருக்கு பதவி உயர்வு கொடுத்து இருக்கிறார்கள். இப்படி குற்றம் செய்தவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக விரும்பும் இடத்திற்கு மாற்றுவது என்பதும், பதவி உயர்வு கொடுப்பது என்பதும் காவல் துறையிலே இருக்கின்ற கட்டுக் கோப்பை நிலை குலையச் செய்யாதா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11—00)

இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக்குறிப்பில் பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறை சிறப்பாக இயங்குவதற்காக இத்தனை இலட்சம் ரூபாய் செலவில் இத்தனை வாகனங்களை வாங்கியிருக்கிறோம். நவீன வசதிகளைக் கொண்ட வாகனங்களை வாங்கியிருக்கிறோம் என்ற விவரங்களை





யெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், சிலநாட்களுக்கு முன்னால் ''இன்டியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகையில் விரிவாகவும், விளக்கமாகவும் நம்முடைய காவல் துறையில் இயங்காமல் முடங்கிப் போய் இருக்கின்ற வாகனங்களைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக, சென்னையில் இருக்கின்ற போக்குவரத்து வாகனங்களைப்பற்றி ஒரு விரிவான புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும், அமைச்சர் பெருமக்களும் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

ஜூன் 1985 இறுதிவாக்கில் எடுக்கப்பட்டபுள்ளிவிவரத்தின்படி சென்னை நகர காவல் துறையில் அனுமதிக்கப்பட்ட 55 லாரிகளிலே 35 பழுதாகவும், 85 ஜீப்புகளிலே 22 பழுதாகவும், 18 கார்களிலே 7 பழுதாகவும், 50 ஸ்டான்டர்ட் வேன்களில் 40ம், 140 மோட்டார் சைக்கிள்கள் பணிமனையிலே உள்ளன என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு ஜோக்கையும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு போலீஸ் லாரி புறப்படுகிறது என்றால் குறைந்தது பத்து காவலர்களாவது லாரியில் இருக்க வேண்டுமாம். எதற்காக? பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவா என்றால் இல்லை. அந்த போலீஸ் லாரி எங்கேயாவது நின்றுவிட்டால் அதைத் தள்ளிவிடுவதற்காக அந்த பத்து பேர்கள். அப்படி ஒரு ஆணை இருப்பதாகக்கூட அந்தப் பத்திரிகையில் எழுதி எள்ளி நகையாடுகின்ற அளவிற்கு தலைநகரத்திலே உள்ள காவல்துறை வாகனங்கள் இருந்தால் எப்படி குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க முடியும்? அவைகளை நல்ல முறையில் வைத்து இருக்க வேண்டாமா?

அடுத்து, ஒரு கொடிய வழக்கம் இருக்கிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடமிருந்து உண்மைகளை வரவழைப்பதற்காக விசாரிக்க வேண்டியது என்பது நியாயம்தான். ஆனால் அவர்களை இலாடம் கட்டி அடிக்கின்ற கொடுமையான முறை இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு உதாரணத்தைச் சொல்ல முடியும். எந்தக் காவல் நிலையத்தில் நடந்தது என்று கூடக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இதன் காரணமாக, நிரபராதிகள் சிலர் தண்டிக்கப்படுகின்ற இந்தக் கொடுமையான முறை அகற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் நிலையத்திற்குப் போனால் அங்கே உட்காருவதற்குக் கூட பல இடங்களில் வசதிகள் கிடையாது. நாம் போய் நின்றவுடன் பெஞ்சு, நாற்காலிகளைக் கொண்டு வரச் சொல்லுகிறார்கள். யாராக இருந்தாலும், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கும், கலெக்டர் அலுவலகத்திற்கும், தாலுக்கா அலுவலகத்திற்கும் நிர்ப்பயமாகப் போவதைப்போல, காவல் நிலையத்

திற்கும் தைரியமாகப் போய் புகார் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட வேண்டும். அந்த நிலைமைக்கு அங்கே துணை செய்ய வேண்டாமா? ஏதோ வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்ததைப் போல இப்பொழுதும் இருப்பது சரியாக இருக்குமா? நாம் போனபிறகு நாற்காலி போடுகின்றார்கள். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆபாச சுவரொட்டிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர் கள்கூட இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கே கேள்வி நேரத்தின் பொழுது சொன்னார்கள். இளைய தலைமுறையினரின் எண்ணத் தைக் கெடுக்கின்ற அளவிற்கு, அவர்களுடைய ஒழுக்கத்தைக் கெடுக்கின்ற அளவிற்கு ஆபாச போஸ்டர்கள் வண்ணத்தில் ஒட்டப்படுகின்றன. அப்படிப்பட்ட போஸ்டர்களை ஒட்டுகிறவர் களின் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்கூட்டரில் ஒரு குடும்பமே பயணம் செய்கிறது. கணவன் மனைவி, முன்னால் ஒரு பிள்ளை, கையிலே ஒரு பிள்ளை, வயிற் றிலே ஒருபிள்ளை என்று செல்லுகின்ற காட்சிகளை நாம் காண் கிறோம். எப்படி ஆட்டோ ரிக்ஷாவில் குறிப்பிட்ட எண்ணிக் கைக்கு மேல் போகக் கூடாது என்று சொல்கிறோமோ, எப்படி ஸ்கூட்டரில் போகின்றவர்கள் ஹெல்மெட் அணிந்து கொண்டு தான் செல்ல வேண்டுமென்று சொல்கிறோமோ, அதைப் போல ஸ்கூட்டரிலேயும் இத்தனை பேர்களுக்கு மேல் போகக் கூடாது என்று செய்யவேண்டும். அப்படியின்றி ஸ்கூட்டரில் ஒருகுடும்பமே போனால் அவர்களுடைய பாதுகாப்பிற்கான உத்திரவாதத்தை எவ்வாறு கொடுக்கமுடியும்? எனவே, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திண்டிவனம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் மாண்புமிகு திரு. தங்கமணி அவர்களுடைய வீட்டிலே திருட்டு நடந்து இரண்டு மாதங்கள் ஆகியிருக்கின்றன. நகைகள், பட்டுச் சேலைகள் ஆகியவை திருட்டுப் போயிருப்பதாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். காவல் நிலையத்தில் புகார் செய்யப் பட்டும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

அதைப்போல, திண்டிவனம் வட்டத்தில் வெண்மணியத்தூர் என்ற கிராமத்தில் முதலமைச்சருடைய சத்துணவுத் திட்டத் திற்காகக் கட்டுவதற்கான இடம் ஒதுக்குவதில் தகராறு ஏற் பட்டிருக்கிறது. அதை விசாரித்து கட்டிடத்தை எங்கே கட்டலாம் என்பதற்காக, திண்டிவனம் ஆர். டி. ஒ. அவர்களும்,



ஏ.எஸ்.பி. அவர்களும் அங்கே போயிருக்கிறார்கள். அப்படிப் போன இடத்தில் அந்தக் கிராமத்திலே இருக்கின்ற ஒருவர் நன்றாகக் குடித்துவிட்டு, காவல் துறையினரைத் தாக்க முயற் சித்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே ஒரு போராட்டம் நடத்தியதாகக் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். 300 அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் நான்கு மணி நேரம் போராட்டம் நடத்தி போக்கு வரத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. காவல் துறை அதி காரிகளைக் கண்டபடி விமர்சித்தும், பேசியும் ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி ஆளுங் கட்சிக்காரர்களே போலீசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய் திருக்கிறார்கள் என்ற இந்த விவரங்களைக் கொடுத்திருக்கிறார் கள். இதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இது குறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு நிகழ்ச்சி. எங்கள் மாவட்டத்தில் வத்தலகுண்டு என்ற இடத்தில் ஒருவர், ஊராட்சி ஒன்றியத்திலே பணிபுரிந்து கொண்டிருக்கிறார். அவருடைய துணைவியார் மாவட்ட நல அதிகாரியாக, மாவட்ட அளவில் பெரிய அதிகாரியாகப் பணி யாற்றிக் கொண்டிருக்கிறார். இவர்களுக்கு நான்கு பெண்கள். ஒரு பெண்ணுக்கு அந்த ஊரிலே இருக்கின்ற ஒருவருக்குத் திருமணம் முடித்து விடுகிறார்கள். அந்த மணமகன் ஏற்கனவே திருமணம் ஆனவர். ஆனால் சில நாட்களுக்குப் பின்னர் அந்தப் பெண் மர்மமான முறையில் இறந்துவிடுகிறார். ஆனால் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்தவர், நாகராஜன் என்பது அவ ருடைய பெயர். அவர் சொல்கிறார், அடுத்த பெண்ணையும் தனக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று வற் புறுத்துகிறார். அதற்கு அந்தப் பெற்றோர் மறுக்கிறார்கள். அதற்காக இவர் என்ன செய்கிறார் தெரியுமா? போலி திருமண அழைப்பிதழை அச்சிடுகிறார். கல்யாணம் நடத்துவதைப் போல ஒரு அழைப்பிதழை அச்சிட்டு அதை அனுப்பி கண்டிப்பாகத் தனக்கு அவர்களுடைய பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று புகார் செய்கிறார். பாதிக்கப்பட்ட பெற்றோர் கள் காவல் துறையிலே புகார் செய்திருக்கிறார்கள். ஆனால், என்ன நடக்கிறது தெரியுமா? யார் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்கிறாரோ, அவர் ஏற்கனவே திருமணம் ஆனவர், மூத்தப் பெண்ணும் இறந்திருக்கிறாள், இந்தக் குடும்பத்தில் இருக்கின்ற இன்னொரு பெண்ணையும் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கிறாரே அவர் மீது நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, இந்தப் பெற்றோர் களை போலீசார் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்,

பெண்ணின் உற்றார், உறவினர்களைப் போய் விசாரிப்பதாகப் பயமுறுத்துகிறார்கள். ஒரு வேளை, செல்வாக்கு படைத்தவராக, செல்வம் படைத்தவராக நாகராஜன் இருப்பாரோ, என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால், குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இந்த நாகராஜன் போன்ற நச்சுப் பாம்புகளின் நச்சுக்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதை விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினருக்கு 'சென்ட்ரல் பே டிராயிங்' என்ற ஒரு முறை இருப்பதாக நான் அறிகிறேன். வேறு துறைகளிலே இருப்பதைப் போல, அந்தந்த அதிகாரிகள் இருக்கிற அந்தந்த அலுவலகங்களிலே அவர்களுடைய சம்பளத்தைப் பெறுகின்ற அளவுக்கு முறைகளை மாற்ற வேண்டும். ஓரிடத்திலே சம்பளம் கொடுக்கின்ற காரணத்தாலே காலதாமதம் ஆகிறது என்று சொல்கிறார்கள்.

அதைப் போல், இன்னொரு முக்கியமான பிரச்னை, காவல் துறையிலே இருப்பவர்கள்தான் உயிரைத் துச்சமாக மதித்துப் பணியாற்றுகிறார்கள். ஆனால், அதே நேரத்திலே, காவல் துறையிலே உள்ள 70 சதவீதத்தினருக்குச் சொந்த வீடு கிடையாது. பெரிய சம்பளம் வாங்குபவர்களை விட்டுவிடுவோம். ஆனால், சாதாரண போலீஸ்காரர்களை எடுத்துக் கொள்வோம். சென்னை போன்ற இடங்களிலே அவர்களுக்கு வீடு எங்கே இருக்க முடியும்? ஏதாவது ஒரு குப்பத்திலேதான் அல்லது, குறைந்த வாடகையிலே தான் அவர் குடியிருப்பார். அந்தப் பகுதியிலே கலவரம் வருகிறது என்று சொன்னால் அவர், தன்னுடைய வீட்டைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பாரா, அல்லது வேறு கலவரத்தை அவரால் அடக்க முடியுமா?

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்த சமயத்திலே, 80 சதவீதம் காவலர்களுக்கு வீடு தர வேண்டுமென்று திட்டம் போட்டார்கள். 100 சதவீதம் இலக்கு; ஆனால் 80 சதவீதத்துக்குத் திட்டம் போட்டார்கள். இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறது? 50 சதவீதத்திற்குக் கீழாகப் போய்க் கொண்டிருக்கிறது. குறைந்த சம்பளம் வாங்குபவர்கள் எப்படி வாழ்வார்கள்? ஆகையினால், நான் உங்கள் மூலமாக அரசுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், வீடு கட்டுகின்ற ஒரு திட்டத்தினை, ஒரு Phased programme ஒரே ஆண்டிலே எல்லோருக்கும் கொடுக்க முடியும் என்று சொல்லவில்லை. வீடு கட்ட இடம் கிடைக்காவிட்டால் பரவாயில்லை, 1 மாடி, 2 மாடி, 3 மாடி என்று கட்டலாம். அப்படி கட்டுகின்ற காரணத்தாலே நமக்கு ஒரு அனுகூலம் இருக்கிறது





எந்த நேரம் குழல் ஊதினாலும்கூட, காவலர்கள் உடனே ஓடி வந்து விடுவார்கள். பல்வேறு இடங்களில் இருந்தால் எப்படி வர முடியும்?

அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு, நம்முடைய வீட்டிலே இருக்கிற பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். எனவே, இதிலே தனி அக்கறை செலுத்தி, ஏற்கனவே ஒரு உறுப்பினர் சொன்னதைப் போல, யானைப் பசிக்குச் சோளப் பொறி என்பதைப் போல், இப்போது ஒதுக்கியது கொஞ்சமாக இருக்கிறது. ஆகவே, காவல் துறையினர் குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும் நமக்கும் இருக்கிற காரணத்தால், வீடு கட்டிக் கொடுப்பதிலே, அதிகமாக நிதி ஒதுக்கி, அவர்களுக்கு அனுசரணையாக, எல்லா காவலர்களுக்கும் வீடுகள் இருக்கின்றன என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, காவல் துறையிலே பணியாற்றுபவர்களுக்கு வாகனங்கள். நான் கேள்விப்படுகிறேன். கிரைம் பிராஞ்ச் என்று சொல்லப்படுகின்ற, குற்றப் பிரிவிலே இருப்பவர்களுக்கு மாநிலம் முழுவதும் வண்டியே இல்லையாம். சொல்கிறார்கள். ஒரு வேளை, தவறான கருத்தாக இருக்குமானால், நான் திருத்திக் கொள்கிறேன். ஓடாத வாகனங்கள் அல்ல, நல்ல வாகனங்கள் கொடுக்க வேண்டும். இன்னுங்கூட சொல்ல விரும்புகிறேன், இப்பொழுது இருக்கிற வாகனங்களுடைய பாடி அமைப்பே சரியில்லை, பழைய மாதிரி இருக்கிறது. இப்பொழுது காவல் துறைக்கு ஏற்ற முறையிலே, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற அளவில், அந்த வாகனங்களுக்கு பாடி கட்டுகின்ற முறையிலே, முயற்சிகளையும் இன்னும் தேவையான அளவுக்கு வாகனங்களையும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, காவலர் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். உதாரணமாக, ஒரு அளவு கோல், (Yard stick) இந்தக் காவல் துறையிலே இல்லை. ஒரு போலீஸ் ஸ்டேஷனில், இத்தனை வழக்குகள் தான் இருக்கலாம், இத்தனை வழக்குகளுக்கு மேலாகப் போனால், ஸ்டேஷனை இரண்டாகப் பிரிக்க வேண்டும். தேவையான வழக்குகளுக்கு மேல் இருக்கிறது என்றால், அந்தக் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து, அதற்கான அதிகாரிகளை, போட்டால் தானே செம்மையாக, சட்டம், ஒழுங்கை அல்லது குற்றப் புலனாய்வு செய்ய முடியும். தற்போது எந்த ஒரு யார்ட் ஸ்டிக்கும் காவல் துறையினருக்கு இல்லையென்று நான் கருது

கிறேன். அந்த அளவிற்கு நம்முடைய வழக்குகள் அடிப்படையிலே, காவல் நிலையங்கள் அதிகமாக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இந்தக் காவல் துறையிலே மிகச் சிறந்த பணி புரிந்தவர்களுக்கு அல்லது சமுதாயத்தில் நல்ல சேவை புரிந்தவர்களுக்கு, தகவல் கொடுக்கின்றவர்களுக்குக் கணிசமான தொகையை உதவித் தொகையாகக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏதோ கொஞ்சம் கொடுத்தோம் என்றால் பிரயோஜனம் இல்லை. சம்பளத்திலே கூட நல்ல ஊதிய உயர்வு கொடுக்கலாம். திறமையாகப் பணியாற்றுபவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். நேர்மையாக, கண்ணியமாக, சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, நாட்டினுடைய பாதுகாப்பிற்காக, உழைக்கின்றவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல ஊதியத்தைக் கொடுக்கின்ற அளவுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் முன்னமேயே சொன்னதைப் போல, 1979-க்குப் பின்னாலே பல பணிகள் இன்றைக்கு நிரப்பப்படாமல் இருக்கின்றன. 5,000 கான்ஸ்டபிள்கள் பணி இன்றைய தினம் காலியாக இருக்கின்றது. ஆயிரத்திற்கும் அதிகமான எஸ்.ஐ. பணிகள் இன்றையதினம் காலியாக இருக்கின்றன. ஆகவே, அந்தக் காலி இடங்களை நிரப்புவதற்கும் தேவையான ஆட்களைப் போடுவதற்கும் போலீஸ் ரெக்ரூட்மென்ட் செல், என்று ஏனைய இடங்களிலே போர்ட் வைத்திருப்பதைப் போல, அதற்கு ஒரு நிரந்தரமான குழுவை வைத்துக் கொண்டு, அந்தக் குழுவின் மூலமாக வேலைக்கு ஆட்களை எடுக்க வேண்டும். எடுக்காவிட்டால், நிலைமை இன்னும் நிச்சயமாக மோசமாகப் போகும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

காவல் துறையிலே பணியாற்றுவோர்க்கு டெரிகாட்டன் துணி வழங்குகிறார்கள். துணியை பிட்டாகக் கொடுக்க வேண்டும். தைத்துக் கொடுக்கின்ற காரணத்தால் அளவு சரியாக இருப்பதில்லை. துணியாகக் கொடுங்கள், நாங்கள் தைத்துக் கொள்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். இதெல்லாம் சின்ன, சின்னப் பிரச்சினையாக இருந்தாலுங்கூட அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, அவர்களுக்குக் கொடுக்கின்ற படி குறைவாக இருக்கிறது. அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.



அதைப் போலவே, நம்முடைய சினிமா படங்களிலே காவல் துறையினரை கேலி செய்வது, சினிமா துறையில் இருப்பவர்களுக்குப் பாயசம் சாப்பிடுவதைப் போல. கதாநாயகன் வில்லன்களோடு சேர்ந்து, சண்டை போட்டு, அடித்து நொறுக்குவான். ஒரே ஆள், எல்லோரையும் அடித்து நொறுக்குவான். பின்னால் காவல் துறையினர் வருவார்கள். எல்லோரையும் அடித்து நொறுக்கிய பிறகு, காவல் துறையினர் வந்து கைது செய்வார்கள். எங்களுடைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கூட, இன்று காலையிலே சொன்னார், உன் கண்ணில் நீர் வழிந்தால் என்று ஒரு படம் வந்திருக்கிறதாம். அந்தப் படத்திலே, காவல் துறையினர் லாக் அப்பில் இருக்கிற பெண்களிடம் போலீசார் சரசம் ஆடுகிறார்கள். பின்னாலே நடவடிக்கை எடுக்கிறார்கள். அதைப் போலவே, ஒரு கொலை வழக்கிலே அதிகாரி கையூட்டு பெறுகிறாராம். நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த மாதிரி காட்சிகள் கத்தரிக்கப்பட வேண்டும். மாண்புமிகு முன்னவர் அவர்கள் என்ன சொல்வார்கள் என்று எனக்குத் தெரியும்? நாங்கள் என்ன செய்வது, சென்சார் போர்ட், உங்கள் கையிலே தானிருக்கிறது, உறுப்பினர்களை நீங்கள் தான் போடுகிறீர்கள் என்று சொன்னாலும் சொல்வார்.

(முற்பகல் 11-10)

ஆனால் நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது நம்முடைய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியானால்தான் மக்கள் மத்தியில் காவல்துறைமீது ஒரு மரியாதை ஏற்படும். இப்போதெல்லாம் மக்களுக்கு காவல்துறை மீதுள்ள நம்பிக்கை குறைந்துகொண்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட காட்சிகள் மூலமாக காவல் துறையை கேலி செய்வதாக, கிண்டல் செய்வதாக இருக்கக் கூடாது., அப்படி இருந்தால்தடைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட காட்சிகள் அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காவல் துறை சம்பந்தமாக பல தகவல்கள் வந்திருக்கின்றன. மதுரையில் அடுக்கடுக்காக திருட்டுகள் நிறைய நடக்கின்றன. மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் கான்பாளையம் என்ற இடத்தில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏறத்தாழ 12 வழிப்பறி கொள்ளைகள் நடைபெற்றிருக்கின்றன. நகைகள் திருட்டுப்போயிருக்கின்றன., தாலிகள் திருட்டுப் போயிருக்கின்றன. 5 பவுன் முதல் 10 பவுன் வரையுள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள், அலுவலகங்களுக்குப் போகின்றார்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். அலுவலகங்களுக்குப் பணியாற்றச் செல்கின்ற

[திரு என்.எஸ்.வி. சித்தன்] [1985 ஜூலை 8

பெண்களின் நகைகள் திருடப்படுகின்றன. அவர்கள் வருகின்ற நேரத்தைப் பார்த்து வைத்துக்கொண்டு ரௌடிகள் அவர்களுடைய நகைகளை திருடிச் செல்கிறார்கள். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் முன்னாள் அமைச்சர் திரு. எஸ் ஆர். இராதா அவர்களுடைய மைத்துனர் பெயரும் பறிகொடுத்தவர் பட்டியலில் இருக்கிறது. இன்னும் அந்தத் திருட்டுக்கள் கண்டுப் பிடிக்கப்படவில்லை. தொடர்ந்து இப்படி திருட்டு நடந்து கொண்டிருக்கிறது. விரைவிலே திருட்டுக்களைக் கண்டு பிடிக்க துரித நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. எம். சுப்பராயன் அவர்கள் என்னிடம் சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மதுரை கிழக்குப் பகுதி சுமார் 50,000 மக்கள் தொகை கொண்டது. அங்கே மத்தியில் ஒரு காவல் நிலையம் இருந்தது. சமீபத்தில் அந்தக் காவல் நிலையம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. அது ரொம்ப தூரத்தில் மாற்றப்பட்டிருக்கிறது ; மக்கள் அங்கே போக முடியவில்லை. அங்கே அவர்கள் வழக்குகளை பதிவு செய்வதில்லை. காவல் நிலையம் அப்படிச் செயல்படுகிறது. அதுபற்றி ஒரு நீண்ட பட்டியலையே என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கின்ற புகார்களை உடனடியாகப் பதிவு செய்து, குற்றங்களைக் கண்டுபிடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தக் காவல் நிலையத்தை மத்திய பகுதிக்கு மாற்றினால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டெல்லி போன்ற இடங்களில் காவல் துறை பெரிய அதிகாரிகள் கூட பஸ்ஸில் போகிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் சாதாரண அதிகாரிகள் கூட சொந்தக் காரில், டாக்சியில் போகின்ற நிலைமை இருக்கிறது. தவறான முறையில் பணம் சம்பாதிப்பதால்தான் இப்படிப் போக முடிகிறது. இந்த மாதிரியான தவறான வழிமுறைகள் தடுக்கப்பட வேண்டும்.

ஏற்கெனவே காவலர்க்கு சி.எல். 20 நாள் இருந்தது. இப்போது அது 12 நாட்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. பழைய நிலைக்கு அதைக் கொண்டு வரவேண்டும். சில முக்கிய அலுவலர்களுக்கு உணவுப்படி இப்போது 4 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. அதை சற்று உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூலை 8] [திரு என்.எஸ்.வி. சித்தன்]

திருமங்கலம் தொகுதியில் கள்ளிக்குடி ஒன்றியத்தில் வீர பெருமாள்புரத்தில் ஒரு போலீஸ் நிலையம் அமைக்க வேண்டுமென்று பல முறை நான் கேட்டிருக்கிறேன். அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

தீ அணைப்புத் துறை பற்றி இரண்டு கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன். தமிழ் நாடு முழுவதுமாக இப்போது 131 தீ அணைப்பு நிலையங்கள் உள்ளன. கடந்த 4 ஆண்டுகளாக புதிய தீ அணைப்பு நிலையங்கள் ஒன்று கூட திறக்கப்படவில்லை. இந்த மன்றத்தில் நான் இதுபற்றி இரண்டுமுறை பேசியிருக்கிறேன். தீ அணைப்பு நிலையம் அமைக்கப்படுவதில் ஏற்கெனவே திருமங்கலம் இரண்டாவது இடத்தில் இருந்தது. புதிதாக ஒன்றுகூட திறக்கப்படாத காரணத்தால் அது இன்றைக்கு, மாண்புமிகு நாவலர் அவர்களுடைய பாணியில் சொல்வதாக இருந்தால், அந்த இடத்தைவிட்டு நகரவே இல்லை ; அதே இடத்தில்தான் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் திறக்கப்படுகிற பட்டியலில் இருந்தது இப்போது திறக்கப்பட வேண்டிய பட்டியலில் 3-வது, 4-வது இடத்திற்குப் போயிருக்கிறது. ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்ட பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந்தது. பல இடங்களில் இப்படி இருக்கிறது. விரைவிலே அங்கே தீ அணைப்பு நிலையம் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீ அணைப்புத் துறையில் 1970-க்கு முன்னால் வாங்கப்பட்ட வண்டிகள் இன்றைக்கு இருந்துக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே பல வண்டிகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. காவல் துறையில் வண்டிகள் எப்படி இருக்கின்றனவோ அதைப் போன்றுதான் தீ அணைப்புத் துறையில் இருக்கின்றன. நல்ல முறையில் பழுதுபார்க்கப்பட வேண்டும் அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல. காவல் துறை வண்டிகளில் ஒயர்லஸ் பொருத்தியிருப்பதைப் போன்று தீ அணைப்பு வண்டிகளிலும் ஒயர்லஸ் பொருத்த வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்கள் உடனுக்குடன் தொடர்பு கொண்டு, தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

இந்த தீ அணைப்புத் துறைக்கு 'ரோசன்சால் பம்புகள்' முன்னால் வாங்கியவை நன்றாக இருந்தன, பின்னால் வாங்கியவை அவ்வளவு நல்லவையாக இல்லை என்று சொல்கிறார்கள். அதை கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, காவல் துறையில் இருக்கிற சப் இன்ஸ்பெக்டர்களுக்கும் அதே தரத்திலுள்ள தீ அணைப்புத் துறையில் இருக்கிற அதிகாரிகளுக்கும் சம்பளத்தில் 70 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. இந்த வேறுபாட்டை மாற்றி அமைக்க வேண்டும். மேலும் இந்தத் தீ அணைப்புத் துறை பற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் எடுக்க ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற காவல்துறை சிறந்த முறையில் செயல்படுகிறது என்று சொன்னால் அதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்பதை நான் முதலிலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் ஒரு வேண்டுகோளாக அனைத்துக் கட்சிக்காரர்களையும் கேட்டுக்கொள்வது என்னவென்றால் போலீஸ் அதிகாரிகளை நண்பர்களாகக் கருதவேண்டுமே தவிர எதிரிகளாகக் கருதுவது தவறு, அப்படி கருதக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று போலீசாருக்கு சமூக விரோதிகள் விரோதிகளே தவிர சட்டத்திற்கு உட்பட்டவர்கள் விரோதிகள் அல்ல என்ற கருத்தை ஆணித்தரமாக அத்தனை அரசியல் கட்சி நண்பர்களும் பொதுமக்களிடம் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தமிழ் நாட்டு போலீஸ்தான் ஸ்காட்லாண்ட் யார்டு போலீசுக்கு அடுத்தபடியாக இருக்கிறது என்பதற்கு பல்வேறு சான்றுகள் இருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்கள் நமது சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் இழந்த பொருள்களை உடனடியாகத் தேடி, கண்டுபிடித்துக் கொடுத்ததைப் பாராட்டினார்கள்.

அதற்காக நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்துடன் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அருமைச் சகோதரர் திரு. தங்கமணி அவர்களுடைய பொருட்கள்





காணாமல் போய்விட்டன என்றும் அதைக் கண்டுபிடிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாங்களும் அதையே குறிப்பிட விரும்புகிறோம். தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த எங்களுடைய இயக்கத் தோழர்கள் சார்பாக என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வடநாட்டிலே பாம் ஸ்கேர் என்று கேள்விப்பட்டவுடன் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து பகுதிகளிலும் சி.ஐ.டி. போலீசார் உடனடியாக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வழக்குகளையும் பதிவு செய்தது உண்மையிலேயே பாராட்டத் தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் க்ரைம் லிஸ்ட் எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த ஆட்சியில் குறைந்திருக்கின்றது என்பதை நான் மெத்தப் பணிவுடன் அடக்கத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர்களுடைய பொதுப்பிரச்சினையை அலசுவதற்காக ஒரு கமிட்டி அமைக்கவேண்டும் என்று அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்னளவில் நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் காவல் துறையினர் தன்னுடைய உயிரைப் பணயமாக வைத்து சேவை செய்யக்கூடிய நிகழ்ச்சிகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், பத்திரிகைகள் வாயிலாக. சமீபத்தில் மதுரையிலே ஒரு குற்றவாளியைப் பிடிக்கச் சென்றபோது ஒரு காவலர் அதே இடத்திலேயே சமூக விரோதியால் குத்திக்கொலை செய்யப்பட்டு இருக்கிறார் என்பது வேதனைக்குரியதாகும். எனவே எவ்வளவுதான் அவர்களைப் பாராட்டினாலும் தங்கப் பதக்கங்களைக் கொடுத்தாலும் அவர்களுடைய குடும்பத் தலைவனை இழந்து தவிக்கின்ற அந்தக் குடும்பத்தில் அந்தக் தலைவனுக்கு அது ஈடாகாது என்பதை அரசியல் இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் உணரவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். தந்தையை இழந்து தவிக்கின்ற குழந்தைகளுக்கும், கணவனை இழந்து தவிக்கின்ற மனைவிக்கும் எவ்வளவு தான் இந்த அரசு உதவி செய்தாலும் தகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று மணியாச்சியிலே இருக்கக்கூடிய ஒரு குற்றவாளியை பிடிக்கச் சென்ற போலீஸ்காரரைக் குத்திக் கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் அவரது உடல் போடப்பட்டு

துண்டு, துண்டாக ஆக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்தவுடன் நாம் வேதனைப்பட்டோம். அந்தக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கவேண்டும். அவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை அளிக்கவேண்டும் என்று நான் அன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இதை எல்லாம் மனதில் கொண்டுதான் போலீசார் மீது பற்றும், பாசமும் கொண்ட தாயுள்ளம் கொண்ட எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் காவலர்களுக்கு ரேஷன் சலுகைகளை மற்ற மாநிலங்களில் செய்யாத அளவுக்குச் செய்திருக்கிறார்கள். இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தில் இருக்கின்ற ஒரு தொண்டன் என்ற முறையில் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவன் என்ற காரணத்தால் நான் அன்புடன் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய நிலையிலே நான் வேண்டுவதெல்லாம் மாற்றுக் கருத்துக்கொண்ட இயக்கத் தோழர்கள் தியாகம் செய்பவர்களைப் பாராட்டுகின்ற வகையில் தங்களை வகைப்படுத்திக் கொள்ளுங்கள் என்பதுதான். ஆட்சியாளர்கள் யார் என்று பார்க்காதீர்கள். நல்லவர்களுடைய தியாகங்களைப் பாராட்டுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வழக்கறிஞர்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்க அமைக்கப்பட்டிருக்கும் குழுவினர் காலதாமதம் இல்லாமல் கலந்தாலோசித்து விரும்பத்தகாத சம்பவங்களைத் தவிர்க்கலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக அரசியல் இயக்கத்தைச் சார்ந்த வழக்கறிஞர்கள் சில தனிப்பட்ட விரோதங்களை, சில தனிப்பட்ட முறையில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைப் பொதுப் பிரச்சினையாக ஆக்க வழக்கறிஞர்களுக்கெல்லாம் சம்பந்தப்பட்டது போன்று ஆக்க முற்படுவதைத் தவிர்க்கலாம் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து போலீசாருக்கு அண்டை மாநிலங்களில் டெரிக்காட்டன் சீருடை வழங்குவது போல் இந்த மாநிலத்திலும் போலீசாருக்கு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீசார் அனுமதி இல்லாமல் கிராமங்களில் திருவிழாக்களை மையமாகக் கொண்டு சட்ட விரோதமாக வீடியோ படம் போடுவதைத் தடுக்க வேண்டும். அந்தப் பொதுமக்கள் சென்று



புகார் கொடுத்தால் காவலர்கள் சற்றுக் காலதாமதமாக வருகிறார்கள் என்று செய்தி வருகிறது. வீடியோ படம் முடியும் தருவாயில் வருவதால் அங்கே பாதியில் படத்தை நிறுத்தினால் கலவரம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி சட்ட விரோதமாக வீடியோ திரையிடக்கூடிய உரிமையாளர்களைக் கைது செய்து அவர்களுடைய கருவிகளைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, எனது விழுப்புரம் நகர் வள்ளலார் மாவட்டத்தின் தலைநகராக வர இருப்பதன் காரணத்தால் அங்கே காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குவார்ட்டர்ஸ் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அதைப்போன்று விழுப்புரம் தொகுதியைச் சார்ந்த வளவனூரிலே காவல் நிலையம், ஒரு வாடகை வீட்டிலே செயல்படுகிறது. கடந்த 4, 5 ஆண்டுகளாகவே அந்தக் காவல் நிலையம் வாடகை வீட்டிலே இருந்தாலும், அரசின் சார்பாக காவல்துறைக்கு ஒரு கட்டிடம் கட்ட முயற்சி செய்யப்படாமலேயே இருக்கிறது. அத்தோடு, காவல்துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும், போலீஸ்காரர்களுக்கும், வீடு கட்டித் தரும் திட்டத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யும் முயற்சி நடைபெற்று இருக்கிறது. அந்த முயற்சியின் விளைவாக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 10 ஆண்டுகள் ஆகிறது என்று நினைக்கிறேன். 10 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் அவர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டுவதற்கோ அல்லது காவல் துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகளுக்கு வீடுகள் கட்டித்தரும் முயற்சியோ தொடங்கப்படவே இல்லை.

ஆகவே, இந்த நேரத்தில், அதற்கான முயற்சிகள் எல்லாம் கண்டிப்பாக எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டு, விழுப்புரம் காவல் துறை அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று வலியுறுத்தி, வாய்ப்பினை நல்கிய தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. கு. ரமணி :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது இன்று நடைபெறும்படியான இந்த விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்,

ஆய்வு அறிக்கை என்று நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பேட்டில் 549-ஆவது எண் திருக்குறளை முன் வைத்து, பழைய காலத்தில் ராஜாக்களின் ஆட்சியில் பொதுமக்களைக் காப்பாற்ற குற்றம் செய்கிறவர்களை எப்படித் தண்டிக்கிறார்கள் என்றெல்லாம் எடுத்துக் காட்டி இந்த ஆய்வு அறிக்கை ஆரம்பிக்கிறது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்தக் காலம் அந்தக் காலம் அல்ல. இன்றைக்கு இருக்கிற முறை ஜனநாயக ஆட்சிமுறை இருக்கும்படியான காலம். மக்களுடைய பிரதிநிதிகள் அரசாளும்படியான காலம். இன்றைக்கு நடக்கும்படியான காரியங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது, விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இங்கே இப்போது பேசி முடித்த ஆளும் கட்சி நண்பர் மாண்புமிகு உறுப்பினர் கூட எதிர்க்கட்சிகளுக்கு சில ஆலோசனைகளையெல்லாம் கொடுத்தார்கள். அதையெல்லாம் நாங்கள் கேட்க கடமைப்பட்டிருக்கிறோம் என்றாலும், காவலர்கள் அத்தனை பேர்களும் அல்லது அதிகாரிகள் எல்லோரும் முற்றிலும் கெட்டவர்கள் என்றோ, வேண்டுமென்றே அவர்களுடைய சேவையை குறைத்து மதிப்பிட்டோ கூறுவது அல்ல நம்முடைய நோக்கம். ஆனால் தமிழகத்தில் இருக்கின்ற 4½ கோடி மக்களும் பயம் இன்றி வாழ்வதற்கும், அத்தோடு ஆண்களானாலும், பெண்களானாலும், உழைக்கும் மக்கள் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படாமல் இருப்பதற்கும் பொதுமக்கள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவைகளுக்கு ஆளாகி அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையை மாற்றுவதற்கும் என்ன நடவடிக்கை என்றுதான் நான் முதலிலே என்னுடைய கவனத்திலே கொண்டு கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, மக்களுடைய வாழ்க்கையைப் பறிப்பதற்கும அவர்களுக்கு எதிராக அடக்குமுறை நடவடிக்கையை எடுப்பதற்கும் போலீஸை கருவியாகப் பயன்படுத்தி, மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்காமல், வேறுவிதமான வழியில், செல்வாக்குப் படைத்தவர்கள் மற்றும் அதிகாரம் படைத்தவர்களுடைய, அவ்வர்க்கத்தினருடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டு, தேவையான மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்காமல் இருப்பது போன்ற நடவடிக்கைகளைத்தான் விமர்சிக்கின்ற வகையில் அரசாங்கத்தையும் போலீஸ் படையையும் விமர்சித்து, அதைத் திருத்திக் கொள்வார்கள் என்ற அடிப்படையில்தான் விஷயங்களைச் சொல்லி வருகிறோம். அதை அந்த உணர்வோடு தான் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வேறு விதமாக விரோதந்தி... சொல்வது போன்ற நிலையில் எடுத்துக் கொள்ளக்கூடாது.



அடிபடக்கூடியவன் அடித்துவிட்டான் என்றுதான்சொல்வான். அது தப்பு அல்ல. அது எப்படி விரோதமாகும்? மேற்கொண்டும் அடிக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் அது தெரியப்படுத்தப்படுகிறதே தவிர வேறு விரோதத்தினால் அல்ல— நாங்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். இந்த அரசாங்கத்தினுடைய தொழிலாளர் விரோதக் கொள்கையைப் பற்றி, நாங்கள் பல சந்தர்ப்பங்களில் மிகக் கடுமையாக இந்த அரசாங்கத்தை விமர்சனம் பண்ணக்கூடியவர்கள். ஆனால், அந்தத் தொழிலாளர்களுக்கு, அல்லது தொழிற்சங்கத்திற்கு உரிய பாதுகாப்பு கொடுக்கக்கூடிய பொறுப்பு காவல்துறைக்கு உண்டு. அதை அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை சொல்லும் போது நெஞ்சிலே கை வைத்துப் பார்க்க வேண்டி இருக்கிறது.

ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். 1984-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 12-ஆம் தேதி தமிழகம் முழுவதும் இந்த அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதக் கொள்கையை எதிர்த்து பொது வேலை நிறுத்தம் நடத்தினோம். திருச்சியில் இருக்கிற பி. எச். இ. எல். நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் அந்த வேலை நிறுத்தத்தில் கலந்துக் கொண்டார்கள். அன்றைக்கு வேலைக்குச் செல்வதாக சென்ற சில தொழிலாளர்களை தடுத்து நிறுத்தினார்கள், வேலை நிறுத்தம் செய்யும் சில தொழிலாளர்கள். அவர்கள் மீது 300 போலீஸார் மிருகத்தனமாக தாக்குதலை நடத்தினார்கள். தடியடிப் பிரயோகம் பண்ணினார்கள். பலர் படுகாயமடைந்தார்கள். பெண்கள் கூட அன்றைக்கு காலனிக்குள் தாக்கப்பட்டார்கள். அங்கே டி. ஐ. ஜி. அவர்களைக் கண்டு இந்த விஷயத்தை எடுத்துச் சொல்லப்போன எங்களுடைய கட்சித் தலைவர்களின் -- தோழர்கள் பாப்பா உமாநாத், டி. கே. ரங்கராஜன் ஆகியோரின் காரைப் பிடிங்கிக் கொண்டு அவர்களை வழியிலேயே இறக்கி, அவர்களை தெருவிலே நடக்க விட்டு இருக்கிறார்கள். அதற்குமேலும் ஏராளமான பேர்கள் அங்கே கைது செய்யப்பட்டார்கள். இந்தமாதிரி கொடூரமான நிகழ்ச்சியைப்பார்த்து அங்கே வேலை செய்கிற ஏழு, எட்டாயிரம் தொழிலாளர்கள் மறுநாள் அந்தக் காரியாலயத்திற்கு முன்னாலே போய் இந்த அநீதிகள் நீக்கப்பட வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். மறுபடியும் அங்கே காவல் துறை புகுந்து தாக்குதல் நடத்தி, அங்கே இருக்கிற காலனிக்குள் புகுந்து அவர்களுடைய சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்கள், போன்றவை எல்லாம் கிட்டத்தட்ட 500-க்கு மேற்பட்ட உருப்படிகள் அடித்து நொறுக்கினார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதேநேரத்தில் பி.எச்.இ.எல்.-லில் மாவட்ட காவல்துறை அதிகாரியின் கையும் உடைக்கப் பட்டது; அதையும் உறுப்பினர் அவர்கள் சேர்த்துச் சொன்னால் நலமாக இருக்குமென்று சொல்கிறேன்.

**திரு. ரு. ரமணி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முந்திக்கொண்டு சொல்கிறார்கள். பொறுமையாக நான் சொல்வதைக் கேட்க வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தில், சமாதானம் செய்வதற்குச் சென்றபோது எஸ்.பி. அவர்கள் கோபம் கொண்ட கூட்டத்தால் தாக்கப்பட்டார்கள். அவர்கள் தாக்கப்பட்டது தவறு என்பதைக் கண்டித்து, அவர்கள் சிகிச்சை பெற்ற ஆஸ்பத்திரிக்கு எங்கள் கட்சித் தலைவர்கள் மற்ற கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் போய்ப் பார்த்தார்கள். ஆகவே இப்போது அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, அப்போது நான் அமைச்சராக இல்லை. முதலமைச்சர் அவர்கள் சென்று பார்த்தார்கள். பொதுச் செயலாளர் என்ற முறையில் நானும் போய்ப் பார்த்தேன். சமாதானத்திற்கு போனபோது அடித்தார்கள் என்று சொல்லுகிறார்கள். சமாதானத்திற்குப் போகும்போது அனைவரும் அமைதியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபோதுதான் அதிகாரி அவர்கள் தாக்கப்பட்டார்கள்.

**திரு. ரு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொஞ்ச நாட்களுக்கு அமைச்சராக இல்லாவிட்டாலும், பழைய சரித்திரத்தை மறந்துவிட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த நேரத்தில் அங்கே தொழிலாளர்கள் மீது கொடிய தாக்குதல்தான் நடைபெற்றது....

**திரு. எம். அண்ணாதாசன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவரம்பூர் தொகுதியில் பாயிலர் தொழிற்சாலையில் நடந்த நிகழ்ச்சிபற்றி பேசுகிறார்கள். உறுப்பினர் அவர்கள் உண்மைக்கு மாறான செய்தியை சொல்லியதை குறித்து நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த நேரத்தில் காவல்துறை காலனிக்குள் புகுந்து சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் போன்றவற்றை 500-க்கும் மேற்பட்டவைகளை அடித்து நொறுக்கினார்கள் என்று தெரிவிக்கிறார்கள். அப்படி ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்றவைகளுக்கு சேதம் விளைவிக்கப் படவில்லை. 500-க்கு மேற்பட்டவை என்பது முன்னுக்குப் பின் முரணான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. கு. ரமணி :** உறுப்பினர் அவர்களுக்கு எண்ணிக்கையில்தான் சங்கடம் என்று நினைக்கிறேன். விசாரணை வைத்து எவ்வளவு ஆகியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இதுபோன்ற ஒரு பெரிய வேலைநிறுத்தப் போராட்டம் நடந்தது குறித்த கோபம்தான் தாக்குதலுக்கு காரணம். திருப்பூரில் சாதாரண பனியன் தொழிலாளர்கள் 20 ஆயிரம் பேர்கள், இவர்களுக்கு அரசாங்கமே பஞ்சப்படி கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டு, முதலாளிகள் அதனை நிராகரித்தார்கள். அந்த முதலாளிகள், அப்படி பஞ்சப்படி கொடுக்க முன்வந்து ஓட்டுகிற தொழிற்சாலைகளை நிறுத்த மறியல் செய்தார்கள். அந்த இடத்தில் அதுபோன்று தொழிற்சாலைகளை ஓட்ட அனுமதிக்க மாட்டோம் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த பனியன் தொழிற்சாலை முதலாளிகள் இயந்திரங்களையும், பனியன் சரக்குகளையும், சகலவிதமான சாதனங்களையும் வேன்களில் எடுத்துக்கொண்டு வெளியூர்களுக்கு போய் விடலாமென்று முடிவு செய்து, பல டஜன் தொழிற்சாலைகளை வெளியூர்களுக்கு கொண்டுபோய் ஸ்ட்ரைக்கை உடைக்க முயற்சி செய்தார்கள். நான்கு மாதத்திற்கு மேலாக வேலைநிறுத்தம் நடந்தது. அதுபோன்று இயந்திரங்களையும், பொருட்களையும் வெளியூர்களுக்கு எடுத்துப் போவதைத் தடுக்க காவல் துறை முன்வரவில்லை. ஆனால் தொழிலாளர்கள் அதைத் தடுத்தார்கள். அவர்கள் பலரை கைது செய்து அவர்கள் மீது எத்தனையோ கேஸ்கள் போடப்பட்டு அவைகள் இன்றைக்கு நடந்து வருகின்றன. அதைப் போலவே இந்த திருவரம்பூர் நிகழ்ச்சியிலும் எத்தனையோ கேஸ்கள் போடப்பட்டு, அந்த வழக்குகள் இன்றைக்கும் நடந்து வருகின்றன. பிரச்னை முடிந்த பிறகு போலீஸ் கேஸ்கள் வாபஸ் பெறப்படாத நிலை இருக்கிறது. அவைகள் வாபஸ் பெறப்பட வேண்டும். இதெல்லாம் வாழ்க்கை போராட்டத்தில் வருகிற பிரச்னைகள். கொடிய குற்றங்களாக இருந்தால்தான் அது பற்றி அவர்கள் நடவடிக்கை எடுப்பது சரியாக இருக்கும். அப்படி இல்லாத இவைகளை எல்லாம் வாபஸ் பெறவேண்டும்.

*(முற்பகல் 11—30)*

அதேமாதிரி அந்தப் பனியன் தொழிலாளர்கள் பேரிலே பல கேஸ்கள், 307 செக்ஷன் கேஸ்கள் எல்லாம் போட்டார்கள். அத்தனையும், தீ வைப்பு, பொருட்களைப் பிடுங்கினார்கள் என்ற குற்றச்சாட்டுகள். அந்தத் தொழிற்சாலைகளை சட்டவிரோதமாக முதலாளிகள் கழட்டிக் கொண்டு போவதும், காவல்துறை இதைத் தடுக்காமல் இருப்பது என்பதும் ஒரு

உண்மை. இது இந்த அரசாங்கத்திற்குத் தெரியும். கடைசியிலே அரசாங்கமே தலையிட்டு, அந்தப் பஞ்சப்படியைப் பொறுத்து எடுத்த நடவடிக்கைகளுக்கு தொழிலாளர்கள் முழுவதும், ஆளும் கட்சியைச் சேர்ந்த அண்ணா தி.மு.க. தொழிற்சங்கம் உட்பட ஒன்று சேர்ந்து நின்று, அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததற்குப் பிறகு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அதற்குப் பிறகு தொழிலாளர்கள் வெற்றி அடைந்தார்கள். ஆனால் அந்தக் கேஸ்கள் இன்று வரையிலும் வாபஸ் பெறப்படவில்லை. இவைகள் எல்லாம் வாபஸ் பெறப்படவேண்டும். ஜனநாயக முறை என்று சொன்னால், ஏற்கனவே நடந்து உள்ள குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டிய பெரும் குற்றங்களாக இருந்தால் நடத்தலாமே தவிர, சாதாரண கேஸ்களை வைத்து நடத்துவது என்பது சரியல்ல. அவைகளை எல்லாம் வாபஸ் வாங்கவேண்டும்.

அதேமாதிரி உதகமண்டலம் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையிலே பெரிய போராட்டம். அங்கே செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியது அந்த மத்திய அரசாங்க கம்பெனியினுடைய மேனேஜிங் டைரக்டர். அதை எதிர்த்து தொழிலாளர்கள் போராடினார்கள். ஆனால் தொழிலாளர்கள் அத்தனை பேர்களும் சேர்ந்து நடத்திய போராட்டத்தை உடைப்பதற்காக தமிழக அரசாங்கத்தினுடைய போக்குவரத்துக் கழகமாகிய சேரன் போக்குவரத்துக் கழக பஸ்களிலே கருங்காலிகளை கம்பெனிக்குள்ளே கொண்டு வரும்போது, அதற்கு போலீஸ் துறையானது காவல் கொடுத்து வந்தார்கள். இது என்ன ஜனநாயக முறை. இது ஜனநாயக முறையல்ல. ஒரு ஸ்ட்ரைக்கை உடைக்கிற பிளாக் லெக்கிங் ஆக்டிவிட்டி, கருங்காலி வேலை என்று சுருக்கமாகச் சொன்னால் அது தவறு அல்ல. இது நடைபெற்றது. அதை தொழிலாளர்கள் எதிர்த்து—அந்தத் தொழிலாளர்கள் அங்கே தடுத்தார்கள் அந்த பஸ்களை. அங்கே தடியடிப்பிரயோகம் நடத்தப்பட்டு, அந்த யூனியனுடைய செக்ரட்டரி அடிக்கப்பட்டு, மண்டை உடைந்து, 15 பேர்களுக்கு மேல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்கள். பல பேர்கள் மீது இன்றைக்கும் வழக்கிருக்கிறது. அந்த வழக்குகள் இன்றும் வாபஸ் பெறப்படவில்லை. இறுதியாக போலீஸ் அதிகாரிகளில் ஒருவர் அந்த அநியாயத்தைப் பொறுக்க முடியாமல், மேனேஜிங் டைரக்டரை அணுகி, தொழிற்சங்கங்களை அணுகி, பேசி, சுமுக முறையை ஏற்படுத்திக் கொண்டதை நான் மறுக்கவில்லை. அந்த சுமுகமான முடிவை ஏற்றுக்கொண்டு அந்தப் போராட்டத்துக்காக பழி வாங்குதலே இருக்காது, அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் பற்றி டெல்லியிலே உள்ள சர்க்காரோடு



பேசி முடிவு எடுக்கவேண்டும் என்று ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் இந்த ஆய்வு அறிக்கையிலே என்ன குறிப்பிடுகிறார்கள் தெரியுமா? அவர்களின் எந்தவிதமான கோரிக்கையும் வெற்றி பெறாமல் அவர்கள் கோரிக்கையை கைவிட்டுவிட்டார்கள் என்று இந்த ஆய்வு அறிக்கையிலே எழுதியிருக்கிறார்கள். அப்படி என்றால் நான் கேட்கிறேன். உண்மையிலே இந்தக் காவல் துறை எப்படி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். என்ன கண்ணோட்டத்தோடு இருக்கிறார்கள்?

தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினால், அது வெற்றி பெற்றது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. போராட்டத்தை எல்லோரும் கைவிட்டுப் போய்விட்டார்கள் என்றும், அவர்களுடைய போராட்டம் சரணாகதியாகிவிட்டது என்றும் சொன்னால், அவர்கள் உண்மையிலேயே அப்படித்தான் இஷ்டப்படுகிறார்கள் என்றுதான் அவர்களுடைய கண்ணோட்டத்திலிருந்து தெரிகிறது. அதனால் தான் இந்த ஆய்வு அறிக்கையிலே பாரா 4-ல் சொல்கிறார்கள். ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள் போன்றவைகள் ஏற்படும்போதும், காவல்துறை அவற்றை ஒழுங்குபடுத்தி, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவரவேண்டிய தங்களுடைய இன்றியமையாத கடமையை ஆற்றி வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். எந்தப்போராட்டமானாலும் அவர்கள் நினைக்கிற கட்டுப்பாட்டுக்குள்ளேதான் அது வரவேண்டும். அப்படியானால் ஜனநாயகம் என்றெல்லாம் பேசிப் பிரயோசனம் இல்லை. இதனுடைய அர்த்தம் என்ன? தொழிலாளர்கள் கலகம் நடத்துவதற்குச் செய்வதல்ல இந்த வேலைநிறுத்தப் போராட்டம். வேலைநிறுத்தம் நடத்துவது கோரிக்கைகளை பெறுவதற்காக. அதை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே வைக்கவேண்டும் என்று நினைக்கிறபோது, இந்தப் போராட்டங்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், பொது மக்கள் நடத்துகின்ற போராட்டங்களைக் கட்டுப்படுத்த போலீஸ் தங்கள் பிடிக்குள்ளே கொண்டுவருகிற கண்ணோட்டமாக இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. எனவே இந்தக் கண்ணோட்டம் மாறவேண்டும். இந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டு நடவடிக்கை நடத்தினால் சரியாகாது. இதற்கு என்ன அர்த்தம். என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று லைசென்ஸ் கொடுத்துவிட்டார்கள் என்று அர்த்தம் இல்லை. அவர்கள் கண்ணோட்டத்தைப்பற்றித்தான் சொல்கிறார்கள்.

மேலும் சொல்கிறார்கள், போராட்டங்களே மிகவும் கவனத்துடன் ஒழுங்குபடுத்தாவிட்டால் அவைகள் வன்முறைக்கு இடமளித்து விடும் என்று. மற்றவர்கள் போராடினால் வன்முறை வராதா? தொழிலாளர்கள் போராடினால்

வன்முறை வந்துவிடும்; ஏன் முதலாளிகள் பக்கத்திலேயிருந்து வன்முறை வராதா? பணக்காரர்கள் பக்கத்திலிருந்து வன்முறை வராதா? உங்களுடைய கண்ணோட்டமே இப்படி அமைந்திருக்கிறது என்பதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். இந்தக் கண்ணோட்டங்கள் நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்தக் காவல் துறை மீது எப்படி நம்பிக்கை ஏற்படும். மக்களுக்கு உதவி செய்யக்கூடிய நீங்கள் எப்படிச் செய்வீர்கள்? சுரண்டுகின்ற வர்க்கத்தைச் சேர்ந்தவர்களையும், சர்வ வல்லமை படைத்தவர்களையும் காப்பதற்காக இல்லை இந்தக் காவல் துறை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, பெண்கள் விஷயத்தை எடுத்துக்கொண்டால், பயங்கரமான நிலைமை இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிறது. அண்மையில் ஐ.பி.சி., சி.ஆர்.பி.சி. போன்ற சட்டங்கள் மூன்று முறை திருத்தப்பட்டு, பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கான ஒரு விசேஷ சுற்றறிக்கையை மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் அனுப்பியது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பது கேள்வி. அதற்கு சில உதாரணங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. திருமங்கலத்தில் நாகராணி, 17 வயது பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு இருக்கிறாள். 25–3–1985-ல் திருமங்கலம் அரசு மருத்துவ மனையில் தலைமை டாக்டர் முன்னிலையில் போஸ்ட் மார்ட்டம் நடைபெறுகிறது. அதிகாரம், செல்வம் படைத்தவர்கள் இதில் தலையிட்டு கேஸ் வராமல் தடுத்து பிணத்தை கொண்டு போய் புதைத்து விட்டார்கள். அதை எதிர்த்து பிரச்சினை கிளம்பியது. பொதுக்கூட்டம் போட்டு பேசினார்கள். இறுதியாக திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய டி.எம். ஓ. டாக்டர் சீதா லட்சுமி என்பவர் அந்த சுடுகாட்டிற்குப் போய் அதைப் பரிசோதனை செய்து தலைக்குப் பின்னால் இருக்கும்படியான கழுத்து நரம்பு இல்லாமல் இருக்கிறது என்று அந்த டாக்டர் கூறி முன்பு போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டரை கேட்டால் அதற்கு அவர்கள் எனக்குத் தெரியாது என்று பதில் சொன்னார்கள்.

இந்த நிலையை எல்லாம் பார்க்கும்போது இது உண்மையிலேயே ஒரு சாதாரண தற்கொலை அல்ல, அது கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று அந்த டாக்டர் அன்றைக்கு தன்னுடைய அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து கொலை செய்த ஆட்கள் தலைமறைவாகி விட்டார்கள். இந்தக் கொலை செய்த ஆட்கள் 2 பேர் அசோகன்





என்ற ஒருவர், கபிர்நாத் என்ற ஒருவர். இந்த கேஸ் சம்பந்தமாக புலன் ஆய்வு நடத்திக்கொண்டு வந்த போலீஸ் அதிகாரி வேலுசாமி என்பவரை உடனடியாக அந்த இடத்திலிருந்து மதுரைக்கு மாற்றினார்கள். அடுத்த நாளே அவரை ராமநாதபுரத்திற்கு மாற்றுகிறார்கள். அப்படி என்றால் அர்த்தம் என்ன? இதற்குப் பின்னால் வேலை செய்யும். செல்வம் படைத்தவர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலரும்தான் என்பதே. அதுதான் அங்கே நடந்து இருக்கிறது. நான் சொல்ல விரும்புகிறேன், இதைப் பற்றி நீங்கள் பகிரங்க நீதி விசாரணை நடத்துங்கள். ஒரு சாதாரண பெண்ணை கற்பழிக்கப்பட்டது மட்டும் அல்ல அதை மறைக்கப்பட்டது மட்டும் அல்ல, மற்றவர்களை கண்டுபிடிக்காமல் தடுக்கப்பட்டால் இந்தச் சட்டம் திருத்தி என்ன பிரயோசனம். இதுதான் பிரச்சினை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குற்றவாளிக்கு உடந்தையாக அரசு இருப்பது போலவும், காவல்துறையின் புலன் ஆய்வு செய்து கொண்டு இருந்தவரை மாற்றிவிட்டது போலவும் சொல்கிறார். மாற்றி இருக்கக்கூடும் அது இயற்கையான மாறுதலாக இருக்கக்கூடுமே தவிர குற்றவாளிகளை தப்புவிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு அப்படி மாறுதல் நிச்சயமாக நடைபெற்று இருக்காது என்று அரசின் சார்பில் உறுதி அளிக்கிறேன். அதன் பிறகும் அந்த வழக்கு புலன் ஆய்வுத் துறையில் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதும் நான் சொல்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் அவசரப்பட்டுவிட்டார்கள். அந்த கேஸ் நடக்கிறது. அதை முறையாக எந்த அதிகாரி அங்கே புலன் ஆய்வு செய்து கண்டுபிடித்துக் கொண்டு வந்தார்களோ அந்த ஒரு நேர்மையான அதிகாரியை-எல்லா அதிகாரிகளும் அப்படி இருக்கிறார்கள் என்று நான் ஒத்துக் கொள்ள முடியாது— மாற்றி விட்டார்கள். வேண்டும் என்றே செய்து இருக்கமாட்டார்கள் என்று உறுதி கொடுத்ததை நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்படிதான் நடக்க வேண்டும். அந்த கேஸில் எந்த அதிகாரி புலன் ஆய்வு செய்தாரோ அந்த அதிகாரியே தொடர்ந்து அதை செய்வதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். அப்படி இல்லாமல் உடனுக்குடன் அவரை மாற்றுவது என்பது கெட்ட நோக்கமோ, நல்ல நோக்கமோ, ஒரு காரியம் நடந்து கொண்டு இருக்கும்போது திடீர் என்று அந்த அதிகாரியை தூக்கி வெளியில் போட்டால் நிலைமை என்ன ஆகும் என்பது தான் கேள்வி.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சட்டமன்றத்தில் பேசுகிறபோது ஏதாவது ஆதாரத்தோடு பேசுவது முறையாக இருக்கும். திட்டவட்டமான புலன் ஆய்வில் இருக்கிற ஒரு நிகழ்ச்சியை சுட்டிக்காட்டி இது கொலை தான், இதற்கு ஆளுங்கட்சி உடந்தைதான் என்று திட்டவட்டமாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இது முறையா? என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேஸில் இது கொலைதான் என்று நிரூபிக்கப்பட்டு விட்டது என்று நான் இதுவரைக்கும் சொல்லவில்லை. அப்படி நான் இங்கே மென்சன் செய்யவில்லை. இன்னும் புலன் ஆய்வு நடந்து கொண்டு இருக்கிறது, ஆனால் அந்தப் புலன் ஆய்வு செய்து கொண்டு இருந்த அதிகாரியை மாற்றிவிட்டார்கள். எப்படி உண்மை விளங்கும். அதற்கு சில செல்வாக்கு படைத்தவர்கள் அதற்குப் பின்னால் செயல்படுகிறார்கள், இந்த அரசால் ...... (குறுக்கீடு) அவர் கேட்டதற்கு நான் சரியான பதிலைக் கொடுத்து விட்டேன். இப்படி திரும்பத் திரும்ப இன்டர்வென்ஷன் செய்தால் நான் பேசுவதை வேண்டாம் என்று தடுக்கிறார் என்று தான் நினைக்கிறேன். அது வேண்டாம்

அதேபோல் நாங்குநேரியில் சுப்புலட்சுமி என்ற பெண். அவர் அங்கு இருக்கக்கூடிய அந்த போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டரிடம் சென்று ஒரு ரிப்போர்ட் கொடுக்கிறார். அதற்கு அந்த அதிகாரி நான் கவனிக்கிறேன் என்று சொல்லி, அந்தப் போலீஸ் ஸ்டேஷனும் தன்னுடைய வீடும் தொடர்ந்தாற்போல் இருக்கிற அந்த வீட்டில் அந்த அம்மாளை உட்கார வைத்து அந்த குறிப்பிட்ட தேதி அன்றைக்கு அதாவது 7–6–1984 இரவும் 8–6–1984 ஆகிய இரண்டு நாட்களும் அங்கேயே உட்கார வைத்து அந்த அம்மாளை கற்பழித்து இருக்கிறார்.

(முற்பகல் 11–40)

அதற்கு கேஸ் போடப்பட்டு, அந்தக் கேஸை உயர்நீதி மன்றத்திலே போய் மேற்கொண்டு புரொசீட் பண்ணாமல் தடுத்து விட்டு, அந்த இன்ஸ்பெக்டர் மறுபடியும் தன்னுடைய காரியங்களைச் செய்ய ஆரம்பித்தபோது, கீழ் மட்டத்திலே சப்-கலெக்டர், ஆர். டி. ஓ. மட்டத்திலே விசாரணை நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் கொடுத்த டைரக்‌ஷனின் கீழ் அந்த விசாரணையை நடத்தி, அவர் குற்றம் செய்திருக்கிறார்; தன்னுடைய அதிகாரத்தை மீறியிருக்கிறார், துஷ்பிரயோகம் பண்ணியிருக்கிறார், ஒரு பெண்ணை இரவு தன்னுடைய ஸ்டேஷனிலே வைத்து இருந்





திருக்கக்கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லி, அவர் மீது கேஸ் போடவேண்டும் என்று அந்த விசாரணையிலிருந்து அவர்கள் பரிந்துரை கொடுத்தார்கள்.

ஆனால் அரசு, காவல்துறை இதுவரைக்கும் என்ன செய்திருக்கிறது? இது நாம் கவனிக்கத் தக்கது. ஆகவே, பெண்களுக்குப் பாதுகாப்பு இன்றைக்கு இல்லை என்பது மட்டும் அல்ல, எடுத்துக் கொண்ட கேஸ்களைக் கூட நடத்தாமல், உண்மையான விஷயங்கள் வரும்போது மேற்கொண்டு புரொசீட் பண்ணாமல் நிறுத்தி வைக்கும் போக்கும் இருக்கிறது. இதனால் அவநம்பிக்கை ஏற்படுகிறது. அரசாங்கம் இந்த விஷயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் மீது இன்றைக்கு திருத்தப்பட்ட கிரிமினல் புரொசீஜர் சட்டத்தின் கீழ் கேஸ் போட்டு நடத்தலாம். அப்படிச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேமாதிரி வரதட்சிணைக் கொடுமை. கனகவல்லி என்ற இளம் பெண் திருநெல்வேலி நகரத்தில் கணவன் வீட்டில் 5–5–85 ஆம் தேதி தீக் காயங்களுடன் இறந்துள்ளாள். மானாமதுரையிலிருந்து தகப்பனார் வரும் முன் பெண்ணை எரிப்பதற்கு கணவனுக்கு காவல்துறை அனுமதி கொடுக்கிறது. இன்றைக்கு திருத்தப்பட்ட சட்டங்களின்படி, இரண்டு டாக்டர்கள் பரிசோதிக்கவேண்டும். ஒரு மாஜிஸ்திரேட்டுக்கு முன்பாக அந்த விஷயங்கள் வரவேண்டும் : ஆனால், இதையெல்லாம் மீறி அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. நெருங்கிய உறவினர்கள் வராமலேயே பார்க்காமலேயே பிணத்தை எரிப்பது தவறு. எனவே, கணவன் கைது செய்யப்பட்டதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஆனால் மேற்கொண்டு என்ன நடக்கிறது? அந்தக் கேஸ் நடைபெறுகிறதா? எப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை காவல்துறையும், அதன் மூலம் அரசாங்கமும் இன்றைக்கு மக்களுக்கு பதில் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

அடுத்து, மீனா என்ற பெண் கொலை. தென்னாற்காடு மாவட்டம், திட்டக்குடி, தாலுகா, பொன்னேரியிலே மீனாவுக்கும் மத்திய ரிசர்வ் போலீஸில் உள்ள கண்ணனுக்கும் திருமணம் ஆனது. கண்ணன் வீட்டார் வரதட்சிணைக்காக, துன்புறுத்தி, 2–5–1985-ஆம் தேதி மீனா இறந்து விட்டாள். பொன்னேரியிலே மாரடைப்பினால் அப்பெண் இறந்ததாக கண்ணன் குடும்பத்தார் கூறினார்கள்.

பிரேதகவிசாரணையில் உடம்பில் வெளிக்காயங்கள் இருப்பதாக மருத்துவர் சொன்னார். அவர் அத்தாட்சியும் கொடுத்தார். காவலர்கள் சரியாக விசாரிக்காததினுடைய நிலைமை. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் அந்தப் பெண் இறந்தது தற்கொலை என்று தீர்மானித்து விட்டார்கள்.

லாக்கப்பிலே தூக்குப் போட்டு செத்ததே தற்கொலை என்று சொல்லும்போது, இது எப்படி இருக்கும்? அதனால்தான் லாக்கப்பிலே சாகக்கூடிய ஒவ்வொரு சாவுக்கும் அங்கே இருக்கக் கூடிய போலீஸ் அதிகாரிகள் பொறுப்பாளிகள். அவர்கள்பேரிலே தான் பொறுப்பைச் சுமத்தவேண்டும் என்று நாங்கள் சொல்வதற்குக் காரணமும் அது தான்.

எனவே அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? காவல்துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை பொதுமக்களுக்கு அரசு தெரிவிப்பது மட்டுமல்ல அதன் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இல்லையெனில், பெண்களைப் பற்றி நாம் பெரிதாகச் சொல்வதிலே எந்த அர்த்தமும் இல்லை.

அதேமாதிரி, கனகவல்லி என்ற பெண் கொளுத்தப்பட்டது. நெல்லை மாவட்டம் திருவைகுண்டம் லட்சுமிபுரம் தாலுகாவில் கணவன் சின்னதுரை 25—3—1985 ஆம் தேதியன்று மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தி விட்டதாக பெண்ணின் தாய் கமலம்மாள் காவல்துறைக்கு புகார் கொடுத்து இருக்கிறார்கள். கணவன் மீது அரசு நடவடிக்கை எடுத்து வழக்கு போட்டிருக்கிறதா? காவல்துறை என்ன செய்திருக்கிறது? அது நடந்து எவ்வளவு நாட்கள் ஆகிறது? மாதக்கணக்கில் நீண்டு போகிற இந்தக் கேஸ்கள் எல்லாம் எப்படிக் கண்டுபிடிக்கப்படமுடியும்?

ஆகவேதான், இந்த பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது என்பது காவல்துறையினுடைய பார்வையிலே மிகவும் கடைசிப் படியிலே இருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

அடுத்தபடியாக, கமலா என்ற பெண் கொலை. செங்கல்பட்டு மாவட்டம் மேலச்சேரி கிராமத்தில் கமலா என்ற பெண் மணமாகி இரண்டு ஆண்டுகளுக்குள் கணவன் எத்திராஜால் கொலை செய்யப்பட்டதாய் அவர் தகப்பனார் திருப்பால் நாயுடு கொடுத்த புகார் மீது எத்திராஜின் பெற்றோர்களும் கைது செய்யப்பட்டு, உடனே ஜாமீனில் அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். கொலைக் கேஸ் இது.



13646 சென்னை-600



10—12—1984 அன்று கமலா இறந்தாள். 7 மாதங்கள் ஆகியும், போலீஸ் விசாரணை முடித்து, வழக்குமன்றத்திற்குக் கொண்டு போய் விசாரணை நடத்தி நியாயம் வழங்கக்கூடியதாய் இல்லை. செத்தவர்கள் திரும்பி வரப்போவதில்லை. ஆனால் அது மற்றவர்களுக்குப் பாடமாய் இருக்கவேண்டாமா? ஆனால் நடக்க மாட்டேன் என்கிறது.

இதுதான் நடவடிக்கையினுடைய பலவீனங்கள். வேண்டுமென்றே காவலர்களைக் குறை சொல்வதற்கு சொல்லவில்லை. இதற்கு 1,008 இட்டுக்கட்டி பதில் சொன்னாலும், அந்த பேக்ட்ஸ்-ஆறு பேர் செத்திருக்கிறார்கள். செத்தவர்கள் வந்து சாட்சி சொல்ல முடியாது. அந்த உண்மையைக் கண்டுபிடித்துச் சொல்வதுதான் சமுதாயத்திற்குச் செய்யும் கடமையாகும். ஆனால் அதைச் செய்வது இல்லை.

பிரபாவதி என்ற பெண் தூக்குப் போட்டுக்கொண்டு மரணம். வரதட்சிணை கொடுமை பற்றியது. வடார்காடு மாவட்டம் ஆற்காட்டில் பிரபாவதி என்ற பெண் தூக்குப் போட்டுக் கொண்டது 6—5—1985 அன்று. வயிற்று வலியால் தற்கொலை என்று தாயாரிடம் கையெழுத்து வாங்கிவிட்டார்கள். அப்படி நடந்து, அந்த விஷயம் பெற்றோராலே போலீசுக்கு மறுபடியும் புகார் செய்யப்பட்டு, காவல் துறை மேல் நடவடிக்கை எடுக்காமல் விட்டது. ஏனென்றால், கையெழுத்து ஒன்றை வாங்கிவிட்டார்கள், தற்கொலை என்று.

சந்தேகத்தில் இறந்தாலோ அல்லது கற்பழிக்கப்பட்டு இறந்தாலோ திருத்தப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் அந்த நடவடிக்கைகள் இல்லை. இப்படி நடக்கிறது.

அம்சவேணி கொலை. பெரியார் மாவட்டம் ஈரோட்டில் அம்சவேணி என்ற பெண் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டாள். அதுவும் இந்தத் திருமணத்தின்போது சீர்வரிசை கொடுக்கவில்லை என்ற நிலையில்.

மதுரை மீனாட்சிபுரம் ஓடக்கரை செல்லூர், மதுரை என்ற இடத்தில் இருக்கும் பெருமாள் தேவர் என்பவர் கூலி ஜீவனம் செய்யக்கூடிய ஏழை. அவர் மகனை உசிலம்பட்டி போலீசார், எங்கேயோ கிராமத்தில் சிலை திருட்டுப் போயிருக்கிறது. விசாரணைக்கு என்று சொல்லி அவனைக் கைது செய்து கொண்டு போய், அப்படிப் போன ஆள் திரும்பவில்லை. தாய், தகப்பன்

மனைவி ஆகியவர்கள் போய்ப் பார்த்தால், நீங்கள் அவனைப் பார்ப்பதற்கில்லை, நாங்கள் விசாரணை செய்கிறோம் என்று சொல்கிறார்கள். எத்தனை காலம் விசாரணை? ஆனால் உசிலம்பட்டி வட்டாரத்து மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், அவன் அடித்துக் கொலை செய்யப்பட்டதாகச் சொல் கிறார்கள். நடந்த கொடூரமான தாக்குதலில் செத்துவிட்டான் என்று சொல்கிறார்கள். இதன்பேரில் காவல் துறையினர் நட வடிக்கை எப்படி நடந்தது என்பதை அரசும், காவல் துறையும் மதுரை மக்களுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொலை பற்றி நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

வக்கீல்கள் மீது தாக்குதல். நெல்லையில் சீனியர் வக்கீல் சையத் அகமது தாக்கப்பட்டது; திருச்சி கோர்ட் வளாகத் திலேயே வக்கீல் மடானி தாக்கப்பட்டது; சாத்தூரில் வக்கீலை வீட்டுக்குள்ளேயே புகுந்து தாக்கியது; நாகர்கோவில் வக்கீல் சங்கச் செயலாளர் நடராஜன் காவல் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டது. இதனால் என்ன ஏற்பட்டிருக் கிறது? மற்றவர்கள் சொல்லி அல்ல, அந்த வக்கீல் சமூகம் முழுவதுமே இந்த அரசாங்கத்தினுடைய, காவல் துறையினுடைய செயல்களைப் பொறுக்க முடியாமல் கோபத்தோடு இதை எதிர்த்து கிளர்ச்சி செய்தார்கள். அவர்கள் அத்தனை பேர் களையும் தவறானவர்கள் என்றோ, மோசமானவர்கள் என்றோ நாம் சொல்ல முடியுமா? இப்படிப்பட்ட பகுதியினருக்கும் கோபம் ஏற்படுகிறது என்பதைத்தான் நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி திருச்சி நகரத்தில்........(மணியடிக்கப்பெற் றது) எனக்கு இன்னும் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும்; குறுக்கீடுகள் இருந்தன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுதே 27 நிமிடங்கள் ஆகிவிட்டன. வழக்கை விரைவுபடுத்த வேண்டு மென்று சொல்வதற்காக மாநிலம் பூராவும் உள்ள விஷயங்களைப் பற்றிப் பட்டியல் போட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அவ்வாறு சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அதையே சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் இருக்காது. இன்னும் பத்து உறுப்பினர்கள் பேசியாக வேண்டும். குறுக்கீடு இரண்டு நிமிடம்கூட இருக்காது. அமைச்சர் ஒருதடவை எழுந் தார், உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் ஒரு தடவை எழுந் தார். ஆகவே, அடுத்த உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள்.





திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காவல்துறை மானியத்தில் ஒரு சில உணர்வுகளைச் சொல்லி, இன்றைக்குச் சீராகவும், சிறப்பாகவும் செம்மையாகவும் பொதுமக்களைப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கு போன்ற அந்த நீதியைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது......

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுத்தாக வேண்டும். இது பற்றியெல்லாம் உறுப் பினரவர்கள் பி.ஏ.சி-யில் வந்து சொல்லலாம்.

(முற்பகல் 11-50)

திரு. சா. துரைசாமி: அப்படிப்பட்ட நல்ல பணிகளைச் செயலாற்றிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவருடைய அரசுக் குப் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிற காவல் துறையை நாங்கள் பாராட்டி கடந்த காலத்தில் இல்லாத வகையில், தமிழகத்தில், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கின்ற அந்த மிகப் பெரிய பொறுப் பினை ஏற்றிருக்கின்ற..............

திரு. கு. ரமணி: எதிர்க்கட்சி உறுப்பினர் 30 நிமிடம் பேசினார்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிரதான எதிர்க் கட்சி உறுப்பினர் 30 நிமிடம் பேசினார் என்றால், நீங்கள் 27 நிமிடம் பேசி இருக்கிறீர்கள். நாளைய விவாதத்தில் கூட இன் னொரு உறுப்பினர், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் கலந்து கொள்கிறார்.

திரு. கு. ரமணி: தயவு செய்து 3 நிமிடங்கள் கொடுங்கள். சில முக்கியமான பாய்ன்டுகளைச் சொல்லி விடுகிறேன். நான் தயாரித்துக் கொண்டு வந்ததை எல்லாம் சொல்லவில்லை.

துணைத் தலைவர் அவர்களே, அடுத்தது, நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நமது போலீஸ் இலாகாவிற்குக் கொடுத்திருக்கும்படியான வாக்குறுதி. அவற்றை நிறைவேற்ற வேண்டும். போலீஸ் இலாகாவில் இன்றைக்கு ஒருவிதமான மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். புதிய, புதிய. வாலிபர்களாக உள்ளவர்களை ரெக்ரூட் பண்ணாத நிலைமையிருக்கிறது. தகுதியில்லாதவர்களை மேலே தூக்கி விடும்படியான நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை நீடித்துக் கொண்டு வருவது நல்லதல்ல.

அதே நேரத்தில், அவர்களுக்குக் கொடுக்கும்படியான படி முதலானவை உயர்த்திக் கொடுக்கப்பட வேண்டும். சென்னை நகரத்தில் பெண் ஆர்டர்லிகளை, தினம் ரூ. 7.50 சம்பளத்தில் தினக் கூலிகளாக வைத்துள்ளார்கள். அது மாற்றப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்களுடைய சங்கத்திற்கு நீங்கள் அங்கீகாரம் கொடுக்கவேண்டும். அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுக்கப்படாத நிலைமையில், அதன் தலைவர் பிரிட்டோவிலிருந்து, 12 பேர்கள் பல மாவட்டத் தலைவர்கள், அத்தனை பேர்களும் இன்றைக்கு டிஸ்மிஸ் செய்யப்பட்டு, வெளியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். சங்கத்தை அனுமதிக்கிறோம் என்று சொல்லி, தலைவரை தள்ளி விட்டால், மனிதன் தலையை வெட்டி, முண்டம் ஆடுகிற மாதிரி, அந்தச் சங்கத்தை அழிப்பது என்றுதான் அர்த்தம். அந்த நிலைமைக்கு அரசாங்கம் போகக் கூடாது. அவர்கள் சங்கம் வைத்து, உங்களுக்கு விஷயத்தை எடுத்துச் சொல்வது, பிரச்சினைகள் தீர உதவியாக இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட முறையில், அந்தப் போலீஸ்காரர்கள், அந்தச் சங்கத்தை நடத்துவதற்கு தகுந்த ஊக்கத்தைக் கொடுக்க வேண்டும், முதல் அமைச்சர் அவர்களுடைய வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும்.

போஸ் என்ற போலீஸ்காரர் திருச்சிராப்பள்ளியிலே டிஸ்மிஸ் செய்யப்பட்டு, கோர்ட்டுக்கு பெட்டிஷன் போட வந்தபொழுது இங்கே இருக்கிற போலீஸ் அதிகாரி கூப்பிட்டு, நீங்கள் கோர்ட்டுக்குப் போகாதீர்கள்; நாங்கள் கவனிக்கிறோம் என்று சொன்னார்கள். அவர் அதைக் கேட்காமல் கோர்ட்டுக்கு போய், அவர் குடியிருந்த வீட்டிலே, அவர் மனைவி சமையல் செய்து கொண்டிருந்தபோது, சகல சாமான்களையும் தூக்கி எறிந்து, அவர்களை வெளியே தள்ளி பூட்டி விட்டார்கள். ஒரு சாதாரண குடக்கூலிக்கு இருக்கிறவர்கள் வீட்டில் கூட இப்படி நடக்காது. தயவு செய்து இந்த அரசாங்கம் அதை யோசிக்க வேண்டும். அந்த போலீஸ்காரர்களுக்கு நியாயமான சலுகைகள் கொடுக்கப்படவேண்டும், பழி வாங்கப்பட்டவர்கள் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், அவர்கள் வேலையில் தப்பு இருந்தால், விசாரணை செய்து, என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுங்கள் என்று கூறிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லபல பணிகளைக் கடந்த காலங்களில், சிறப்பாக ஆற்றிக் கொண்டு வருகின்ற காவல் துறையைப் பாராட்டுகின்ற இந்த நேரத்தில், அவர்கள் ஆற்றிய பணிகளைச் சுட்டிக் காட்டுவதும் எனது கடமை என்று கருதுகின்றேன். தமிழகத்தினுடைய தள நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் உடல்நலம் இல்லாத நேரத்தில், மருத்துவ மனையில் இருந்த நேரத்திலும்





அவர்கள் அமெரிக்கத் திருநகருக்குச் சென்று திரும்பி வந்த நேரத்திலும், நாட்டிலே ஏற்பட்டிருக்கிற அமளி துமளிகளையெல்லாம் அற்புதமாக நல்லமுறையில் தீர்த்து, பாதுகாத்து புரட்சித் தலைவர் தமிழகம் திரும்பிய நேரத்தில், தமிழகமே திரண்டு வந்து தலை நகரில் கூடிய மக்கள் கடலைச் சரியான முறையில் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தார்கள்

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, நடந்து முடிந்த பொதுத் தேர்தலைச் சிறப்பாகவும் செம்மையாகவும், அமைதியாகவும் எல்லோரும் பாராட்டுகின்ற வகையில், பாரபட்சமற்ற முறையில், கண்ணியமான முறையில் நடத்திக் காட்டினார்கள்.

இன்றைக்குக் காவல் துறையினர் எண்ணிக்கைக் குறைவு என்று சொல்கின்றார்கள். ஆனால், வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற பழமொழிக்கு ஏற்ப காவல் துறையினர் இருக்கிற ஆட்களை வைத்து, அல்லது, அவர்களது திறமை, அறிவு, ஆற்றல் சிந்தனை, இவற்றை முறையாகப் பயன்படுத்தி, உலகத்திலே ஸ்காட்லண்டு போலீசுக்கு அடுத்தபடியாக, நிகராக, தலைசிறந்த காவல் துறையாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழகக் காவல் துறை, கண்டுபிடிக்க இயலாத வழக்குகள், அல்லது கண்டு பிடிக்க முடியாது என்று சொன்ன வழக்குகளைக் கூட, தங்களது அறிவால், திறமையால், கண்டுபிடித்து, குற்றவாளிகள் தப்பிக்கமுடியாத ஒரு சூழ்நிலையில் சரியான நடவடிக்கையை எடுத்து, மக்களைப் பாதுகாக்கின்ற அந்தப் பாணியிலே இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக தலைமை ஐ.ஜி. அன்பிற்குரிய ரெங்கசாமி அவர்களும், அன்பிற்குரிய மோகன்தாஸ் அவர்களும் அதைப்போன்று தீயணைப்புத் துறையில் திரு. இலட்சுமி நாராயணன் அவர்களும் அவர்களைப்போன்ற பல்வேறு பணியாளர்களும் தமிழகத்தைக் காக்கின்ற பணியிலே சிறப்பாக செயலாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

அதைப்போல குறைந்த காவல் பணியாளர்களைக் கொண்டு சென்னை மாநகர ஆணையர் அன்பிற்குரிய ஸ்ரீபால் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு காவல் துறையிலே எடுத்துக்காட்டாக, சிறப்பாக இந்தியத் துணை கண்டம் முழுவதும் எடுத்துச் சொல்லுகின்ற அளவுக்கு நீதி, நிர்வாகம், நேர்மை, நாணயம் ஆகியவைகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அந்த அளவுக்கு நம்முடைய காவல் துறையிலே மிகச்சிறந்தவர்கள் இருந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சில குறைகள் இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் மிகச்சிறந்த பண்பாளர்கள், அதிகாரிகள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.

உதாரணமாக சென்னை மாநகரில் இன்றைக்கு அசிஸ்டன்ட் கமிஷனராக இருக்கிற திரு. மாணிக்கம் மிகச் சிறந்த அதிகாரி. அதைப்போன்று பல காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். காவல் துறை அதிகாரியாக இருக்கிற திரு. மீனாட்சி சுந்தரம், காசிப் பாண்டியன் போன்றவர்கள் இருக்கிறார்கள். அதைப்போன்று டிராபிக் பிரிவில் எல்லோர் உள்ளத்தையும் கவரக்கூடிய அளவுக்கு பணியாற்றி வருகிற ஐயன்னன் போன்றவர்கள் இருக்கிறார்கள். நெல்லை ஆஸ்டின் போன்றவர்கள் எல்லாம் காவல் துறைக்கு எடுத்துக்காட்டாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற முறையில் எடுத்துக் காட்டாக, நேர்மையாக, நாணயமாக, கண்ணியமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உயர் அதிகாரிகள் முதல் கீழ் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் வரையில் காவல் துறையில் இன்றைக்குச் சிறப்பாகவும் செம்மையாகவும் மக்களைப் போற்றி பாதுகாக்கின்ற வகையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பாங்கினை வரவேற்பதும் பாராட்டுவதும் என்னுடைய தலையாய கடமை என்பதால் போற்றிப் பாராட்டுகிறேன்.

எந்தக் காரியத்தை யார் செய்தாலும், நல்லதைச் செய்பவர்கள் மக்களுக்குத் தேவையானதைச் செய்பவர்கள் நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டும். அப்படி பாராட்டினால்தான் நல்ல முறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு உற்சாகம் ஏற்பட்டு, மற்றவர்களும் நல்லமுறையில் பணியாற்றவேண்டுமென்ற ஆர்வப் பெருக்கோடு பணியாற்றும் நிலை ஏற்படும் என்பதற்காக இங்கே சிலரைப்பற்றிச் சொன்னேன். அப்படிப்பட்டவர்களைப் போல் இன்னும் பல அதிகாரிகள் காவல் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி நல்லமுறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்தக் காவல் துறையில் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு சலுகைகளை வழங்கி, மக்களுடைய நன்மையைக் கருதி இயங்கிக்கொண்டிருக்கிற இந்தத் துறையை நல்லமுறையில் பாதுகாத்துக்கொண்டு, மக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இந்தக் காவல் துறைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் பல்வேறு சலுகைகளை இந்த அரசு வழங்கியிருக்கிறது என்றாலும் மேலும் மேலும் பல சலுகைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறை சரியாக இருந்தால்தான் இந்த அரசுக்கும் மக்களுக்கும் நல்லது என்ற அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் பல சலுகைகளை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.



இப்படிப்பட்ட இந்தக் காவல் துறையைப் பற்றி, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திரைப்படங்கள் வாயிலாக கேவலப் படுத்துவது, கிண்டல் செய்வது, நையாண்டி படுத்துவது என்ற முறையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திரைப் படங்களில் நடித்துக்கொண்டிருந்தபோது காவல் துறையின் கண்ணியத்தை உயர்த்திக் காட்டினார்கள்; காவல் துறையின் தகுதியை உயர்த்திக் காட்டினார்கள். மக்களுக்கு எல்லாம் காவல் துறை என்றால், பயம், மரியாதை, கட்டுப்பாடு, நேர்மை, நாணயம் ஏற்படுகின்ற வகையில், அந்த நோக்கத்தை ஏற்படுத்துகின்ற வகையில் அவர்கள் காவல்காரன் முகராசி, சங்கே முழங்கு, ரகசியப் போலீஸ் 115, என் கடமை, தாய் சொல்லைத் தட்டாதே, தெய்வத்தாய், கன்னித்தாய், பரிசு, ஊருக்கு உழைப்பவன், உலகம் சுற்றும் வாலிபன், தலைவன் என்று இப்படி அனைத்து திரைப்படங்களிலும் காவல் துறையினுடைய உயர்ந்த லட்சியங்களையும் எண்ணங்களையும் அவர்கள் மக்களுக்கு ஆற்றுகின்ற பணிகளையும் உயர்த்திக் காட்டினார்கள். ஆனால் இன்றைக்கு திரைப்படங்கள் எல்லாம் காவல் துறையினுடைய கண்ணியத்தைக் குறைப்பதற்காகவும் காவல் துறைக்குக் கொடுக்கின்ற மரியாதையைக் குறைக்கின்ற வகையிலும், சிதைக்கின்ற வகையிலும் வந்துகொண்டிருக்கின்றன. அம்மாதிரி திரைப்படங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

[நண்பகல் 12.00]

எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் திரு. சித்தன் அவர்கள் சொன்னதுபோல் உன் கண்ணில் நீர் வழிந்தால் என்ற திரைப்படத்தில் ஒரு காவல் துறை அதிகாரி கொள்ளைக்காரராக இருப்பதுபோல் சித்திரிக்கிறார்கள். மங்கை தீட்டானால் கங்கையில் குளிப்பாட்டலாம்; கங்கையே தீட்டானால் எங்கே சென்று குளிப்பாட்டுவது என்பதுபோல் காவல் துறையினரையே கொள்ளைக் காரர்களாகச் சித்தரித்துக் காட்டினால் என்ன ஆகும்? எப்படி மக்கள் காவல் துறையை மதிப்பார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே, நான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் காவல் துறையினைப் பற்றித் திரைப்படம் எடுப்பவர்கள், காவல் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் அந்தக் குழுவிலே அங்கீகாரம் பெற்றவராக இருந்து அவர் அனுமதித்தால் தான்அந்தத் திரைப் படத்தைத் திரையிடக்கூடிய வகையில் ஒருகுழுவை அமைக்க வேண்டும். அந்தக்குழு காவல் துறையின் வாயிலாக அங்கீகாரம் தரவேண்டும் என்ற முறையைக் கொண்டு வரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சா. துரைசாமி] [1985 ஜூலை 8

இன்றைக்கு சாதாரண குடிசைப் பகுதிகளில் உள்ள மக்கள் தங்களுக்குள் ஏற்படுகின்ற வாய்த் தகராறு காரணமாகக் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தால் 75-வது பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்கின்ற நிலைமை சென்னை மாநகரத்தில் இருக்கின்றது. நான் காவல் துறை அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் இப்படிப்பட்ட பொது மக்களிடையே இருந்து கொண்டுவரப்படுகின்ற பிரச்சினையின் மூலம் அவர்களுக்குள்ளே பிளவு ஏற்பட்டுவிடாமல் தடுக்கின்ற வகையில் 75-வது செக்ஷன் போடாமல் குறிப்பாகப் பெண்கள் மற்றும் சாதாரண ஏழை எளியவர்கள் மீது அந்த வழக்கைப் பதிவு செய்யாமல் அங்கேயே அவர்களைக் கண்டித்து அனுப்பிவிடவேண்டும். அப்படிப்பட்ட சாதாரண ஏழை எளியவர்கள் மீது வழக்கு பதிவு செய்தால் அதன் காரணத்தால் அவர்கள் 30 ரூபாய், 50 ரூபாய் என்று அபராதம் கட்ட வேண்டிய சூழ்நிலை உண்டாகிவிடும். இது தேவையில்லாத ஒன்று. ஜனநாயக நாட்டில் உடம்பில் காயம் இல்லாத வகையில் ஏதாவது தகராறுகள் வருமேயானால் 75-வது பிரிவின்படி பதிவு செய்ய வேண்டாம் என்பதை நான் மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சந்தேகத்தின் பேரில் 41-வது கிளாஸ் என்ற வழக்கினை போடுகின்ற நிலைமை இருக்கின்றது. இரவு நேரத்தில் சினிமா பார்த்துவிட்டு வருகின்றவர்களையும், இரவு நேரப் பணிக்காகச் சென்று வருபவர்களையும், வெளியூர்களில் இருந்து வருகின்றவர்களையும் கைது செய்து கொண்டு வந்து அவர்கள் மீது 41-வது செக்ஷன் படி வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்புகிறார்கள். அவர்கள் 15 நாட்கள் ரிமாண்டிலே வைக்கப்படுகிறார்கள். இரவு நேரங்களில் வருபவர்கள் சரியான முகவரியினைக் கொடுத்தால் அல்லது அவர்கள் உரிய இடங்களிலிருந்து என்ன காரணத்திற்காக வந்தோம் என்பதைச் சொன்னால் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யக்ககூடாது. ஆனால் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக நாம் யாரை வேண்டுமானாலும் அழைத்து வரலாம் காவல் நிலையத்திற்கு என்று இருந்தாலும் அதற்காக எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்து பதிவு செய்கின்ற முறையினை ரத்து செய்ய வேண்டும். அது மாத்திரமல்ல. சந்தேகக் கேஸிலே அவ்வாறு வழக்கு பதிவு செய்வதால் சிலர் மனம் உடைந்து போவதன் காரணத்தால் மரணம் கூட அடைந்திருக்கிறார்கள். ஏனென்றால் ஒரு நல்லவர் அதுவரையில் காவல் நிலையத்திற்கே சென்றிராத ஒருவர் காவல் துறையினரால் அழைத்துச் செல்லப் பட்டுவிட்டார் என்ற காரணத்திற்காக அந்தக் கேவலத்தைத் தாங்கி கொள்ள முடியாமல் சிலபேர் அப்படிப்பட்ட சூழ்நிலைக்குச் சென்றுவிடுகிறார்கள். எனவே, இந்த சந்தேக



1985 ஜூலை 8] [திரு. சா. துரைசாமி]

வழக்கை 41-வது பிரிவின்படி பதிவு செய்யக்கூடாது. குற்றவாளிகள் எல்லாம் நமக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் மீதுதான் பதிவு செய்ய வேண்டுமே தவிர பொதுமக்களை, ஒன்றும் அறியாத அப்பாவிகளை இந்த வழக்கில் சம்பந்தப் படுத்தாமல் உரிய முறையில் விசாரணை செய்து விட்டுவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு எல்லா தொகுதி மக்களிடத்திலும் இருக்கின்ற மிகப் பெரிய குறை என்ன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஆற்றிலோ அல்லது குளத்திலோ அல்லது கிணற்றிலோ அல்லது இரயிலில் அடிபட்டோ ஒருவர் இறந்துவிட்டால் அப்படி இறந்துவிட்டவர்கள் பற்றி உரிய முறையில் விசாரணை செய்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொது மக்களிடத்திலே விசாரணை செய்து உண்மையிலேயே அவர் அவ்வாறு தவறி விழுந்துதான் இறந்திருக்கிறாரா என்று பார்த்து, அவ்வாறு அது ஒரு விபத்துதான் என்று தெரிந்தால் அந்த டெட் பாடியைப் போஸ்ட்மார்ட்டம் செய்யாமல் உரியவர்களிடத்திலே ஒப்படைத்துவிட்டால் நலமாக இருக்கும. ஏனென்றால் அந்தக் குடும்பத்தின் ஒரு நல்ல உயிரை பலிகொடுத்தது மாத்திரம் அல்லாமல், முறையாக சொல்ல வேண்டிய உறவினர்களுக்கும் சொல்ல முடியாமல், அந்த டெட் பாடியைப் பெறுவதற்காக மருத்துவமனைக்கும் அங்கேயும், இங்கேயும் அலைந்து கொண்டிருக்கிற அளவிலேதான் இருக்கிற காரணத்தினால், ஆற்றிலோ கிணற்றிலோ, குளத்திலோ தவறுதலாக விழுந்துவிட்டார்கள், அதனால்தான் மரணம் நேரிட்டது என்பதை அங்கேயே விசாரித்து தெரிந்துக் கொண்டு, உடனடியாக டெட்பாடியை அவர்களிடம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். காவல்துறையினரிடம் இது பற்றி சென்று கேட்டால், நாங்கள் என்ன செய்வது யாராவது இதிலே ஒரு புகாரை மேல் அதிகாரிகளுக்கு எழுதிவிட்டால் நாங்கள்தான் பதில் சொல்ல வேண்டும், ஆகவே தயவுசெய்து எங்களை சிக்கலிலே மாட்டிவிடாதீர்கள் என்று சொல்லி, அவர்கள் முறைப்படி நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆகவே, காவல் துறையின் அதிகாரிகளுக்கு, ஆற்றிலோ, குளத்திலோ, கிணற்றிலோ தவறுதலாக விழுந்ததினால் ஏற்பட்ட மரணம்தான் என்று நிச்சயமாகத் தெரிந்தால், அங்கேயே அந்தப் பாடியை உரியவர்களிடம் கொடுப்பதற்கான முறையில் ஆணையிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சர்ந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க பொதுமக்கள் செல்கிறார்கள், அங்கே ஒரு ரைட்டர், ஒரு ஏட்டு அல்லது மற்ற அதிகாரிகள் என்று இருப்பார்கள்.

அவர்கள் வழக்குகளை பதிவு செய்து விட்டு, பிறகு எடுக்கிறார்கள். ஆனால் அங்கே எத்தனை வழக்குகள் வந்தன? எத்தனை பதிவு செய்யப்பட்டன? எத்தனை நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதனால் எவ்வளவு பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் போன்ற விவரங்களை அறிவதற்கு வழி இருப்பதில்லை. காரணம் பதிவு செய்தவர்கள் மறுநாள் வந்துதான் அந்த வழக்குகளை எடுத்து விசாரிக்க வேண்டும். அங்கே இருக்கும் மற்றவர்களுக்கு அது பற்றி தெரியாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு சப் இன்ஸ்பெக்டர் அளவில் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் தொடர்ந்து காலையிலும் மாலையிலும் ஒருவர் இருந்து, வருகின்ற வழக்குகளை பதிவு செய்து கொண்டு, அவைகள் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பி.ஆர்.ஓ. போல இருந்து பணியாற்றக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தால் அது மிகவும் உபயோகமாக இருக்கும். அவசியம் மக்களின் நலன் கருதி அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஸ்கூட்டரில் செல்பவர்கள் கண்டிப்பாக ஹெல்மட் அணிய வேண்டும் என்ற சட்டத்தை கடுமையாகக் கடை பிடிக்கிறார்கள். நான் ஒரு சிறிய ஆலோசனையாக காவல் துறைக்கு ஒன்றை வைக்கலாம் என்று நினைக்கிறேன். அப்படி ஹெல்மட் அணியாமல் யாராவது அத்தகைய வாகனங்களில் வந்தால், அந்த வாகனத்தை அங்கேயே நிறுத்திவிட்டு, மேற்கொண்டு அவர்களைச் செல்லவிடாமல் தடுத்து, உடனடியாக ஹெல்மெட் வாங்கிக் கொண்டு வந்து, ரசீதோடு அதனைக் காட்டினால், அவர்களுக்கு எந்தவித தண்டனையும் வழங்காமல் மேற்கொண்டு செல்ல அனுமதிக்கலாம் என்ற வகையில் நடவடிக்கை எடுத்தால், அவர்களுக்கு தண்டனை அளிப்பதையும் தவிர்க்கலாம். அவர்களுடைய பாதுகாப்பிற்கும் வழி கோரலாம். ஆகவே, ரசீதோடு ஹெல்மெட்டை கொண்டு வந்து காட்டினால்தான் மேற்கொண்டு பயணத்தை தொடங்கலாம் என்ற வகையில், வேறு எந்தவித தண்டனையும் அளிக்காமல் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. காவல் நிலையங்களுக்கு நாங்கள் புகார் கொடுக்கச் சென்றால், அங்கே பேப்பர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட ரெஜிஸ்டர்கள் எல்லாம் இல்லை என்கிற குறை இருக்கிறது. அவைகள் எல்லாம் தமிழக அரசின் அச்சகத்திலே இருந்து வர வேண்டியிருக்கிறது [illegible] அது போன்ற பொருள்களையெல்லாம் உடனடியாக துரிதமாக,





நமது அச்சகத்தின் மூலமாக ஏற்பாடு செய்து கொடுத்தால் அங்கே பணிகள் இன்னும் துரிதமாக நடக்க அது உதவியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல மிசா சட்டம், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி குண்டர்களையும் நாம் கைது செய்கிறோம். அரசியல்வாதிகளையும் கைது செய்கிறோம். ஆனால் சமூக விரோதிகள், கிரிமினல்கள் எல்லாம் அரசியல்வாதிகளைப் போன்று சிறையில் சலுகைகளைப் பெறுவதற்காக தயாராக இந்த மிசா சட்டத்தின் கீழ் வரக்கூடிய சமூக விரோதக் குற்றங்களை அதிகமாகச் செய்து, அந்தப் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் இது போன்ற கிரிமினல் குற்றவாளிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கும் கடுமையான தண்டனைகளை இந்த மிசா சட்டத்தின் கீழ் விதிப்பதோடு, அவர்களுக்கு அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் கிடைக்கச் செய்யாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, லாரி, பஸ் போன்ற பல வாகனங்கள் இன்றைக்கு ரோடுகளில் புகையை கக்கிக் கொண்டு செல்கின்றன. அதனால் சுற்றுப்புற சுகாதாரக் கேடு ஏற்பட்டு, பொதுச் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது, ஆகவே அப்படிப்பட்ட வகைகளில் செல்லும் வாகனங்களை எந்த வகையிலே தடுத்து நிறுத்தினால் சரியாக இருக்குமோ, அல்லது எந்த வகையிலே அதற்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ அந்த நடவடிக்கைகளை எடுத்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஏற்கெனவே நான் போக்குவரத்து மானியத்திலே கூட சொன்னேன். வாகனங்களுக்கு உள்ள முன் விளக்குகளில் பாதி அளவு கருப்பு வர்ணம் பூசாமல் செல்லும் வாகனங்களால் பொது மக்களுக்கு பலவிதமான அபாயம் ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட வாகனங்களுக்கு முன் பகுதியில் உள்ள விளக்குகளுக்கு பாதி கருப்பு வர்ணம் கண்டிப்பாக அடிக்க வேண்டும் என்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, ஆம்னி பஸ்கள் சில இரவில் போகும்போது பல வண்ண விளக்குகளையும், பிரகாசமான விளக்குகளையும் எரியவிட்டுக் கொண்டு செல்வதால், எதிரே வருகிற வாகனங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விபத்து நேரிட ஏதுவாகிறது. ஆகவே ஆம்னி பஸ்கள் அதிகமான அளவு

விளக்குகளையோ அல்லது வண்ண விளக்குகளையோ பொருத்திக் கொண்டு வெளியே செல்லக்கூடாது என்று தடை விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12–10]

அதேபோல இன்றைக்கு சென்னை மாநகரத்தில் மூகமூடிக் கொள்ளையில் நடவடிக்கை எடுத்து, அற்புதமான நடவடிக்கையெடுத்து, சென்னை மாநகரத்திலும், சுற்றுப்புறப் பகுதியிலும் மக்களை பாதுகாக்கிற முறையில் நடவடிக்கைகளை காவல் துறை எடுத்துவருவதை நான் பாராட்டுகிறேன். எங்கேயிருந்து வந்து திருடினாலும் அதனைக் கண்டுபிடித்து விடுகிற ஆற்றலைப் பெற்றிருக்கிற காவல் துறைக்கு மேலும் வலிவூட்டுகிற வகையில் உதவிகளைச் செய்ய வேண்டும். ஹெலிகாப்டர் ஒன்று வாங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அந்தத் துறைக்கு ஹெலிகாப்டர் வாங்குவது நன்மையாகத் தான் இருக்கும். இரவு நேரங்களில் அதிகமான சக்தி வாய்ந்த விளக்குகளைப் பொருத்தி நகர்புறங்களை அதன்மூலமாக பார்வையிடலாம். அதேபோல ஊர்வலங்கள், பேரணிகள் நடக்கிற சமயங்களில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும் இதனை உபயோகப் படுத்தலாம். ஆகவே இதனை பரிசீலனை செய்து, முகமூடிக் கொள்ளைகளிலிருந்து மக்களை பாதுகாக்கவும், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், ஹெலிகாப்டர் விமானத்தை வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி சிறப்பான முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிற காவல்துறை அதிகாரிகளுக்கும், கீழே இருப்பவர்களுக்கும் ஒரு சில சலுகைகளை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவலர்கள் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அவைகள் எல்லாம் பழுது பார்க்கப்பட வேண்டும். அதைப்போல கழிப்பிட வசதிகள் சரியில்லாமல் இருப்பவைகளை சரி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இன்றைக்கு காவல் நிலையங்களில் பெட்ரோல் வேன்களையும், ஜீப்புகளையும் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த பெட்ரோல் வாகனங்களுக்குப் பதிலாக டீசல் வாகனங்களைப் பயன்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து அவர்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். மக்கள் பணிக்காக, பாதுகாப்பிற்காக அவர்கள் அந்த எல்லைக்குள் எங்கே வேண்டுமானாலும் சென்று வரலாம் என்பதில் அவர்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இருக்கக் கூடாது. ஆகவே இருக்கிற கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து காவல் துறையைச் சேர்ந்த ஜீப்களையும், வேன்களை
யும் வேளச்சேரியில் இருக்கிற பணிமனையில் தான் பழுது பார்க்
கிறார்கள். அவர்கள் செல்கிற நேரத்தில் அதிகமான அரசு
வாகனங்கள் பழுது பார்ப்பதற்காக அங்கே வருகின்றதால்
இவர்களின் வாகனங்கள் பழுது பார்க்கப்படுவது தாமதமடை
கின்றன. ஆகவே, காவல் துறைக்கு தனியாக வாகனங்கள் பழுது
பார்க்கும் கூடம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அதே போல காவலர்கள் குடியிருப்புகள்....
(மணியடிக்கப் பெற்றது).

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர்
அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்து
இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில
கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இங்கே எல்லா
உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டதைப் போல போலீசிற்கு
ஆள் எடுக்கிற ஒரு உறுதி மொழியை நம்முடைய முதலமைச்சர்
அவர்கள் கொடுத்து ஏழு ஆண்டுகளுக்கு மேலாகிறது. 12 ஆயிரம்
போலீஸ்காரர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அவர்கள் சொன்
னார்கள். 1978, 1983, 1985 என்று இப்படி தொடர்ந்து
அதற்காக தேர்வு நடைபெற்றது, ஆனால் பட்டியல் வெளி
யிடப்படவில்லை. என்ன சிக்கல்? என்ன பிரச்னை? என்ன
குழப்பம்? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதிலே
பல பேர்கள் வயதின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
வேறு இண்டர்வியூவிற்கு போக முடியவில்லை. இதிலே
பின்னணி என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
இதிலே என்ன வேடிக்கை என்றால், 1983-ல் ஏற்கனவே போலீஸ்
வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியல் வெளியிடாமல் நீங்
கள் தேர்வை நடத்துவது தவறானது என்று சொல்லி
ஹைகோர்ட்டில் ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அதற்குப் பிற
கும் கூட இந்தக் காரியம் செய்யப்பட்டிருக்கிறது. இராஜரத்
தினம் ஸ்டேடியத்தில் போலீஸ் வேலைக்கு ஆள் எடுக்கிறோம்
என்று சொல்லி, தடியடி, குதிரைப் படைத் தாக்குதல் எல்லாம்
நடந்து, அங்கே இருவர் மரணம் அடைந்தார்கள். ஒருவர் தான்
என்று இந்தச் சபையிலே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது
குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும்
நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சப்—இன்ஸ்பெக்டர் செலக்ஷன், தொடர்ந்து 1979-லும் அறி
விப்பு, 1981-ல் அறிவிப்பு, 1982-ல் அறிவிப்பு, 1984-ல் அறி
விப்பு. மக்களிடத்தில் அப்ளிகேஷன் மூலமாக பல இலட்சக்
கணக்கான ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. திருப்பிக் கொடுக்
கப்படவில்லை. பட்டியல் தயார் என்று சொன்னார்கள்.

போலீஸ் அதிகாரிகள் தவறு செய்து விட்டார்கள். இராணுவ அதிகாரிகளை வைத்து சரியான பட்டியலை போடப் போகிறோம் என்று சொன்னார்கள். பழைய படியும், தேர்வு நடத்தினார்கள். இது வரையில் பட்டியல் வெளியிடப்படவில்லை. ரீடர்ன் டெஸ்ட் என்றெல்லாம் சொன்னார்கள். அதிலே என்ன தயக்கம், அதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல போலீசிற்கு சங்க உரிமை கேட்டபோது நம்முடைய முதல்வர் அவர்கள் புத்தாண்டில் போலீஸ் சங்கம் வைத்துக் கொள்ளலாம். அவர்கள் மீதுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய ஹோம் செக்ரட்டரி அவர்கள் எனக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஹைகோர்ட் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். நான் அறிய விரும்புகிறேன். ஹைகோர்ட்டில் அங்கீகாரம் வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. டெல்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் போலீஸ் சங்கம் வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி தரப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கான காரியங்களை இந்த அரசாங்கம் செய்யவில்லை. ஆகவே அரசு வாக்குறுதியை மீறுகிறது. அந்தோணிசாமி போன்ற சங்க நிர்வாகிகள் எல்லாம் டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறார்கள். டிரான்ஸ்பர் செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது போன்று வாக்குறுதிகள் கொடுத்தும் கூட, போலீஸ் சங்கத்திற்கு உரிமையை மறுப்பது நியாயமில்லை.

அதைப்போல ஆர்டர்லி முறை ஒழிக்கப்பட்டுவிட்டதாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் சொல்லப் போனால் ஹோம் டிபார்ட்மெண்டிலேயிருந்து ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது 5—9—1979 அன்று. ஆர்டர்லிக்கு பதிலாக 950 அடிப்படை ஊழியர்கள் நியமித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இன்னும் அந்தக் கொடுமைகள் போலீஸ் துறையிலே ஒழிக்கப்படவில்லை. இன்னும் சில போலீஸ்காரர்கள் அதிகாரிகளுடைய வீட்டிலே துணி துவைப்பதற்கும், இன்னும் இது போன்ற கொத்தடிமை வேலைகளைச் செய்வதற்கும் பயன்படுத்தக்கூடிய நிலைமையிருக்கிறது. அரசு இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இப்படிப்பட்ட கொடுமையை அந்தப் பெரிய போலீஸ் அதிகாரிகளுடைய வீட்



டிலே, அவர்களுடைய சொந்தக் காரியங்களுக்கு முடுக்கி விடுகிற ஒரு நிலை இருக்கிறது. இது முதல் அமைச்சர் சொன்ன வாக் குறுதியை மீறுவதாகும்.

அதைப்போலவே மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படும் திட்டத்தை அறிவித்தார்கள். வரவேற்கவேண்டிய விஷயம். ஆனால் இப்போது நடைமுறையில் என்ன இருக் கிறது என்றால், 24 கிலோ அரிசிக்குப் பதிலாக 16 கிலோ அரிசியும், 4 கிலோ பாமாயிலுக்குப் பதிலாக 1 கிலோவும், 6 கிலோ பருப்புக்குப் பதிலாக 4 கிலோ தான் இப்போது தரப் பட்டு இருக்கிறது. திடீரென்று இது ஏன் குறைக்கப்பட்டு இருக் கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது காவல் துறையினரை பாதிக்காதா ? என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இது போன்று, இப்போது அரசாங்க ஊழியர்களுக்கு, சனி' ஞாயிறு ஆகிய நாட்களுக்கு விடுமுறை விடப்படுகின்றது. ஆனால் இந்தப் போலீசாருக்கு அது இல்லை. எனவே அவர்கள் எக்ஸ்ட்ரா ஓர்க் செய்கிறார்கள். கேட்டால் அது எசன்சியல் சர்வீஸ் என்று சொல்வீர்கள். எனவே அவர்களுக்கு அந்த 2 நாட்களுக்குத் தேவையான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல கேசுவல் லீவ் அவர் களுக்கும் 20 நாள் என்று இருந்தது, 12 நாளாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. இதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இதை எல்லாம் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல தீயணைப்புத் துறையிலே வேலை பார்க்கக் கூடிய பையர் ஸ்டேசன் ஆபீசர்ஸ் எல்லாம் பி.ஏ., எம்.ஏ., படித்தவர்கள். குருப் 2 சர்வீஸ் எழுதி வந்தவர்கள். ஆனால் அவர்கள் ஏட்டய்யா சம்பளம்தான் வாங்குகிறார்கள். பையர் ஸ்டேசன் ஆபீசர்களுடைய சம்பளம் 705 ரூபாய்தான் அவர்கள் வாங்குகிறார்கள். ஆனால் இன்ஸ்பெக்டர்களுக்கு 1,100 ரூபாய் ரெகுலர் போலீஸ் சர்வீசிலே இருப்பவர்களுக்கு கொடுக்கிறார் கள். நான்காவது பே கமிஷன் இதைப் பார்க்கத் தவறிவிட்டது. துரதிருஷ்டமான விஷயம். நாக்பூரில் பயிற்சி பெற்றவர்கள் இன் னும் ஏட்டய்யா சம்பளம்தான் வாங்குகிறார்கள், அந்த நிலை யில் வைத்திருக்கிறோமே அதை இந்த நேரத்திலே சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூலை 8

அதேபோல் சிறப்புக் காவல் படையில் உள்ளவர்கள் என்று எடுத்துக் கொண்டால், அவர்களைப் பொறுத்தமட்டிலும், மற்ற மாநிலங்களிலே 3 ஆண்டுகளுக்கு சர்விலே வைத்துவிட்டு, பின்னாலே பழையபடி ரெகுலர் போலிஸ் சர்விசுக்கு அனுப்பி விடுகிறார்கள். அதைப்போல இங்கேயும் செய்யவேண்டும். இது சம்பந்தமாக உத்தரவு போடப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். ஜி.ஓ.நெம்பர் 1281/8—6—81. அந்த மாதிரி சர்விலே சிறப்புப் பிரிவிலே இருப்பவர்களை எல்லாம் ரெகுலர் போலீசுக்கு அனுப்ப வேண்டும். 10 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள், சட்டம் ஒழுங்குப் பிரிவுக்கு அனுப்பப்படுவார்கள் என்று இந்த அவையிலே, 'ஆன் தி பிளோர் ஆப் தி ஹவுஸ்', அன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் கவனிக்கப்படாத ஒரு நிலைமை இருக்கிறது.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய ஆய்வுரையிலே கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு படத்தின் ஒரு பகுதியைத்தான் காட்டுகிறது. ஒன் சைட் ஆப் தி பிக்சர் இதனுடைய மறு பக்கத்தை நீங்கள் காட்டத் தவறி விட்டீர்கள். இந்த அவையிலே முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி, புலன் விசாரணை நடக்கிற கேஸ்களைப் பற்றி தகவல் அறிவிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் ஏன் ஆய்வுரையில் சொல்லவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல திருத்தணி பயணியர்கள் விடுதியில் லட்சுமி என்ற பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள். குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன ஆயிற்று? நடிகை ஷோபா கொலையா? தற்கொலையா? விசாரிக்கப்படும் என்று சொன்னார்கள், அது என்ன ஆயிற்று? புட்லூர் தண்டபாணி மனைவி கொலை செய்யப்பட்டார், அந்த விவகாரம் என்ன ஆயிற்று? அதைப் போல அப்சல்கான், திண்டுக்கல்லில் கொலை செய்யப்பட்டு, திரவியம் கமிஷன் ரிப்போர்ட் வந்திருக்கிறது, குற்றவாளி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள், அது என்ன ஆயிற்று? இளஞ்செழியன், வெற்றிச் செல்வன் என்பவர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள், அதற்குப் பின்னாலே மர்மம் இருக்கிறது என்று சொன்ன அந்த வழக்கு என்ன ஆனது? சிதம்பரம் டி.எஸ்.பி. பெண்களைக் கடத்தி லாட்ஜிலே வைத்து மானபங்கப்படுத்தினார் என்பதற்காக சஸ்பெண்ட் செய்யப்பட்டு, அதிலே அவருக்கு எதிராக ஜி.ஓ. 145-ன்



1985 ஜூலை 8] [திரு. அ. ரகுமான்கான்]

கீழே ஒரு விசேஷ விசாரணை செய்து அறிக்கை அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த டி.எஸ்.பி. மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மச்சக்காளை என்பவர் மலையிலிருந்து உருட்டி விடப்பட்டு, நக்சலைட் என்று கூறி கொலை செய்யப்பட்டதாக ஒரு செய்தி. இளைக்காயோம் என்று சொல்லி, ஹெபியஸ் கார்பஸ் போட்டு நீதிமன்றத்திலே நீதிபதி நடராஜன் அவர்களும்; நீதிபதி ரத்னவேல் பாண்டியன் என்று கருதுகிறேன், அவர்கள் மச்சக்காளை என்பவரைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறார்கள். விசாரணைக்கான தஸ்தாவேஜுகளை எடுத்துக் கொண்டு வரவேண்டும் என்றும், இது பற்றி விசாரிக்க ஒரு போலீஸ் குழுவை நியமித்து, இது பற்றிச் சொல்ல வேண்டும் என்றும் சொன்னார்கள். இது வரையிலும் அந்த மச்சக்காளை என்பவரைப்பற்றி அரசாங்கம் விவரத்தைத் தந்திருக்கிறதா? இது சபையிலே பேசப்பட்டது. கோர்ட் ஆர்டர். நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் எனக்கு வேண்டியவர்தான், ஆனாலும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தங்கபாலு, எம்.பி. ஒரு சீட்டிங் கேஸ். முதல் அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பேசியிருக்கிறார்கள். அந்த வழக்கு எப்படி இருக்கிறது, தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–20)

சர்வீஸ் கமிஷனிலே 4-வது குரூப்பில் பல கேள்வித் தாட்கள் வெளியாகிவிட்டன. மிக அபாயகரம். அதில் பாதிக்கப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள். வழக்கு எப்படி இருக்கிறது. இதை சபை தெரிந்து கொள்ள வேண்டாமா என்று கேட்கவிரும்புகிறேன்.

மலேசியா மாணவர் ஒருவரிடமிருந்து மருத்துவ கல்லூரியில் சீட்டு வாங்கிக் கொடுக்கிறேன் என்று சொல்லி 50 ஆயிரம் ரூபாய் வாங்கியதாக திரு. ரமணன், எஸ். பி. அவர்களிடம் புகார் மனு கொடுக்கப்பட்டது. அவரும் அந்தப் புகார் மனுவை வாங்கியதற்கான அத்தாட்சியை கொடுத்து இருக்கிறார்கள். அப்படி வாங்கியவர் பெரும் செல்வாக்கு படைத்த ராமதாஸ். அவர் மீது என்ன நடவடிக்கை, வழக்கு இருக்கிறதா? உயிர் இருக்கிறதா? என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் மானாமதுரையில் சித்திரா டிரேடிங் கம்பெனியை சேர்ந்த நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் 2 பெண்ணை கற்பழித்து கொலை செய்து நமது முதலமைச்சருக்கு புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை. உடனே சுப்ரீம் கோர்ட்டில் அந்த அம்மாள் ஒரு கடிதம் எழுதினார்கள். சுப்ரீம் கோர்ட்டில் இருந்து ஹைக்கோர்ட்டுக்கு டைரக்ட் செய்தார்கள். நீதிபதி சத்திய தேவ் அதை விசாரித்தார். உடனே என்ன ஆகியது. தஸ்தாவேஜிகளை அனுப்ப வேண்டும் என்று கேட்டார்கள். டாக்டர் மெடிகல் ரிப்போர்ட்டில் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள் கற்பழிக்கப்பட்டு கொலை என்று. இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். இவைகள் எல்லாம் சபைக்கு தெரியப்பட வேண்டிய விஷயங்களாகும்.

அடுத்து, ஆம்னி பஸ் ஊழல். 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதி இதே சபையில் பேசப்பட்ட மிகப் பெரிய ஊழல். 123 காவல் துறையினர் சம்பந்தப்பட்டவர்கள். அதில் 79 வெகிகள்ஸ் இன்ஸ்பெக்டர்கள் லஞ்சம் வாங்கியதாக குற்றச்சாட்டு. அவர்கள் மீது வழக்கு உண்டு என்று சொல்லப்பட்டது. அது என்ன ஆனது என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, காளியப்பன் நாயக்கன் பட்டியில் தண்ணீர் கேட்டு போராட்டம் நடத்தியபோது துப்பாக்கிப் பிரயோகம் நடைப்பெற்றது. தடியடி பிரயோகம் நடைபெற்றது. அதுசம்பந்தமாக வழக்குகள் நடந்தன. விசாரணைக்காக ஒரு கமிஷன் போடப்பட்டது. அதன் அறிக்கை அரசுக்கு அனுப்பி ஆகி விட்டது. தப்பு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை உண்டா? நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இன்னும் ஒன்றையும் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன். டி. எஸ். பிக்கு சர்வீஸ் கமிஷன் மூலம் செலக்ஷன் நடைபெறுகிறது. தகவலைச் சொல்லுகிறேன். 15 பேர் தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள். அந்த 15 பேரில் ஒரு எஸ். ஐ. அவர் ஏற்கனவே சஸ்பெண்டு ஆனவர். ஏற்கனவே அவர் மீது கிரிமினல் வழக்கு இருக்கிறது. வேண்டுமானால் பெயரைக் கூட சொல்கிறேன். பிரேம்குமார், வாடிப்பட்டி, எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர். எஸ். ஐ. வேலை பார்த்தார். சினியம்மாளையும் அவருடைய புருஷனையும் கொடுமைப்படுத்தியதாக அவர் மீது வழக்கு போடப்பட்டு அவர் மீது கிரிமினல் கேஸ் இருக்கிறது. அதற்கு அரசு ஆர்.டி.ஓ. விசாரணை போட்டது. ஆர்.டி.ஓ. விசாரணையில் மிகத் தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. வாடிப்பட்டி முன்னால்





எஸ். ஐ. பிரேம்குமார் தற்போது சஸ்பெண்டில் இருக்கிறார், உசிலம்பட்டி ஆர். டி. ஓ. விசாரணையில் போலீஸ் மீது தவறு என்று சொல்லப்பட்டு அரசின் உத்திரவு அவர் மீதும் மற்றும் 3 காவலர்கள் மீதும் ஐ. பி. சி. 307, 323, 324, 341 பிரிவுகளில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நீதிமன்ற கோர்ட்டில் இருக்கிறது. இப்படி இருக்கும் போது எப்படி இந்த தேர்வு நடைப்பெற்றது. இதற்கு பின்னால் உள்ள விளக்கம் என்ன என்பதை தெரிந்து கொள்ளவிரும்புகிறேன்.

அதேபோல் உதாரணமாக ஒன்றையும் இங்கே நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்கு சட்டம் ஒழுங்கு எந்த அளவுக்கு கெட்டுப் போய் இருக்கிறது என்பதற்கு உதாரணம் ஆண்டவனுக்கே பாதுகாப்பு இல்லாத நிலை. பூந்தமல்லி அருகே செந்நீர்குப்பம் சுப்பிரமணிய ஸ்வாமி கோயில் 4–6–1985–ல் சம்பவம் நடக்கிறது. நாகராஜ குருக்கள் பூஜை செய்வதற்காக பட்டப் பகலில் தண்ணீர் எடுக்கப் போகிறார். தெய்வயானை சண்டிகேஸ்வரர், மாணிக்கவாசகர் ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள சிலைகள் திருடப்படுகின்றன. புகார் ஆவடி போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல் பரமகுடியில் கற்பூரசாமி கோவிலில் 2 சிலைகள் திருட்டு. இதை சொன்னவர் கற்பூரசாமி கடத்தப்படுகிறார். மதுரைக்குக் கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்படுகிறார். புகார் பரமகுடி போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்படுகிறது.

அடுத்து, சென்னை கடற்கரையில் இன்றைக்கு பயங்கரமாக இருக்கிறது. ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறது. உதாரணமாக போட்டுக்கு பின்னால் அந்த இடத்தில் உல்லாசமாக உட்கார்ந்து இருந்த நேரத்தில் முகமூடி அணிந்து கத்தியை காட்டி கொள்ளை அடிக்கப்படுகிறது. 8 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். கடற்கரையில் இருக்கக்கூடிய அண்ணா சதுக்கம் போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்கப்பட்டது. இப்போது டிரான்ஸ்பர் ஆகி போய்விட்ட முன்னால் ஹைக்கோர்ட் நீதிபதியினுடைய உறவினரும் இருக்கிறார்.

அதேபோல் சாந்தோம் சர்ச் பகுதியில் வழி பறி தினமும் நடைபெறுவதாக எனக்குத் தகவல் வந்து கொண்டு இருக்கிறது.

இங்கே நம்முடைய எம். எல். ஏ. இந்திரா காங்கிரஸ்-ஐ சேர்ந்தவர், திண்டிவனம் தங்கமணி அவர்கள் வீட்டில் பயங்கரமான திருட்டு 20 ஆயிரம் ரூபாய் போய்விட்டது. நடு இரவில்

கதவில் ஓட்டைப்போட்டு உள்ளே நுழைந்து பயங்கரமான திருட்டு நடந்து இருக்கிறது. அதை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. புகார் திண்டிவனம் போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அது மட்டும் அல்ல, போலீஸ் அதிகாரிகளுடைய வீடுகளையும் திருடர்கள் விடுவது இல்லை. போலீஸ் டி. எஸ். பி. கலிபுல்லா அவர்கள் வீட்டில் டேப் ரெக்காடர் திருட்டு, மது விலக்கு அமல் பிரிவு கூடுதல் சூப்பிரண்டெண்டு திருமூர்த்தி அவர் ஜீப்பில் போய் அதை நிறுத்திவிட்டு சாப்பிட போகிறார் அவருடைய ஜீப் திருடு போய்விடுகிறது. ஹைக்கோர்ட் காம்பவுண்டில் வக்கீல் அப்துல் வகாப் காரை நிறுத்துகிறார், கார் திருடு போய் விடுகிறது.

நம்முடைய முதலமைச்சருடைய ஏரியா—பரங்கிமலைப் பகுதி—ராமாவரம் தோட்டம்—போலீஸ் பாதுகாப்புள்ள இடம். அந்த இடத்திலே உள்ள தொழிற்சாலையில் இரவு நேரத்தில் கொள்ளைக்காரர்கள் புகுந்து, 75 ஆயிரம் ரூபாய் செப்புக் கம்பிகளை திருடி, 4 காவலர்கள், செக்யூரிட்டிகளை அடித்து, மற்றவர்களையும் அடித்து, மாட்டு வண்டியைக் கொண்டு வந்து ஏற்றிக் கொண்டு போனதாக புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டதா ? இல்லை.

அடுத்து, கோட்டையிலேயே திருட்டு. வால் கிளாக், தலைமைச் செயலகத்திலேயே திருடப்படுகிறது. இதைக் காட்டிலும் வருத்தம் வேறு எதுவும் கிடையாது. அதைப் போல, சேலை வைத்திருக்கிறார் மாண்புமிகு அமைச்சரவர்கள். அந்த இரண்டு சேலைகளும். . . . . . . . . .

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சேலை வைத்திருக்கிறார் என்று சொல்கிறார். என்னுடைய அறையில் பார்வைக்காக வைக்கப்பட்டது என்று தயவுசெய்து சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** நிச்சயமாக திருத்தியே சொல்கிறேன். பார்வைக்காக வைக்கப்பட்ட சேலை—அதிகாரப் பூர்வமாக. அது திருடு போய் விடுகிறது. இப்படிக் கோட்டையிலேயே இவைகளுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது.





பெண்ணிடம் நகை வழிப்பறி செய்யப்படுகிறது. மயிலாப்பூர், பட்டிணப்பாக்கத்திலே தமிழ்ச்செல்வி என்ற பெண் கடைக்குப் போய்விட்டு வரும்போது, கத்தியைக் காட்டி பயமுறுத்துகிறார்கள். ரயில்வே அதிகாரி வீடு. எழும்பூர் ரயில்வே காலனியில் இருக்கிறது. பட்டப் பகலிலே கத்தியைக் காட்டி வீட்டிலே கொள்ளை அடித்துக் கொண்டு போகிறார்கள்.

கற்பழிப்பு–குண்டூரைச் சேர்ந்த சீதாலட்சுமி, எம்.பி.பி.எஸ்., என்ற டாக்டர் ஆட்டோவில் போகும்போது கற்பழிப்பு முயற்சி நடக்கிறது. கோவையிலே கணவன், மனைவி இரண்டு பேர். ஊருக்குப் போவதற்காக வரும்போது, பெரிய கடை வீதியிலே, கணவன் பெயர் கண்ணன் ; மனைவி லட்சுமி ; இரவு 10 மணிக்கு கணவனை அடித்து உதைத்து விட்டு, மனைவியை கற்பழிக்கிறார்கள்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்—போலீசாரே பெண்களைக் கற்பழிக்கிற நிலைமை இருக்கிறது. உதாரணம், சோளிங்கர் கூடலூர் கிராமம். முனிரத்தினம் : சம்பூர்ணம்மா அவருடைய மனைவி, ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டு ஊருக்குத் திரும்புகிறார்கள். பஸ் கிடைக்கவில்லை. குணசேகரன், ரவிச்சந்திரன் என்ற இரண்டு போலீஸ்காரர்கள் கற்பழிக்கின்ற காரியத்திலே ஈடுபட்டார்கள். மக்களே திரண்டு அவர்களைப் பிடித்து போலீசில் ஒப்படைத்து, போலீஸ் ஸ்டேசனில் கல் எறிந்திருக்கிறார்கள் ; புகார் கொடுத்திருக்கிறார்கள்.

நெய்வேலியிலே எலுமிச்சை கிராமம். விருத்தாசலம் கல்லூரியில் வார்டனாக இருப்பவர் மகள் தனலட்சுமி, பட்டதாரி : படித்தவர். அவரைக் கற்பழிக்கின்ற முயற்சியில் சுந்தரமூர்த்தி என்ற சென்டிரல் ரிசர்விலே இருக்கிற போலீஸ் ஈடுபட்டு, புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. போலீசே கற்பழிக்க முயற்சித்தால் நான் கேட்க விரும்புகிறேன். இங்கே மங்கை சூதகமானால் கங்கையில் நீராடலாம், கங்கையே சூதகமானால் எங்கே நீராடுவது என்று பசும்பொன் தேவர் அவர்கள் அடிக்கடி கேட்பார்.

அதை இங்கே நான் நினைவு படுத்த விரும்புகிறேன். அதை போல இன்னொன்றையும் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்கு தினத்தந்தி பத்திரிகையைப் பார்த்தால் எங்கு பார்த்தாலும் போலீசைப் பற்றி இருக்கிறது. பழனியப்பன், கந்தசாமி திருச்சியைச் சேர்ந்த போலீஸ்காரர்கள். பர்மா பஜாரிலே முஸ்தபா என்பவர் வியாபாரம் செய்கிறார்.

அவர் திருச்சியிலிருந்து மெட்ராஸுக்கு திருவள்ளுவர் பஸ்ஸிலே வருகிறார். ஏறத்தாழ 3 இலட்சம் ரூபாய் அமெரிக்க டாலர் இருந்ததாக கேள்வி. அது அவர்கள் சம்பந்தப்பட்ட விவகாரம். விசாரிப்பவர்கள் விசாரிக்கட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அந்த 3 இலட்சம் டாலரை பின் தொடர்ந்து, எப்படியும் அதை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு பழநியப்பன், கந்தசாமி என்ற போலீஸ்காரர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்றால், திருச்சியிலிருந்து தனிக் காரிலே வந்து, இங்கே முஸ்தபா அகமது கீழே இறங்கியவுடன் 'ஐயா கூப்பிடுகிறார்' என்று சொல்லி அவரை அங்கே 'சூட்கேசை தா' என்று சொல்லி அதை காரிலே வைத்துக் கொண்டு போகிற நிலைமை ஏற்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்.

காவல் துறையைச் சேர்ந்தவர்களே இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுகிற கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. போலீஸ்காரர்களுக்கே இன்றைக்கு பயமாக இருக்கிறது. பாதுகாப்பு இல்லை.

ஐயம்பெருமாள் என்பவர் மதுரையிலே ரௌடியைப் பிடிக்கப் போனபோது அடிபட்டு செத்து இருக்கிறார். கொலை செய்யப் பட்டிருக்கிறார். அதே மாதிரி இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் ஒரு நீண்ட பட்டியலை இங்கே படித்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சபை உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு தகவல்: பத்திரிகைகளிலே வருகிற செய்தியைத் தொகுத்து இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறாரா, அல்லது புகார் தந்ததற்கு ஆதாரமாக இங்கே வைத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறாரா? பல பெயர்களை எல்லாம் குறிப்பிட்டு இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார். அந்தப் பெயர்கள் எல்லாம் ஆதாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டனவா? அல்லது பத்திரிகைகளிலே வந்து இருக்கின்ற செய்தியிலே தெரிவிக்கப்பட்ட பெயர்களா? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சபையினுடைய நேரத்தை அவர்கள் பெரியதாக எண்ணி மதித்து நல்ல பயனுள்ள வகையில் அதைத் தருவார்களானால், இந்தத் துறையின் சார்பிலே பதில் அளிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் வசதியாக இருக்கும். ஒரு நீண்ட பட்டியலை அவர்கள் பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளைத் தொகுத்து இங்கே சொல்லிக் கொண்டிருப்பது எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் முடிந்ததை எல்லாம் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். நேரம் ஆகிவிட்டது சீக்கிரம் முடித்து விடுங்கள்.

(பிற்பகல் 12—30)

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, அடுத்து மிகமுக்கியமான பிரச்னை, நண்பர் துரைசாமி அவர்கள் கூட சொன்னார்கள். முகமூடிக் கொள்ளை—20 மாத காலத்தில் 16 முகமூடிக்கொள்ளைகள். இதுபோதாது என்று இன்று காலையிலே பார்க்கிறோம். நேற்று பல்லாவரத்திலே, பேங்க் அதிகாரியின் வீட்டைத் தாக்கி ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பட்டுப் புடவைகளை எடுத்துப் போய் இருக்கிறார்கள். ஆகவே, 17 சம்பவங்கள் நடந்திருக்கின்றன. சென்னை நகரத்தில் வீட்டு வசதியைப் பெற முடியாதவர்கள் புற நகர்ப் பகுதிகளில் வாழ்கிறார்கள். ஆனால், அவர்களுடைய நிலைமை என்ன? Constant fear of knock at mid night ஒவ்வொரு இரவும் விடிகிறபொழுது எந்த நேரத்திலே முகமூடி வருவானோ என்ற அச்ச உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அமாவாசையைத் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். நம்முடைய பெரியபோலீஸ் அதிகாரிகள் கூட அமாவாசை வருகிறது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்கள், முகமூடி வரக்கூடும் என்று சொல்கிறார்கள். ரொம்ப மகிழ்ச்சி. ஆனால் நான் கேட்க விரும்புகிறேன் இது குறித்து இதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் காவல் துறைக்குக் கொடுக்கப்பட்ட நீண்ட பட்டியலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு பல வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. முகமூடிக் கொள்ளை வழக்கிலும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு சில மாநிலங்களிலேயிருந்து வந்தும் தவறு செய்கிறார்கள். அவைகளையும் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, விடவில்லை. போலீஸ் ஸ்டேஷன்களில் கொடுக்கப்பட்ட நீண்ட பட்டியலை அவர்கள் சொல்வதால், காவல்துறையினர் அவர்களைக் கவனிக்கவில்லை என்ற தவறான எண்ணம் மக்களிடத்திலே பரவக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, வேறொன்றுமில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** சென்னைப் பல்கலைக் கழகம் பி. ஜி. ஹாஸ்டலில் கேஷுவல் டெப்பாசிட் என்று மாணவர்கள் கட்டிய முப்பதாயிரம் ரூபாய்களை மேனேஜராக இருப்பவர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. அதைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை. இப்பொழுதாவது, இந்தச் சபையின் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் உறுதியை ஏற்று காவல் துறை அதன் மீது நடவடிக்கை எடுக்குமென்று நம்புகிறேன்.

முகமூடித் திருடர்களைப்பற்றிச் சொல்லுகின்றபோது இன்னொரு தகவலையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்கு ஹெலிகாப்டர் பயன்படுத்தப்படும் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஹெலிகாப்டர்களைப் பற்றி எனக்கு அவ்வளவாக விவரம் தெரியவில்லை. முகமூடித் திருடர்கள் அந்த ஹெலிகாப்டர் வருகின்ற நேரம் பார்த்துத் திருடுவார்களா என்ற தகவல் எனக்குத் தெரியவில்லை. ஆகவே தான், முதலமைச்சரவர்கள் அரசுக்கு அதை ரெஃபர் செய்து அறிக்கை கொடுக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். எனவே, போலீஸ் துறையானது ஹெலிகாப்டரைப் பயன்படுத்துவது பற்றி முதலமைச்சரவர்களின் வேண்டுகோளை ஏற்று ஏதாவது அறிக்கை கொடுத்திருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மிக முக்கியமான இன்னொரு பிரச்னையை நான் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் லாக்கப்பிலே இன்றைக்குச் சாவு என்பது அதிகமாக நடைபெற்றுக் கொண்டு வருகிற காரியமாக இருந்துகொண்டு இருக்கிறது. உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், 'டெக்கான் ஹெரால்ட்' பத்திரிகையில் வந்த தகவலைச் சொல்கிறேன். மொத்தம் 313 பேர் இது வரையில் போலீஸ் லாக்கப்பில் டெத் என்று சொல்லியுள்ளது. இது தவறாக இருந்தால்கூட நம்முடைய நாவலர் அவர்கள் அதைத் தாராளமாகத் திருத்தலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1981 ஜனவரியிலிருந்து 1982 வரை 17 மாதங்களில் 60 பேர் போலீஸ் லாக்கப்பிலே செத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பத்து நாட்களுக்கு ஒரு காவல் கைதி என்ற குறிப்புகளெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தகவல் உண்மையா இல்லையா என்று எனக்குத் தெரியாது. நாவலர் அவர்கள் இதுபற்றிக் கூறலாம்.

பல்லாவரம், சாவடித் தெரு, கண்ணன் என்பவர், வயது 28, டி.யூ.சி.எஸ். கடையிலே வேலை பார்த்தவர். அவர் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு, அவர் பல்லாவரம் போலீஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.





ஆனால் கிணற்றிலே மூழ்கிச் செத்து விட்டார் என்று சொல்லப் படுகிறது. எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. போலீஸ் லாக் கப்பிலே அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்று நான் கருது கிறேன். எனவே, அரசு, இது உண்மையா என்று அறிவதற்கு விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கண்ணன் என்பவரை, சேலம் மாவட்டம், ஓமலூர், தாராபுரம் போலீசார் திருட்டு வழக்கு என்று குற்றம் சாட்டி ஓமலூர் போலீசார் கைது செய்தார்கள். காவல் நிலையத்திலே அவர் இறந்து போகிறார். தற்கொலை செய்து கொண்டதாகச் சொல் கிறார்கள். எனக்கு அதிலே சந்தேகமாக இருக்கிறது. அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. எது உண்மை என்று கண்டறிவதற்காக நீதி விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம் என்னவென்றால், கிச்சிலிப்பாளையம், 19 வயது, அரிசனப் பெண், தெய்வமணி என்பவர் 15—3—1983 ஆம் தேதி திருட்டு வழக்கில் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்படுகிறார். பெண்களை போலீஸ் லாக்கப்பில் வைக்கக் கூடாது. ஆனால், வைத்தார்கள். அந்தப் பெண்மணி செத்துப் போகிறாள். காரணம் கேட்டபொழுது, புடவையைக் கழுத்திலே சுற்றி, மூச்சு அடைத்து செத்துப் போனாள் என்று தெரிவித்தார்கள். அது குறித்து இந்தச் சபையிலே பிரச்னையை எழுப்பினோம். முதல் வர் அவர்களே விசாரணைக் கமிஷன் போடுங்கள் என்று சொன்னோம். முதல்வரவர்களும் நீதி விசாரணைக் கமிஷனைப் போட்டார்கள். அதுதான் நஞ்சப்பன் கமிஷன். அவர்கள் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். இது தற்கொலை அல்ல, சாவுதான் ; புலனாய்வு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையினாலே இந்த அறிக்கை கொடுக்கப்பட்டு எவ்வளவு நாள் ஆகிறது ? புலனாய்வு எந்த நிலையிலே இருக்கிறது ? போலீஸ் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, இன்னொரு தகவலையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஊட்டியில் நடைபெற்ற ஒரு சம்பவம். ராஜ்குமார் தாக்கப்பட்டார். எஸ்.பி. டிரான்ஸ்பர் செய்யப்பட்டார். அந்த ஊர் இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட் செய்யப் பட்டார். இங்கே கூட நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கிப் பேசியபொழுது, சபையிலே சொன்னார். முதல்வர் உத்தரவுப்படித்தான் அவர் நீக்கப் பட்டார் என்று. நாவலர் பேசுகிறபொழுது சொன்னார்,

மேல் அதிகாரிகள் உத்தரவு போட்டிருக்கிறார்கள், என்று. நான் சபையிலே கேட்டேன். நம்முடைய முதல்வர் அவர்களிடம், நாவலர் அவர்கள் குறிப்பிட்டது சரியா, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது சரியா என்று. முன்னவர் சொன்னது சரியா, பின்னவர் சொன்னது சரியா தகவல் வித்தியாசமாக இருக்கிறதே என்று கேட்டேன். முன்னவர் சொன்னது முன்னால் சரி, பின்னவர் சொன்னது பின்னால் சரி என்று அவர் சொன்னார். ஆனால், எனக்கு விளங்கவில்லை. அந்தக் கமிஷன் அறிக்கையில் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள், காவலர் மீது தப்பே கிடையாது என்று. அப்படியானால், ஏன் அவரை சஸ்பெண்ட் செய்தீர்கள் ? ஏன் அவரை டிரான்ஸ்பர் செய்தீர்கள் ? யார் காரணம் ? இதற்கு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். நஞ்சப்பன் கமிஷன் அதைத்தான் ஊட்டி சம்பவம் குறித்து விளக்கிச் சொல்கிறது. அதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மதுரை மாணவர்களை போலிசார் தாக்கியது குறித்து ஒரு விசாரணை கமிஷன் இந்த அரசால் நியமிக்கப்பட்டது. அந்த கமிஷன் தனது அறிக்கையை அரசுக்குத் தந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதனுடைய பைன்டிங்ஸ் என்ன ? அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் போட்டிருக்கிற ஜி.ஓ. என்ன ? பாலோ அப் ஆக்ஷன் என்ன ? நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விபச்சாரம். 24,000 தமிழ்ப் பெண்கள் தமிழ் நாட்டிலேயிருந்து பிற மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டுள்ளதாக முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சபையிலே சொல்லி இருக்கிறார்கள். சபைக் குறிப்பிலே இருக்கிறது. கண்ணகி பிறந்த நாட்டிலே 24,000 பேர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். (குறுக்கீடு) முன்னாள் கூட்டுறவு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள். சில நேரங்களிலே பெயரைச் சொல்வதற்குச் சிரமமாக இருக்கிறது. ஏனென்றால் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிற பொழுது, பெயரைச் சொல்வது மரியாதைக் குறைவானது என்று சொன்னதனாலே அந்தத் தயக்கத்தாலே நான் பெயரைச் சொல்லத் தவறி விட்டேன். மன்னிக்க வேண்டும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதைத் தடுப்பதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டும்.

என்னுடைய தொகுதியிலே ஒரு சம்பவம். டி-1 போலிஸ் ஸ்டேஷன் சம்பந்தப்பட்டது. புகாரி ஓட்டலுக்குப் பக்கத்திலே ஒரு முக்கியமான இடம். ஒரு இடம் பற்றி, அவர்களுக்கும்



இன்னொரு முக்கியமான பொறுப்பிலே இருப்பவர்களுக்கும் தகராறு. புகாரி ஓட்டல் ஊழியரை அடித்து விடுகிறார்கள். உடனே, அங்கே டி-1 போலிஸ் ஸ்டேஷனுக்குப் போய், ஏ.சி. இராஜேந்திரன், இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் அந்த ஸ்டேஷனில் உள்ளவர்கள். இருவரும் என்ன செய்கிறார்கள் ? ஏ.சி. ஸ்பாட்டில் கிடைக்கவில்லை. பாஸ்கரன் வந்து விசாரித்து, அனைவரையும், சம்பந்தப்பட்டவர்களை, விசாரித்து, வழக்கு போடுவது என்ற நிலையேற்படுகிறது. அதனால் ஆளுங்கட்சிக் காரர்கள் பாதிக்கப்படுகின்ற நிலையேற்படுகிறது. உடனே, மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கக்கூடியவர் உள்ளே தலையிட்டு சொல்கிறார். இல்லை, இல்லை, இல்லை, வழக்கு போடு போடக் கூடாது என்று. இல்லை, இல்லை, இல்லை, வழக்கு போடு வதற்கான பிரைமா பாஸி இருக்கிறது என்று சொல்லப்பட்டு, ஒரு பெரிய மனிதருடைய தலையீடு ஏற்பட்டு, 7 ஆம் தேதி சம்பவம் நடக்கிறது ; 8ஆம் தேதி ஏ.சி. டிரான்ஸ்பர் செய்யப் படுகிறார். ஏன் 6-ஆம் தேதி செய்யப்படக் கூடாது : ஏன் 5-ஆம் தேதி செய்யப்படக் கூடாது.

அது மட்டுமல்ல, விசாரிப்பதாக இருந்தால், நான் பகிரங்மாகச் சொல்கிறேன், கலைவாணர் அரங்கிலே விழா நடைபெற்று, அந்த விழாவின்பொழுது வந்த ஒரு அமைச்சருடைய கார், டி-1 போலிஸ் ஸ்டேஷன் முன்னாலே இருந்தது. என்னுடைய தொகுதி மக்கள், முக்கியமானவர்கள், பார்த்தவர்கள், சாட்சி சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். இதை வேண்டுமென்றால் அமைச்சர்கள் மறுக்கலாம், இந்தத் தலையீடு குறித்து நீங்கள் விசாரணை நடத்தினால் நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன், பொறுப்பேற்றுக் கொள்கிறேன். ஆக, இதுபோன்ற அரசாங்கத் தலையீடு இருப்பது எந்த விதத்திலும் நியாயம் அல்ல.

இன்னொன்றை கடைசியாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். போலிஸ்காரர்கள் அரசியல் சார்பற்றவர்களாக இருக்க வேண்டும். ஆனால், உங்களுடைய அனுமதியோடு, நான் சொல்கிறேன்.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னிடம் காட்டாமலேயே என்னிடம் அனுமதி பெற்றுவிட்டு சொல்வதாகச் சொல்லக் கூடாது. அதை நான் அனுமதிக்க முடியாது.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான்: * * நான் உங்களுடைய அனுமதியோடு என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது முடியாது. முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். பத்திரிகைச் செய்தியைச் சொல்கிறீர்கள், அது வேறு. * * * அதை நீக்கி விடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

ஆனால், அதே நேரத்திலே, ஹவுசிங் போர்டிலே கவர்ன்மென்ட் பிரசிலே, தொழிற்சங்கத்திலே வேலை பார்ப்பது என்றால், அரசியல் வேறு. அரசாங்க ஊழியராக இருப்பது வேறு என்று நீங்கள் சொல்கிறீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. பல பேர்கள் அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்று சஸ்பென்ட் செய்யப்பட்டு, டிஸ்மிஸ் செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆனால், * * *

(பிற்பகல் 12-40)

அது மட்டுமல்ல. இன்னும் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். குண்டர்கள் சட்டத்தைப் பற்றி ஏற்கெனவே பேசியிருக்கிறேன். நான் சமூக விரோதிகளுக்கு ஆதரவாகப் பேசுவதாக யாரும் எண்ணிவிடக் கூடாது. (குறுக்கீடு) அதிலே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அல்லது சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படலாம். ஓராண்டுக்குத் தண்டனை வழங்கலாம். அது மட்டுமல்லாமல் அவர்கள் பழையபடி கைது செய்யப்படலாம், தண்டிக்கப்படலாம். அதுபற்றி அப்பீல் செய்ய வேண்டுமென்றால் யாரிடம் ? அந்த அட்வைசரி போர்டில் இருக்கக்கூடிய நீதிபதியிடம்தான். ஒருவரை குற்றவாளி என்று சொல்லும்போது, குற்றஞ் சாட்டப்பட்டவன் எவனாக இருந்தாலும் சட்டத்தின் முன்னால் தண்டிக்கப்பட வேண்டும்.

அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். ஜெயபிரகாஷ், 9 பேரைக் கொன்றவன். அவனுக்கு கூட வக்கீல் வைத்து வாதாட உரிமை கொடுத்தோமா இல்லையா ? கோர்ட்டுக்குப் போக உரிமை கொடுத்தோமா இல்லையா ? அதைப்போன்று பில்லா, ரங்கா — அவர்கள் இரக்கம் என்ற பொருள் இல்லா

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அரக்கர்கள் தான். ஆனால் அவர்கள் வழக்காட வாய்ப்பு கொடுத்தோமா இல்லையா ? அவர்கள் நிரபராதியா, குற்றவாளியா என்பதை நிரூபிக்க கோர்ட்டிலே சந்தர்ப்பம் கொடுத்து, அதற்குப் பின்னால்தானே அவர்கள் குற்றவாளிகள் என்று முடிவு செய்யப்பட்டு தூக்கில் இடப்பட்டார்கள். அதைப் போன்று குற்றவாளி என்று சொல்லப்பட்ட நபர் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு அவன் தப்பு செய்தானா இல்லையா என்பதை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் கொடுக்கலாம் அல்லவா ! இந்த குண்டர்கள் சட்டத்தில் அதற்கு இடமில்லையே. இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு, தங்களுக்குப் பிடிக்காதவர்களாக இருந்தால், தாங்கள் நேரடியாகப் பாதிக்கப் படுவோம் என்பதற்காக, உள்ளே வைத்து நியாயங்கள் மறுக்கப்படுகின்றன அல்லவா. ஒரு நாயைக் கொல்வதாக இருந்தாலும் அதற்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்று காரணத்தைச் சொல்லிக் கொல்வதுதான் முறை என்று சொல்லும் போது இந்தச் சட்டம் 'பொவிடிக்கல்லி மோட்டிவேட்டட்' அரசு இதிலே உள்நோக்கம் செய்கிறதோ, வேண்டியவர்களுக்கு சலுகை கொடுத்து, வேண்டாதவர்களைத் தண்டிப்பதற்காகக் கொண்டு வருகிறதோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது. அது கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக உங்கள் அனுமதியோடு ஒன்றைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே ஒரு துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. அந்தக் கிராமத்து அப்பாவி மக்கள் ஒரு காலத்திலே தவறு செய்திருக்கலாம் ; ஆனால் இப்போது அங்கே போய் அமர்க்களம் செய்து, தவிர்க்கப்பட வேண்டிய துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று, இரண்டு தாய்மார்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எனவே அதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு வழக்கு. நம்முடைய நாவலர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லும்போது அப்பாவி மக்கள் என்று சொன்னார். நான் சம்பந்தப்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் சொல்லுகிறேன் ; கைது செய்ய

சென்ற போலீஸ்காரர்களை அந்த ஊர் மக்கள் பிடித்து வைத்துக் கொண்டார்கள். அதன் காரணமாகத்தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் அவர்கள் சொல்வது சரியா, நான் சொல்வது சரியா என்பதற்கு ஒரு நீதி விசாரணைக் கமிஷன் வைத்தால் தெரிந்துவிடும். அதைத்தான் நான் வலியுறுத்துகிறேன்.

இன்னும் ஒரே ஒரு வழக்கு. ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அதை மட்டும் குறிப்பிட்டு, முடித்துக்கொள்கிறேன். வரதட்சிணைக் கொடுமை மிகப் பயங்கரமானது. நான் அந்தக் கொடுமையை என்றைக்கும் செய்தவன் அல்ல. திருப்பூரிலே கல்லூரி பேராசிரியை நாகம்மாள் வரதட்சிணை கொடுமை காரணமாக அந்த அம்மையாரின் கணவரால் கொல்லப்பட்டாள் என்பதற்காக கோர்ட் அவருக்கு 3 ஆண்டு கால கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறது. நீங்கள் ஒரு வழக்கறிஞர். வழக்குகளின் தன்மை உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீதிமன்றத்தின் தீர்ப்பை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். நேரம் இல்லாததால் அதைப் படிக்காமல் இங்கே வைத்திருக்கிறேன் ; நீங்கள் கேட்டால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

இதிலே வேடிக்கை என்னவென்றால் கொலை என்று தெரிந்த பிறகும் காயங்களைப் பற்றி தகவல் தெரிவிக்காமல், சரியான தகவல் வேண்டுமென்றே கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள். போஸ்ட்மார்டம் செய்த டாக்டர் விஜயலட்சுமி அவர்கள் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். நீதிபதி மிகப்பெரும் தப்பு என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட குற்றவாளிமீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா ?

திருப்பூர் வடக்குப் பிரிவில் இருக்கக்கூடிய போலீஸ் ஸ்டேஷனில் ஒரு சப் இன்ஸ்பெக்டர். அவர் பெயர் காத்தமுத்து என்று கருதுகிறேன். போலீஸ் அதிகாரி தற்கொலை என்று முடிவுக்கு வருகிறார். அதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் கொலை செய்யப்பட்ட அம்மையார் நாகம்மாள் கழுத்திலே கொலை செய்யப்பட்டதற்கான காயங்கள் இருக்கின்றன. அதை மார்க் செய்ய வேண்டுமென்றே தவறிவிட்டார்கள். அது மட்டுமல்ல. கொலை செய்யப்பட்டவரை புகைப்படங்கள் எடுக்க தவறிவிட்டார்கள். அந்த அம்மாள் அலங்கோலமான நிலையிலே கொலை செய்யப்பட்டு கிடந்ததை வேண்டுமென்றே சுட்டிக்காட்டாமல் விட்டுவிடுகிறார்கள். இதை எல்லாம் நீதிபதி சுட்டிக்காட்டி, எஸ்.பி. ரகசிய காவல் துறையைப் பயன்





படுத்திய பின்னால் வரதட்சிணை காரணமாகக் கொல்லப்பட்டிருக்கிறார். தற்கொலை என்று சொல்லி கொலையை மூடி மறைக்கிறார்கள், கொலை செய்யப்பட்டதற்கான தடயங்கள் இருக்கின்றன. இருந்தும் இந்த மாதிரி மூடி மறைப்பது சரியல்ல. இதற்குக் காரணம் நிர்வாகம் சரியாகச் செயல்படவில்லை ; இதற்குப் பொறுப்பிலே இருக்கிற சர்க்கார் லாயக்கற்றதாக இருக்கிறது ; சர்க்கார் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் ; நல்ல பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன். வணக்கம்.

### 4. அறிக்கை அளித்தல்—(தொடர்ச்சி.)

### (ஆ) விதி 111-இன் கீழ் பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 111-வது விதியின் கீழ் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர்அணையைத் திறந்து விடாததன் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனத்தை நம்பி இருக்கும் வேளாண் குடி விவசாயிகள் கவலை அடைந்தனர். சாதாரணமாகக் குறைந்த பட்சக் கொள்ளளவு 40 டி.எம்.சி. தண்ணீர் மேட்டூரில் இருந்தால்தான் காவிரிப் பாசனத்திற்குத் தண்ணீர் மேட்டூரில் இருந்து திறந்து விடப்படும். 8—7—1985 அதாவது இன்று தண்ணீர் கொள்ளளவு 68.75 அடியாகும். கன அளவில் எடுத்துக்கொண்டால் 32 டி.எம்.சி.யாகும். விவசாயிகளின் இன்னல்களை உணர்ந்து தண்ணீரைப் பாசனத்திற்கு உடனடியாகத் திறந்துவிட வேண்டிய அவசியத்தை அறிந்து உடனடியாகப் பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கும் வகையில் மேட்டூர் அணையைத் திறக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தியினை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 111-வது விதியின் கீழ் அறிக்கை வைத்துவிட்டால் உடனே எதுவும் கேட்க முடியாது என்று விதி இருக்கின்றது என்று பல முறை அவையிலே சொல்லியிருக்கிறேன்.

(இ) விதி 112-இன் கீழ் பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 112-வது விதியின் கீழ் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இன்று காலையில் ஒரு துணை வினாவிற்கு அளித்த விடைக்கு திருத்த அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலை சட்டமன்றப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது .வினாக்களுக்கு விடையளிக்கும்போது இன்றைய நீரின் கன அளவு மேட்டூரில் 37.63 டி.எம்.சி. என்று என்னிடத்தில் தெரிவிக்கப்பட்ட விவரத்தைச் சொன்னேன். 37.63 டி.எம்.சி. என்பதை 31.6 டி.எம்.சி. என்று திருத்தி அவைக்குறிப்பில் பதிவு செய்யத் தாங்கள் ஆணையிடவேண்டும் என்று கோருகிறேன்.

3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி.)

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (8—7—1985) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி பேரவை நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 11-7-1985 (வியாழன்) | 1. அரசினர் சட்டமுன்வடிவு — ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.<br>2. 1985-86 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்<br>21—மீனளம்.<br>32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் |
| 12-7-1985 (வெள்ளி) முதல் 15-7-1985 (திங்கள் முடிய). | ஏற்கனவே அறிவிக்கப்பட்டப்படி. |
| 16-7-1985 (செவ்வாய்) 17-7-1985 (புதன்). | அரசினர் சட்டமுன்வடிவுகள் — ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |



அறிவிப்புகள்

பேரவைத் துணைத் தலைவர்

| | |
|---|---|
| 18—7—1985 (வியாழன்) 19—7—1985 (வெள்ளி) | 1985-86ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம். |

6. வரவு—செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின்கீழ் நடை பெறுகின்ற காவல் துறை மானியத்தில் அந்தத் துறையின் செயல் பாடுகளை வரவேற்றுப் பேசுவதில் உள்ளபடியே மனம் மகிழ்ந்து காவல் துறை இந்த நாட்டுக்கு எந்த அளவுக்கு முக்கியமான துறை, என்னென்ன பணிகளை அது ஆற்றிக்கொண்டிருக்கின்றது என்பனவற்றில் ஒரு சிலவற்றை நான் சொல்லி இந்த அவையின் முன்பு வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அமெரிக்கா போன்ற பெரிய வளர்ச்சியடைந்த நாடுகளைவிட இந்தியாவிலே குறிப்பாகத் தமிழகத்தில் குற்றங்கள் எல்லாம் குறைந்து கொண்டு வந்து இன்றைக்கு நல்ல முறையிலே இந்த நாடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று சொன்னால் அதற்கு முழுமுதல் காரணமாக இருப்பது இன்றைக்குக் காவல் துறையிலே இருக் கின்ற அதிகாரிகள்தான். அன்புக்குரிய திரு. மோகன்தாஸ் போன்றவர்கள் திரு. ரங்கசாமி போன்றவர்கள், திரு. லட்சுமி நாராயணன் போன்றவர்கள் எல்லாம் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணத்தால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே சட்டம், ஒழுங்கு புரட்சித் தலைவர் ஆட்சியில் காப்பாற்றப்பட்டு வரு கின்றது என்று சொல்கிற நேரத்தில் உள்ளபடியே நாங்கள் எல் லாம் பெருமைப்படுகிறோம். அதற்கு எடுத்துக் காட்டாக நடை பெற்ற இரண்டொரு சம்பவங்களைச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

ஆறு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற பாராளுமன்ற, சட்ட மன்றத் தேர்தல் ஒரு கட்டுக்கோப்போடு நடந்தது. ஒரே நாளில் தேர்தல் நடைபெற்றது. வாக்குச் சாவடியிலே வாக்குப் பெட்டி யினை எடுத்துச் சென்று விட்டார்கள் என்ற செய்தி கிடையாது. தேர்தல் நடைபெறுகிறபோது அங்கே துஷ்பிரயோகம் செய்து அதன் காரணத்தால் வெடிகுண்டு வெடிக்கப்பட்டது என்று செய்தி கிடையாது. துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது

என்று செய்தி கிடையாது. இதுபோன்ற செய்திகள் எல்லாம் இந்தியாவிலே எங்கோ ஒரு மூலையில் நடந்தன. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரே நாளில் பாராளுமன்றத் தேர்தலும், சட்டமன்றத்தேர்தலும் நடைபெற்றது. அதுவும் சட்டம் ஒழுங்கோடு நடைபெற்றது என்று சொன்னால் தமிழகத்தில் இருக்கின்ற காவல் துறை அதிகாரிகள் எடுத்துக் கொண்ட முயற்சிதான் அதற்குக் காரணம் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-50)

அதே நேரத்தில் இன்றைக்கு தமிழகத்திலே குற்றங்களைத் தடுப்பதிலும், குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலும், குற்றங்கள் நடைபெறாமல் பார்ப்பதிலும் தலைசிறந்த காவல் துறை உள்ள நாடாக தமிழ்நாடு இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று சொன்னால் அது புரட்சித் தலைவர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தான் நடக்கிறது என்று சொல்வதிலே நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

நீங்கள் படித்திருப்பீர்கள். இன்றைக்கு காவல் துறை மானியத்திலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய குறிப்பிலே, திருடிச் சென்ற பொருள்களை மீட்டுக் கொடுக்கும் பொறுப்பிலே காவல் துறை அதிகாரிகள் 1978-லே 41.2 சதவீதம் வெற்றி பெற்று திரும்பப் பெற்றிருக்கிறார்கள். அதே நேரத்தில் 1983-ல் 53.6 சதவீதம் திருடுப் போன பொருள்களை திரும்பப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், 1984 ஆம் ஆண்டு 55.3 சதவீதப் பொருள்களை திரும்பப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு யார் காரணம்? புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே காவல் துறை எடுத்துக் கொண்ட முயற்சிதான் காரணம்.

ஆகவே, தமிழகத்தில் காவல்துறையைப் பொறுத்த அளவிலே நல்ல முறையில்தான் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாம் அன்றாடம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். வடபக்கத்திலே பாங்குகளிலே கொள்ளை அடிக்கப்படுகிறது. பாங்கிலே பணத்தைக் காணோம், அத்தோடு பல பாங்குகளில் சேர்த்து கொள்ளை அடிக்கப்பட்டு, என்றைக்கும் அவை நல்ல முறையிலே செயல்படாத வகையிலே, அவைகள் இன்னும் கண்டு பிடிக்கப்படாத நிலையிலேயே இருக்கின்றன. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த நிலை இல்லை.

குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். போன ஆண்டு கள்ளக்குறிச்சியிலே 43,27,520 ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது. தென்னாற்காடு கூட்டுறவு வங்கி என்ற வங்கியிலே.



தமிழகத்தினுடைய காவல் அதிகாரிகள் எல்லாம் ஒன்று திரண்டு அதை புலனாய்வு செய்ததன் விளைவாக கண்டுபிடிக்கப்படுகிறது. கண்டு பிடித்ததோடு மட்டுமல்லாமல் கிருஷ்ணசாமி என்ற ஒருவரையும் கைது செய்து, அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் எல்லாம் மீட்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் காவல்துறை எந்த அளவுக்கு சிறப்பாக தமிழகத்திலே புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ள முடியும்.

அத்தோடு தமிழகத்திலே நக்ஸலைட் கொடுமை என்று வட ஆற்காடு மாவட்டத்தினுடைய ஓரப்பகுதியான திருப்பத்தூரிலும், தர்மபுரி மாவட்டம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் நக்ஸலைட்டுகளின் கொடுமை இருந்துக் கொண்டிருந்தது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணத்தால் இன்றைக்கு திருப்பத்தூர் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்கள், புரட்சித் தலைவர் அவர்களை தங்கள் வீட்டு தெய்வமாக கருதிக் கொண்டிருக்கிறார்கள். நிம்மதியாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். நிம்மதியாக வயலிலே சென்று தங்களுடைய சேவையை செய்வதற்காக, விவசாயிகள் எல்லாம் நிம்மதியாகப் போகிறார்கள் என்று சொன்னால் நக்ஸலைட்டுகளின் கொடுமை ஒடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் அதற்கு ஒருமுக காரணமானது நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிதான் என்றும் சொல்லுகிறபோது அவருக்கு உறுதுணையாக இருந்த காவல்துறையினர் எந்த அளவிற்கு தங்களுடைய செயல்பாட்டினை அதிலே ஈடுபடுத்திக் கொண்டிருப்பார்கள் என்பதையும் சற்று இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு மட்டுமல்ல, கோவிலிலே உள்ள சிலைகள் கூட இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பாராட்டுகிறது. கணக்கு எடுத்துக் கொண்டால், ஏற்கெனவே ஆண்டவர்களின் காலத்திலே எத்தனை கோவில் சிலைகள் அமெரிக்காவிற்கும் மற்ற அயல் நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, கண்டு பிடிக்கப்பட முடியாமல், அப்படியே விடப்பட்டன என்பதற்கு வரலாறுகள் உண்டு. ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே புலனாய்வுத் துறையின் மூலமாக பல்வேறு சிலைகள் திருடு போய் இருந்தாலும் கூட அவைகள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு உரிய கோவில்களுக்கு அனுப்பப்பட்டிருக்

கிறது. ஆனால் ஒரு சில வகைகள் இன்னும் கண்டுபிடிக்கப் படாமல் இருக்கின்றன. ஆனாலும் அதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை புலன் ஆய்வுத் துறையினர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான், சொன்னேன், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே கோவிலிலே இருக்கின்ற சிலைகள் கூட அவரைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றன என்று. அந்த வகையிலே புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே போலீஸ் துறை நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொல்வதிலே நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய அருமை சகோதரர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இட்டுக்கட்டி சில விஷயங்களைச் சொன்னார்கள். ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் கொலை நடக்கிறது. திருவண்ணாமலையிலே கற்பழிப்பு நடந்திருக்கிறது. அங்கு கொலை நடக்கிறது, இங்கு கொலை நடக்கிறது என்று பத்திரிகைச் செய்திகளைப் படித்துக் காட்டினார்கள். அவருக்கு நினைவு படுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

நீங்கள் ஆண்ட பொழுது செத்திருப்பவர்களின் எண்ணிக்கையை சற்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஆண்ட பொழுது கற்பழிப்பு நடக்காமல் இருந்ததா ? தென்னாற்காடு மாவட்டத்தில் பிச்சாவரம் என்ற ஊரிலே ஒரு இளம் பெண் தற்கொலை என்று மறைக்கப்பட்ட வரலாறு உங்களுக்கு எல்லோருக்கும் தெரியாமல் இருக்க முடியாது. அது யார் ஆட்சியில் நடந்தது ?

தென்னாற்காடு மாவட்டத்தில் பிச்சாவரம் என்ற ஊரிலே ஒரு இளம் பெண் கொல்லப்பட்டு இறந்ததை, தற்கொலை என்று சொல்லி, அதற்காக மெடிக்கல் சர்டிபிகேட்—அதாவது போர்ஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கூட வாங்க முடியாமல் ஆக்கி, அதை தற்கொலை என்று சொல்லி மூடி மறைக்கவில்லையா ? அது யார் ஆண்ட காலத்தில் நடந்தது. அதைப் போலத்தான் ஏழை மாணவர்களின் போராட்ட முயற்சி நடந்தது. அவர்கள் தகாத முறையிலே நடந்துக் கொண்டார்கள் என்று அப்போது சொன்னார்கள். அவர்களுக்கு நான் இவற்றை எல்லாம் நினைவு படுத்தி, அவர்களுடைய ஒரு பக்கத்தை திருப்பி காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுவதால் சொல்கிறேன்.



போராட்டங்களைப் பொறுத்தவரையில் சிம்ஸன் போராட்டம் யார் ஆட்சியில் நடந்தது ? ஆவடி மத்திய தொழிற்சாலையில் போராட்டம் யார் ஆட்சியில் நடந்தது ? விவசாயிகள் போராட்டம் கோயம்புத்தூரிலே நடந்த போது, பல விவசாயிகள் துப்பாக்கி முனையிலே கொன்று குவிக்கப்பட்டார்களே, அது யாருடைய ஆட்சியிலே நடந்தது ?

இன்றைக்கு மாணவர்கள் சமுதாயத்தைப்பற்றி பேசினார்கள். இந்த நேரத்தில் அவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் என்ற ஊரில் என்ன நடந்தது ? உதயகுமார் என்ன ஆனான் ? தாய், தந்தையே தன்னுடைய மகன் இல்லையென்று கூறுகிற அநீதி நடக்கவில்லையா ?

பாளையங்கோட்டையில் லூர்து சுவாமிநாதன் கதை என்னவானது ? வட ஆற்காடு மாவட்டத்தில், என்னுடைய பகுதியான கண்ணமங்கலத்தில் சிவசங்கரன் என்ற மாணவன் சுட்டு வீழ்த்தப்பட்ட அசம்பாவிதம் நடந்ததே, அது யார் ஆட்சியிலே நடந்தது?

பெத்தநாயக்கன்பாளையத்தில் முத்துசாமி என்கிற ஒருவர் கொலை செய்யப்பட்டாரே, அது யார் ஆட்சியில் நடந்தது ?

திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் உங்களுக்கு நினைவுக்கு வரவில்லையா ? இதுபோன்ற சம்பவங்களை எல்லாம் நடத்திவிட்டு இன்றைக்கு பட்டியல் போட்டுகாட்டுவது எந்த வகையிலே நியாயம் என்பதை கேட்க விரும்புகிறேன். உங்களைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். ஏதோ கலைவாணர் அரங்கத்தில் கார் நின்றது, கொலை நடந்தது என்றெல்லாம் சொன்னார்கள். 1973 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு எங்களுடைய விவசாயத்துறை அமைச்சர் மாண்புமிகு காளிமுத்து அவர்களும், இன்றைக்கு டெல்லியில் தமிழகப் பிரதிநிதியாக இருக்கிற திரு. எட்மண்ட் அவர்களும் ஒரு பொதுக் கூட்டத்திற்குப் போகிறார்கள். போய் வருகிறபோது என்ன நடந்தது ? அவர்கள் காரை நிறுத்தி அடித்தார்கள். கார் சேதமாகியது. மாண்புமிகு காளிமுத்து அவர்கள் புகார் கொடுத்தார்கள். அந்தப் புகார் உங்களுடைய ஆட்சியிலே என்னவானது? நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? இல்லை.

அடுத்து மூன்று மாதக் காலத்தில் கோவில்பட்டியில் ஒரு அரசாங்க பஸ் எரிக்கப்பட்டது. காவல் நிலையத்திற்கு அது பற்றிய புகார் போகிறது. என்ன நடந்தது ? அந்தப் பகுதியிலே

இருக்கிற அண்ணா தி.மு.க. தொண்டர்களை அழைத்து 16 பேர்கள் மீது பொய் வழக்கு போட்டு நடவடிக்கையெடுத்த அரசாங்கம் அன்றைய அரசாங்கம்.

அதேபோல பொய் வழக்கு போடுகிற அரசாங்கம் புரட்சித் தலைவர் அரசாங்கமல்ல. அடுத்து சிவகாசி தொகுதியில் லிங்கபுரம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. 1977-ல் அன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து சிலர் மாற்றப்படுகிறார்கள். அப்படி மாற்றியதன் வாயிலாக அந்தத் தொண்டர்கள், அங்கேயிருந்த கம்பம் தங்களுக்குச் சொந்தம், அதிலே நாங்கள் கொடியேற்றுவோம் என்று அன்றைக்கு கொடி ஏற்றினார்கள். என்ன நடந்தது? அங்கே டி.எஸ்.பியும், இன்ஸ்பெக்டரும் அனைவரும் அன்றைய ஆட்சியாளர்களின் கைக்கூலிகளாகச் சென்று, டி.எஸ்.பி.யும் மற்றவர்களும் பார்க்க பார்க்க, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி ஏற்றப்பட்டதை கண்டித்து, அந்தத் தொண்டன் அரிவாளால் வெட்டப்பட்டது, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இல்லை. அதுபோன்ற அவலநிலையிலே ஆட்சி நடத்தியவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியைப் பற்றி பட்டியல் கொடுப்பது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, 30–1–1973-ல் திண்டுக்கல்லில் திராவிட முன்னேற்றக் கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. நகர செயலாளர் பேசுகிறார். அங்கே இருக்கிற அதிகாரிகள், பெருமக்கள், காவல்துறை அதிகாரிகளை எல்லாம் மாற்றினால் நான் தாங்கள் தேர்தலைச் சந்திக்க முடியுமென்று அந்தக் கூட்டத்திலே பேசுகிறார்கள். அப்படி பேசிய ஒரு வாரக்காலத்தில் எஸ்.பி.யாக இருக்கிற வாசுதேவன் மாற்றப்படுகிறார். டி.எஸ்.பியாக இருக்கிற பால்ராஜ் மாற்றப்படுகிறார். சோழவந்தான் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாற்றப்படுகிறார். திண்டுக்கல், நிலக்கோட்டை ஆகிய அந்தப் பகுதிகளில் இருக்கிற சப்-இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் மாற்றப்படுகிறார்கள். அண்ணா தி.மு.க. ஆட்சியில் அதுபோன்ற கொடுமைகள் உண்டா? இல்லை. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போளூர் கே. ஜே. சுப்பிரமணியன் அவர்கள் ஒரு தவறான காரியத்தில் இறங்கிவிட்டார் என்ற காரணத்திற்காக, அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்றும், தங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதைக் கூட கருதாமல் அன்றைக்கு காவல்துறை அவரை கைது செய்தது. அவர்கள் ஜாமீனில் வந்தார்கள். அதுபோல நேர்மையான ஆட்சி தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. தி.மு.க.



ஆட்சியில் போலீஸ் துறை எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்தது. முடுக்கிவிடப்பட்ட பொம்மைகளாக, கீ கொடுத்தால் ஆடுகிற பொம்மைகளாக அன்றைய அமைச்சர்கள் பின்னாலே போலீஸ் துறை ஓடோடிக் கொண்டிருந்ததே, அந்த நிலை மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் இல்லை. இது நேர்மையான ஆட்சி. புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்.

ஆனால் இப்போது பேசுகிறார்கள். ஏதோ கேஸ் போடுகிறார்கள், அவைகள் காலதாமதம் ஆகின்றன என்று சொல்கிறார்கள். அப்போதெல்லாம் இதுபோன்று அன்றைய ஆட்சியாளர்களிடம் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் சொன்னால் என்ன பதில் சொல்வார்கள் என்றால் இன்வெஸ்டிகேஷன் நடக்கிறது என்று ஆங்கிலத்தில் பதில் சொல்வார்கள். இப்போது காலதாமதம் ஆகிறது என்று சொல்கிறோம். எனவே அந்த வகையில் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் மக்கள் பாதுகாப்போடு இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–00)

இன்னுமொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே கற்பழிப்புப் பற்றி பேசினார்கள். நான் இந்தக் கற்பழிப்புச் சம்பவத்தைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1974-லே ஜெயங்கொண்டம் என்ற தொகுதியைச் சேர்ந்த சின்னசாமி என்பவர் மீது பொய் வழக்கு போடப்பட்டது. ஜெயங்கொண்டம் சின்னசாமி கற்பழித்ததாக ஒரு பொய் வழக்கு தொடரப்பட்டது. இதனுடைய உண்மை நிலை என்ன? ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினரை தி.மு.க. விலே இருந்து நீக்கிவிட்டார்கள். ஆகவே அந்த நேரத்திலே கற்பழிப்பு கேஸிலே சம்பந்தப்பட்டவர் வேறு ஒருவர். தி.மு. கழகத்திலேயிருந்து ஜெயங்கொண்டத்தைச் சேர்ந்த சின்னசாமி வெளியேற்றப்பட்டார் என்ற உடனே, 6 மாதம் கழித்து, போடப்பட்ட எப்.ஐ.ஆர்-லே சின்னசாமி பெயர் இடம் பெறுகிறது. அப்படிப்பட்ட பொய் வழக்கு போட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு அதைப் பற்றிப் பேசுவது எப்படி நியாயமாகும். ஆனாலும் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது மாமன்றம், இந்த மாமன்றத்திலே சொல்லக்கூடாத ஒன்று. அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் மன்றத்திலே சொல்லக்கூடாது என்று ஒன்று சொல்கிறீர்கள். சொல்லக்கூடாத ஒன்றை எப்படி நீங்கள் சொல்ல முடியும்? அப்படிச் சொன்னால் நான் நீக்கும்படி ஆகும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : அதை நான் சொல்லவில்லை. ஆனால் பொது மேடையிலே பேசுகிறபோது, இந்தக் காவல் துறையைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்றால், 'சிவன் கழுத்திலே இருக்கிற பாம்பு, என்று சொல்லுகிறார்கள். நான் எப்படி எடுத்துக் கொள்கிறேன் என்றால், புரட்சித் தலைவர் அவர்கள் அமைச்சரவையிலே உயர்ந்தவர், முதல்வர், கடவுள் மீது எனக்கு நம்பிக்கையில்லை, இருந்தாலும் சொல்கிறேன். கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்காகச் சொல்கிறேன். கடவுள்களிலே மிகவும் முதன்மையானவனாகக் கருதப்படுவது, ஈசன்தான். இது ஆஸ்திகர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. எனவே இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களிலே முதன்மையாக இருப்பவர் புரட்சித் தலைவர். அந்த புரட்சித் தலைவர் இலாக்காத்தான் இந்தக் காவல்துறை. எனவே இதைத்தான் சொல்லவேண்டுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அவர்களிடத்திலே அந்த இலாக்கா இருக்கிறது. எனவே அவர்களிடத்திலே அந்த இலாக்கா இருப்பதால், இது மிகவும் மோசமானது, அல்லது யாரையும் மதிப்பதில்லை என்று சொல்வது தவறு. எங்கள் பகுதியிலே ஒரு கதை சொல்வார்கள். ஒரு முனிவர் ஒருவர் இருந்தாராம். அந்த முனிவரிடத்திலே பாம்பு ஒன்று வந்து, ஐயா, நான் எங்கே போனாலும் என்னை அடிக்கிறார்கள், நான் கொத்துகிறேன் என்று சொல்கிறார்கள் என்று சொன்னதாம். உடனே அந்த முனிவர் சொன்னாராம், அப்படியானால் நீ, கொஞ்சம் அமைதியாக இரு, கடிக்காதே, அமைதியாக இரு என்று சொன்னாராம் அந்தச் சாமியார். உடனே பாம்பு போய் விட்டது. அப்படி போன பாம்பு 10 நாட்கள் கழித்து, மீண்டும் முனிவரிடம் வந்து சந்திக்கின்ற நேரத்தில் அதனுடைய உடல் முழுவதும் ரத்தமாக இருந்ததாம். உடனே சாமியார் அவர்கள் என்ன சொன்னார்களாம், என்ன இது உன்னுடைய உடம்பு முழுவதும் ரத்தம் சொட்டச் சொட்ட வந்து நிற்கிறாயே என்று கேட்டபோது, அந்தப் பாம்பு சொன்னதாம், நீங்கள் தான் கடிக்கவேண்டாம் என்று சொன்னீர்கள் என்று. உடனே சாமியார் சொன்னாராம், நான் கடிக்கவேண்டாம் என்று சொன்னேனே தவிர, சீற வேண்டாம் என்று சொல்லவில்லை என்றதும், பாம்பு அதை நான் கவனிக்கவில்லை என்று சொன்னதாம்.





இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால், காவல்துறை என்று ஒன்று இருந்தால், அது கொஞ்சம் படம் எடுக்கத்தான் செய்யும். படம் எடுத்து ஆடினால்தான் கொஞ்சம் பாதுகாப்பு இருக்கும். பாம்பு படம் எடுத்து ஆடவில்லை என்றும் சொன்னால், பொது மக்களுடைய நிலை என்ன ஆகும், ரத்தம் சொட்டச் சொட்ட வந்த பாம்பினுடைய கதைபோல் ஆகும் எனவே போலிஸ் இலாக்காவை பொறுத்தவரையில், அது கடிக்காது, புரட்சித் தலைவர் ஆட்சியில் அது படம் எடுத்து ஆடத்தான் செய்யும் என்பதைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : துணைத் தலைவர் அவர்களே, காவல்துறையை பாம்புக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள், இது உகந்தது அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உதாரணமாகத் தான் சொன்னார்.

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியம், தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேச அனுமதி தந்தமைக்காக நன்றி தெரிவித்து, ஜனதாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

காவல் துறையானது சட்டம் ஒழுங்கைக் காத்து, பொதுச் சொத்துக்களுக்கும், உயிருக்கும் உடமைக்கும், உரிமைக்கும் பாதுகாப்பாக இருந்து கொண்டு இருக்கிற அரசுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய ஒரு அமைப்பு என்று உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். இந்தக் காவல்துறைப் பணியிலே இருக்கிற சில அதிகாரிகள் அரசியல் மனப்பான்மை இல்லாமல் நடந்துகொள்ளவேண்டும். அதிலே அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு நடந்து கொள்கிற அதிகாரிகளும் இருக்கிறார்கள். அதைப்போல் நாட்டில் உள்ள மக்களை எல்லாம் நாம் அடிப்பதற்காகத்தான் இருக்கிறோம் என்ற மனப்பான்மையில் இருக்கிற அதிகாரிகளும் இருக்கிறார்கள். அதைப்போலவே அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களின் அச்சுறுத்தலுக்கும், பயமுறுத்தலுக்கும் பணிந்து தங்களுடைய பணியைச் செம்மையாக நடத்தாமல், அவர்கள் சொல்கிற காரியத்தை நிறைவேற்றுகிற அதிகாரிகளும் இருக்கிறார்கள். இந்த அமைப்புக்கு 57 ஆயிரம் போலீசார்கள் இருப்பதாக உங்கள் கணக்கிலே சொல்லப்பட்டு இருக்கிறது.

இந்த 57 ஆயிரம் என்பது மிகவும் குறைவான ஒன்று. சத்துணவு போடும் திட்டத்திற்காகக் கூட்டு லட்சக்கணக்கான பேர்களை நாம் வேலைக்கு வைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் நாட்டில் உள்துறை விவகாரத்தில் ஈடுபட்டு இருக்கிற காவலர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. 1980-லே யிருந்து இதுவரையிலும் சரியான தேர்வு முறைகள் நடை பெறவில்லை என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தகராறுகள் வரும்போது போலீஸ்காரர்கள் குறைவாக இருப்பதால் உடனே நடவடிக்கை எடுக்க முடியவில்லை. தகராறுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கிற இடத்திற்கு போலீசார் வந்தால் அவர்களே ஓடி ஒளிந்து கொள்ளும் சூழ்நிலை இருக்கிறது. எல்லாம் முடிந்த பிறகு என்ன நடந்தது என்று வந்து பார்க்கிற சூழ்நிலை பலயிடங்களில் ஏற்பட்டு இருக்கிறது.

அதேபோல் காமராஜ் மாவட்டம் கள்ளன்குளத்தில் 2 தினங்களுக்கு முன்னால் போலீஸ் துப்பாக்கி சூடு நடந்து இருவர் இறந்து இருக்கிறார்கள். ஒருவர் பெயர் ராமன், வயது 50, இன்னொருவர் முனி அம்மாள் வயது 45. இன்னும் மருத்துவ மனையில் இருக்கக்கூடியவர்களில் சிலருடைய நிலை இறந்து போகக்கூடிய நிலையாக இருக்கிறது என்று நான் அறிகிறேன். இந்த போலீஸ் துப்பாக்கிச் சூடு என்பது மிகவும் அத்துமீறிய செயல் ஆகும். ஏன் என்றால் அவர்கள் கொடுத்து இருக்கிற புகாரை பார்க்கும்போது திருட்டு பம்பு செட்டு மோட்டார் திருடி விட்டார்கள். பிடிப்பதற்கு சென்றதாக இருக்கிறது. அதிகாலை 4 மணிக்கு அந்த ஊரை வளைத்து இருக்கிறார்கள். ஒரு சாதாரண திருட்டு குற்றத்தில் பிடிப்பதற்காக 4 சரகத்தைச் சேர்ந்த காரியாபெட்டி, அருப்புக்கோட்டை, பந்தல்குடி, திருச்சுழி இன்ஸ்பெக்டர்கள் சென்று இருக்கிறார்கள். 30-க்கு மேற்பட்ட காவலர்கள் சென்று இருக்கிறார்கள். அங்கே இருந்த மக்கள் எல்லாம் இவர்களை எதிர்த்து இருக்கிறார்கள். என்ன காரணம். உண்மையிலே இவர்கள் பிடிக்கப்போன உண்மையான குற்றவாளி அங்கே இல்லாமல் இருந்ததால்தான் அந்த ஊர் மக்களே திருப்பி அவர்களை எதிர்த்து இருக்கிறார்கள். அப்படி உண்மையான குற்றவாளி இருந்து இருந்தால் ஊர் மக்கள் திருப்பி இவர்களை எதிர்த்து இருக்க மாட்டார்கள். அதிலே சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அங்கே இல்லை என்பதையும், குற்றமே அங்கே நடைபெற வில்லை என்றும் தெரிகிறது. அதிகாலை 4 மணிக்கு அங்கு





சென்று அந்த ஊரை மிரட்டுவது என்பதால்தான் தகராறு ஏற்பட்டு இருக்கிறது. அந்த தகராறிலே பல பேர் சுடப்பட்டு இறந்து இருக்கிறார்கள். இதற்கு நீங்கள் நீதி விசாரணை வைக்க வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன். இது எங்கள் மாவட்டம், காமராஜ் மாவட்டத்தில் நடந்து இருக்கின்ற போலீஸ் அத்துமீறல்.

அது போலவே இன்றைக்கு பத்திரிகை செய்தியைப் பார்த்தோம். சென்னை பஸ் நிலையத்தில் துணிகரம் வியாபாரியிடம் 3 லட்ச ரூபாய் கொள்ளை. 2 போலீஸ் உட்பட 4 பேர் ஸிக்கு என்று போட்டு இருக்கிறார்கள். போலீசாரே திருடுவதற்கு, வழிப்பறி செய்வதற்கு உடந்தையாக இருந்து, கூடவே இருந்து அவரிடம் கொள்ளை அடித்துக்கொண்டு பணத்தை பிளஷரில் சென்றார்கள் என்று பத்திரிகையில் வந்து இருக்கிறது. இதை எல்லாம் பார்க்கும்போது காவல் துறையினுடைய அதிகாரிகள் செம்மையாக செயல்படவில்லை என்று தெரிகிறது.

இந்த நாட்டில் காவல் துறையே களவுகளுக்கு உடந்தையாக இருக்கிறது என்று எல்லாம் தெரிகிறது. அதுபோலவே காவல் துறையைப் பற்றி சொல்லும்போது காவலர்களுக்கு சரியான சம்பளம் அதிகமான அளவில் கொடுக்கலாம், படி அதிகமான அளவில் கொடுக்கலாம். அதைப்பற்றி கவலை இல்லை. ஆனால் முறையாக, செம்மையாக இந்த நாட்டில் இருக்கக்கூடிய பொது மக்களின் உயிருக்கும், உடமைக்கும் சொத்துக்கும் பாதுகாப்பாக இருப்பது அவர்களுடைய பொறுப்பு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

காமராஜ் மாவட்டத்தின் தலைநகராக விருதுநகர் வந்து இருக்கிறது. அங்கே ரிசர்வ் போலீஸ் வராமல் இருக்கிறது. ஆபீஸ் கட்டாமல் இருக்கிறது. எப்படியும் ரிசர்வ் லைன் வேண்டும். குறைந்தது 40 ஏக்கர் இடம் வேண்டும் என்று அங்கே உள்ள பெரிய அதிகாரிகளை கேட்கும்போது சொன்னார்கள். 40 ஏக்கர் ஒதுக்கி ரிசர்வ் லைன் உண்டாக்கினால் தான் விசில் ஊதிய உடன் அவர்கள் வருவதற்கு தயாராக இருப்பார்கள் என்று அங்கே சொல்கிறார்கள்.

அதுபோல அங்கே பஜார் போலீஸ் ஸ்டேஷன், ரூரல் போலீஸ் ஸ்டேஷன் என்று அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பெயர் அளவில் தான் அவைகள் இருக்கின்றனவே தவிர அதற்கான அதிகாரிகள் இல்லை. மேற்கு விருதுநகரில் போலீஸ் ஸ்டேஷனில்

உள்ள ஒருவரும், கிழக்கு போலீஸ் ஸ்டேஷனில் உள்ள ஒருவரும் அந்தப் பணிகளை கவனித்துக்கொள்கிறார்கள். பெயர் தான் இருக்கிறதே ஒழிய ஆட்கள் இல்லை. 4 போலீஸ் ஸ்டேஷன் என்று பெயர் அளவில் தான் இருக்கிறதே ஒழிய உண்மையில் 2 போலீஸ் ஸ்டேஷன்கள் தான் இருக்கின்றன.

அதுபோல் பெண் எஸ். ஐ. யும், 10 கான்ஸ்டேபிள்களும் ரிசர்வில் தனியாக இருக்கிறார்கள். ஒரு கட்டிடம் போலீஸ் ஸ்டேஷனோடு சேர்த்து கட்ட வேண்டும். கட்டாமல் இருக்கிறது.

அதே போல் இன்னும் பல போலீஸ்காரர்கள் அரசினுடைய அந்த வீடுகள் அங்கே கொடுக்கப்படாமல் இருக்கிறார்கள். பல போலீஸ்காரர் தனித் தனியாக வெவ்வேறு இடங்களில் இருப்பதால் காரியங்களை காவல் துறையினர் செம்மையாக செய்ய முடியாமல் இருக்கிறது.

காமராஜ் மாவட்டத்தின் தலைநகரமாக விருதுநகர் வந்து இருப்பதால் அங்கே ஒரு மத்திய சிறைச்சாலை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதாவது ஒரு வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்டவரை வெளியே கொண்டு வர அவருக்கு ஜாமீன் கொடுக்கும்போது அந்த சம்பந்தப்பட்ட எஸ்.ஐ. ஒப்புதல் அளிக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. இது ஒரு நியாயம் இல்லாத சட்டம். கைது செய்தவரே எப்படி ஜாமீன் கொடுப்பதற்கு ஒப்புதல் அளிக்க முடியும் என்பது தெரியவில்லை. அப்படி ஒப்புதல் வாங்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே அந்தச் சட்டத்தை தளர்த்தி கைது செய்த எஸ். ஐ. தான் அதற்கு ஜாமீன் கொடுப்பதற்கு ஒப்புதல் கொடுக்கவேண்டும் என்ற சட்டத்தை தளர்த்தி நியாயமான முறையான ஜாமீன் கொடுத்தால் அவர்கள் விடுதலை செய்வதற்கு—கேஸ் இருப்பது பற்றி பரவாயில்லை — சம்பந்தப்பட்ட எஸ். ஐ. தான் அதற்கு ஒப்புதல் கொடுக்கவேண்டும் என்று சொல்வது முறையாக இல்லை.

(பிற்பகல் 1-10)

ஆகவே, அதைத் தளர்த்தவேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப் போல காவல்துறையின் அத்துமீறல்களைப் பற்றிய பல செய்திகள் மாநிலம் முழுவதும் இருந்து வந்து கொண்டிருக்கின்றன. அதில் முக்கியமாக, சேலத்திலுள்ள எருமைபாளையத்



திலே இருந்து இங்கே வந்திருக்கிற புகாரிலே, கள்ளச்சாராய ஒழிப்பு என்ற முறையிலே சாரயக்கடை நடத்துபவர்கள், மப்டி உடையிலே போலீஸாரையும் சேர்த்துக் கொண்டு ஊர் பொது மக்களை தொந்தரவு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் செய்தி சில பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது.

சேத்தூரிலே சண்முகவேலு என்பவர் ஒரு புகார் கொடுத்து இருக்கிறார். பஸ் விபத்து நடந்து ஒருவர் இறந்து போனார். இறந்தவர் மூன்று மணி நேரம் அந்த ரோட்டிலே கிடந்தும் கூட, போலீசார் வந்து பார்க்கவில்லை. பிறகு போலீசார் வந்து பார்க்கும்போது, அந்த மக்கள் பஸ்ஸைச் செல்லவிடாமல் மறித்து இருக்கிறார்கள். அந்தக் காரணத்தால் ஏறத்தாழ 56 பேர் மீது வழக்குகள் போட்டு, அந்த வழக்குகளுக்காக, 50 பேர், 100 பேர் என்று அலைந்து கொண்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

போலீசார் ஒரு விபத்து நடந்தால் உடனடியாக ஸ்தலத்திற்கு செல்லவேண்டும். அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டும் கூட, 3 மணி நேரம் ஆகியும் வராத காரணத்தால், பொது மக்கள் கூட்டமாக நின்று அவர்களுடைய சிரமங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு பல வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏற்கனவே நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக கொடுத்திருக்கிறேன். இன்னும் அது எடுத்துக்கொள்ளப்பெறவில்லை. எனவே, இதனை உங்களின் கவனத்திற்குகொண்டு வருகிறேன்.

அதைப் போல, ராதாபுரம் தாலுகா, துலக்கப்பட்டி கிராமம். அங்கு 37 பேர்களை அக்னி திராவகம் வீசி ஒரு பெரிய கொடுமையைச் செய்திருக்கிறார்கள். அங்குள்ள சிலர் சேர்ந்து கொண்டு, மிகவும் வசதி படைத்தவர்களாகவும் இருப்பதால் அவர்களை எதுவும் செய்ய முடியவில்லை என்றும், மியாகான் என்பவர் அந்தச் செய்தியைச் சொல்லியிருக்கிறார்.

37 நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்துவிட்டு அவர்கள் வந்தும், வேலைக்குச் சேரமுடியாத நிலையில் இருக்கிறார்கள். காவல் துறை இன்னும் சம்பந்தப்பட்டவர்கள் மீது கேஸ் போடவில்லை என்றும், அவர்கள் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் என்றும் சொல்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் பார்த்து ஆவன செய்யவேண்டும்.

சாத்தூரிலே முன்னாள் நகர காங்கிரஸ் தலைவர் கருப்பசாமி என்பவர் சொல்லியிருக்கிறார்—'' என்னுடைய வீட்டிலிருந்து சாமான்களை வெளியிலே போட்டு, என்னை வெளியே போகச் சொல்கிறார்கள். முறையாக, நான் வழக்கு மன்றத்திலே தாவா பண்ணி முறையாக என்னுடைய வீட்டை எனக்காக ஏற்படுத்திக் கொண்டும். அங்குள்ள அண்ணா தி.மு.க. வினர் என்று சில பெயர்களை எல்லாம் கொடுத்திருக்கிறார். அவர் தக்காரராகவும் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார். அண்ணா தி. மு. க. செயலாளர் ரங்கசாமி என்பவர் அதுபோல் செய்வதாகச் சொல்லி யிருக்கிறார். இதிலும் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வில்லிவாக்கத்திலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. அங்குள்ள முனுசாமி ஆச்சாரி என்பவர் அந்தச் செய்தியைக் கொடுத்திருக்கிறார். அங்குள்ள ஜனதா கட்சியும் அதைக் கொடுத்திருக்கிறது. என்ன சிரமங்கள் என்றால், அங்குள்ள ஒரு வீட்டில் காலி செய்யச் சொல்லி அவரை இம்சிப்பதாகவும், அந்த வீட்டுக்காரர்கள் அந்த வீடு அவருக்குத்தான் உரிமை என்றும், அதைத் தட்டிக் கேட்க முடியாமல் இருக்கிறது என்றும் போலீசார் அவருக்கு ஆதரவாக இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்.

அதே போல், சிவகாசியிலே நகரத்தில், பெரியகுளம் காலனியிலே சேட் ஒருவருடைய வீட்டிலே திருட்டு நடந்திருக்கிறது. 30 பவுன் நகைகள். ½ லட்ச ரூபாய் பெறுமானமுள்ள சொத்து களவு போயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

விருதுநகர் தொகுதியிலே, எம். புதுப்பட்டி கிராமம் இருக்கிறது. அங்கு உள்ள எஸ்.ஐ., அங்குள்ள மறவர் குல மக்களை முறையாக வாழவிடாமல் இடைஞ்சல் செய்கிறார் என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். எவன் வந்தாலும் வாழவிடமாட்டேன் என்று சொல்வதாகவும் சொல்லி இருக்கிறார்கள். எஸ்.ஐ. யினுடைய பெயர் வாசுதேவன் என்று அவர்கள் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவர் மறவர் குல மக்களை அச்சுறுத்துவதாக சொல்லியிருக்கிறார்கள்.

அதைப் போல, காமராஜர் மாவட்ட விருதுநகரிலே உள்ள தேசிய சங்கத்திலிருந்து ஒரு புகார் வந்திருக்கிறது. அங்கிருக்கிற அதிகாரிகள், மிரட்டி, புகாரைப் பெறாமல், சட்ட விரோதமாக ஸ்டேஷனில் வைத்துக் கொண்டார்கள் என்று எல்லாம் தகவல் கொடுத்து இருக்கிறார்கள்.



அதே போல், விருதுநகரிலே உள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்-இலிருந்து ஒரு புகார் வந்திருக்கிறது. அந்தப் புகா ரிலே, திருட்டு வழக்கிலே சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் போலீ சார் பிடிப்பது இல்லை என்றும், அங்குள்ள அரசியல் செல்வாக்கு பெற்றவர்களுடைய தலையீட்டினால், அந்தக் காரியம் நடக்கா மல் உள்ளது என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

அதே போல், தெற்கு வாசல் வியாபாரிகள் சங்கத்திடமிருந்து வியாபாரிகள் ஒரு புகார் கொடுத்திருகிறார்கள்.

அந்தப் புகாரிலே,

** **

என்றெல்லாம் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள்

** **

அதை அவர்கள் எந்த ஆதாரத்தோடு சொல்கிறார்கள் ? இதற்கு அவர்கள் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) உறுப்பினர்கள் பொறுப்புள்ள அமைச்சர்மீது ஆதாரம் இல்லாமல் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

திரு. எ, எஸ். ஏ. ஆறுமுகம். ஆதாரம் இருக்கிறது இதோ:

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே ''துக்ளக்'' பத்திரிகையில் வருவதெல்லாம்தான் ஆதாரமா? அதிலே வருவதையெல்லாம் ஆதாரமாக ஏற்றுகொள்கிறீர்களா?

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : பத்திரிகை செய்திகளை அடிப்படையாக வைத்து தயவுசெய்து சொல்லாதீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே இருக்கின்ற அமைச்சர்களைப்பற்றியோ அல்லது உறுப்பினர்களைப்பற்றியோ குற்றங்குறைகளைக் கூறக் கூடாது என்பது அல்ல. ஆனால் கூறுவதற்கு முன்பாக இந்தக் குற்றச்சாட்டை இந்த உறுப்பினர் மீது அல்லது இந்த அமைச்சரின்மீது கூறுகிறேன் என்று பேரவைத் தலைவருக்கு எழுதித் தர வேண்டும். பேரவைத் தலைவரவர்கள், அந்தக் குற்றச்சாட்டிற்கு உள்ளானவர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து அதற்கேற்ப பதிலோடு அவர்கள் வரத் தயாராக இருக்கும் பொழுது, பேரவைத் தலைவரவர்கள் அனுமதிக்கின்ற வகையில் உறுப்பினர் குற்றச்சாட்டை எழுப்பலாம். அப்பொழுது, அதற்கு உரிய உறுப்பினரோ அல்லது அமைச்சரோ தக்க பதில் அளிப்பதற்கு ஏற்றவர்களாக அமைவார்கள். எனவே, அந்த முறையைக் கையாளலாம். குற்றச்சாட்டே சொல்லக்கூடாது என்பது அல்ல. அதை முறையோடு சொல்ல வேண்டுமென்பதுதான். அதற்கான வாய்ப்பைக் கொடுத்துவிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இதை எடுத்துச் சொல்ல வேண்டுமானாலும் சொல்லலாம். இப்பொழுதே சொல்ல வேண்டும் என்பது அல்ல.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரைப் பற்றிக் கூறிய அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தீர்ப்பின்மீது விளக்கம் கேட்கக் கூடாது; விவாதமும் கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு போலீஸ் ஸ்டேஷனில் உள்ள ஒரு டயரியில் ஒரு எஸ்.ஐ.யோ அல்லது கான்ஸ்டபிளோ எழுதுகிறார்கள். அந்த டயரியில் உள்ள ரிப்போர்ட்டில் இப்படி எழுதப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றால் விசாரணை வைத்து வாங்கிப்பாருங்கள், விசாரணை செய்யுங்கள், அதில் அமைச்சர்மீது சொல்லப்பட்ட



வாசகம் பதிவாகியிருக்கிறது என்றுதான் உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். இல்லையென்றால் அதை அரசாங்கத்தின் சார்பில் வேண்டுமானால் மறுக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; அப்படியே இருந்தால்கூட, அடிக்கடி, நேச்சர் ஆப் ஜஸ்டிஸ் என்பார்களே, அது இல்லாமல், அவர்களாகவே எழுதிக் கொள்வது, அதை பேஸ் பண்ணிச் சொல்ல முடியாது. அதற்கு இவர் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. பத்திரிகைச் செய்தியை வைத்து உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் அதை மறுத்து விட்டார்கள். இங்கு கடைப்பிடிக்கப்படுகின்ற மரபு, சொல்லப்பட்ட குற்றச்சாட்டை அமைச்சர் மறுத்துவிட்டால் அதைத்தான் நாம் நம்ப வேண்டும் ; உறுப்பினர் குற்றச்சாட்டைச் சொன்னார். இல்லை என்று அமைச்சர் மறுக்கிறார். அதைத்தான் இந்தச்சபை நம்ப வேண்டும். அதுதான் தொடர்ந்து இங்கே கடைப்பிடிக்கப் பட்டு வருகின்ற மறபாகும்.

திரு. எ. எஸ் எ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியிருப்பது, அரசாங்கத்தின் காவல் துறை....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மறுபடியும் அதையே பேச வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்த ரூலின்கீழ் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப விரும்புகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினரவர்களே நன்றாகப் பேசுகிறார். எனவே, அவருக்கு நீங்கள் வக்காலத்து வாங்க வேண்டாம். (குறுக்கீடு) கோர்ட்டில் வேண்டுமானால் வக்காலத்துக்குப் போகலாம். இது சட்டசபை.

திரு. அ. ரகுமான்கான்: ஒரு விளக்கத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். போலீஸ் டயரியில் இப்படி இருக்கிறது என்று சபையில் ரெஃபர் செய்யலாமா, கூடாதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போலீஸ் டயரியையே காண்பித்து பேசலாம். ஆனால் உறுப்பினரவர்கள் அப்படி இருக்கிறது என்றுதான் சொல்கிறார் (குறுக்கீடு).

[பேரவைத் துணைத் தலைவர்] [1985 ஜூலை 8

(பிற்பகல் 1-20)

நீங்கள் பத்திரிகையிலே வந்ததைப் பற்றி சொல்கிறீர்கள். பத்திரிகையிலே வந்ததை ரெபர் பண்ணி பேசக் கூடாது. விதிகளின்படி பார்த்தாலுங்கூட அந்தப் பத்திரிகையை என்னிடம் காண்பித்து அனுமதி வாங்கியிருக்க வேண்டும். அப்படியில்லாமல், பத்திரிகையைப் படிப்பது சரியல்ல.

திரு. அ. ரகுமான்கான் : சார், வால்யூம் நம்பர் அதிலே இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வால்யூம் நெம்பர் இருக்கலாம். நெம்பர் இருக்கலாம். மற்றவைகள் இருக்கலாம். அவை சரியாக இருக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : சரியாக இருக்கிறதா, இல்லையா என்று உங்களைக் கேட்கிறோம். போலீஸ் டயரி இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போலீஸ் டயரி இருக்கிறது என்பதெல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கிறதே தவிர, அது இருக்கிறதா, இல்லையா என்பதை ஆராய வேண்டும். ஒரு உறுப்பினரையோ அல்லது அமைச்சரையோ குற்றச்சாட்டுவது என்றால், மாண்புமிகு பேரவைத் தலைவருக்குச் சொல்லிவிட்டு, செய்வதன் மூலம், அதற்குப் பதில் சொல்கிறவர், தன்னை ஆயப்படுத்திக் கொண்டு பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற முறையிலேதான் அந்தக் குற்றச்சாட்டை சொல்ல வேண்டுமென்று சொல்கிறோமே தவிர, பொதுவாக நிர்வாகத்தைப் பற்றியோ, நிர்வாகத் தன்மைகளைப் பற்றியோ, குறைகளை, குற்றங்களை எடுத்துக் கூறுவதுபற்றி ஆட்சேபணை இல்லை. ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்கின்ற பொழுதுதான் இந்த பிரச்னை வருகிறது. ஏற்கனவே பேரவைத் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு முறையை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அது கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

திரு. எ. எஸ். எஸ். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் சொன்னதை ஏற்றுக்கொண்டாலும் கூட அதை விசாரிக்க வேண்டியது மாண்புமிகு முன்னவர் அவர்களுடைய கடமை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்; அது சரியாக இருந்தால் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூலை 8]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. மா. சின்னராசு: அது பொய்யாக இருக்குமானால் அதை விளரம்பரப்படுத்திய அந்தப் பத்திரிகை மீதும், அதை மேலும் சட்டசபையிலே விளம்பரப்படுத்தியவர் மீதும் இங்கே என்ன நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து என்ன மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களோ அந்த மாதிரி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்: அதைப் போலவே, ** **

காரியமாக இருப்பதாலே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்ன மாதிரி..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிலே இருக்கிற விவகாரங்களை உள்ளே விவாதிக்க ஆரம்பித்தால் அது முடியாது. நீங்கள் எந்த அமைச்சரைப் பற்றியாவது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால், முன்னாலேயே நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. நீங்கள் கடைசியாக சொன்னது அவைக் குறிப்பிலே இருக்கக்கூடாது. அதை நீக்கி விடுகிறேன்.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் : அதைப் போலவே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்படி ஒவ்வொன்றாக சொல்லிக் கொண்டே போனால் நல்லதல்ல. இப்படி போனால், 1947-லே இருந்து இருந்தவர்கள் பற்றியெல்லாம் நடவடிக்கை எடுக்கவேண்டும், ஆகவே, அது வேண்டாம். அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் : போலீஸ் துறையிலே அரசியல்வாதிகள் தலையிடுகிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்கிற முறை இருக்கிறது. அந்த மாதிரி வேண்டாம். பொதுக் கூட்டங்களில் பேசுவதை இங்கே வந்து விவாதிக்க முடியாது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு எ.எஸ்.எ. ஆறுமுகம் : பத்திரிகையிலே வந்திருகிறது. அதைத் தான் சொன்னேன்.

அடுத்து, தீயணைப்புத் துறையைப் பற்றி சில வார்த்தைகள். 131 தீயணைப்பு நிலையங்கள்தானிருக்கின்றன என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே 234 தொகுதிகள் இருக்கின்றன. ஒரு தொகுதிக்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல நேரங்களிலே அதிலே பணியில் இருப்பவர்கள் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்னும் அதிகமான பேர்களை அந்தப் பணியிலே அமர்த்த வேண்டும்.

அதேபோல், விபத்துக்கள் ஏற்படுகின்றபொழுது, ஸ்நோர் கோல் என்று சொல்லப்படுகின்ற கருவி, சென்னையில் மட்டும் ஒன்றே ஒன்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. விபத்து நடைபெறும் நேரங்களில், சாமான்களை அகற்றுவதற்கு இன்னும் பல ஊர்களில் அதை நிறுவ வேண்டும்.

எல்லாம் எரிந்து முடிந்த பிறகு சில நேரங்களிலே வாகனங்கள் வரும்போது, தண்ணீர் நிரப்ப முடியாத நிலையிருக்கிறது. அதனாலே, எல்லாம் எரிந்துவிடுகின்றன. அதையெல்லாம் கவனிக்கவேண்டுமென்று கேட்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு மறுபடியும் நன்றி தெரிவித்து அமர்கிறேன், நன்றி , வணக்கம்.

*திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே இன்று கொண்டுவரப்பட்டுள்ள தமிழ்நாடு காவல் துறை, தமிழ்நாடு தீ அணைப்புத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைக்கூற வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

5—7—1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே பேசும்போது நம்முடைய சமுதாய வாழ்வுக்கு போலீஸ் துறை திறமையானதாக இருக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் யாரும் தலையிட்டு தங்களுக்கு சாதகமாக திருப்பக்கூடாது என்றும் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



அண்ணா அவர்களுடைய அந்தக் கொள்கையைத்தான் இன்னும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கடைபிடித்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அரசு போலீசில் திறமையானவர்களை அமர்த்தி , உரிய இடத்தில் அவர்களை அமர்த்தி, அவர்களை பணிகளிலே செவ்வனே செயல்பட்டு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. அவர்களுக்கு பல வசதிகளைச் செய்து தந்திருக்கிறது. திறமையாகச் செயல்படுகின்ற, இந்த போலீஸ் நிர்வாகத்திலே யாரும் தலையிடக் கூடாது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் நிர்வாகம் நல்லமுறையிலே நடைபெற்று வந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் நீண்ட தொரு பட்டியலை, நியூஸ்பேப்பர் வாயிலாக வந்த செய்திகளை, வரிசையாகப் படித்துச் சொல்லி விட்டார்கள். ஆனால் அந்த நீண்ட பட்டியல் செய்தித் தாள்களில் வந்த குறிப்புகளே தவிர, அவர்கள் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது என்றோ, கிரைம் நம்பர் இது என்றோ சொல்லவில்லை. எந்த எந்த வழக்குக்கு எஃப்.ஐ.ஆர். போடப்பட்டது, அதற்கான கிரைம் நம்பர் என்ன, சார்ஜ் ஷீட் போடப்பட்ட வழக்குகள் என்ன. எந்த வழக்கிலே எஃப். ஐ.ஆர். போடவில்லை, சார்ஜ் ஷீட் போடவில்லை என்பதை எல்லாம் சுட்டிக்காட்டியிருந்தால் போலீஸ் நிர்வாகத்திலே இருக்கிற மேலதிகாரிகளுக்கு அதுபற்றி தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு இருந்திருக்கும். அவ்வாறு அந்த வாய்ப்பை நல்காமல் நியூஸ் பேப்பர் வாயிலாக வந்த செய்திகளை வைத்து இந்த மன்றத்தில் வேகமாகப் பேசி, மக்களை ஏமாற்றும் அளவுக்கு அவர்களை திசை திருப்பும் அளவுக்கு சொல்லியிருக்கிறார்களே தவிர மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையில் எந்தச் செய்தியையும் குறிப்பிடவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவிற்கு மிகவும் தேவையாக உள்ளது 'டாக்டிஸ்', தந்திரம் என்று சொல்வார்கள். நமது போலீஸ் துறைக்கு சாமர்த்தியம் உண்டு, தந்திரமும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம் மாநிலத்தில் பணியாற்றும் போலீஸ் அதிகாரிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நம்மால் தெரிந்துகொள்ள முடியாது. அவர்களிடம் காங்கிரஸ் நண்பர்கள் போய் பேசினால், அவர்கள் காங்கிரஸ்காரர்களோ என்று சொல்லத்தக்க அளவுக்குப் பேசி அனுப்பிவிடுவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவர்களிடம் பேசினால்

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களோ என்று ஐயுறும் அளவுக்கு பேசி அனுப்பிவிடுவார்கள். அண்ணா தி.மு.க. நண்பர்கள் அவர்களைச் சந்தித்துப் பேசினால் நம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் இந்த போலீஸ் அதிகாரிகள் என்று நம்பும் அளவுக்கு நம்மிடம் பேசி, காரியத்தை சாதித்து அனுப்பி விடுவார்கள்.

நான் இதைத் தெரிவிக்க காரணம் என்னவென்றால், அவ்வளவு 'டாக்டிஸ்', தந்திரம் அவர்களுக்கு இருக்கிறது. அதே நேரத்தில் மிகவும் புத்திசாலித்தனமாகவும் நடந்துகொள்கிறார்கள். அந்த வகையிலே தமிழ் நாட்டு போலீஸுக்கு ஈடோ இணையோ இந்தியாவில் கிடையாது என்பதைத் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் திருவண்ணாமலையில் ஒரு கொலை வழக்கு நடைபெற்றது. பாஸ்கரன் என்பவர் ஒரு வயதான மூதாட்டியை பார்பர் நைஃப் வைத்து கொலை செய்கிறார். அந்தப் பக்கத்தில் இருப்பவர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. போலீஸ் நாய் வரவழைக்கப்பட்டது. மோப்பம் பிடித்துவிட்டு, ஒரு கிணற்றை நோக்கிச் சென்று, அங்கே நின்று விட்டது. போலீஸ் அதிகாரிகள் புத்திசாலித்தனமாக அந்தக் கிணற்றில் ஏதோ இருக்கிறது என்று முடிவு செய்து, ஒருவரை கிணற்றில் மூழ்கிப் பார்க்கச் சொன்னார்கள். மூழ்கிப் பார்த்ததில் ஒரு கத்தி கிடைத்தது. அதை வைத்துக்கொண்டு, எல்லா சவரத் தொழிலாளர்களையும் வரவழைத்தார்கள். அவர்களை அழைத்து விசாரித்தபோது, ஒரே ஒரு சவரத் தொழிலாளி இது என்னுடைய கத்தி தான்; சுமார் 10, 15 நாட்களுக்கு முன்னால் என்னிடமிருந்து திருட்டுப்போய்விட்டது: பாஸ்கரன் என்பவர் திருடிச் சென்றிருக்கலாம் என்பது என்னுடைய சந்தேகம் என்று சொன்னார். பிறகு அந்த பாஸ்கரன் யார் என்று தேடிச் சென்றார்கள் போலீசார். பெங்களூருக்கு அருகிலே இருக்கிற ஒரு ஊரில் தேடினார்கள், அங்கே ஒரு கும்பல் இருந்தது. 10, 20 பேர்கள் அதிலே இருந்தார்கள். அவர்களில் யார் பாஸ்கரன் என்று தெரியவில்லை. பாஸ்கரன் யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு போலீஸ் நண்பர் தந்திரமாக 'பாஸ்கரா' என்று கூப்பிட்டார்.

உடனே அவர் திரும்பிப் பார்த்தார். இவர்தான் பாஸ்கரன் என்று தெரிந்து கொண்டு பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள். அவர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள் என்பதைச் சொல்லிக் கொள்வதற்காகத்தான் இதைச் சொன்னேனே தவிர அவர்களைப் புகழ்வதற்காக இந்தச் செய்தியைச் சொல்லவில்லை.



நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த காவல் துறையினர் மிகவும் சாமர்த்தியசாலிகள், புத்திசாலித்தனமானவர்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில்...............

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. மு. பாண்டுரங்கன் : 26—7—1984 அன்று திருவண்ணாமலையில் ஒரு இனக் கலவரம் அரிசனப் பெருங்குடி மக்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் நடந்தது. அந்தக் கலவரத்தில் சிறிய துப்பாக்கிச் சூடு கூட வந்தது. வானத்தை நோக்கிச் சுடப்பட்டது. அப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் செய்தி தெரிந்தவுடன் சென்னையிலே இருந்து வேகமாக திருவண்ணாமலைக்கு வந்து அந்தப் பிரச்சினையில் தலையிட்டு அரிசனப் பெருமக்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறியும், பின்னர் ஜாதி இந்துக்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறியும் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தி வைத்திருக்கிறார்கள். கொள்கைக் குறிப்பிலே கூட சொல்லப்பட்டிருக்கின்றது. அரசியல்வாதிகள் என்ன செய்ய வேண்டுமென்றால் போலீஸ் துறைக்கு உறு துணையாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் போலீஸுக்கு உறு துணையாக இருந்து இரு தரப்பினரையும் அழைத்து அவர்களுடன் பேசி சுமுகமான சூழ்நிலையினை உருவாக்கியிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் போலீஸ் துறை எந்த அளவுக்குச் சாமர்த்தியமாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது என்பதை நினைவுபடுத்துவதற்காகத்தான்.

மேலும் ஒரு செய்தியினைச் சொல்ல வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். வேலூரில் ஒரு வழிப்பறிக் கொள்ளை நடந்தது. அப்போது போலீஸ் நண்பர்கள் எல்லாம் மொழி தெரியாத இடத்திற்குச் சென்று, அதாவது பீகாருக்குச் சென்று குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது இந்தத் துறை எவ்வளவு சாமர்த்தியமாக இருக்கின்றது. அவர்கள் எல்லாம் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. மீண்டும் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

[திரு. மு. பாண்டுரங்கன்] [1985 ஜூலை 8

கலைஞர் அவர்கள் மீது இராமநாதபுரத்தில் உளி வீசப்பட்ட போது கூட போலீஸ் துறையிலிருந்து தனியாக ஒரு செக்யூரிட்டி ஆபீஸரை நியமிக்கிறோம் என்று புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள். எந்த நேரத்திலும் வேற்றுமை இல்லாத நிலையில் கட்சி பேதங்களை எல்லாம் மறந்து புரட்சித் தலைவர் அவர்களின் புனித அரசு செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். புரட்சித் தலைவர் அவர்களின் உள்ளம், தாயுள்ளம் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டேன். தாய் தான் பெற்ற சேய்களுக்குள் வேற்றுமை பாராட்ட மாட்டாள். அந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் புறநானூற்றில் வரும் தாயை ஒத்தவர்கள் ஆக இருக்கிறார்கள்.

பிறப்பு ஓரன்ன உடன்வயிற்றுள்ளும்
சிறப்பின்பாலால் தாயும் மனந்திரியும்

என்று புறநானூற்றில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது கல்விச் சிறப்பு காரணமாக ஒரு குடியில் பிறந்த பல மக்களில் யாராவது தனிச் சிறப்பாக வந்துவிட்டால் அந்த மகன்பால் தாயுள்ளம் கூட சிறப்பாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதைப் போன்று போலீஸ் துறையிலே அவர்களுக்குப் பெரிய மதிப்புண்டு; புரட்சித் தலைவர் அவர்கள் போலீஸ் துறைக்கு ஏதாவது செய்ததாக வேண்டும் என்ற எண்ணத்தின்பேரில் அந்தத் தாயாக இருந்து போலீஸ் துறைக்கு தனிக் கவனம் செலுத்தி வருகிறார்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனால் தான் பாதி விலைக்கு அரிசி, ரவை, மைதா, துவரை, எண்ணெய் போன்றவற்றை அந்த போலீஸ் நண்பர்களுக்கெல்லாம் கொடுத்துதவி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள நாங்கள் அதாவது எங்களது வழி காட்டியாக,இதய தெய்வமாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற நாங்கள் ஏதாவது சிறு தவறு செய்தால் கூட அவர்கள் எங்களைக் கண்டிக்கத் தவறுவதில்லை.

"அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்"

என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார்கள். அறத்தின் வழியில்லாமல் வேறு வழியில் ஏழ்மைத் தனத்தைக் கொண்டு உள்ள மகனை யாரோ பிறன் ஒருவன் என்று நினைத்ததாம் தாயுள்ளம். அதைப்போல எங்கள் மீது சிறு குற்றம் கண்டாலும்



1985 ஜூலை 8] [திரு. மு. பாண்டுரங்கன்]

புரட்சித் தலைவர் அவர்கள் அதைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். காரணம் அவர்கள் காஞ்சிக் கல்லூரியில் பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் தானே கற்றார். அண்ணா அவர்களிடமிருப்பவர் யாராவது தவறு செய்துவிட்டால் அண்ணா அவர்கள் சில நாட்கள் அவர்களிடம் பேசுவதில்லை. அண்ணா அவர்களிடம் பாடம் கற்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் போலீஸ் துறையினைச் சீரோடும், சிறப்போடும், மிடுக் கோடும் நடத்தி வருகிறார்கள் என்றால் அதில் என்ன வியப்பு இருக்க முடியும்?

ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இனக் கலவரம் என்று கேட்டதும் ஆற்றாது வருத்தத்தோடு அறிக்கை விட்டவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். திருப் பத்தூரில் நக்ஸல்பாரிகள் குண்டு வெடித்தனர் என்று தெரிந்த உடன் திருப்பத்தூருக்குச் சென்று நேரில் விசாரித்து வேண்டிய உதவிகளை எல்லாம் செய்தார்கள்.

நாட்ராம்பள்ளி தொகுதியிலிருந்து அங்கே மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு இந்த மன்றத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய திரு மணத்திற்குச் செல்வதை யார், யாரோ தடுத்தார்கள். அங்கே நக்ஸல்பாரிகள் உலாவிக் கொண்டிருக்கிறார்கள், எனவே அங்கே வரக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால் போலீஸ் துறையிலே மிகுந்த ஈடுபாடு உள்ளவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள். அவர்கள் மீது எவ்வளவோ நம்பிக்கை வைத்துக் கொண்டிருப்தன்காரணத்தாலே அவர்கள் அதைஎல்லாம் பொருட் படுத்தாமல் அந்தத் திருமண விழாவிற்குச் சென்றுவிட்டு வந் தார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், போலீஸ் எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட, ஒரு செய்தியை இங்கே சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

சிவில் ரைட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட் என்று சென்டிரல் கவர்ன்மெண்ட் ஆக்ட் ஒன்று இருக்கிறது. அதிலே இனக் கலவரம் பற்றிய தகராறு ஏதாவது நடக்குமேயானால் உரிய அதிகாரிகளிடம் போய் முறையிட்டால் அவர்கள் வழக்குப் போடுவார்கள். எல்லாவற்றையும் வழக்குகளாகப் போடா மல், நியாயமாக உண்மையாக இருப்பதைப் பட்டபா பாதாதா என்று நான் அது குறித்து போலீஸ் அதிகாரிகளைக்

கேட்ட போது, மேல் அதிகாரிகள் இப்படிப்பட்ட வழக்குகள் எது வந்தாலும் அவைகளை வழக்காக போடுங்கள் என்று சொல்லுவதாகச் சொல்லுகிறார்கள். தயவு செய்து, அது நியாயமான வழக்காக இருக்கிறதா என்று பார்த்து உண்மையாக இருக்குமானால் மட்டுமே வழக்குப் போடும் வகையில் உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் 5 (1) (சி) என்ற செக்ஷனிலே யாராவது இது போன்ற தன்மையை பிராக்டீஸாகக் கொண்டிருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிராக்டீஸ் என்றால், வழக்கறிஞர்கள் பிராக்டீஸ் செய்வது போல, டாக்டர்கள் பிராக்டீஸ் செய்கிறார்கள் என்று சொல்வது போல, அந்தத் தொழிலை வழக்கமாக கையாளுவதைப் போல, இதிலும் அவர்கள் வழக்கமாக அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை இருக்குமானால், என்பது தான் பொருள். எனவே அப்படி வாய்ப்பு இல்லாத சமயத்தில், என்னை அந்த வார்த்தையை குறிப்பிட்டு திட்டினார் என்று வழக்கு போட்டால், வழக்குகள் நீதிமன்றத்தில் நிற்காமல் தள்ளுபடியாகிற நிலைதான் உண்டாகிறது. ஆகவே வழக்கமாகவே அப்படிச் செய்கிறார்களா என்று பார்த்து சார்ஜ் ஷீட் போட்டால், நலமாக இருக்கும். எதற்கு இப்போது இதைச் சொல்கிறேன் என்றால், உரிய போலீஸ் அதிகாரிகள் தங்களுக்கு கீழே பணியாற்றும் நபர்களுக்கும் இதை எடுத்துத் தெரிவிப்பார்கள் என்ற கருத்தின் அடிப்படையில்தான் சொல்கிறேன்.

நமது தமிழகப் போலீஸ் துறைதான் அகில உலகத்திலேயே சிறந்து விளங்குகின்றது என்பதை இந்த நாடே அறியும். கடைசியாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கலசப்பாக்கம் தொகுதியில் தீ அணைப்பு நிலையம் ஒன்று கூட இல்லை. ஆகவே கலசப்பாக்கம் தொகுதியில் தீயணைப்பு நிலையம் ஒன்றை கட்டாயம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இரண்டே இரண்டு போலீஸ் ஸ்டேஷன்கள் தான் இருக்கின்றன. ஆகவே, மங்கலம், ஆதநிறுவி அந்த மக்களுக்கு உதவி செய்திட வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே மங்கலம் என்ற இரு ஊர்களிலும் போலீஸ் ஸ்டேஷன்களை





இதற்குரிய ரெக்கார்டுகள் எல்லாம் தயாராக இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு தயவு செய்து அந்த இரு ஊர்களிலும் போலீஸ் ஸ்டேஷன்களை தரவேண்டும் என்று கேட்டு (மணியடிக்கப்பெற்றது).

''என்னை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும்
என்னால் தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாள் எனக்கு திருநாளாகும்''

என்ற பாரதிதாசன் வாக்கிற்கிணங்க இந்த போலீஸ் துறையின் நண்பர்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய காவல் துறை மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு காவல்துறையினுடைய பணிகளைப் பார்க்கிற போது, மிக அதிகமாக மக்களிடத்திலே காவல்துறை மீது எவ்வளவுக்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டுமோ, அவைகள் எல்லாம் மாறி மக்களிடத்திலே அவ் நம்பிக்கை ஏற்படக்கூடிய ஒரு நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது.

நடைமுறையில் நல்ல சிறந்த நிலமாக எடுத்து, அதைப் பண்படுத்தி சீரிய விதைகளை விதைத்தாலும் கூட, நிச்சயமாக ஆங்காங்கே களைகள் தோன்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையிலேதான் இன்றைக்கு காவல் துறையிலே நிறைந்திருக்கிற களைகளைக் களைய வேண்டும் என்ற முறையிலேதான் சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விழைகிறேன். இன்றைக்கு காவல் துறையைப் பொறுத்த மட்டிலே அப்படிக் குறிப்பிட்டுக் கூற பல காரணங்கள் உதாரணங்கள் இருந்தாலும், ஒரு சில வகைகளை மட்டும் தான் எடுத்துப் பேசுவதற்கு எனக்கு நேரம் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு, பல பகுதிகளிலேயும் காவல் துறையினர் இன்றைக்கு மக்களிடத்திலே எப்படி நடந்து கொள்கிறார்கள் என்றால், பஞ்சாயத்துகாரர்களைப் போல நடந்து கொள்வதோடு அவர்களுக்கு மேலும் இன்னல்களைக் கொடுக்கக்கூடிய வகையிலே, மேலும் சிரமங்களைக் கொடுக்கக்கூடிய வகையிலேதான் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்திற்கு சென்று தங்களுடைய குறைகளை அல்லது புகார்களைக் கூறுகிற நேரத்தில், யார் அங்கே சென்று எடுத்துச் சொல்கிறார்களோ, யாருக்கு பாதுகாப்பு வேண்டுமோ, அவர்களையே அடித்து நொறுக்குகின்ற நிலையிலேயும், அவர்களை மிரட்டுகின்ற நிலையிலேயும், காவல் நிலையத்திலேயே அடைத்து வைக்கின்றநிலையிலேயும்தான் காவல் நிலையத்தில் இன்றைக்கு காரியங்கள் நடந்து வருகின்றன. இது போன்ற பல சம்பவங்கள் என்னுடைய பகுதியிலே மதுரை மாவட்டத்திலே, பல போலீஸ் நிலையங்களிலே இருப்பதை மக்கள் சொல்கிறார்கள். அவர்கள் செல்வாக்கு உள்ளவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, பஞ்சாயத்துக்காரர்களைப் போல குற்ற வழக்குகளைப் பதிவு செய்யாமல் நடத்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–40)

அந்த நிலை நீடிக்கக் கூடாது என்பதற்காக நான் இந்தக் கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு யார் சென்றாலும் அந்த வழக்கைப் பதிவு செய்து கொண்டு, அந்த வழக்குகளின் மூலமாக அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துத் தர முடியுமோ, மக்களுச்கு என்ன நியாயத்தை ஏற்படுத்தித்தர முடியுமோ, அவற்றை நிச்சயமாக ஏற்படுத்தித் தருகிற நிலையில் இருந்தால்தான் அந்த மக்களுக்கு காவல் துறை மீது அதிகமான நம்பிக்கை ஏற்படும்.

காங்கிரஸ் பேரியக்கத்தின் ஆட்சிக்காலத்தில், இன்றைக்கு தேவர் இனத்தில் ஒரு பிரிவாக இருக்கிற கள்ளர் சமுதாயம் அன்றைக்கு பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிறபோது அந்தச் சமுதாயத்தை நல்லமுறையில் முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்ற நிலையில், அதற்கான முழுப் பொறுப்பையும், காவல் துறையினிடத்தில் கொடுத்திருந்தார்கள். ஒரு பொது நிதியைக்கூட காவல் துறையினர் ஏற்படுத்திக்கொடுத்து, அந்தச் சமுதாயத்தைநல்லமுறையில் முன்னுக்குக் கொண்டுவருவதற்கு அந்தச் துறை பாடுபட்டிருக்கிறது. அந்த முறையில் மிகச் சிறப்பாக இருந்த காவல் துறை மீது இன்றைக்கு அந்த நிலை மாறி மக்களுக்கு அந்தத் துறையினிடத்தில் இருக்கிற நம்பிக்கை குறையக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலை நிச்சயமாக நல்ல நடவடிக்கைகளால் மாற்றப்படவேண்டுமென்று எங்கள் இயக்கத்தின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு காமராசர் மாவட்டத்தில் கல்லாங்குளத்தில் நடைபெற்றிருக்கிற துப்பாக்கிச் சூட்டினைப் பார்க்கிற போது, அங்கே பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் எந்தவிதமான குற்றமும்





செய்யாதவர்கள். அவர்கள் மனம் திருந்தியவர்கள். போலீசார் வானத்தை நோக்கிச் சுட்டாலே சிதைந்து ஓடக் கூடியவர்கள். நிச்சயமாக துப்பாக்கியை எதிர்த்து நின்று போராடக்கூடிய மக்கள் அந்த ஊரில் இல்லை. எனவே அப்படிப் பயந்து ஓடக் கூடிய மக்களாக, சட்டத்தை மதிக்கக் கூடியவர்களாக அவர்கள் இருக்கிற காரணத்தால், அந்த மக்களைத் தண்டிக்கக் கூடிய நிலையில் இன்றைக்குக் காவல் துறை நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். கல்லாங்குளத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் ஊருக்குள் சென்று பிணங்களை அடக்கம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு நல்லமுறையில் பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும். அந்த வகையில், இந்தக் காவல் துறையில் இருக்கிற களைகளை அகற்ற வேண்டுமென்று கேட்டு, மக்களுக்குக் காவல் துறை மீது அதிகமான நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

திரு. கே. அன்பழகன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் போலீஸ் மானியத்தின் மீதும், தீயணைப்பு மானியத்தின் மீதும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் போலீஸ் துறை சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. காவல் துறையைச்செம்மைப்படுத்திமக்களுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற உணர்வு தமிழக முதல்வர் அவர்களின் உள்ளத்தில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. பொதுமக்கள் மன அமைதியோடு வாழ வழி செய்ய சட்டம் ஒழுங்கைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். குற்றங்கள் அதிகமாவதைத் தடுப்பது என்பதைவிட குற்றங்களே இல்லாத சூழ்நிலையை உருவாக்குகிற வகையில் துறை காவல் பணியாற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் போலீஸ் துறைக்காகக் குற்றங்களைக் கட்டுப் படுத்தவும், விரைந்து கண்டு பிடிக்கவும், ஒயர்லெஸ், தொலைபேசி, வாக்கி-டாக்கி, மிராக் கோடு எலக்ட்ரானிக் சாதனம் போன்றவற்றை எல்லாம் தமிழக அரசு வழங்கியிருக்கிறது. அவற்றை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே பாராட்டக் கடமை பட்டிருக்கிறேன்,

அதேபோல காவல் துறையில் தற்போது நிலவி வருகிற குறைபாடுகளை, தவறுகளைக் களைந்தெறிவதற்காக எதிர்காலத்தில் எடுக்கபோகும் நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் தனது ஆய்வுரையில் முடிவுரையில் தந்திருக்கிறார்கள். அதிலே பாராட்டத்தக்க பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. அவற்றையும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக மத்திய அரசு இப்போது 10 ஆண்டுத் திட்டத்தைத் தீட்டி அதற்காக நிதியொதிக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது காவல் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகையோடு ஒப்பிடுகிறபோது மிகக் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். 1966-ம் ஆண்டில் 90 கோடி ரூபாய் பட்ஜெட் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. அப்போது 6 கோடி ரூபாய் போலீஸ் மானியத்திற்கு ஒதுக்கி இருக்கிறார்கள். அது 15-ல் ஒரு பங்கு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இன்றைய தினம் 1985-ம் ஆண்டில் 3,000 கோடி ரூபாய்க்கு பட்ஜெட்டைப் போட்டு விட்டு, 92 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் குறைவு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது முப்பதில் ஒரு பங்குதான். ஆகவே குறைந்தபட்சம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட விகிதாசாரப்படி பார்த்தால் இன்றையதினம் நாம் 200 கோடி ரூபாயாவது போலீஸ் மானியத்திற்கு ஒதுக்கியிருக்கவேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அதிக நிதி ஒதுக்கீடு செய்து, போலீஸ் துறையை நவீனப்படுத்தி காவல்துறையிலே இருப்பவர்களுக்கு நல்ல பல சலுகைகளை, வசதிகளைச் செய்து தருவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் எத்தனை கோடி ரூபாயை நாம் இந்தப் போலீஸ் துறைக்கு ஒதுக்கிக் கொடுத்தாலும்,இன்றைக்கு போலீஸ் ஸ்டேசனிலே கம்ப்ளெயின்ட் கொடுப்பதற்காக வரக்கூடிய சாதாரண மக்களிடத்திலே பேப்பர் வாங்கி வாருங்கள், கார்பன் பேப்பர் வாங்கி வாருங்கள் என்று சொல்லக்கூடிய கேவலமான நிலைமையிருப்பதை நாம் மறந்துவிட முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் நாம் போக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் சொத்து பற்றிய குற்றங்கள் கண்டுபிடித்தலைப் பற்றி 34 ஆம் பக்கத்தில் தெரிவித்து இருக்கிறார்கள். கண்டுபிடித்த மொத்தக் குற்றங்களின் விகிதாச்சாரம் 65.5 என்று தரப்பட்டு உள்ளது. ஆனால் கண்டுபிடிக்கப்பட்டு, விசாரணைக்குப் பின் தண்டிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை என்பதைப் பற்றி அவர்கள் கொடுக்க மறந்துவிட்டார்கள் என்பதை நான் சொல்ல



விரும்புகிறேன். வழக்குப் பதிவு செய்வதோ, விசாரணை செய்வதோ, கண்டுபிடிப்பதோ மட்டுமே போலீஸ் துறையினுடைய திறமையையும் ஆற்றலையும் காட்டாது. கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள், தாக்கல் செய்த குற்றங்கள், அவைகளில் எத்தனை குற்றவாளிகளுக்கு நீங்கள் தண்டனை வாங்கிக் கொடுத்து இருக்கிறீர்கள் என்பதையும் நீங்கள் கொடுத்திருந்தால்தான் போலீஸ் துறையினுடைய ஆற்றலை அறிய முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் சொத்து பற்றிய குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலே பிரைப் கேஸஸ் பற்றி குறிப்பிடப்படவில்லை. 5 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான அளவில் நடந்த திருட்டு வழக்குகள் எத்தனை என்பதையும் இந்த ஆய்வுக் குறிப்பிலே தெரிவிக்கவில்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் இந்தக் குற்றங்களிலே எல்லாம் ஈடுபட்டவர்களுடைய தரத்தைப் பற்றி, அதாவது நேச்சர் ஆப் தி அக்கியூஸ்டு என்று சொல்வார்கள். அதைப்பற்றி இந்த உரையிலே எதுவும் கிடையாது. அந்தக் குற்றங்களைச் செய்தவர்கள், பழைய குற்றவாளிகளா ? புதிய குற்றவாளிகளா ? வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் குற்றத்திலே ஈடுபட்டு இருக்கிறார்களா ? அல்லது நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் குற்றத்திலே ஈடுபட்டு இருக்கிறார்களா ? என்பதைப் பற்றி எல்லாம் இதிலே விவரங்கள் கிடையாது. அதுமட்டுமல்லாமல், தொடுக்கப்பட்ட வழக்குகளில் கடும் தண்டனை வாங்கிக் கொடுத்த வழக்குகள் எத்தனை, சிம்பில் இம்பிரிசன்மென்ட் என்று சொல்வார்கள், அப்படிப்பட்ட வழக்குகள் எத்தனை? பி.ஓ. ஆக்டிலே விடுதலை செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ? என்பது போன்ற விவரங்கள் இதிலே இருந்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் நம்முடைய போலீஸ் துறையினுடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டது பற்றி ஆய்வு செய்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஹவுஸ் பிரேக்கிங் பற்றிச்சொல்லியிருக்கிறார்கள். House breaking at the day and at the night என்பது போன்ற எந்தவிதமான விவரமும் இதிலே கிடையாது. பகலிலே நடைபெற்றக் குற்றங்கள் எத்தனை, இரவிலே நடைபெற்ற குற்றங்கள் எத்தனை என்பதைப் பற்றிய விவரங்கள் இருந்தால் மிகவும் நல்லதாக இருக்கும். இழந்த சொத்துக்கள் எவ்வளவு, மீட்கப்பட்ட சொத்துக்கள் எவ்வளவு, பிராப்பர்டி லாஸ் அன்ட் பிராப்பர்ட்டி ரெகவர்ட் போன்ற விவரங்கள் இதிலே அதிகமான அளவிலே இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஹார்ட் கேஸ்களை எடுத்துக் கொண்டால், கிராமங்களிலே தான் பெரும்பாலும் இந்த மாதிரியான வழக்குகள் அதிகமாக வரும், அதைப் பற்றி எதுவும் இந்த அறிக்கையிலே சொல்லவில்லை. நான் இந்த நேரத்திலே என்ன தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்றால், இந்தியன் பீனல் கோடிலே காக்னிசபில் அபன்சஸ் 325, 326 ஏன், 307 வருவது என்பதும் இந்த ஹார்ட் கேஸ் மூலம்தான். இதைப் பற்றிய விவரங்களை எல்லாம் இந்த அவையிலே அவர்கள் சொல்லவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இங்கே ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு நான் விடைபெறலாம் என்று நினைக்கிறேன். ஓமலூரில் போலீஸ் லாக்கப்பில் நடைபெற்ற மரணத்தைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு.சித்தன் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் எடுத்துக் காட்டினார்கள். அதைச் சற்று விரிவாக நான் சொல்வதன் மூலம் இந்த அரசு உண்மையிலே மக்களாட்சித் தத்துவத்திலே நம்பிக்கை வைத்திருப்பதோடு குறைகளைக் களைவதற்குத் தயாராக உள்ளது என்பதையும் நாம் நிரூபிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓமலூர் போலீஸ் நிலையத்தில் நகைத் திருட்டுக்காக, காவலில் வைக்கப்பட்டு இருந்த தாராபுரம் பழனி கவுண்டர் என்பவருடைய மகன் கண்ணன் 30—6—1985 ஆம் தேதியன்று மர்மமான முறையில் இறந்துவிட்டார். 25—6—1985 மாலை 4 மணிக்கு வீட்டிலிருந்த கண்ணனை தாராபுரம் போலீசார் விசாரணைக்காக அழைத்துச் சென்றார்கள். 2, 3 நாட்கள் காவல் நிலையத்தில் அன்-லாபுல் டிடன்சன் என்ற முறையிலே வைத்திருக்கிறார்கள். இது உண்மையில் பார்க்கப்போனால் கிரிமினல் புரசீஜர் கோட் 57-வது பிரிவை மீறக் கூடிய ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 29—6—1985 ஆம் தேதி காலை சிறையிலே இருந்த கண்ணனை கழிப்பறைக்கு அழைத்துச் செல்லும்போது அவர், அங்கேயிருந்து தப்பி, ஓடி இருக்கிறார். சுவர் மீது ஏறிக் குதித்து, அருகில் இருந்த தாலூக்கா ஆபிஸ் காம்பவுண்டுக்குள்ளே குதிக்கும்போது, சப் ஜெயில் வார்டர்களும், மற்றும் 2 போலீஸ்காரர்களும் சேர்ந்து அந்த தாலூக்கா ஆபிஸ் காம்பவுண்ட்டிலே அவனைப் பிடித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1—50)

அது மட்டும் அல்ல, அங்கே பிடித்து உதைத்து இருக்கிறார்கள். அங்கே உதைத்தது மட்டும் அல்ல, பஞ்சாயத்து யூனியன் ரோடு வழியாக அவனை இழுத்து வரும்போது 2 போலீஸ்காரர்





கள் அவனை செம்மையாக உதைத்து பொது மக்கள் மத்தியில்
அவனை இழுத்து வந்து இருக்கிறார்கள். இழுத்து வந்தது
மட்டும் அல்ல, காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று நிர்
வாணமாகப் போட்டுஉதைத்து சோறுகூட கொடுக்காமல் அவனை
லாக் அப்பில் போட்டு இருக்கிறார்கள். இது பொதுமக்கள்
கொடுத்த தகவல், பொது மக்கள் நேரிடையாக பார்த்த தகவல்
ஆகும்.

30—6—1985 காலை அவர் தூக்குப் போட்டுக்கொண்டு
இறந்து விட்டார் என்று செய்தி வருகிறது. அன்றையதினம்
பொதுமக்கள் கிட்டத்தட்ட 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்
கள் போலீஸ் நிலையத்திற்கு முன்பாக கூடி போலீஸுக்கும்
பொதுமக்களுக்கும் மோதல் ஆகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு
எனக்குச் செய்தி கிடைத்து நான் அங்கே போனேன். அப்போது
சொன்னேன். நம்முடைய அரசு மீது நம்பிக்கை வையுங்கள்,
குற்றம் நிரூபிக்கப்பட்டால் நிச்சயமாக குற்றவாளிகள் மீது
நடவடிக்கை எடுப்பார்கள். சட்டமன்ற உறுப்பினராகிய என்
னிடம் பொறுப்பை விட்டு விட்டு நீங்கள் சென்று விடுங்கள்
என்று தெரிவித்த பிறகு அவர்கள் கலைந்து சென்றார்கள்.
அதற்குப் பிறகு அரசின் சார்பில் ஆர்.டி.ஓ. என்கோயரி போட்டு
இருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். நம்முடைய
உள் துறைச் செயலாளர் அவர்களிடம் சொன்ன
போது கூட நிச்சயமாக பாரபட்சம் அற்ற முறையில் நடவடிக்கை
எடுக்கப்படும் என்று அவர்கள் உறுதி அளித்தார்கள். ஆனால்
நேற்றைக்கு முன் தினம் தமிழ்நாடு போலீசுடைய உயர்
அதிகாரி சேலத்திற்கு வந்து பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி
கொடுக்கின்றபோது கண்ணன் தூக்குப் போட்டுக்கொண்டு
தற்கொலை செய்து கொண்டு இருக்கிறான். தான் திருடியது
அம்பலம் ஆகிவிட்டது, தன் குடும்ப மானம் போய்விட்டது
என்று மனம் உடைந்து தூக்கு போட்டுக்கொண்டு இருக்கலாம்
என்றார். அதோடு விட்டு இருந்தால் கூட ஏதோ அனுமானத்தின்
பெயரால் செய்கிறார் என்று கூட நாம் நினைத்துக்கொள்ள
லாம்.

இது போன்ற வழக்குகளில் உதவி கலெக்டர் மூலம்தான்
விசாரணை நடத்தப்படும். ஆனால் இந்த வழக்கைப் பொறுத்த
வரையில் தற்கொலை என்பதுதான் சரியானது என்று போலீஸ்
உயர் அதிகாரி தனது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்
என்று சொன்னால் நாம் வைத்து இருக்கக்கூடிய ஆர்.டி.ஓ.
விசாரணையின்மீது எப்படிப் பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்
என்று இந்த நேரத்தில் நான் கேட்க ஆசைப்படுகிறேன். குடும்ப
மானம் பறிபோய் விட்டது என்பதற்காக அவர் தூக்கு

போட்டுக்கொண்டு இருக்கிறார் என்று சொன்னால் 25 ஆம் தேதி, 26 ஆம் தேதி, 27 ஆம் தேதி, 28 ஆம் தேதி ஆகிய 4 நாட்களில் லாக் அப்பில்இருந்தபோது அவர் தூக்குபோட்டுக்கொண்டு செத்து இருக்கக்கூடாதா என்று நான் கேள்விக் கணையாக வைக்க விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, போலீஸ் லாக் அப்பில் போடும்போது கண்ணனை சோதனை செய்து லாக் அப்பில் போடவில்லையா? கண்ணன் தூக்குப் போட்டுக்கொள்ள சரடு அவனுக்கு அந்த லாக் அப்பில் எங்கேயிருந்து கிடைத்தது என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே, நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் தவறு எங்கு நடந்தாலும் அதைக் கண்டிப்பதற்கும், அதைக் களைந்து எறிவதற்கும் தயாராக இருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம் இதிலே இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பொதுமக்களுக்குத் தெளிய வைத்து நாம் என்றைக்கும் நடு நிலையோடு இருக்கிறோம் என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் ஒரு நீதிபதி விசாரணையை ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 9—7—1985 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (ஆ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

248. வட ஆற்காடு மாவட்டம், ஜோலார்பேட்டைக்கு ஓர் ஊராட்சி வளர்ச்சிப் பகுதி அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 23—5—1985 ஆம் நாளிட்ட 399 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

249. திருச்சிராப்பள்ளி மாவட்டம், தோகமலைக்கு ஓர் ஊராட்சி வளர்ச்சிப் பகுதி அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 23—5—1985 ஆம் நாளிட்ட 400 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்தாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

250. தர்மபுரி மாவட்டம் மாதூருக்கு ஓர் ஊராட்சி வளர்ச்சிப் பகுதி அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 23—5—1985 ஆம் நாளிட்ட 403 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

251. பல்லவன் பொறியியற் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய த ள்கள்.

164. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

165. கோரிக்கை எண் 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்)

## இணைப்பு I

(56-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு காவல் துறை.

ஆய்வுரை

முன்னுரை.

பொதுமக்களின் உயிர், உரிமை மற்றும் உடைமை ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பது அரசினுடைய அடிப்படைக் கடமையாகும். இந்தக் கடமையைத் திறம்பட ஆற்றுவதை அஸ்திவாரமாகக் கொண்டுதான் பொதுமக்களின் நலனை மேம்படுத்துவதற்காக பல திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டியுள்ளது. இதுபற்றிய தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கை இங்கே சுட்டிக் காட்டுவது சாலப் பொருந்தும்.

" குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் "

[குறள்—549]

(குடிமக்களுக்குத் துன்பம் வராமல் அவர்களைப் பேணிக் காத்து சமுதாயத்தில் காணப்படுகின்ற குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் மன்னனுடைய பெருங் கடமையாகும். இதனால் ஏற்படுகின்ற பழி ஏதும் கிடையாது.)

இப்பணியை அரசு மேற்கொள்வதில் காவல் துறை பெரும துணை புரிகின்ற முக்கிய அமைப்பாக விளங்குகிறது. சட்டம் ஒழுங்கைப் பேணிக்காப்பதும் குற்றங்களைக் கட்டுப்படுத்தி அகற்றுவதும் காவல் துறையினுடைய மிக முக்கியமான இரு பொறுப்புகளாகும். மாறி வரும் சமுதாய அமைப்பினாலும். தொழிற்சாலைகள் பெருகி வருவதாலும், நகரங்கள் விரிவடைவதாலும் காவலர்களுடைய பணிகள் பெரிதும் இடர்ப்பாடு நிறைந்தவையாக உள்ளன. ஆகவே, இத்தகைய பிரச்சினைகளைத் திறம்படத் தீர்க்கும் வண்ணம் காவல்துறையினர் சிறந்த பணித் திறமையை எய்துவதுடன் தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் கிடைத்துள்ள புது முறைகளைக் கையாண்டு தாங்கள் செயல்படும் முறைகளை விரிவாக்கிக் கொள்ள வேண்டும்





2. சட்டத்தின் பாதுகாவலர்களாகச் செயலாற்றவேண்டிய காவல் துறையினர் சமுதாயம், பொருளாதாரம் குறித்த பல்வேறு வகையான சட்டங்களைச் செயல்படுத்த உதவி வருகின்றனர். அப்பொழுதுதான் சமூக நீதியை நிலை நிறுத்தி, விரும்பிய நன்மைகளைப் பெற்று அரசின் கொள்கைகளைத் திறம்படச் செயல்படுத்த முடியும். மக்களாட்சி நெறிகளின் அடிப்படையில் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க அரசு எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் காவல் துறை ஓர் அரிய கருவியாய் அமைந்து உறு துணை புரிகிறது. சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் தமிழகக் காவல் துறை விழிப்புடனிருந்து நிலைமைகளைத் தெளிவாகக் கண்டறிந்து அரும் பணியாற்றுகின்றது. மேலும் சூழ்நிலைகளின் பல்விதமான கூறுபாடுகளையும் நன்கு ஆராய்ந்தறிந்து ஏற்ற வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். அமைதியான அணுகுமுறைகளைக் கையாண்டும் இன்றியமையாத் தேவை ஏற்படுகின்றபோது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டும் சட்டத்தை நிலைநாட்ட வேண்டியது காவலர்களின் தலையாய பொறுப்பாகும். பின்விளைவுகளைக் கருத்திற்கொண்டு, நெறி முறை பிறழாமல் நடைமுறைக்கு ஏற்ற அணுகுமுறையினைக் கடைபிடித்து அனைவரையும் அரவணைத்துச் செல்லும் கோட்பாடுகளையே வழிகாட்டியாகக் கொண்டுள்ளனர்.

3. பல பிரிவு மக்களிடையே அவ்வப்போது தோன்றும் கருத்து வேறுபாடுகளைக் களைந்தெறிய பெரிதும் முயன்று பணியாற்றிச் சமுதாயத்தில் சுமுகமான நல்லுறவை வளர்ப்பதில் தமிழகக் காவல் துறை தொடர்ந்து அரும் பணியாற்றி வருகிறது. பல்வகை மக்களைக் கொண்ட நம்முடைய சமுதாயத்தில், இனக் கலவரம் அல்லது மதக் கலவரம் தோன்றக் கூடிய பகுதிகளில் காவல் துறை எப்பொழுதும் விழிப்புணர்ச்சியுடன் செயல்படுகிறது. முன்கூட்டித் தகவல்களைச் சேகரிப்பதுடன், சமூக விரோதிகளைக் கைது செய்தல், குற்றமிழைக்கக் கூடியவர்களை நன்கு கண்காணித்து வருவது. ஒழுங்குமுறை ஆணைகளைச் செயல்படுத்துவது போன்ற முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுக்கின்றனர். நிலையான அமைதியை உருவாக்கவும், ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளவும் மேலும் பலதரப்பினருக்குமிடையே பேச்சு வார்த்தை நடத்தவும், தேவையான ஊர்க் கண்காணிப்புக் குழுக்களை அமைத்து பதட்ட நிலையைப் போக்க வேண்டிய அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர்.

4. ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் போன்றவை ஏற்படும்பொழுது, காவல் துறையினர் இவற்றை ஒழுங்குபடுத்தி நிலைமையைக் கட்டுக்குள் வைக்க வேண்டிய தங்களுடைய இன்றியமையாக் கடமையை ஆற்றி வருகின்றனர்.

128-200—21

இத்தருணங்களில் மக்களாட்சியில் பின்பற்றப்படும் வழி முறைகளுக்குத் தக்க இடமுண்டு என்பதை உணர்ந்தே செயல்படுகின்றனர். போராட்டங்களை மிகவும் கவனத்துடன் ஒழுங்குபடுத்தாவிட்டால் அவை வன்முறைக்கு இடமளித்து அமைதியான சூழ்நிலைக்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதை நன்கறிந்து காவலர்கள் இத்தகைய நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டறிந்து தக்க அணுகுமுறையைப் பின்பற்றிப் பணி புரிகின்றனர். சினமூட்டுகின்ற சூழ்நிலைகளிலும் காவலர்கள் மிகுந்த தன்னடக்கத்துடன் பணியாற்றி, நடுநிலை தவறாமல் நெருக்கடி நிலைமைகளுக்குத் தீர்வு காணுகின்றனர். தொழிலாளர் வேலை நிறுத்தம், விவசாயிகள் போராட்டம் போன்ற தருணங்களில் மாறுபட்ட கருத்துடைய இரு தரப்பினர்களுக்குமிடையே நின்று காவல் துறை தன் பணியைச் செய்கிறது. அனைத்துப் பிரிவினரின் உரிமைகளையும் பாதுகாத்து, ஒவ்வொரு தரப்பினருக்கும் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்த சட்டத்திற்குட்பட்ட வழிகளைக் கையாள அனுமதியளித்து இத்துறை தன்னுடைய கடினமான பணியை ஆற்றி வருகிறது.

5. குற்றமிழைப்பதில் ஊறிப்போனவர்களும் கொள்ளையடிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்களும் இப்பொழுது புதுப்புது வழிகளையும் மிகவும் நவீன முறைகளையும் பெரிதும் பின்பற்றுவதால் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணி மிகவும் கடினமாகியுள்ளது. இருந்தபோதிலும் பல்வேறு வகையான குற்றங்களையும் கண்டறிவதற்கு ஏற்ற வகையில் காவல்துறை சீர்படுத்தப்பட்டுள்ளது. குற்றங்களுக்கான பல அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தறிவதற்கு ஏற்ற பயிற்சி பெற்றிருப்பதுடன் காவல்துறையினர் குற்றப் புலனாய்வு செய்வதில் அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தும் வாய்ப்பையும் பெற்றிருக்கின்றனர். நாடெங்கிலும் குற்றம் புரிந்து வந்த கொள்ளை கூட்டத்தினரின் செயல் முறையினைத் தமிழகக் காவல் துறையினர் கண்டறிந்து வெளிப்படுத்தியதுடன் பல குற்றவாளிகளைத் தங்களுடைய உயிருக்கு நேர்ந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது கைது செய்துள்ளனர். மேலும் பொது மக்களுக்கு பாதுகாப்பளிக்கவும் அவர்கள் உள்ளத்தில் பாதுகாப்புணர்வை வளர்க்கவும் காவல் துறையினர் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர்.

6. பொதுமக்களுடைய தேவைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் ஆய்ந்து நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநிறுத்தவும் காவல்துறை பேருதவி புரிகிறது. சட்ட வழிமுறைகளை நிலை நிறுத்தவும், அரசுக்கும் மக்களுக்குமிடையே நல்லெண்ணத்தை வளர்க்கவும் சமுதாயத்தில் பல பிரிவினருக்குமிடையே ஒற்றுமை ஓங்கச் செய்யவும் காவல்துறை அயராது அரும்பாடுபட்டு வருகிறது.



7. காவல் துறையினர் தங்களுடைய பெரும் பொறுப்புக்களை சிறந்த முறையில் நிறைவேற்ற வழிவகை செய்யும் பொருட்டு, வேகமாகச் செல்வதற்கான வாகன வசதிகளையும் விரைந்து செயலாற்ற நல்ல செய்தித் தொடர்பு அமைப்பினையும் தமிழக அரசு, காவல்துறையினருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. குற்றங்களைப் புலனாய்வு செய்வதில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கும், அன்றாட நிர்வாகத்தில் நவீன முறைகளைக் கையாளுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1984–85 ஆம் ஆண்டில் காவல்துறையைப் பற்றியும் அதனுடைய முக்கிய சாதனைகளைப் பற்றியும் பின்வரும் பத்திகளில் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

8. சிறந்த முறையில் பயிற்சி பெற்ற பணியாளர்களும் அதிகார வரம்புகள் தெளிவான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்த அமைப்பு முறையும் காவல் துறை நன்கு பணியாற்றுவதற்கு இன்றியமையாததாகும். பணியாளர் தொகுதியைப் பற்றியும் காவல்துறையினுடைய அமைப்பு பற்றியும் பகுதி 1 இல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

9. காவல் துறையில் உள்ள செய்தித் தொடர்பு, வாகன வசதி ஆகியவைபற்றிய குறிப்புகள் பகுதி 2 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

10. இக்கால அறிவியல் நுட்ப வசதிகளால் காவல் துறையின் பணி எளிதாகியுள்ளது. புலன் விசாரணை செய்வதில் கம்ப்யூட்டர்கள், விரல் ரேகைக் கூடம் போன்ற அறிவியல் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பகுதி 3 இல் இத்தகைய அறிவியல் சாதனங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

11. காவலர்களின் ஒழுங்குணர்வு, திறமை ஆகியவற்றின் அடிப்படையில்தான் காவலர்களைப் பற்றிய பொது மக்களின் நன்மதிப்பு உருவாகிறது. காவல் துறையிலுள்ள பணியாளர்களுக்கு நல்ல ஊக்கமளித்தால் தான் சிறந்த பயனை எய்த முடியும் என்பது கூறாமலேயே விளங்கும். இதனை நன்குணர்ந்து காவலர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பணியாற்றுகின்ற சூழ்நிலைகளை மேம்படுத்தவும் இவ்வரசு பல புதுத் திட்டங்களைத் தீட்டி வருகிறது. அடிப்படை வசதிகளைப் பெருக்கவும் சிறப்பான பணிகளுக்குப் பல பதக்கங்கள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காவலர்களுக்கான நற்பணித் திட்டங்கள் பற்றி பகுதி 4 விவரிக்கிறது.

12. பகுதி 5இல் மைய அரசு அளித்து வரும் உதவி பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1984 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சட்டம், ஒழுங்கு மற்றும் குற்றம் தொடர்பான முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றி பகுதி 6 இல் உள்ள குறிப்புகள் விளக்குகின்றன.

13. பொதுமக்களுக்கும் காவலர்களுக்கும் இடையே நல்லெண்ணம், கனிந்த நோக்கு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சுமுகமான நல்லுறவு நிலவ வேண்டியது மிகவும் இன்றியமையாத் தேவையாகும். இன ஒற்றுமை, அமைதி ஆகியவற்றை நிலை நிறுத்தி, செவ்வனே காவல் துறை பணியாற்ற வேண்டுமென்றால் இத்தகைய நல்லுறவு அனைத்து முயற்சிகளுக்கும் அடித்தளமாய் அமைந்துள்ளது. இது பற்றிய குறிப்புகள் பகுதி 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1984–85 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களைப் பற்றி பகுதி 8-ல் விவரிக்கப்பட்டுள்ளது. பின் இணைப்புகளில் சில புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி 1.

**அமைப்பும் பணியாளர் தொகுதியும்.**

14. தமிழ்நாடு காவல் துறையின் மேல் மட்டத்தில் இரண்டு காவல்துறைத் தலைமை இயக்குநர்கள் உள்ளனர். ஒரு தலைமை இயக்குநர் சட்டம்—ஒழுங்கினை நிலை நாட்டும் பணியுடன் பொதுவாக காவல்துறையின் நிர்வாக பொறுப்பினையும் கவனித்து வருகிறார். இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம், ஒழுங்கு மற்றும் நிர்வாகம்) காவல் துறை இயக்குநரின்கீழ் பணியாற்றுகிறார். இவர் அன்றாட நிர்வாகத்தினைக் கவனிப்பதுடன், சட்டம், ஒழுங்கினைத் திறம்பட நிலைநாட்டும் பணியை மேற்கொண்டுள்ளார்.

15. காவல்துறை தலைமை இயக்குநர் (குற்றப் புலனாய்வுத் துறை) அவர்களின் பொறுப்பில் நுண்ணறிவு, குற்றங்களைக் கட்டுப்படுத்தல், பாதுகாப்பு, திட்டம் தீட்டுதல், வானொலிப் பிரிவு, விரல் ரேகை பதிவுப் பிரிவு மற்றும் கம்ப்யூட்டர் பிரிவு போன்ற தொழில் நுட்பப் பணி பற்றிய பிரிவுகள் இயங்கி வருகின்றன.

16. தமிழ்நாட்டிற்கென ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணிப் பதவிகள் 160 ஆகும். இந்த ஆண்டில் ஐந்து இந்தியக் காவல் பணி அதிகாரிகள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றனர். நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று இந்திய காவல் பணி அதிகாரிகள் தமிழ்நாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ளனர். ஆறு மாநில காவல் பணி அதிகாரிகள் பதவி உயர்வு பெற்று, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணி பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். 1984 ஆம் ஆண்டில் காவல் துணைக் கண்காணிப்பாளர் (நிலை-1) எவரும் பணிக்கு நியமிக்கப்படவில்லை.





17. 1985 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் தேதி நிலவரப்படி, தமிழ்நாடு காவல்துறையில் உள்ள காவல் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 57,096. அதன் விவரங்கள் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளன. இவ்வாண்டில் மொத்தம் 1,210 காவல் நிர்வாகப் பணியிடங்களும் 221 அமைச்சுப் பணியிடங்களும் மற்றும் 71 தொழில் நுட்ப பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் இணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளன.

**மக்கள் குடியுரிமைச் சட்டத்தை அமுல்படுத்தல்.**

18. இதர இனத்தவர்களால் ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மற்றும் தீண்டாமை போன்றவற்றை ஒழிக்கும் நோக்கத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக குடி உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் விதிகள் மிகவும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

19. தற்சமயம், ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் ஒரு காவல் ஆய்வாளர், ஒரு சார்பு ஆய்வாளர் இரண்டு தலைமைக் காவலர்கள் இரண்டு இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் ஒரு ஜீப்பும் கொண்ட 20 நடமாடும் காவல் அணிகள் இந்தச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக 20 காவல் மாவட்டங்களின் தலைமையிடங்களில் பணியாற்றி வருகின்றன. இந்த நடமாடும் காவல் அணிகள் அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில், மாவட்ட குற்றப் பதிவு வைப்பறை கூடக் காவல் துணைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இது தவிர இச் சட்டத்தை செயல் படுத்துவதில் ஏற்படுகின்ற முன்னேற்றம் தொடர்பான புள்ளி விவரங்களை அவ்வப்போது முறைப்படி மேற்பார்வையிட மாவட்டந்தோறும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் ஒரு காவல் சார்பு ஆய்வாளர் என்ற அடிப்படையில் இந்த 20 மாவட்டங்களுக்கும் 20 புள்ளியியல் ஆய்வாளர்கள் மற்றும் 20 காவல் சார்பு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தீண்டாமை அதிகமாகத் தென்படும் இடங்களில் ஆய்வு செய்வதற்காகத் தேவையான பணியாளர்களைக் கொண்ட ஒரு ஆய்வுக் குழு ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

20. ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி மற்றும் அவரின் கீழ் பணியாற்றுகின்ற ஊழியர்களைக் கொண்ட நான்கு சிறப்பு நீதிமன்றங்கள், நீதித் துறையின் நிர்வாகத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும்

[1985 ஜூலை 8

தஞ்சை மேற்கு மாவட்டத்திலுள்ள கும்பகோணம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இத்தகைய சிறப்பு நீதிமன்றங்கள் உள்ள தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலும், நீதிமன்றப் பணிகள் அதிகமாக நிலுவையிலிருக்கின்ற தென்னாற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும், நீதிமன்றப் பணிகளைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு காவல் சார்பு ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர் அடங்கிய ஆறு வழக்குத் தொடுப்பு அணிகளும் பணியாற்றி வருகின்றன. இவ்வழக்குத் தொடுப்பு அணிகள் 1982, 1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் முறையே 1,128, 1,036 மற்றும் 923 வழக்குகளைப் பதிவு செய்தன. இதில் முறையே 15, 63 மற்றும் 74 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன.

21. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஏழு அணிகளும் சேமப்படையின் 180 அணிகளும் சட்டம்-ஒழுங்கை திறம்படப் பேணிக் காத்திட உள்ளூர் காவல் அதிகாரிகளுக்கு உதவி வருகின்றன. இம்மாநிலத்திற்கு வெளியே இந்திய அரசின்கீழ் புது டெல்லியில் பணி செய்து வந்த தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் இரண்டாம் அணி இம்மாநிலத்திற்கு திரும்பப் பெறப்பட்டது. அதற்குப் பதிலாக அங்கு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஆறாவது அணி அனுப்பப்பட்டிருக்கிறது.

22. இம்மாநிலத்தில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் துப்பறியும் நாய்ப்படை அணிகள் குற்றங்களைத் துப்புத் துலக்குவதற்கு காவல் அதிகாரிகளுக்கு உதவுவதில் சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்றன. அவைகளின் பணி 502 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டு 178 வழக்குகளில் பயனுள்ளவையாக இருந்தன.

23. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று குதிரைப் படைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள 34 குதிரைகள் கொண்ட குதிரைப்படைப் பிரிவு மட்டும் செயல்பட்டு வருகிறது. மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களுக்கென்று அனுமதி அளிக்கப்பட்டுள்ள பத்து குதிரைகள் வாங்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இக் குதிரைகள் வாங்குவதற்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் அனுமதி பெறப்பட்டு மதுரை பிரிவில் உள்ள பத்து குதிரைகளுக்கான விலையாக ரூ. 1,52,110 மற்றும் பயணச் செலவாக ரூ. 40,000-ம் காசோலை மூலம் சரண்பூர் பயிற்சி பள்ளியில் உள்ள கமாண்டண்ட் பெயரில்



1985 ஜூலை 8]

செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இக் குதிரைகளைப் பார்வையிடுவதற்காக கால்நடை மருத்துவர்களை அனுப்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

24. நெடுஞ்சாலையில நிகழும் விபத்துக்கள் பற்றிய தகவல்களை அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கவும், விபத்துக்கு ஆளானவர்களுக்கு முதலுதவி அளிக்கவும், சட்டப்படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும், சாலையிலுள்ள தடைகளை நீக்கவும் மற்றும் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தவும், தேசிய நெடுஞ்சாலையின் சென்னை-திண்டுக்கல் பிரிவில் இந்திய அரசின் உதவியோடு பத்து போக்குவரத்து உதவி நிலையங்களை நிறுவி, அரசு நெடுஞ்சாலை சுற்றுக்காவல் படையினை வலுப்படுத்தியிருக்கிறது. இந்தப் போக்குவரத்து உதவி நிலையங்களின் பணிகள் விபத்துக்களைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதும், குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்க வழக்குத் தொடுப்பதுமாகும்.

பெண் காவலர்கள்.

25. தமிழ்நாடு காவல் துறையில் பெண் காவல் படைப் பிரிவு ஒரு முக்கிய பங்கு பெற்றுள்ளது. சாலைப் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பொதுமக்களுக்கு உதவுதல் ஆகிய பணிகளை இந்தப் பிரிவு ஆற்றி வருகிறது. பெண்களைச் சோதனையிடுதல், கைது செய்தல், அவர்களை நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லுதல் மற்றும் இளம் குற்றவாளிகளைக் கவனித்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் பெண் காவலர்களின் பணி இன்றியமையாததாக உள்ளது. இந்த பெண் காவலர் பிரிவின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்கள் எவ்வித இடையூறுமின்றி கடமைகளை ஆற்றிட வசதியாக இப்பிரிவிற்கு என்று தனியாக ஒவ்வொரு காவல் நிலையத்தோடும் ஒட்டியவாறு கட்டிடம் கட்ட அரசு அண்மைக் காலத்தில் அனுமதி வழங்கியிருக்கிறது. தற்போது இம்மாநிலத்தின் பெண் காவலர் பிரிவில் 82 பெண் சார்பு ஆய்வாளர்களும், 73 பெண் தலைமைக் காவலர்களும் மற்றும் 666 பெண் காவலர்களும் உள்ளனர்.

தேர்வும், பயிற்சியும்.

26. அனைத்து மாவட்ட காவல் படைக்கும், சென்னை நகர் அணிகளுக்கும் இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின்

அணிகள் ஆகியவைகளுக்கு இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 18 ஆம் நாள் முதல் நடைபெற்றது. நகருக்கும் மற்றும் அனைத்து மாவட்டங்களுக்கும் சேர்த்து 3,944 பேர்களும், சிறப்புக் காவல் படையின் அனைத்து பிரிவுகளுக்கும் 542 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி அளிக்கும் பொருட்டு, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகளைத் தவிர இம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பத்து தற்காலிக பயிற்சி மையங்களையும் அரசு ஏற்படுத்தியது.

27. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் அணிகளுக்கு (பட்டாலியன்கள்) அனுப்பப்பட்டவர்களின் பயிற்சிக் காலம் 31—1—1985-ல் முடிந்தது. தமிழ்நாடு காவல் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் தற்காலிக பயிற்சி மையங்களுக்கு அனுப்பப்பட்டவர்களின் பயிற்சிக் காலம் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் முடிந்தது.

## பகுதி 2.

### செய்தி தொடர்பு.

28. காவல் தலைமையகத்திற்கும் கீழ்மட்டத்திலுள்ள எந்த ஒரு அமைப்பிற்கும் அல்லது செய்தித் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்ட நடமாடும் வாகனங்களுக்கும் இடையே தொடர்ச்சியான தகவல் தொடர்பினை உறுதி செய்கின்ற அமைப்பினை ஏற்படுத்தியதன் வாயிலாக காவல் துறையின் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. தமிழகக் காவல் துறையின் தகவல் தொடர்புப் பிரிவில் அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றமானது, காவல் துறையின் பணிப் பளுவை கணிசமான அளவிற்குக் குறைத்ததோடு மட்டுமன்றி, பொதுமக்களுக்கு சிறப்பான பணிகளை ஆற்றக் கூடிய பெரியதொரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

29. காவல் துறையில் உள்ள நுண்கலைக் கருவி (Micro wave) மற்றும் மீவுயர் அலைப் பிணைப்புக் கருவிகள் (V.H.F.) மூலம் அனைத்து மாவட்டத் தலைமை இடங்களும் மாநிலத் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இச் சாதனங்களின் மூலம் ஒலி மற்றும் தொலையச்சுப் பொறிகளின் நேரடித் தொடர்பு செயல்படுத்தப்படுகிறது.



30. தமிழ்நாட்டில் உள்ள 965 காவல் நிலையங்களில் 903 காவல் நிலையங்களும் 98 உட்கோட்டங்களில் 56 உட்கோட்டங்களும் மீவுயர் அலை பிணைப்பு கருவிகள் (V.H.F.) மூலம் இணைக்கப்பட்டுள்ளன இதனால் மாநிலத் தலைமையிடத்தில் இருந்து பெரும்பாலான காவல் நிலையங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடிகிறது.

31. இதுவும் தவிர 861 காவல் நிலையங்களிலும், 162 புறக் காவல் நிலையங்களிலும், தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீதியுள்ள காவல் நிலையங்களுக்கும் மற்றும் புறக் காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதிகள் வெகு விரைவில் ஏற்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

32. 73.08 இலட்ச ரூபாய் செலவில் சென்னை நகரில் பல்முனை வானொலி தொலைபேசி முறை (Multi-access Radio Telephone System) ஏற்படுத்த அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது. ஒரு அலுவலர் மற்றொரு அலுவலருடனும் மற்றும் காவல் துறையிலுள்ள உயர் அலுவலர்களுடனும் இந்த ரேடியோ தொடர்பு சாதனங்களைக் கொண்டு தொலைபேசியில் பேசுவது இந்த முறையினால் எளிதாகிறது. தபால் தந்தித் துறையிலுள்ள தொலைபேசிக் கருவிகள் மழை மற்றும் கேபில்கள் பழுதடைவதனால் இயங்காத நேரத்தில் இந்தத் தொடர்பு முறை சிறப்பாகப் பணியாற்ற உதவுகின்றது.

33. மையப் பேரரசின் ஏழாவது நிதிக் குழு அளித்த நவீனப்படுத்தும் திட்டத்தின் நிதிகளைக் கொண்டும், மாநில நிதியைக் கொண்டும் 1,800 வாக்கி—டாக்கி கருவிகள் வாங்கப்பட்டு பல்வேறு மாவட்டங்களில் உள்ள காவல் நிலையங்களில் உபயோகப்படுத்தப்படுவதோடு, தமிழ்நாடு சிறப்புக் காவல் துறை, சென்னை நகரக் காவல் துறை, இருப்புப் பாதை காவல் துறை ஆகியவற்றிலும் பயன்படுத்தப்படுகிறது. ரோந்து காவலர்களுக்கு பயன்படுவதற்காக ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 2 கருவிகள் வீதம் அளிக்கப்பட்டுள்ளன. ரூபாய் 40 இலட்சத்தில் 400 இருவழிச் செய்திக் கருவிகள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது விலை உயர்ந்து விட்டதால் 324 கருவிகளை உடனடியாக வாங்குவதற்கு 50 சதவீதம் முன்பணம் தமிழக அரசின் நிறுவனமாகிய Elcot-டிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

34. மிக உயர் அலைப் பிணைப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் செய்திப் பிரிவில் முக்கிய இடம் வகிக்கின்றன. 83 நிலையங்களும், ஐந்து கட்டுப்பாட்டு நிலையங்களும் கொண்டு இவை செயல்படுகின்றன. வெள்ளம் போன்ற அவசரக் காலங்களில் விரைந்து செயல்பட 12 அவசர நிலையங்கள் முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

35. செய்தித் தொடர்பினைத் துரிதப்படுத்துவதற்காகப் பலவழி கொண்ட அதி மீவுயர் நுண்ணலை முறை ரூபாய் 120 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டது. 1984 ஆம் ஆண்டில் உள்ள மீவுயர் அலைப்பிணைப்பு முறை கோவை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, நாகர்கோயில், வேலூர் நீங்கலாக உள்ள மற்ற மாவட்டங்களுடன் பலவழி கொண்ட அதி மீவுயர் மின்னலையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு மார்ச் மாதத்திற்குள், கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் 1985–86-க்குள் மீதமுள்ள மாவட்டங்களுக்கும் இவ்விணைப்பு முறை செயல்படுத்தப்படும். அநேகமாக இதற்கு தேவையான எல்லாக் கருவிகளும் இந்திய எலக்ட்ரானிக் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டு, மாவட்டங்களில் இவை பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள கருவிகள் பொருத்தப்படுவது விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்யும்பொருட்டு தனியார் தானியங்கி முறையினையொத்த ஒரு 200 மீட்டர் மைக்ரோ புராஸசர் சென்னை நுண்ணலை துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

36. இவ்வாண்டில் காவல் துறையினரின் பல்வேறு பிரிவுகளில் பயன்படுத்தப்படுவதற்காக ரூபாய் 31.07 இலட்சம் செலவில் 40 மோட்டார் வாகனங்கள் வாங்க அரசு அனுமதியளித்துள்ளது. இது தவிர உபயோகமற்றுப்போன 178 வாகனங்களுக்குப் பதிலாக புதிதாக 178 வாகனங்கள் வாங்க ரூபாய் 1,39,69,500 அரசு ஒப்புதல் செய்துள்ளது. காவல் துறையினர் விரைந்து செயல்படவும், தங்கள் பணிகளைச் செவ்வனே ஆற்றிடவும், வாகனங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதன் அவசியத்தினை உணர்ந்து, அதற்கு நல்ல முறையில் இயங்கும் வாகனங்களின் அடிப்படைத் தேவையைக் கருத்திற்கொண்டு திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் காவல் துறை வாகனங்களுக்கு மட்டும் பழுதுபார்ப்பதற்கென்று ஒரு காவல் போக்குவரத்து பணிமனையினை நிறுவ அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆவடியிலுள்ள காவல் போக்குவரத்து பணிமனை, தமிழ்நாடு சிறப்பு காவல்படை மற்றும் சென்னை நகர காவல் துறையில் உள்ள வாகனங்களை பழுது பார்ப்பதற்கு பயன்படுகின்றது.



## பகுதி 3.

### அறிவியல் சாதனங்கள்.

கம்ப்யூட்டர் பிரிவு :

37. கம்ப்யூட்டர்களும், மின்னணுவியல் சாதனங்களும் கடுமையான உடலுழைப்பைத் தவிர்க்க வழிவகை செய்துள்ளன. காவல் துறையில் புள்ளி விவரங்களைச் சேகரித்து வைத்திருக்கவும், தொலை தூரத்திலுள்ள காவல் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும், கைரேகைகளை தெரிந்து கொள்ளவும் மற்றும் தரம் பிரிக்கவும், காவல் துறையினருக்கும் ஆராய்ச்சியாளருக்கும் தேவையான புள்ளி விவரங்களைச் சேகரித்து வைக்கவும் கம்ப்யூட்டர்கள் காவல் துறையில் பயன்படுத்தப்படுகின்றன.

38. மத்திய அரசின் காவல் துறையினை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 1971ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழகக் காவல் துறை கம்யூட்டர் பிரிவு, குற்றங்களைத் தடுத்திடவும், கண்டுபிடித்திடவும் புள்ளியியல் சேகரிப்புக்கும் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

39. இப்பிரிவு காவல் துறை துணைத் தலைவரின் (தொழில் நுட்பப் பிரிவு) கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. 1976 ஆம் ஆண்டில் டி.டி.சி. 316 வகை கம்ப்யூட்டர் நிறுவ, நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூபாய் 74.00 இலட்சம் அனுமதி அளித்தது. தமிழக அரசும் இந்தத் தொகையை இரண்டு கட்டங்களில் செலவழிக்க ஆணையிட்டது.

40. புதிதாக நிறுவப்பட்ட கம்ப்யூட்டர் 1979 ஆம் ஆண்டு சூலை முதல் கீழ்க்கண்ட பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது :—

(அ) குற்றங்கள்—குற்றவாளிகள் :

கண்டுபிடிக்க இயலாத சொத்து வழக்குகள் பற்றிய குற்றங்களில் குற்றவாளிகள் கையாளும் செயல்முறை அடிப்படையில் குற்றவாளிகளின் பட்டியல் தயாரித்து வழக்கினை விசாரிக்கும் அதிகாரிக்கு அனுப்பப்படுகிறது. கம்ப்யூட்டர் ஆலோசனை குறிப்பாணைகளை மாவட்டத்திலுள்ள டெலிபிரின்டருடன் தொடர்பு படுத்திட 18–5–1984 அன்று ஆன்–லைன் டெலி கம்யூனிகேஷன் முறை புகுத்தப்பட்டது. சொத்து பற்றிய குற்ற வழக்குகளில் துப்பு துலக்கிட இம்முறை விசாரணை நடத்தும் அலுவலர்களுக்குப் பெரிதும் உதவியாக உள்ளது.

[1985 ஜூலை 8

1979 ஆம் ஆண்டு முதல் அனுப்பப்பட்ட கம்ப்யூட்டர் ஆலோசனை குறிப்பாணைகள் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. (1) | | | | | அனுப்பப்பட்ட குறிப்பாணைகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|---|---|---|
| 1979 | .. | .. | .. | .. | 16,587 |
| 1980 | .. | .. | .. | .. | 21,877 |
| 1981 | .. | .. | .. | .. | 16,093 |
| 1982 | .. | .. | .. | .. | 12,108 |
| 1983 | .. | .. | .. | .. | 16,911 |
| 1984 | .. | .. | .. | .. | 17,053 |

(ஆ) விரல் ரேகை முறை :

சென்னை விரல் ரேகை பதிவுக்கூடத்தில் 2,22,900 குற்றவாளிகளின் விரல் ரேகைகள் கொண்ட கம்ப்யூட்டர் புள்ளி விவரங்கள், பெருந்தொகுப்பு தயாரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. கம்ப்யூட்டரில் வைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளின் விரல் ரேகையுடன் சந்தேகப்பட்ட நபரின் விரல் ரேகையை ஒப்பிட்டுப் பார்த்து அதுபற்றிய விவரங்கள் மாவட்ட காவல் துறையினருக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகிறது.

(இ) எஸ். எச். ஆர். (காவல் நிலையப் பதிவேடு) :

காவல் நிலையங்கள், சரகங்கள், உட்கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் காவலர் நிர்வாகத் திறனை ஆராய்வதற்காகவும், மாதாந்திர அறிக்கைகள் தயார் செய்யவும் தேவையான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

(ஈ) பி.ஐ முறை (பணியாளர் பற்றிய தகவல் தொகுப்பு) :

இம்முறையின்படி காவல் துறையில் பணிபுரியும் காவல் பணியாளர்களின் விவரங்கள் பற்றியும், அவர்கள் பணியில் சேர்ந்த தேதி, இட மாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் சமூக விரோத சக்திகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்களையும் கம்ப்யூட்டர் முறையில் சேகரிக்க நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.



1985 ஜூலை 8]

இந்தியாவிலேயே முதன்முறையாக ஆன்-லைன் கம்ப்யூட்டர் இயக்கமுறை தமிழகத்தில்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது பெருமை மிகுந்த சாதனையாக எடுத்துக் கூறத்தக்கது. இம்முறையின்படி சென்னையிலுள்ள கம்ப்யூட்டரிடமிருந்து நேரடியாக தேவையான தகவல்களை மாவட்டத் தலைமையிடங்களிலிருந்து கொண்டே பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுவரை சென்னையிலுள்ள கம்ப்யூட்டர் 18 காவல் மாவட்டத் தலைமையிடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்முறையினால் குற்றங்கள் பற்றியும், குற்றவாளிகள் விரல் ரேகைகள் போன்ற விவரங்களையும் உடனுக்குடன் மாவட்ட தலைமையிடங்களிலேயே பெற்றிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம் :

41. இந்தியாவிலேயே தமிழகத்திலுள்ள விரல் ரேகைப் பதிவுக்கூடம்தான் மிக நவீன முறையில் அமைக்கப்பட்டதொன்றாகும். தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் காவல் நிலையங்களிலும் கைது ஆகும் குற்றவாளிகளையும் சந்தேகக் குற்றவாளிகளையும் பற்றிய முன் தகவல்களை அறிந்து புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு இப்பிரிவு உதவி அளித்து வருகிறது. மாநிலத்தின் தலைநகரிலும், எல்லா காவல் மாவட்ட தலைமையிடங்களிலும் விரல் ரேகைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவில் பணியாற்றுபவர்கள் கொலை, கொள்ளை, கன்னக்களவு போன்ற குற்றங்கள், நடந்த இடங்களுக்கு நேரில் சென்று அவ்விடங்களிலுள்ள குற்றவாளிகளின் விரல் ரேகைகளை எடுத்து விரிவுபடுத்தி, விரல்ரேகைப் பதிவுக் கூடத்தில் உள்ள விரல் ரேகைகளுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்து குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க பெரிதும் உதவுகின்றனர். இந்தப் பிரிவில் பல்வேறு குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சற்றேறக்குறைய 5.89 இலட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றம் நடந்ததாக செய்தி கிடைத்தவுடன் விரல் ரேகைப் பிரிவில் பணியாற்றுபவர்கள் தேவையான தகவல்களை அளித்து உதவுவார்கள்.

[1985 ஜூலை 8

42. பல ஆண்டுகளாக நன்முறையில் செயல்பட்டுவரும் விரல் ரேகை பதிவுக்கூடத்தினை மேலும் நவீனப்படுத்த வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும். ரூபாய் 13 லட்சம் செலவில் மீராகோடு என்ற எலெக்ட்ரானிக் சாதனம் இந்த பிரிவிற்கு வாங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குற்றம் நடந்த இடத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ரேகைகளைக் கொண்டு குற்றவாளியை கண்டு பிடிக்க ஏதுவாகிறது.

43. குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகள் மிக நுண்ணிய அளவில் எல்லா அடையாளங்களும் காணக் கூடிய குறியீடுகளுடன் படம் பிடிக்கப்பட்டு குற்றம் நடந்த இடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ரேகைகளுடன் ஒப்பு நோக்கி குற்றவாளியை கண்டு பிடிக்க மீராகோடு சாதனம் பயன்படுகிறது. வேறொரு மறு ஆய்வு சாதனத்தின் மூலம் கைரேகைப் பதிவுகள் பெரிதுப் படுத்தப்பட்டு திரையில் காண்பிப்பதன் மூலம் வெகு விரைவில் விரல் ரேகைகளை நிபுணர்கள் ஒப்பிட்டுப் பார்த்து, குற்றவாளியைக் கண்டு பிடிக்கவும் இச்சாதனம் பெரிதும் பயன்படுகிறது.

44. தற்போதுள்ள திட்டத்தின்படி மீராகோடுவில் சுமார் 90,000 கடும் குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகள் தொகுக்கப்படும். இதுவரைக்கும் சுமார் 86,843 விரல் ரேகைப் பதிவுகள் சேகரிக்கப்பட்டு, அதில் 41,000 விரல் ரேகைப் பதிவுகள் நுண்ணிய அளவில் படம் எடுக்கப்பட்டு மீராகோடு கருவியில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், அடுத்த கட்டமாக சுமார் இரண்டு லட்சம் விரல் ரேகைப் பதிவுகள் நுண்ணிய அளவில் படம் எடுக்கப்பட்டு மீராகோடுவில் தொகுத்து வைக்கப்படும். இப்பணி முடிந்த பிறகு குற்றம் நடைபெற்ற இடத்தில் கிடைக்கும் விரல் ரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, குறுகிய காலத்தில் உரிய தகவல்கள் காவல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்தியாவில் தமிழ் நாட்டில் மட்டும்தான் குற்றவாளிகளை எளிதாக அடையாளம் தெரிந்து கொள்ள மீராகோடு முறை கொண்டுவரப்பட்டுள்ளது.

## தடய அறிவியல் துறை.

45. தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம் 1980 ஆம் ஆண்டிலிருந்து ஓர் இயக்குநரின்கீழ் தனித் துறையாக இயங்கி வருகிறது. அண்மையில் இத்துறை தமிழ்நாடு தடய அறிவியல்



1985 ஜூலை 8]

துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்துறையில் கீழ்க்கண்ட 10 பிரிவுகள் உள்ளன :—

1. துப்பாக்கி இயல்.
2. உயிரியல்.
3. வேதியியல்.
4. ஆவணங்கள்.
5. ஆயத்தீர்வை.
6. பௌதீகம்.
7. மது விலக்கு.
8. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி.
9. குருதி நீரியல்.
10. நச்சு இயல்.

மேலும் இத்துறையில் மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர் ஆகிய ஐந்து இடங்களில் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன. சேலம், திருச்சி, கடலூர் ஆகிய மூன்று இடங்களிலும் மாவட்ட தடய அறிவியல் ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு காவல் மாவட்டத்திற்கும் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் அமைக்கப்பட்டு, மொத்தம் 21 ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்துறை தடய அறிவியலில் இரண்டாண்டு முழு நேர பட்ட மேற்படிப்பு வகுப்புகள் நடத்தி வருகிறது. இவ்வகுப்பில் மொத்தம் 12 இடங்கள் உள்ளன. சென்னைப் பல்கலைக் கழகம் தடய அறிவியல் பண்டாரகர் ( Ph. D. ) பட்டம் வழங்குவதற்கு தமிழக தடய அறிவியல் துறையை ஆராய்ச்சி நிலையம் ஆக இயங்க அனுமதி அளித்துள்ளது.

46. மேலுறை ஆவிப் பகுப்பாய்வு கருவி (Head Space analyser) ஒன்று, ரூபாய் 4.75 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது. உயிரியல் மற்றும் குருதி நீரியல் பிரிவுகளில் பயன்படும் பொருட்டு ஒரு இலட்சம் ரூபாய் செலவில் ஒரு ஆழ்நிலை உறைகலனை ( Deep freezer) வாங்குவதற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. மேலும் இத்துறையின் தரத்தை உயர்த்துவதற்கு ஒரு மின் அணுவியல் ஸ்டென்ஸில் இயந்திரத்தையும் ஒரு படி எடுக்கும் கருவியையும் வாங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

47. தடய அறிவியல் துறையின் இயக்குநரை ஆக்ஸ்போர்டு, லண்டனில் நடைபெற்ற அனைத்துலக தடய அறிவியல் கழக மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அரசு அனுப்பி வைத்தது. மைய அரசின் உள்துறையின் கீழ் இயங்கி வரும் காவல் ஆராய்ச்சிப் பிரிவு, இவ்வாண்டில் தடய அறிவியல் ஆய்வக இயக்குநர்கள் மாநாட்டையும், அனைத்திந்திய தடய அறிவியல் மாநாட்டையும் நடத்த தமிழகத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. அரசு, இம்மாநாட்டிற்காக ரூபாய் 50,000 நிதி ஒதுக்கியுள்ளது.

பகுதி 4.

காவலர் நலம்.

48. காவல் துறையினரின் நலனுக்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து உள்ளது. பொதுமக்களின் கண்ணோட்டத்தில் காவல் துறையினரின் ஒழுக்கம் மிக முக்கியமானதாகும். எனவே அதனை மேம்படுத்தும் வகையில் ஆய்வாளர் முதல் காவலர் வரை உள்ள அனைவருக்கும் அத்தியாவசியப் பண்டங்கள் சலுகை விலையில் கொடுக்கப்படுகின்றன. இதற்காக அரசு தற்போது பொது அங்காடியில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலையில் பாதியளவிற்குச் சலுகை அளிக்கும் வகையல் அரசு மானியம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இச்சலுகை காவல் வானொலிப் பிரிவு மற்றும் சுருக்கெழுத்துக் கூடப் பணியாளர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

காவலர் வீட்டுவசதித் திட்டம்.

49. காவல் துறையில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கு 80 விழுக்காடு வீட்டு வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கத்துடன் 1955—56 ஆண்டில் தமிழ் நாட்டில் காவலர் வீட்டு வசதி திட்டம் துவக்கப்பட்டது. 1979—80 முதல் 1983—84 வரை காவல்துறை மேல்நிலை பணியாளர்களுக்கு 524 குடியிருப்புக்கள், காவல் துறை கீழ்நிலை பணியாளர்களுக்கு 830 குடியிருப்புகள் மற்றும் 5,097 படை வீடுகள் (Barracks) கட்டுவதற்கு ஏழாவது நிதிக்குழு ரூபாய் 6.75 கோடி ஒதுக்கியது. இதனை பயன்படுத்தி, தமிழ்நாடு அரசு முதுநிலைப் பணியாளர்களுக்கு 523 குடியிருப்புகள் கட்டவும், காவல்துறை சார்நிலைப் பணியாளர்களுக்கு 3,487 குடியிருப்புகளும், 2,445 படைவீடுகளும் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒதுக்கியுள்ள



மானியத்தைக் காட்டிலும் அதிகமாகப் ஏற்படும் கூடுதல் செலவாகிய ரூ. 13.30 கோடியை மாநில அரசே ஏற்றுக் கொள்ளும். இந்த 6,455 வீடுகளும் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

50. ஏழாவது நிதிக்குழுவின் மானியத்தில் 3,875 குடியிருப்புகளும், படைவீடுகளும் காவல் துறையினைருக்காக இதுவரை கட்டப்பட்டு, குடிபோவதற்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள குடியிருப்புகளும், படைவீடுகளும் பலநிலைகளில் கட்டுமானப் பணியில் உள்ளன.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்.

51. காவல் துறையில் பணியாற்றும் காவல் பணியாளர்களுக்குச் சொந்த வீடு கட்டித்தர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகம் ரூபாய் 100 இலட்சம் முலதனத்துடன் 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. காவல்துறை அதிகாரிகளும், காவலர்களும் ஓய்வு பெறும் நேரத்தில் அவர்களுக்கு என்று சொந்த வீடு வழங்கிட வேண்டுமென்ற நோக்கத்துடன், வீடுகள் கட்டுவதற்கு அரசு நிதி உதவி செய்வது பாராட்டத்தக்க நடவடிக்கையாகும்.

52. இக்கழகம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டில், ரூ. 164 லட்சத்தில் 670 வீடுகளைக் கட்டியுள்ளது. இவ்வீடுகள், பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

53. மேலும் கோயம்புத்தூர் மாவட்டம் கணபதி என்ற இடத்தில் 'ஹட்கோ' விலிருந்து பெற்ற நிதி உதவியான ரூ. 74.491 லட்சத்தினைக் கொண்டு வீடுகள் கட்டப்படுகின்றன. நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 104 குடியிருப்புகளும் மற்றும் குறைந்த வருவாய் பெறுபவர்களுக்கு 328 குடியிருப்புகளும் ரூ. 194 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

54. மேற்கூறிய திட்டங்கள் மட்டும் அல்லாது, திம்மராஜபுரம் (நெல்லை மாவட்டம்), வடபழஞ்சி (மதுரை மாவட்டம்), தொரப்பாடி (வட ஆர்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் வீடுகள் கட்ட இக் கழகம் தீர்மானித்துள்ளது.

55. 1984—85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் கட்டப்பட்ட வீடுகளை வாங்குவதற்கு, காவலர்களுக்கு முன்பணமாக அளிப்பதற்காக ரூபாய் 1 கோடி ஒதுக்கியுள்ளது.

56. காரைக்குடி, கழனிவாசல் கிராமம், நாமக்கல், வசந்த புரம் கிராமம் ஆகிய இடங்களில் இக்கழகம் நிலங்களை தன்ன கப்படுத்திக் கொண்டுள்ளது. சென்னை நகரில் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் கிடைத்த சில உபரி நிலங்களையும் அரசு இக் கழகத்திற்கு ஒதுக்கியுள்ளது. இதற்காக, அனைத்து மாவட் டங்களிலும் இக்கழகம் தகுந்த நிலங்களை தேர்வு செய் துள்ளது.

காவல் நிலையக் கட்டிடங்கள்

57. காவல் நிலையங்கள் மற்றும் புறக்காவல் நிலையங்களுக் குக் கட்டிடங்களை கட்டித் தர கொள்கை அளவில் அரசு அனைத்து முயற்சிகளையும் கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள 965 காவல் நிலையங்கள் மற்றும் 186 புறக்காவல் நிலையங் களில், 324 காவல் நிலையங்களும், 97 புறக்காவல் நிலையங் களும் தற்சமயம் தனியார் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அக்கட்டிடத்தின் வாயிலாக அரசு ரூ. 8.5 இலட் சத்தை ஆண்டு ஒன்றிற்கு வாடகையாக கொடுக்கின்றது. 150 காவல் நிலையங்கள்/புறக்காவல் நிலையங்கள் கட்டுவதற்கு அரசு முதலில் ரூ. 350 லட்சம் ஒதுக்கியதில், இதுவரை 82 கட்டிடங்கள் கட்டப்பட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. பிற கட்டுமானப் பணிகள் முன்னேறி வரு கின்றன.

58. அண்மையில் இரண்டாவது கட்டமாக அரசு ஒதுக்கிய ரூ. 3,31,71,000-ல் காவல் நிலையங்கள்/புறக் காவல் நிலையங் கள் கட்டும் பணி பலவித நிலைகளில் இருக்கின்றன.

59. மாநிலத்திலுள்ள சில காவல் நிலையங்களில் பெண் காவல் பிரிவுகளுக்கு இடம் வசதி செய்துதர 1982 ஆம் ஆண்டில் காவல் துறைக்கு 10 பெண் காவல் இணைப்புக் கட்டிடங்கள் கட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டன. மேலும் 50 இணைப்புக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ரூ. 25 இலட்சத்தை அரசு ஒதுக் கியதில் 7 கட்டிடங்கள் கட்டப்பட்டு காவல்துறையிடம் ஒப் படைக்கப்பட்டன.

குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் மற்றும்
காவல் துறைப் பதக்கங்கள்

60. காவல்துறையினரின் திறமை மிகுந்த பணி மக்களாட்சி மலர்ந்துள்ள நாட்டில் ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். காவல் துறையினரின் திறமையைப் பிரதிபலிக்கும் வகையில் நல்ல பணி





புரியும் காவல் துறையினருக்குத் தகுந்த மதிப்பளிப்பதன் மூலம் அவர்களிடம் உள்ள திறமையை வளர்க்க முடியும். இதனைக் கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் பதக்கங்கள் வழங்கப்படு கின்றன.

61. 1984 ஆம் ஆண்டில், 22 காவல் துறை அலுவலர் களுக்கும், காவலர்களுக்கும் குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கமும், காவல்துறை பதக்கமும் வழங்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் ஊர்க்காவல் படை பதக்கம், இரண்டு ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு விடுதலை நாளன்று இரண்டு ஊர்க்காவல் படையின ருக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்

(வீரச்செயல் மற்றும் சிறப்புமிக்க கடமைப்பற்று உறுதிக்காகவும்)

62. வீரச் செயலுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் நான்கு காவல்துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக் கும் 1984 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. சிறப்புமிகு பணிக் காக 48 காவல்துறை அலுவலர்களும், காவலர்களும் முதலமைச் சரின் காவல் பதக்கத்தைப் பெற்றனர். 1984-ல் முதலமைச்ச ரின் ஊர்க்காவல் படை பதக்கத்தை நான்கு ஊர்க்காவல் படை யினர் பெற்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் (பாராட்டத்தக்க பணிக்காக)

63. பத்தாண்டு பணி முடித்தவர்களும் எவ்விதக் குறையு மின்றி சிறப்புமிக்க பணி செய்த தலைமைக் காவலர்களும், காவலர்களும் மற்றும் இவர்களுக்கு சமமாக பதவி வகிப்பவர் களும், இத்திட்டத்தில் பதக்கம் பெறத் தகுதியுடையவராகிறார் கள். 1982 ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று, அரசு முதல் தடவையாக இத்திட்டத்தை அறிவித்தது. 1984 ஆம் ஆண் டில், 1,378 பேருக்கு இப் பதக்கம் வழங்கப்பட்டது. 1985-ல் 1,262 பேர் இப் பதக்கம் பெற்றார்கள். இவ்விருதை அரசு ஆண்டுதோறும் பொங்கல் தினத்தன்று அறிவிக்கிறது.

### தமிழ்நாடு காவலர் நல நிதி.

64. காவல் துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவுபெறா அனைத்து ஊழியர்களின் நலத்திற்காக தமிழ்நாடு காவலர் நல நிதி தொடங்கப்பட்டது. இந்நிதியின் வருவாய், இத்திட்டத்தில் சேருபவர்களிடமிருந்து பெறப்படும் சந்தாத் தொகை மற்றும் அரசிதழ் பதிவு பெற்றவர்களிடமிருந்து பெறப்படும் நிதி ஆகியவற்றின் மூலம் திரட்டப்படுகிறது. ஆண்டுதோறும் கொடுக்கப்படும் மானியத்தின் மூலமும் இதற்கு நிதி திரட்டப்படுகிறது. ஆண்டுதோறும் அரசு இந்நிதிக்கு வழங்கி வந்த மானியம் ரூ. 2.5 இலட்சத்தை தற்போது ரூ. 3.5 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

65. இந்நிதி, கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது :—

(அ) காவலர் குடியிருப்புகளில் சஞ்சிகைகள் வாங்குதல்.

(ஆ) துறையிலுள்ள அரசிதழ் பதிவு பெறா அதிகாரிகள் மற்றும் காவலர்களின் குழந்தைகளின் தொழில் நுட்பக் கல்விக்கு உதவித் தொகை அளித்தல்.

(இ) ஈமச் சடங்கிற்கு ரூ. 100 கொடுத்தல்.

(ஈ) இறந்து போனவரின் மனைவி மற்றும் வாரிசுகளுக்கு நிதி உதவி செய்தல்.

(உ) காச நோய், புற்று நோய், தொழு நோய் போன்ற நோய்களினால் அல்லல்படுபவர்களுக்குச் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கும், ஊட்டச் சத்து பெறுவதற்கும் நிதி உதவி செய்தல்.

(ஊ) மத்தியக் குழுவின் பரிந்துரைப்படி தேவையானவர்களுக்கு ஏற்ற பொதுநல உதவி அளித்தல்.

66. ஒவ்வொரு ஆண்டும், பொறியியல், மருத்துவம், கலை விஞ்ஞானம் போன்ற பட்டம், மற்றும் பட்டயப் படிப்பிற்காக (Diploma) அரசிதழ் பதிவு பெறா ஊழியர்களின் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. படிப்பின் தன்மையைப் பொறுத்து ஆண்டு ஒன்றிற்கு ரூ. 250 முதல் ரூ. 625 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது.

உறுப்பினர்களின் குடும்பத்தினர் இறக்க நேர்ந்தால், இறுதிச் சடங்கின் செலவுகளுக்காக ரூ. 100 இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. காவல் துறையில் பணிபுரிவோரே இறக்க நேரிட்டால் ரூ. 300 முதல் ரூ. 700 வரை அவருடைய குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டு இத்திட்டத்தில் ரூ. 2,34,740 செலவு செய்யப்பட்டுள்ளது.





### தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்பு உதவித் தொகை நிதி.

67. தமிழ்நாடு காவலர் நலநிதியைத் தவிர தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்புதவித்தொகை நிதியும் உள்ளது. காவல் துறை அரசிதழ் பதிவு பெறாத நிர்வாக அலுவலர்களின் பிள்ளைகளில் தகுதியுடையோருக்கு மேல்படிப்பும் தொழில் நுட்பக் கல்வியும் பயில ஆண்டுதோறும் இந்த நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. நன்கொடை மூலம் இதற்கு நிதி திரட்டப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டு ரூபாய் 30,250 படிப்புதவித் தொகையாக இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

### தமிழ்நாடு காவலர் அமைப்பு.

68. காவல் துறையைச் சார்ந்த அமைச்சுப் பணியாளர் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களின் குடும்பங்களின் நல் வாழ்வுப் பணிகளைத் தோற்றுவித்து, வளர்த்து ஒருங்கிணைப்பது தமிழ்நாடு காவலர் நல வாழ்வு நிறுவனத்தின் முக்கிய நோக்கம் ஆகும். காவல் துறையைச் சார்ந்த குடும்பங்களுக்கு உபரி வருவாய்க்கு வழி வகுத்தல் மற்றும் அவர்களுக்கு பொழுது போக்கு, மருத்துவம் மற்றும் கல்வி வசதி செய்து கொடுத்தல் போன்ற திட்டங்கள் இதில் இடம் பெறும். நூற்பு, தையல், பாய்முடைதல், தீப்பெட்டி தயாரித்தல், மாடு மற்றும் கோழி வளர்ப்பு ஆகிய பல்வேறு தொழில்கள் மூலம் காவலர் குடும்பங்கள் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொண்டுள்ளனர்.

## பகுதி 5.

### மைய அரசிடமிருந்து பெற்ற உதவி.

69. 1980–81 முதல் 1989–90 வரையிலான பத்தாண்டு காலத்திற்கு மாநில காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு இரண்டாவது முறையாக நீட்டித்திருக்கிறது. 1980–81 முதல் 1983–84 வரையிலான நான்காண்டு காலத்திற்கு மைய அரசு ரூ. 262.985 இலட்சத்தை கடனாகவும் மானியமாகவும் வழங்கியுள்ளது. வி.எச்.எப்., வாக்கி-டாக்கி, யு.எச்.எப்., மோட்டார் சைக்கிள்கள், கம்ப்யூட்டர் சாதனங்கள், புலன் விசாரணைக்கு உதவும் அறிவியல் சாதனங்கள் மற்றும் திருச்சியில் மண்டல காவல்துறை போக்குவரத்துப் பணிமனை திறத்தல், மதுரையில் மண்டல குற்றஞ் சார்ந்த அறிவியல் ஆய்வகத்தை கட்டுதல் ஆகியவற்றிற்கு இப்பணம் முழுமையாக செலவிடப்பட்டு

விட்டது. திருச்சி, வேலூர், கோயம்புத்தூர் ஆகிய சரக தலைமையிடங்களுக்கு நுண்ணலை நிலையங்கள் அமைக்க ரூ. 162.05 இலட்சம் வழங்கப்பட்டு, அப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. இவ்வாண்டில் தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு தேவையான வேன்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சாதனங்கள் வாங்கும் பணி மேற்கொள்ளவேண்டியுள்ளது. மைய அரசின் மானியத்தைத் தவிர, 1980–81 முதல் 1983–84 ஆம் ஆண்டு வரை ரூபாய் 170.07 லட்சத்தை மாநில அரசு செலவிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மாநில அரசு இத் திட்டத்தின் கீழ் பலவித சாதனங்களை வாங்குவதற்கு ரூபாய் 106.75 இலட்சம் செலவிடத் தீர்மானித்துள்ளது.

70. காவல் துறை மற்றும் ஊர்க்காவல் படை நிர்வாகங்களின் தரத்தை மேம்படுத்த ஏழாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ரூ. 675 லட்சம் முதலீட்டுச் செலவும், ரூபாய் 443 லட்சம் வருவாய்ச் செலவும் ஒதுக்கப்பட்டுள்ளன. மகளிர் காவல் பிரிவு, தனிப் பிரிவு, விரல் ரேகைக் கூடம், ரேடியோ பிரிவு ஆகியவற்றிற்கும், ஊர்க்காவல் படைக்கு வாக்கி-டாக்கி வாங்குவதற்கும் இந்த தொகை முழுவதும் பயன்படுகிறது. இதற்காக வருவாய்த் தலைப்பில் ரூ. 515·73 லட்சமும், மூலதனத் தலைப்பில் ரூ. 1,306.42 லட்சமும் செலவிடப்பட்டுள்ளன. இவைத் தவிர இரயில்வே காவல் துறை குடியுரிமைப் பாதுகாப்பு சட்டத்தை அமுல்படுத்துவது போன்ற சில திட்டங்களுக்காகும் மொத்தச் செலவில் 50 விழுக்காட்டை மைய அரசு ஏற்கிறது.

## பகுதி 6.

## குற்றம் மற்றும் சட்டமும் ஒழுங்கும்.

குற்றம்:

71. வளர்ந்து வரும் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் காவல் துறைக்குப் புதிய பொறுப்புகளைச் சேர்த்துள்ளன. முற்காலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதும், குற்றங்களை கண்டு பிடிப்பதும் காவல்துறையின் பொறுப்பாகும். மக்களாட்சியில் காவல்துறையினரின் பங்கு பெருகி, பல்வேறு வகையான புது வகைப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. திட்டமிட்டு நடத்தப்படும் வன்முறைக் குற்றங்களைத் தடுக்க காவல்துறையினரின் திறமையைக் காட்டும் வகையில் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை தற்போதைய தொழில் நுட்ப காலத்தில் ஏற்பட்டுள்ளது



72. சட்டம் ஒழுங்கை முதலில் பேணிக் காப்பதுடன் குற்றத் தடுப்பும் காவல் துறையினரின் அடிப்படைப் பணிகளாகும். காவல் துறையினரின் வருகை, ரோந்துப் பணி, குற்றத் தடுப்பு நடவடிக்கை ஆகியன இருந்தாலே குற்றங்கள் தடுக்கப்படும். காவல்துறை, சமூக ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் தொடர்ந்த ஒத்துழைப்பால்தான் குற்ற நிலைமைகளை ஒழிக்க முடியும்.

73. தற்போது குற்றங்களை தடுக்க காவல் துறையினர் விரைந்து செயல்பட வேண்டியுள்ளது. தமிழ்நாடு காவல் துறையினர் குற்றத் தடுப்பு சட்டங்களின் பல்வேறு பிரிவுகளின்கீழ் 1984 ஆம் ஆண்டு குற்றவாளிகளை பெருமளவில் கைது செய்துள்ளனர். சமீபத்தில் நடைபெற்ற கொள்ளைகள், குற்ற நடவடிக்கைகள் போன்றவற்றில் காவல்துறையினரின் கடும் நடவடிக்கையினால் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

74. சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டி, அமைதி தவழும் சமுதாயத்தை உருவாக்கவும், புதிய சமுதாயத்தை ஏற்படுத்தவும் காவல்துறை கொண்டுள்ள தளரா முயற்சியினைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் தெளிவாக்குகின்றன:—

### தமிழ்நாட்டில் சொத்து பற்றிய குற்றங்களும் கண்டு பிடிப்புகளும்.

| குற்றத் தலைப்பு. | 1983 | | 1984 | |
|---|---|---|---|---|
| | புகார் செய்யப்பட்டவை. | கண்டு பிடிக்கப்பட்டவை. | புகார் செய்யப்பட்டவை. | கண்டு பிடிக்கப்பட்டவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆதாயத்திற்கான கொலை. | 69 | 29 | 62 | 42 |
| கொள்ளை .. .. | 60 | 32 | 101 | 79 |
| வழிப்பறி .. .. | 366 | 223 | 338 | 228 |
| வீடு உடைப்பு .. | 10,988 | 5,958 | 9,960 | 5,215 |
| பெரிய திருட்டு .. | 25,538 | 17,183 | 22,533 | 15,298 |
| சிறிய திருட்டு .. | 1,916 | 1,801 | 1,878 | 1,763 |
| கால் நடைத் திருட்டு | 1,102 | 983 | 1,015 | 892 |
| மொத்தம் .. | 40,039 | 26,209 | 35,887 | 23,517 |
| கண்டுபிடிப்புகளின் விழுக்காடு. | | 65.5 | | 65.5 |

75. நடப்பாண்டிலும், சென்னையிலுள்ள விரல் ரேகைப் பதிவுக் கூடம், மாவட்டங்களிலுள்ள ஒரு விரல்ரேகைப் பதிவுக் கூடம், தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம், துப்பறியும் நாய்ப் படை மற்றும் கம்ப்யூட்டர் பிரிவு ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு விஞ்ஞான முறையிலான குற்ற ஆய்வுகள் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டன.

76. ''இந்தியாவில் குற்றங்கள்'' ( Crimes in India ) என்ற வெளியீட்டின்படி 1980 ஆம் ஆண்டில் அகில இந்திய அடிப்படையில் மீட்கப்பட்ட திருட்டுச் சொத்து 22.8 விழுக்காடு ஆக உள்ளது. 1979 ஆம் ஆண்டுக் கணக்கை விட இது ஓரளவு குறைவு. கடந்த ஐந்தாண்டுகளில். நாடு முழுவதும் மீட்கப்பட்ட திருட்டுச் சொத்துக்களின் விழுக்காடு 40-ஐ காட்டிலும் உயரவில்லை. ஆனால் தமிழ் நாட்டில் 1978 ஆம் ஆண்டு 41.2 விழுக்காட்டிலிருந்து 1984 இல் 55.3 விழுக்காடு ஆக உயர்ந்துள்ளது. 1983 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 53.6 விழுக்காட்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு 55.3 விழுக்காடாக மீட்கப்பட்ட திருட்டுச் சொத்துக்களின் விழுக்காடு உயர்ந்துள்ளது. குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் காவல் துறையினர் மேற்கொண்ட சீரிய முயற்சியும் காவல் துறையினரின் பணியில் பொது மக்களின் ஆர்வமிக்க பங்கேற்பும், ஒத்துழைப்பும் இதற்குக் காரணங்களாகும்.

77. கீழ்க்கண்ட பத்திகளில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள முக்கியமான சில வழக்குகளின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதாயத்திற்கான கொலை.

78. சென்னை நகரம், ஆர். 1, மாம்பலம் காவல் நிலையக் குற்ற எண் 1519/83 வழக்கில் சென்னை, தியாகராயநகர், தணிகாசலம் சாலை 37 ஆம் எண். வீட்டில் 23–6–1983 அன்று ராமராவ் (70) மற்றும் அவரது மனைவி (60) ஆகிய இருவருடைய கழுத்திலும் துண்டைப் பயன்படுத்தி முறுக்கி கொலை செய்யப்பட்டனர்; ரூபாய் 1 இலட்சம் பெறுமான நகைகள் மற்றும் ரொக்கம் களவாடப்பட்டன. நகரக் காவல் துறையினரின் முறையான, அறிவியல் அடிப்படையில் மேற்கொண்ட தீவிரப் புலன் விசாரணையின் விளைவாக 5–1–1985 அன்று வீட்டு வேலைக்காரியான, அருண்குமார் என்பவரின் மனைவி ராணி என்கிற சாந்தி என்கிற லட்சுமி மற்றும் அவரது கணவன் கைது செய்யப்பட்டனர். அவர்களது சொந்த ஊர் ஆந்திர மாநிலத்திலுள்ள நெல்லூர். இவர்கள் தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களில் நடைபெற்றுள்ள கண்டுபிடிக்கப்படாத பல திருட்டு மற்றும்





கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கலாமென ஐயப்பாடு எழும்பியுள்ளது. மேலும் அவர்கள் ஜி-1 வேப்பேரி காவல் நிலையக் குற்ற எண். 758/83-ல் பதியப்பட்ட வழக்கிலும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இவ் வழக்கில் 62 வயதுள்ள பங்கஜாட்சி என்பவர் வீட்டில் தனியாக இருந்தபோது கழுத்தை நெரித்து கொலை செய்து ரூ. 40,000 மதிப்புள்ள தங்க நகைகள், துணி மணிகள், டேப் ரெக்கார்டர் ஆகியவற்றைத் திருடிச் சென்றனர். இக்குற்றவாளிகளிடமிருந்து இதுவரை ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

79. 7–1–1984 அன்று தர்மபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் சின்னம்மாள் என்பவர் கொலை செய்யப்பட்டு, அவர் அணிந்திருந்த சுமார் ரூபாய் 7,000 மதிப்புள்ள தங்க நகைகள் களவாடப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக காரிமங்கலம் காவல் நிலையத்தில் குற்ற எண். 6/84–இல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. காவல்துறையினருக்கு கிடைத்த தகவலின் பேரில், தர்மபுரி காவல் துறையினர் அருணாசலம் என்கிறசின்னப்பையன், கிச்சன் என்கிற கிருஷ்ணன், சிவன் மற்றும் காரிமங்கலத்தைச் சேர்ந்த தங்கவேலு ஆகியோரை 25–8–1984 அன்று கைது செய்து அவர்களது ஒப்புதல் வாக்கு மூலங்களின் பேரில் எல்லா சொத்தையும் மீட்டனர். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

80. பெரியார் மாவட்டம், அரைச்சலூர் காவல் நிலையக் குற்ற எண். 9/84-இல் 11–1–1984 அன்று இரவு குப்புசாமி என்கிற குப்பன், முருகன் மற்றும் மணி ஆகியோர் குப்பைய அம்மாள் என்பவரைக் கொலை செய்து ரூ. 8,000 மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடிச் சென்றனர். தீவிரப் புலன் விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முறையே 26–7–1984, 1–8–1984 மற்றும் 1–8–1984 இல் கைது செய்யப்பட்டு எல்லா சொத்துக்களும் மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

81. 9–2–1984 அன்று பவானி நகரம் ஆதி திராவிடர் தெருவில் பொன்னம்மாள் என்ற பெண் கொலை செய்யப்பட்டு ரூபாய் 25,000 மதிப்புள்ள தங்க நகைகள் திருடப்பட்டன. இது சம்பந்தமாக பவானி (பெரியார்) காவல் நிலையத்தில் குற்ற எண். 47/84 இல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல் துறையினரால் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தீவிர புலன் விசாரணையின் விளைவாக சந்தைப்பேட்டையைச் சேர்ந்த ரவி மற்றும் அவனது தாயார் சரோஜா ஆகியோர் 14–2–1984 இல் கைது செய்யப்பட்டு, வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்து முழுவதும் மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

82. 8–2–1984 அன்று இரவு, சேலம் மாவட்டம் பள்ளக்காரனூர் கிராமத்தில் ஆறுமுகப் பிள்ளையின் மனைவியான திருமதி தங்காயி என்பவர் கொலை செய்யப்பட்டு, ரூபாய் 10,000 மதிப்புள்ள தங்க நகைகள், ரொக்கம் ஆகியவை களவாடப்பட்டன. இது சம்பந்தமாக தாரமங்கலம் காவல் நிலையத்தில் குற்ற எண். 22/84-ல் ஒரு வழக்குபதிவு செய்யப்பட்டது. சேலம் காவல் துறையினரின் உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட தீவிரப் புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்ட ராஜாமணி மற்றும் சின்னக்கண்ணு ஆகியோர் 21–2–1984 அன்று கைது செய்யப்பட்டு, களவாடப்பட்ட அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

83. திருநெல்வேலி மேற்கு மாவட்டம், பாவூர்ச் சத்திரம் காவல் நிலையக் குற்ற எண். 96/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 11–6–1984 அன்று இரவு, குற்றவாளிகள் முத்தையாத் தேவர் என்கிற காசிப்பாண்டி மற்றும் அவரது இரு சகாக்கள் மாடசாமி மற்றும் தங்கராஜ் ஆகியோர் தம்பி ராவுத்தர் என்பவரைக் கொலை செய்து ரொக்கம் ரூ. 10,500-ஐ திருடிச் சென்றனர். குற்றமிழைத்தவர்கள் 24–6–1984 அன்று கைது செய்யப்பட்டு ரூ. 8,615 மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளது.

84. சேலம் மாவட்டம், ஜேடர்பாளையம் காவல்நிலையக் குற்ற எண். 299/84-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 25–12–1984 அன்று கொத்தமங்கலத்தில் குற்றம் சாட்டப்பட்ட கருப்பண்ண கவுண்டரின் மகன் சண்முகம் ஒரு பெண்ணைக் கொலை செய்து, ரூபாய் 11,250 மதிப்புள்ள தங்கத் தாலிக் கொடியைச் திருடிச் சென்றார். குற்றம் சாட்டப்பட்டவர் 29–12–1984 அன்று கைது செய்யப்பட்டு, களவாடபட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

கொள்ளை.

85. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், விருகம்பாக்கம் காவல் நிலையக் குற்ற எண். 1691/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 21–9–1984 அன்று போரூரில் பவானி என்கிற வினோத் சத்திய நாராயணன் என்கிற சக்தி, தென்னரசு, முத்து மற்றும் செல்வம் ஆகியோர் சிகரெட் விற்பனை நிறுவனத்திற்குச் சொந்தமான சிகரெட் வினியோகிக்கும் வேனை வழிமறித்து கத்தி முனையில் ரூபாய் 35,035-ஐ வழிப்பறி செய்தனர். செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டக் காவல் துறையினர் தீவிர புலன் விசாரணைய மேற்கொண்டதன் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, பொருட்கள் மீட்கப்ட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.





86. வடாற்காடு மாவட்டம், காட்பாடி காவல் நிலையக் குற்ற எண். 591/84இல் 26–9–1984 அன்று நள்ளிரவில் ஆயுதம் தாங்கிய அடையாளம் தெரியாத ஏழு பேர் சி.எஸ்.ஐ. வளாகத்தில் தனியாகவுள்ள இரு வீட்டு முன் கதவுகளை பாறையைக் கொண்டு தகர்த்து, கத்திகளையும, தடிகளையும் வைத்துக் கொண்டு வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி ரூபாய் 15,000 மதிப்புள்ள தங்க நகைகள், கைக் கடிகாரங்கள், துணி மணிகள் ஆகியவற்றைத் திருடிச் சென்றனர். வடாற்காடு மாவட்ட காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட தீவிர புலன் விசாரணையின் காரணமாக ஆந்திர மாநிலம், ஸ்டுவார்ட்புரத்தைச் சேர்ந்த அனுமந்தராஜ், ரவிகுமார் என்கிற ரவி, சுதாகர் மற்றும் இஸ்ரேல் ஆகியோர் கைது செய்யப்பட்டு சொத்துக்கள் மீட்கப்பட்டன. மற்ற மூன்று குற்றவாளிகளான டேனியல், ஷேக் உசேன் மற்றும் இமானுவேல் தலைமறைவாக உள்ளனர். தலைமறைவாக உள்ள இக் குற்றவாளிகளைப் பிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

87. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், செங்குன்றம் காவல் நிலையக் குற்ற எண்கள் 289, 290 மற்றும் 291/84 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 30–9–1984 அன்று நள்ளிரவு எட்டு குற்றவாளிகள் நாட்டு வெடிகளை வீசி மழைமேகம் என்பவரின் வீட்டுப் பின் கதவை உடைத்து உள்ளிருந்த ராமகிருஷ்ணன் என்பவரைத் தாக்கி, ரூபாய் 19,000 மற்றும் இரண்டரை சவரன் எடையுள்ள தங்க நகைகள் ஆகியவற்றை திருடினர். பின்னர் அக் குற்றவாளிகள் பக்கத்தில் உள்ள காசி என்பவரின் வீட்டிற்குச் சென்று அங்குள்ளவர்களைத் தாக்கி ஒரு ஜோடித் தங்கக் கம்மல்களைத் திருடினர். பின்னர் மூன்றாவதாக சேந்தியாகு என்பவரின் வீட்டிற்குள் புகுந்து அங்கிருந்த நான்கு பேர்களைத் தாக்கி காயமேற்படுத்தியதுடன், ரொக்கம் ரூ. 50 மற்றும் ஒரு ஜோடி கம்மல்களைக் திருடினர். இச் சம்பவம் பற்றிய செய்தி கிடைத்தவுடன், செங்கை கிழக்கு மாவட்ட ரோந்துப் படையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று உரிய நடவடிக் கைகள்எடுத்து, சம்பவம் நடந்த அன்று இரண்டு மணி நேரத்திற்குள் ஸ்டுவார்ட்புரம் சீனிவாசன் மற்றும் மதவாலசை ராமு ஆகிய குற்றவாளிகளைக் கைது செய்தனர். தங்க குண்டுமணிகள் கொண்ட ஒரு சவரன் எடையுள்ள தாலி அவர்களிடமிருந்து மீட்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட வெங்கடேசன், குப்பையா, வையாபோஸ் ஆகியோர்கள் 19–10–1984 அன்று கைது செய்யப்பட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

[ 1985 ஜூலை 8

88. மதுரை தெற்கு மாவட்டம், பெரியார் காவல் நிலையக் குற்ற எண். 124/84இல் 6-10-1984 அன்று இரவு பாறைப்பட்டி கிராமத்தில் வெளியூரைச் சேர்ந்த வாடிக்கைக் குற்றவாளி பெருமாள் என்ற நபரின் தலைமையில் அமாவாசை, பாலுசாமி, மூக்கையா, முருகேசன், பொடிச்சு ஆகியோரைக் கொண்ட ஒரு கும்பல் குருசாமி என்பவரின் வீட்டைக் கொள்ளை அடித்து ரூபாய் 4,700 மதிப்புள்ள தங்க நகைகள், துணி மணிகள் ஆகியவற்றைத் திருடினர். தீவிர புலன் விசாரணையின் விளைவாக 6-10-1984 அன்று மதுரை தெற்கு காவல் நிலையத்தார் பெருமாளையும், அமாவாசையையும் கைது செய்து, களவாடப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் மீட்டனர். குற்றம் சாட்டப்பட்ட பாலுச்சாமி மற்றும் முருகேசன் 10-1-1985 அன்று கைது செய்யப்பட்டனர். எஞ்சியுள்ள குற்றம் சாட்டப்பட்டவர்கள் தலைமறைவாக உள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

89. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், ராஜமங்கலம் காவல்நிலையக் குற்ற எண். 355/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 19/20-11-1984 அன்று இரவு ராஜமங்கலம், செந்தில் நகரில் கையில் தடிகளுடன் ஆறு நபர்கள், ரவிகுமார் என்பவரின் வீட்டின் வாயிற் கதவை உடைத்து உள்ளே நுழைந்து, வீட்டிலிருந்த ஆண்டாளம்மாளைத் தாக்கி, ஒரு இரும்பு அலமாரியையும் மூன்று சூட் கேஸ்களையும் அப்புறப்படுத்தி, ரூபாய் 10,000மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் விலை மதிப்புள்ள பொருட்களைத் திருடிச் சென்றனர். இச் சம்பவம் பற்றி தகவல் கிடைத்தவுடன் செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்ட ரோந்துப் படையினர் காலதாமதமின்றி சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று திறமையாக செயல்பட்டு ராஜேந்திரன், மாரியப்பன், கிருஷ்ணன், ராமன், கண்ணையன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோரைக் கைது செய்தனர். குற்றவாளிகள் காவல் துறையினரைத் தாக்கியதில் காவல் ஆய்வாளர் ரெங்கராஜன் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் செல்வராஜ் ஆகியோர் காயமுற்றனர். காவல் படையினர் தற்காப்பிற்காக ஒரு முறை சுட்டனர். குற்றம் சாட்டப்பட்ட ராஜேந்திரன் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார். குற்றம் சாட்டப்பட்ட ஆறு நபர்களும் கைது செய்யப்பட்டு சொத்துக்கள் மீட்கப்பட்டன. குற்றவாளியான ராஜேந்திரன் மருத்துவ மனையில் மரணம் அடைந்தார். இக் குற்றவாளிகள் செங்கை (கிழக்கு) மாவட்டத்தில் இதேபோன்ற இரண்டு கொள்ளை வழக்குகளிலும் மற்றும் ஐந்து வழிப்பறிக் கொள்ளை வழக்குகளிலும் சம்பந்தப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.



1985 ஜூலை 8]

## வழிப்பறி.

90. கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை காவல்
நிலையக் குற்ற எண். 53/84-இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில்
3-2-1984 அன்று தொடுவட்டியிலிருந்து கேரளாவிற்குச் செல்ல
டி.என்.கே. 3328 எண்ணுள்ள அம்பாசிடர் சுற்றுலா ஊர்தியை
கேரளாவைச் சேர்ந்த கபீர், அச்சன் குஞ்சு, பாபு ஆகிய நபர்கள்
கண்ணு மேடுவில் வாடகைக்கு எடுத்துக் கொண்டனர். வழி
யில் குற்றவாளிகள் வண்டி ஓட்டுநரை கீழே தள்ளிவிட்டு ரூபாய்
61 ஆயிரம் மதிப்புள்ள அந்த ஊர்தியை எடுத்துக் கொண்டு
சென்று விட்டனர். கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை
யினர் உரிய நேரத்தில் தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசா
ரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும்
6-2-1984 அன்று கைது செய்யப்பட்டு, களவாடப்பட்ட சொத்து
மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

91. கோவை ஊரக மாவட்டம், பொள்ளாச்சி கிழக்கு
காவல் நிலையக் குற்ற எண். 309/84 இல் பதிவு செய்யப்பட்ட
வழக்கில் 9-5-1984 அன்று பொள்ளாச்சி மத்தியப் பேருந்து
நிலையத்தில் அடையாளம் தெரியாத இரு குற்றவாளிகள் தண்
டாயுதம் என்பவரை வழிமறித்து அவரிடமிருந்து ரூபாய் 14,000
மதிப்புள்ள தங்க நகைகளை வழிப்பறி செய்தனர். திறமை
யான புலன் விசாரணையின் காரணமாக ராமன் முதலிப்
புதூர் கிராமத்தைச் சேர்ந்த அருணாசலத்தின் மகன் தண்ட
பாணி மற்றும் கொகினாம்பட்டி ராமசாமியின் மகன் மயில்சாமி
என்கிற மயிலம் ஆகியோர் 20-5-1984 அன்று கைது செய்யப்
பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு
நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

92. திருச்சிராப்பள்ளி மாவட்டம், கண்டோன்மெண்ட்
காவல் நிலையக் குற்ற எண். 1476/84 இல் பதிவு செய்யப்பட்ட
வழக்கில் 25-8-1984 அன்று, கண்டோன்மெண்ட் பகுதியில்
மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலையில், திருநெல்வேலி
மாவட்டத்தைச் சேர்ந்த கலந்தப்பனை பால்ராஜ் என்கின்ற
மணி மற்றும் மதுரை மாவட்டம், கருங்கலக்குடியைச் சேர்ந்த
வேலக்குட்டியின் மகன் ராஜேந்திரன் ஆகியோர் தில்கித் என்
பவரின் வீட்டிற்குள் நுழைந்து ரூபாய் 1,25,000 மதிப்புள்ள
தங்க நகைகள் மற்றும் ரொக்கத்தைக் களவாடினர். விஞ்ஞான
அடிப்படையிலான முறையான தீவிரப் புலன் விசாரணையின்
விளைவாக குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு,
சொத்துக்கள் மீட்கப்பட்டன. திருச்சி மாவட்ட முதல் வகுப்
குற்றவியல் நடுவர் 5-1-1985 அன்று சி.சி. எண். 600/84இல்
குற்றவாளிக்கு இரண்டாண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை
விதித்தார்.

93. தென்னாற்காடு மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையக் குற்ற எண். 324/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 21–12–1984 அன்று ஸ்ரீமுஷ்ணம் பூவராகவன் கோவிலில் தஞ்சை மாவட்டம், திருநாகேஸ்வரத்தைச் சேர்ந்த குற்றம் சாட்டப்பட்ட கல்யாணத்தின் மகன் வெங்கடேசன் என்கிற கணேசன் என்பவர் பிரதான வாயில் மூலமாக கோவிலுக்குள் நுழைந்து கத்தி முனையில் காவலாளியை மிரட்டி ரூபாய் 70,000 மதிப்புள்ள தங்கக் கிரீடத்தை களவாடிச் சென்றார். உரிய நேர நடவடிக்கை காரணமாக குற்றவாளி 21–12–1984 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சொத்து மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

வீடு புகுந்து களவாடுதல்.

94. மதுரை (தெற்கு) மாவட்டம், மதுரை தாலூகா காவல் நிலையக் குற்ற எண். 25/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 9–1–1984 அன்று கே. கே. நகரில் அசோக் குமார் என்கிற அசோக் மற்றும் அவரது 3 கூட்டாளிகள் ஒரு வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து ரூபாய் 3,50,000 மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடினர். தீவிரப் புலன் விசாரணையின் விளைவாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

95. மதுரை (தெற்கு) மாவட்டம், பி-2 காவல் நிலையக் குற்ற எண். 121/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1—4—1984 அன்று இரவு, மதுரையில் கூடல் இன்டஸ்ட்ரீஸில் ஒரு வீட்டில் அடையாளம் தெரியாத சிலர் நுழைந்து ரூபாய் 1,00,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் களவாடினர். தீவிரப் புலன் விசாரணையின் விளைவாக முத்துசாமியின் மகன் பாண்டி, முத்துத் தேவரின் மகன் கருணாத்தேவர், கலூராத் தேவரின் மகன் பால்துரை, கருத்தையாவின் மகன் தெய்வராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

96. சேலம் மாவட்டம், தீவட்டிப்பட்டி காவல் நிலையக் குற்ற எண். 95/84இல் பதியப்பட்ட வழக்கில் 4—4—1984 அன்று இரவு, கே. என். புதூரைச் சேர்ந்த குற்றவாளிகள் ராமசாமி மற்றும் கோவிந்தராஜ் ஒரு வீட்டிற்குள் நுழைந்து ரூபாய் 36,800 மதிப்புள்ள தங்க நகைகள், ரொக்கம் ஆகியவற்றைத் திருடினர். குற்றம் சாட்டப்பட்ட ராமசாமி மற்றும் கோவிந்த



ராஜ் ஆகியோர் 11—4—1984 அன்று கைது செய்யப்பட்டு, சொத்துக்கள் அனைத்தும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

97. கோவை நகர்ப்புற மாவட்டம், பி-1 காவல் நிலையக் குற்ற எண். 641/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 26—6—1984 அன்று இரவு, கோவை விஜயா லாட்ஜில் சண்முகநாதனின் மகன் பரமானந்தமும், பாண்டுரங்கனின் மகன் மோகனும் நுழைந்து ரூ. 80,000 ரொக்கத்தைத் திருடினர். குற்றவாளிகள் 27—6—1984 அன்று கைது செய்யப்பட்டு, ரொக்கம் மீட்கப்பட்டது. இவ் வழக்கில் குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கியது.

98. செங்கற்பட்டு (மேற்கு) மாவட்டம், விஷ்ணு காஞ்சி காவல் நிலையக் குற்ற எண். 676/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 9—9—1984 அன்று இரவு, எண்ணைக்காரத் தெருவில் சில அடையாளம் தெரியாத குற்றவாளிகள் ராமகிருஷ்ணனின் வீட்டிற்குள் நுழைந்து ரூபாய் 60,000 மதிப்புள்ள தங்க, வெள்ளி நகைகளைத் திருடினர். செங்கற்பட்டு (மேற்கு) மாவட்டக் காவல் துறையினரால் வடாற்காடு மாவட்டத்தைத் சேர்ந்த காசி என்கிற பீமன் பிடிக்கப்பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. நீதிமன்றத்தில் குற்றவாளிக்கு இரண்டாண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

99. தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி காவல் நிலையக் குற்ற எண். 553/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 4—11—1984 அன்று சில அடையாளம் தெரியாத குற்றவாளிகள் கள்ளக்குறிச்சி கூட்டுறவு வங்கியினுள் கள்ளச் சாவி கொண்டு கதவைத் திறந்து, நுழைந்து ரூபாய் 43,27,520 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடினர். உடனடியாக எடுக்கப்பட்ட தீவிரப் புலன் விசாரணையின் விளைவாக வங்கியின் மதிப்பீட்டாளர் கிருஷ்ணசாமி மற்றும் அவரது உறவினர்கள் பாபு, சின்னசாமி, ராஜாராம், கோவிந்தராஜூ ஆகியோர் கைது செய்யப்பட்டு சொத்து முழுவதும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

100. கோவை–ஊரக மாவட்டம், செய்யாறு காவல் நிலையக் குற்ற எண் 135/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 14—11—1984 அன்று இரவு அடையாளம் தெரியாத சிலர் மலுமிச்சாம்பட்டியைச் சேர்ந்த சென்னியப்பனின் வீட்டிற்குள் நுழைந்து, ரூபாய் 43,000 மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடினர். கோயம்புத்தூர்

(ஊரகம்) காவல் துறையினர் தங்களுக்குக் கிடைத்த தகவலின் பேரில் பொன்னுகவுண்டன் புதூரைச் சேர்ந்த சின்னையா கவுண்டரின் மகன் ராமசாமியை 21—11—1984 அன்று கைது செய்து சொத்துக்கள் அனைத்தையும் மீட்டனர். வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

சிலைத் திருட்டு.

101. தஞ்சை கிழக்கு மாவட்டம், வெளிப்பாளையம் காவல் நிலையக் குற்ற எண். 45/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 16—2—1984 அன்று இரவு வெளிப்பாளையம் வரதராஜப்பெருமாள் கோவிலுக்குள், வெளிப்பாளையத்தைச் சேர்ந்த முன்னாள் குற்றவாளி பம்பாய் காந்தி என்கின்ற காந்தி, கிருஷ்ணன், வெளிப்பாளையத்தைச் சேர்ந்த செல்வராஜ் மற்றும் திருவாரூரைச் சேர்ந்த சின்னதம்பியின் மகன் சேக்தாவூத் ஆகியோர் சுவரேறி குதித்து உள்ளே நுழைந்து ரூபாய் 2,00,000 மதிப்புள்ள 11 சிலைகளைத் திருடினர். (சிலைகள் விவரம்: வரதராஜப் பெருமாள், கண்ணன், சென்னியப்பர், தீர்த்தப்பெரியரர், விக்னேஸ்வரர், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார், உடையவர் மணவாள மாமுனிகள், பழைய பூதேவி), தீவிரப் புலன் விசாரணையின் விளைவாகக் குற்றமிழைத்தவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 11 சிலைகளும் மீட்கப்பட்டன. கும்பகோணம், குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்ற நடுவரால் முதல் 3 குற்றவாளிகளுக்கு 2 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது (சி.சி. எண். 41/84—26—11–1984)

102. கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் காவல் நிலைய குற்ற எண். 161/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 12–6–1984 அன்று இரவு ஆளூரில் மகாதேவர் கோயிலில் பூட்டை உடைத்துக் கொண்டு சில அடையாளம் தெரியாத நபர்கள் உள்ளே புகுந்து ரூபாய் 1,50,000 பெறுமான 300 ஆண்டுகளுக்கு முந்தைய பஞ்சலோக நடராசர் சிலையை திருடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணையின் விளைவாக காவலரால் மீரா சாகிப் மற்றும் அவனுடைய கூட்டாளி அச்சுதன் என்கிற சதாசிவம் ஆகியோர் 14—6—1984 அன்று கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து திருடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டன. இந்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

103. சிவகங்கை காவல் நிலைய குற்ற எண். 283/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 20—7—1984 அன்று இரவு சிவகங்கை குற்றவியல் இரண்டாம் நிலை நீதிமன்றத்தின் பூட்டை உடைத்துக் கொண்டு, உள்ளூர் குற்றவாளிகளான புளியங்



குளம் முனியாண்டி மகன் தங்கவேலு, சோமு மலையப்ப தேவர் மகன் சங்கர், கும்பகரநந்தல் என்ற ஊரைச் சார்ந்த ஆறுமுகம் மகன் மலைக்கண்ணு மற்றும் உள்ளூர் பழைய குற்றவாளியான முனியாண்டி மகன் ஆறுமுகம் ஆகியோர் உள்ளே புகுந்து ரூபாய் 1,26,000 மதிப்புள்ள பெருமாள், அம்மன், காளி மற்றும் மகா விஷ்ணு ஆகிய 4 சிலைகளைத் திருடினர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு பொருள்கள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

104. வடாற்காடு மாவட்டம், ஆம்பூர் காவல் நிலைய குற்ற எண் 159/84-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 4—10—84 அன்று இரவு ஆலங்குப்பம் கிராமத்திலுள்ள பொன்னியம்மன் கோயிலில் உள்ளூர் பழைய குற்றவாளியான வாணியம்பாடி பெருமாள் மகன் எத்திராஜ், அந்தோணி மகன் ஆரோக்கிய தாஸ் என்கிற சேட், சோலூர் கிராமத்தைச் சேர்ந்த குப்பன் ஆகியோர் பூட்டை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து ரூபாய் 1,50,500 மதிப்புள்ள பொன்னியம்மன் சிலை மற்றும் பித்தளை சாமான்களைத் திருடினர். குற்றம் சாட்டப்பட்ட எத்திராஜ் மற்றும் சேட் கைது செய்யப்பட்டனர். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருட்டு.

105. திருச்சிராப்பள்ளி மாவட்டம், வேலாயுதம் பாளையம் காவல் நிலைய குற்ற எண். 179/84இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 8—8—1984 அன்று இரவு தளவாபாளையத்தில் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த ப்ருசா கவுண்டர் மகன் சேகர் ரூபாய் 33,500 மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடினார். காவல் துறையினரின் உடனடி நடவடிக்கையால் குற்றவாளி கைது செய்யப்பட்டு நகைகள் மீட்கப்பட்டன. கரூர் இரண்டாம் குற்றவியல் நீதிமன்ற நடுவரால் 27—8—1984 அன்று 200/84 எண் வழக்கில் குற்றவாளிக்கு ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

106. தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் காவல் நிலைய குற்ற எண் 8/84 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 7–1–1984 அன்று வவ்வலாடியில் நன்னிலத்தைச் சேர்ந்த ரத்தினவேலு என்பவர் ரூபாய் 45,000 பெறுமான தங்க நகைகளைத் திருடினார். குற்றவாளி கைது செய்யப்பட்டு அனைத்துப் பொருள்களும் மீட்கப்பட்டன. தஞ்சாவூர் மாவட்ட முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற நடுவரால் 2—3—1984 அன்று 7/84 எண்ணுள்ள வழக்கில் குற்றவாளி தண்டிக்கப்பட்டு நன்னடத்தை சட்டம் 4(1) பிரிவின்படி விடுதலை செய்யப்பட்டார்.

*107.* மதுரை (தெற்கு) மாவட்டம், வேலூர் காவல் நிலைய குற்ற எண் 346/84 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 3—6—1984லிருந்து 12—6—1984 முடிய நரசிங்கம்பட்டி மின் வாரியத்தின் துணை நிலையத்தில் திருப்புவனத்தைச் சேர்ந்த பழைய குற்றவாளிகள் லோகியா மற்றும் முத்து, சமயநல்லூர், பழைய உள்ளூர் குற்றவாளி ராஜு ஆகியோர் ரூபாய் 22,345 பெறுமான 5,235 மீட்டர் அலுமினியக் கம்பிகளைத் திருடினர். குற்றமிழைத்தவர்கள் கைது செய்யப்பட்டு பொருள்கள் மீட்கப் பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

*108.* செங்கல்பட்டு (மேற்கு) மாவட்டம், காஞ்சி தாலுகா காவல் நிலைய குற்ற எண் 469/84 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 20—8—1984 அன்று காவாந்தண்டலத்தில், மேற்படி கிராமத்தைச் சேர்ந்த குப்புசாமி மகன் உள்ளூர் முதல் தடவைக் குற்றவாளியான ரவிகுமார் ரூபாய் 30,000 பெறுமான தங்க நகைகளைத் திருடினார். இவர் 1—9—1984 அன்று கைது செய்யப்பட்டு சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

*109.* வடாற்காடு மாவட்டம், ஆற்காடு காவல் நிலைய குற்ற எண் 215/84ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் மேல் விஷாரத்தில் அப்துல் சத்தார் மகன் (முதல் தடவை குற்றவாளி) நசீர் அகமத் ரூபாய் 1,50,000 மதிப்புள்ள தங்க நகைகள், டேப் ரிகார்டர் மற்றும் டிரான்சிஸ்டர் ஆகியவற்றைத் திருடினார். குற்றவாளி கைது செய்யப்பட்டு அனைத்து பொருட்களும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

*110.* தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டம், திருவையாறு காவல் நிலைய குற்ற எண் 27/84 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 9—1—1984 அன்று தஞ்சாவூர் மாவட்ட காவல் துறையினர் அய்யம்பேட்டை மதுக்கடை பஜாரில் திருவண்ணாமலையைச் சேர்ந்த லட்சுமண முதலியார் மகன் சக்தி, திருநெல்வேலி கழுகுமலையை சேர்ந்த ராமசாமி மகன் மோகன் என்கின்ற சந்திரமோகன், திருவண்ணாமலையைச் சேர்ந்த சிதாராமன் மகன் அழகு என்கிற கண்ணன் மற்றும் தென்னாற்காடு மாவட்டம். தேனதுச்சேரி சிவராமன் மகன் முருகானந்தம் என்கிற முருகன் ஆகியோரைக் கைது செய்தனர். கைது செய்யப் பட்டவர்களின் வாக்குமூலத்தின்படி ரூபாய் 1,10,000 பெறுமான 4 அம்பாசிடர் கார்கள் மீட்கப்பட்டன, இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.



*111.* இராமநாதபுரம் (மேற்கு) மாவவட்ட காவல் துறையினர் தபால் தந்தி இலாகாவில் செப்புக்கம்பி திருட்டுக்கள் சம்பந்தப் பட்ட 21 வழக்குகளில் (இராமநாதபுரம் மேற்கு 17 வழக்குகள் மற்றும் மதுரை தெற்கு 4 வழக்குகள்) குற்றம் புரிந்த மதுரை, பழங்காநத்தத்தைச்சேர்ந்த கருப்பையாமூப்பர்மகன் சோமசுந்தரம் என்கிற வெளியூர் பழைய குற்றவாளி சோமு மற்றும் அவருடையக் கூட்டாளிகள் 13 பேர் சம்பந்தப்பட்டிருந்ததால் அவர்களைக் கைது செய்து, அவர்களிடமிருநது ரூபாய் 77,612 பெறுமான சொத்துக்களை மீட்டனர். இக்குற்றவாளிகள் திருத்தங்கல் காவல் நிலைய குற்ற எண் 195/84 இல் பதியப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று கணித்து புலன் விசாரணை மேற் கொள்ளப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

*112.* மதுரை (வடக்கு) மாவட்டம், பழனி நகர காவல் நிலையக் குற்ற எண் 458/84 இல் இ. த. ச. பிரிவு 380ன் கீழ் பதியப்பட்ட வழக்கில், 29—5—1984 அன்று காலை 10 மணி அளவில் பழனியில் உள்ள தமிழ்நாடு மெர்கெண்டைல் வங்கியில் திருச்சி ராம்ஜிநகரைச் சேர்ந்த ரதுமங்கதன் கோபால், முருகன் மற்றும் ரஞ்சன் ஆகியோர் ரூபாய் 30,000 பெறுமான ரொக்கத் தைத் திருடினர். குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்து ரூபாய் 15,000 ரொக்கத்தை மீட்டனர். பழனி நகர குற்றவியல் இரண்டாம் நிலை நீதிமன்ற நடுவரால் 31—7—1984 அன்று 141/84 எண்ணுள்ள வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு 6 வாரக் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.

## குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினரின்
## குறிப்பிடத்தக்க சில பணிகள் பற்றிய குறிப்பு

### முகமூடிக் கொள்ளை பற்றிய வழக்குகள்

ஆவடி காவல் நிலைய குற்ற எண் 373/84 இல் இ. த. ச. பிரிவுகள் 457, 397 மற்றும் 302.

*113.* செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டத்தைச் சேர்ந்த சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் செங்கல்பட்டு (மேற்கு) மாவட்டத்திலும் 10—6—1983 முதல் 27—6—1984 வரை 12 முகமூடிக் கொள்ளைகள் நடந்துள்ளன. இப்படிப்பட்ட வழக்குகளில் சுமார் ஐந்து முதல் ஏழு குற்றவாளிகள் தடிகள்,

சுத்தியல், மற்றும் கற்கள் போன்ற ஆயுதங்களுடன் அவர்களில் சில பேர் முகமூடி அணிந்து கதவுகளை பலாத்காரமாகத் திறந்து உள்ளே புகுந்து வீட்டிலுள்ளவர்களை அடித்து அவர்களைக் காயப்படுத்தியும், ஒரு வழக்கில் ஓய்வு பெற்ற காவல் துறையைச் சேர்ந்த அதிகாரியைக் ருகான்றும் பெண்கள் அணிந்திருந்த நகைகளைப் பறித்தும், தங்க நகைகள் வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் கைக்கடிகாரங்கள், ரொக்கம் ஆகியவைகளை வீடுகளை நாசப்படுத்தி எடுத்துக் கொண்டும், மறைந்து விட்டதோடு தனித்தக் குடியிருப்புப் பகுதிகளில் வாழும் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி அவர்களுடைய அமைதியான வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவித்தனர். இது போன்ற சுமார் ரூபாய் 2 லட்சம் பெறுமான சொத்துக்கள் சம்மந்தப்பட்ட 13 வழக்குகள் இ. த. ச. பிரிவுகள் 357, 397-படி எண்ணூர் காவல் நிலைய குற்ற எண் 150/83, இ.பி.கோ. 397, 511 பிரிவின்படி சிட்லப்பாக்கம் காவல் நிலைய குற்ற எண். 285/83, இ.பி.கோ. 397 பிரிவின் படி தாம்பரம் காவல் நிலைய குற்ற எண் 555/83, இ.பி.கோ. 457, 397 பிரிவின் படி தாம்பரம் காவல் நிலைய குற்ற எண் 828/83, இ.பி.கோ. 457, 397 பிரிவின்படி பல்லாவரம் காவல் நிலைய குற்ற எண் 835 முதல் 837/83, இ.பி.கோ. 457, 397 பிரிவின் படி திருவான்மியூர் கா. நி. குற்ற எண் 85/84, இ. பி. கோ. 457 397 பிரிவின்படி, மேப்பேடு கா. நி. குற்ற எண் 14/84, இ.பி.கோ. 457, 397 மற்றும் 302 பிரிவின்படி, ஆவடி கா.நி. குற்ற எண் 373/84 இ.பி.கோ. 397 பிரிவின் படி கூடுவாஞ்சேரி, கா, நி. குற்ற எண் 72/84 மற்றும் இ. பி. கோ. 457, 397 பிரிவின் படி, திருவான்மியூர் கா. நி. குற்ற எண் 591/84-லும் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்றிகளின் புலன் விசாரணையில் குற்றம் நடந்த இடங்களில் சில குற்றவாளிகளின் கைரேகைகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவைகளில் சில கண்டுபிடிக்கப்பட முடியவில்லை. பலாத்காரமாக திறக்கப்பட்ட கதவுகளில் இருந்து ஆயுதங்களின் அடையாளங்கள் இந்த வழக்குகளில் ஒன்றுக்கொன்று ஒரே மாதிரியாக இருந்தன. இந்த வழக்குகளில் ஈடுபட்ட குற்றவாளிகளின் நடவடிக்கைகளைப் பார்க்கிற போது இந்த 13 முகமூடி வழக்குகளிலும் ஒரே குழுதான் செயல்பட்டு இந்த குற்றங்களைச் செய்தது என்பது புலனாகியது. குற்ற பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்கள். செங்கல்பட்டு [கிழக்கு] மாவட்ட காவல் அதிகாரிகள் மற்றும் கைரேகை நிபுணர் அடங்கிய ஒரு குழு குற்றச் சம்பவங்கள் நடந்த இடங்களில் எடுக்கப்பட்ட கைரேகைகளுடன் சன்சி குற்றவாளிகள் கைரேகைகளுடன் ஒப்பிட அனுப்பபட்டனர். பல்லாவரம் காவல் நிலைய குற்ற எண் 835/83 மற்றும் 837/83 [இ. த.ச. 397 பிரிவு] ஆவடி காவல் நிலைய குற்ற எண் 373/84 [இ. த. ச. 397, 457 மற்றும் 302 பிரிவு] மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டை கா. நி. குற்ற எண் 282/84 ஆகியவற்றின்



(இ.த.ச. 397 பிரிவு) வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, வழக்குகளில் எடுக்கப்பட்ட கைரேகைகளை புது டில்லி, ராஜோரி கார்டன், காவல் நிலையத்திலுள்ள லட்சுமணன் சிங் என்ற குற்றவாளியின் கைரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது இரண்டும் பொருந்தி இருந்தன. டில்லி காவல் நிலைய அலுவலரின் ஒத்துழைப்போடு இப் பயங்கரமான கொள்ளையர்களைப் பிடிக்க சென்னை குற்றப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு சிறப்புக் குழு அனுப்பப்பட்டது. அவர் டில்லியிலுள்ள மூத்த காவல்துறை அதிகாரிகளோடு தொடர்புகொண்டு கொள்ளையர்களின் மறைவிடங்களை சோதனையிட்டதன் காரணமாக புது டில்லி, பஞ்சாபி பாக். மதிப்பர் காவல் நிலையம், ஜே. ஜே. காலனியைச் சார்ந்த தாசோரியா என்பவரின் மகன் சனன் சிங், புது டில்லி, திலக் நகர், சௌக்காண்டி, ஜே. ஜே. காலனியைச் சார்ந்த மங்கல் மகன் மேவாரம் மற்றும் புது டில்லி, விஷ்கார்டன் ஷ்யாம் நகரைச் சார்ந்த பக்ஷ் சிங் மகன் குருதீப் சிங் ஆகிய மூன்று கொள்ளையர்களை முறையே 21—6—1984, 16—8—1984 மற்றும் 19—11—1984 ஆகிய தேதிகளில் கைது செய்ய முடிந்தது. திருடப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி மீட்கப்பட்டது. இன்னமும் பிடிபடாத கொள்ளைக் கூட்டத் தலைவன் லட்சுமண் சிங் மீதமுள்ள திருடப்பட்ட பொருட்களை விற்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. குற்றம் சாட்டப்பட்ட மங்கல் என்கிற சனன் சிங் மற்றும் மேவாரம் ஆகியோர் குண்டர்கள் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். குற்றப் புலனாய்வுத் துறை பிரிவினரின் விஞ்ஞான பூர்வமான தீவிரப் புலன் விசாரணை காரணமாக, முகமூடிக் கொள்ளை மற்றும் ஆதாயத்திற்கான கொலை ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட இக்குற்றவாளிகளின் இருப்பிடத்தை அறிய முடிந்தது.

### கோயம்புத்தூர் மாவட்ட இரயில்வே காவல் நிலைய குற்ற எண் 35/84, இ.த.ச. பிரிவு 379.

114. திருச்சிராப்பள்ளி அலகின் குற்றப் புலனாய்வுத் துறையினர் 14—11—1984 அன்று திருச்சி ராம்ஜி நகரைச் சேர்ந்த 22 வயதுள்ள தமிழரசன் என்பவன் தான் திருடிய தங்க நகைகளை திருச்சி தங்க கடையில் விற்கப் போகும்போது, அவனைப் பிடித்தனர். புலன் விசாரணையின்போது 16—2—1984 அன்று கோயம்பத்தூர் ஆர். எம். எஸ். கூண்டு உந்துலிருந்து களவாடப் பட்ட ரூ. 2,50,000 பெறுமான 1,291.250 கிராம் எடையுள்ள 336 தங்க நகைகள் மீட்கப்பட்டன. கோயம்புத்தூர் ராஜ தெருவில் உள்ள அங்காடி அஞ்சல் அலுவலகத்தில் இந்த 336 தங்க நகைகளும், பம்பாய், மைசூர், சென்னை, விஜயவாடா

சூரத் மற்றும் நாக்பூர் ஆகிய இடங்களுக்கு அனுப்புவதற்காக கோயம்புத்தூரிலுள்ள 12 தங்க நகை வியாபாரிகளால் 17 இன்ஷூர் கவர்களாக பதிவு அஞ்சல் செய்யப்பட்டன. திருச்சி குற்றவியல் இரண்டாம் நிலை நீதிமன்ற நடுவரால் 7—1—1985 அன்று 1204/84 எண்ணுள்ள இவ் வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவருக்கு ஒரு வருடக்கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. குற்றப் புலனாய்வுத் துறையினர் மேற்கொண்ட இரகசிய விசார ணையின் விளைவாகக் குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப் பட்டு, அனைத்து தங்க நகைகளும் மீட்கப்பட்டன.

விருத்தாசலம் காவல் நிலைய குற்ற எண் 352/84,
இ.தூ.ச. பிரிவு 379.

115. 19–3–1984 அன்று விருத்தாசலத்திலுள்ள நகைக் கடை ஒன்றின் முன்பாக, நடேசன் என்ற குற்றவாளி (உள்ளூர் மாவட்டக் குற்றவாளி) ரூபாய் 35,000 பெறுமான 24 சவரன் எடையுள்ள தங்க நகைகளைத் திருடினார். 4–7–1984 அன்று குற்றப் புலனாய்வுத் துறையினரால் குற்றவாளி கைது செய்யப் பட்டு அனைத்து தங்க நகைகளும் மீட்கப்பட்டன. 4–8–1984 அன்று திருச்சி இரண்டாம் நிலை குற்றவியல் நீதிமன்ற நடுவரால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஒரு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

நாமக்கல் காவல் நிலைய குற்ற எண் 17/84, இ.தூ.ச. பிரிவு
408 பின் 379-க்கு மாற்றப்பட்டது.

116. 7–1–1984 அன்று நாமக்கல் கூட்டுறவு மத்திய வங்கி யில் பணியிலிருந்த காசாளரின் கவனத்தைத் திருப்பி ரூ. 47,400 ரொக்கத்தை திருச்சி, ராம்ஜி நகரைச் சேர்ந்த பயங்கர குற்ற வாளியான விஜயன் என்பவர் திருடினார். குற்றப் புலனாய்வுத் துறை தொடர்ந்து மேற்கொண்ட விசாரணை காரணமாகக் குற்ற வாளி 17–12–1984 அன்று கண்டு பிடிக்கப்பட்டு, ரொக்கம் கைப் பற்றப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

துவரங்குறிச்சி காவல் நிலைய குற்ற எண் 110/83,
இ.தூ.ச. பிரிவு 457, 380.

117. 14–8–1983 அன்று இரவு திருச்சி மாவட்டம், முருக புரியில் சில அடையாளம் தெரியாத குற்றவாளிகள் முன்னாள் ஜமீன்தார் திரு. சிவசண்முகம் என்பவரது வீட்டில் புகுந்து, ரூபாய் 4,16,000 பெறுமான தங்கம் மற்றும் வெள்ளி நகை களைக் களவாடிச் சென்றனர். இந்த வழக்கு குற்றப் புலனாய்வுத்



துறையினரின் புலன் விசாரணைக்கு மாற்றப்பட்டது. முறை யான விஞ்ஞான பூர்வமான விசாரணையின் விளைவாகக் குற்றம் சாட்டப்பட்ட இங்கர்சால் என்பவர் 20–3–1984 அன்று கைது செய்யப்பட்டார். 14–4–1984 அன்று செம்பட்டியைச் சேர்ந்த எருமண்டித் தேவர் மற்றும் சிந்துப் பட்டியைச் சேர்ந்த அம்மா வாசை ஆகியோர் கைது செய்யப்பட்டனர். குற்றப் புலனாய்வுத் துறையினர் ரூபாய் 3,59,357 பெறுமான தங்க, வெள்ளி நகைகளைக் கைப்பற்றினர். பின்னர் தலைமறைவாக இருந்த ஐயன்கோட்டை புதூரைச் சேர்ந்த நாகத்தேவர் என்ற குற்ற வாளி 22–5–1984 அன்று கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து 40 சவரன் எடையுள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

118. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரின் தீவிரப் புலன் விசாரணை காரணமாக 1983 மற்றும் 1984 ஆண்டுகளில் திருவரம்பூர் மற்றும் ராம்ஜி நகரைச் சேர்ந்த குற்றவாளிகள் 20 பேர் கைது செய்யப்பட்டனர். வங்கிகளில் வந்தவர்களின் கவனத்தைத் திருப்பியும், அதேபோல பேருந்து நிலையங்களில் வந்தவர்களின் கவனத்தைத் திருப்பியும், மற்ற இடங்களில் இருந்த மக்களின் கவனத்தை திருப்பியும், சென்னை அண்ணா சாலை, தங்கசாலை, தாம்பரம், திருச்சி, ஈரோடு, நாமக்கல், சேலம், விருத்தாசலம், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், கரூர், மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ரூபாய் 5,84,000 பெறுமான நகை மற்றும் ரொக்கத்தை களவாடிய 20 வழக்குகளில் இந்த குற்றவாளிகள் சம்பந்தப்பட்டிருந்தனர். இவைகளில் பல வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன.

கொரடாச்சேரி காவல் நிலையக் குற்ற எண் 168/83
இ.தூ.ச. பிரிவு 457 மற்றும் 380.

119. 18–8–1983 அன்று இரவு குளிக்கரை கிராமத்தில், அருள்மிகு விஸ்வநாதசாமி கோயிலில் அடையாளம் தெரியாத சில நபர்கள் கோயிலின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து பஞ்சலோகத்தாலான ஒரு வெள்ளி சிலையைத் திருடிச் சென்ற னர். இது சம்பந்தமாக, தங்கப்பன் மகன் கார்த்திகேயன் மற்றும் திருவாரூரைச் சேர்ந்த கோவிந்தசாமி மகன் வீரையன் ஆகியோர் 23–1–1985 அன்று கைது செய்யப்பட்டு களவுபோன சிலை மீட்கப்பட்டது. கும்பகோணம் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவரால் முதல் குற்றவாளி கார்த்திகேயனுக்கு நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டாவது குற்ற வாளி வீரையன் மீது நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர் நகர (கிழக்கு) காவல் நிலையக் குற்ற எண் 2794/84, குற்றவியல் சட்டப் பிரிவு 41 மற்றும் 102.

120. 25–11–1984 அன்று சென்னை குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர், சமயபுரம், அப்துல்சலாம் என்கிற ஷண்முகத்தைக் கைது செய்து அவன் வாக்குமூலத்தின் அடிப் படையில் ஸ்ரீரங்கம் காவல் நிலைய குற்ற எண் 923/84 இல் இ.த.ச. பிரிவு 457 மற்றும் 380 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட மாணிக்கவாசகர் மற்றும் சோமஸ்கந்தர் ஆகிய இரண்டு பஞ்சலோகச் சிலைகளை மீட்டனர். தீவிரப் புலன் விசாரணையின் விளைவாக, திருச்சி மாவட்டக் காவல் துறையில் பதிவு செய்யப்பட்ட 6 சிலைத் திருட்டு வழக்குகள் மற்றும் தென்னாற்காடு மாவட்ட காவல் துறையில் பதிவு செய்யப்பட்ட ஒரு சிலைத் திருட்டு வழக்கு ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட 5 சிலைகளையும், வெள்ளி பூஜை பாத்திரங்களையும் கைப்பற்றினர். இந்த வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன.

குற்ற புலனாய்வுத் துறை குற்ற எண் 7/84 இ.த.ச. பிரிவு 120 பி மற்றும் இ.த.ச. பிரிவு 489 ' ஏ ' முதல் ' டி ' வரை.

121. வண்ணாரப்பேட்டை மற்றும் சிவகாசியில் கள்ள 10 ரூபாய் மற்றும் 2 ரூபாய் நோட்டுக்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல்.—

இந்த குற்ற வழக்கில் மூல காரணமாக இருந்து செயல்பட்டவர் சிவகாசியைச் சேர்ந்த சக்கரைச்சாமி என்பவர் ஆவார். வண்ணாரப்பேட்டையிலுள்ள திலான் அச்சகத்திலும், சிவகாசியிலுள்ள நாகேஸ்வரி பைன் ஆர்ட்ஸ் அச்சகத்திலும் கள்ள 10 ரூபாய் நோட்டுகள் அச்சிடப்பட்டன. இவ்வழக்கில் 176 கள்ள பத்து ரூபாய் நோட்டுக்களும், இரண்டு அச்சு இயந்திரங்களும் மற்றும் உபகரணங்களும் கள்ள நோட்டு அச்சடிப்பதற்குத் தேவையான மற்றைய பொருள்களும் கைப்பற்றப்பட்டன. வண்ணாரப் பேட்டை திலான் அச்சகத்தில் கள்ள 2 ரூபாய் நோட்டுக்கள் அச்சிடப்பட்டன. அங்கிருந்து 3,300 கள்ள 2 ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்டன. இதுவரை அச்சுத் தயாரிப்பவர்கள் அச்சக உரிமையாளர், அச்சிடுபவர்கள் மற்றும் இதற்கு நிதி உதவி புரிந்தவர்கள் ஆக மொத்தம் 23 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று குற்றவாளிகள் நீதிமன்ற நடுவர் முன்னிலையில் முன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். 31–12–1984 அன்று சிவகாசியைச் சேர்ந்த கருப்பசாமி என்பவர் கைது செய்யப்பட்டு கள்ள நோட்டு அச்சிடப் பயன்படும் முன் பக்க, பின் பக்க அடை





யாளங்களைக் கொண்ட துத்தநாகத்தாலான ஒரு அச்சினையும் கைப்பற்றினர். இதுவரை 24 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

பொன்னமராவதி காவல் நிலைய குற்ற எண் 172/84 இ.த.ச. பிரிவு 489 (பி மற்றும் சி).

122. கீழச்சேவல்பட்டி காவல் நிலையக் குற்ற எண் 54/83 மற்றும் 75/83 இல் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளியான கோபால் என்பவர் 21–6–1984 அன்று குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார். அவருடைய வீட்டை சோதனையிட்டதில் ரூபாய் 1,50,000 மதிப்புள்ள கள்ள நூறு ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்டன. மேலும், அவருடைய கூட்டாளியான அய்யாக் கண்ணு என்பவரும் கைது செய்யப்பட்டு அவரிடம் ரூபாய் 20,000 பெறுமான கள்ள 100 ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்டன. பெங்களூரில் இதே போன்ற வழக்கில் சம்பந்தப்பட்ட சிவகாசியைச் சேர்ந்த கந்தசாமியிடம் இருந்து இந்த நோட்டுக்களை தான் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள கோபால் கூறியுள்ளார். அவர் மதுரை மத்திய குற்றப் பிரிவு குற்ற எண் 46/84 இல் [இ.த.ச. பிரிவு 489 (பி மற்றும் சி) மற்றும் பிரிவு 120 பி-இல் இணைக்கப்பட்டது] பதியப்பட்ட வழக்கில் மதுரை குற்றப் புலனாய்வுத் துறையினரால் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

பிணையத்தில் உள்ள கந்தசாமி என்பவர் காவல் துறையினரால் விசாரிக்கப்பட்டார். விசாரணையில் சிவகாசியைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவரால் குற்றம் சாட்டப்பட்ட கோபாலுக்கு இந்தக் கள்ள நோட்டுக்கள் கொடுக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. ஆயினும், சிவகாசியில் காவலரால் நடத்தப்பட்ட விசாரணையில் மேற்படி ராஜேந்திரன் இறந்து விட்டதாகத் தெரியவந்தது. நாசிக் அச்சக நிபுணர்களின் கருத்து எதிர்ப் பார்க்கப்படுகிறது. இந்த வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை எண் 34/84 இ.த.ச. பிரிவு 381, 412 மற்றும் 413.

123. திரு. நாகராசன், ஆண் செவிலியர் உதவியாளர், பல்வேறு மருத்துவ மனைகளிலிருந்து சட்டத்திற்கு புறம்பாகத் திருடி தனது வருமானத்திற்கும் அதிகமாக கணக்கற்ற சொத்துக்கள் சேர்த்து வைத்திருப்பதாக வந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் 12–4–1984 அன்று சோதனை நடத்தினர். சோதனையின்

போது ரொக்கமாக,ரூபாய் 4,06,127.75-ம் மற்றும் மருந்துகளும் கைப்பற்றப்பட்டன. தற்போது லஞ்ச ஒழிப்பு மற்றும் கண் காணிப்புத் துறையினரால் இவ்வழக்கு புலன்விசாரணை செய்யப் படுகிறது.

புளியம்பட்டி காவல் நிலையம் குற்ற எண் 133/84 இ.த.ச. பிரிவு 302 (ஒரே குடும்பத்தில் 5 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கு)

124. இது பெரியார் மாவட்டம், புளியம்பட்டி அருகில் உள்ள கொண்டயம்பாளையம் கிராமத்தில், நிலத் தகராறு காரணமாக 29—5—1984 அன்று இரவு 11.00 மணி அளவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் ஒட்டு மொத்தமாக கொலை செய்யப்பட்ட வழக்கு பற்றியதாகும். வரப்பாளையல் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து வந்த அறிக்கையின் பேரில் மேற்படி வழக்கு 30—5—1984 அன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. நெடுநாட்களாக இருந்து வந்த முன் பகைக் காரணமாக,ர்ாமசாமி கவுண்டர் என்பவர் மகன் கோவிந்தசாமி (25) என்பவர், காலஞ்சென்ற நாகம்மாள் வீட்டிற்குச் சென்று, அவரது சித்தாப்பாவின் (தந்தையின் இளைய சகோதரர்) குடும்பத்தைச் சேர்ந்த 5 நபர்களை அரிவாளால் வெட்டிக் கொன்றார். உள்ளூர் காவல் துறையினர் 4—6—1984 அன்று குற்றவாளியைக் கைது செய்து, அவரது.ஒப்புதல் வாக்கு மூலத்தின் பேரில் அவர் பயன்படுத்திய அரிவாள் கைப்பற்றப் பட்டது. மேற்படி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதி மன்றக் காவலில் உள்ளார். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

சட்டமும் ஒழுங்கும்.

125. இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயும். இந்துக்களுக்கும் கிருத்தவர்களுக்கும் இடையேயும் இங்கொன் றும் அங்கொன்றுமாக நடைபெற்ற சில சம்பவங்கள் நீங்கலாக பெரும்பாலும் 1984 ஆம் ஆண்டில் தமிழகத்தில் இனப் பூசல் அதிகமின்றி சூழ்நிலை அமைதியாகவே இருந்தது. காவல் துறை யினரால் உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட திறமையான நட வடிக்கையின் விளைவாக இத்தகைய சிறு சம்பவங்களும் கட்டுப்படுத்தப்பட்டன.

126. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்திகளில் உள்ள ஒரு சில முக்கிய சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினைகள் பற்றிய சம்பவங் களில் காவல் துறையினர் தக்க சமயத்தில் தலையிட்டு தங் களது திறமையான நடவடிக்கையினால் சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலை நாட்டியுள்ளனர்.





இனக் கலவரங்கள்.

127. 16—1—1984 அன்று இந்து முன்னணி மற்றும் விஸ்வ இந்து பரிஷத் உறுப்பினர்கள் திருச்சி மாவட்டம் பாரப் பட்டியிலிருந்து எடயப்பட்டிக்கு ஊர்வலமாகச் சென்றபோது கலவரம் ஏற்பட்டது. கூட்டத்தில் ஒரு பகுதியினர் கற்களை வீசத் தொடங்கியதால், காவல் துறையினர் குறைந்த பட்ச பலப் பிரயோகம் செய்து கூட்டத்தினரை பின்னுக்குத் தள்ளினர். இச் சம்பவத்தில் இரண்டு காவல் துறை துணைக் கண்காணிப் பாளர்கள், 19 காவல் துறையினரும் மற்றும் உதவி மாவட்டாட் சியரும் காயமடைந்தனர். மேலும் இக் குழப்பத்தில் 32 நபர் களும் காயமடைந்தனர். இரு கூரை வேய்ந்த கொட்டகை களும், ஒரு ஓட்டு வீடும் ஊர்வலத்தினரால் சேதப்படுத்தப் பட்டன. இச் சம்பவம் தொடர்பாக இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இச் சம்பவம் தொடர்பான வழக்கில் திரு. இராம கோபாலன் 6—2—1985 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆனார். திருச்சி முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் நடைபெறும் இவ்வழக்கு 8—5—1985 அன்று வரை ஒத்தி போடப்பட்டுள்ளது.

128. 6—6—1984 அன்று இந்து முன்னணியால் திருச்சி டவுன் ஹாலில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் (இந்து முன்னணி மாநில அமைப்பாளர்) திரு இராமகோபாலன் பேசி னார். அப்போது பொதுக் கூட்டத்தில் இடையூறு ஏற்பட்டது. எனவே அமைதியை நிலைநாட்டும் பொருட்டு காவல் துறை யினர் கட்டுக்கடங்காத கூட்டத்தினரைத் துரத்தி அப்புறப் படுத்தினர். இச் சம்பவத்தில் காவல் துறையினர் 11 பேர்களும் இந்து ஒருவரும் மற்றும் இஸ்லாமியர் ஒருவரும் காயமடைந் தனர். இச்சம்பவம் தொடர்பாகக் கோட்டை காவல் நிலையத் தில் குற்ற எண் 1239/84-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. பொதுக் கூட்டத்தில் முஸ்லீம் இனத்தவரையும், அவர்களது தலைவர் காயிதே மில்லத் பற்றியும் தரக் குறைவாகப் பேசியதாக திரு, இராமகோபாலன் மீது கோட்டை காவல் நிலைய குற்ற எண் 1240/84-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. 7—6—1984 அன்று திரு. இராம கோபாலன் காவல் துறையின ரால் கைது செய்யப்பட்டு பின்பு பிணையத்தில் விடுவிக்கப் பட்டார்.

129. 18—7—1984 அன்று காலை, மதுரை இரயில்நிலையத் தில் இந்து முன்னணியின் மாநில அமைப்புச் செயலாளர் திரு. இராம கோபாலன், எஸ். ஏ பாஷா என்பவரால் அரிவாளால் தாக்கப்பட்டார். திரு.இராம கோபாலன் 17-7-1984

அன்று இரவு கோயம்புத்தூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு, இராஜபாளையம் செல்லும் வழியில், கோயம்புத்தூரிலிருந்து இராமேஸ்வரம் விரைவு இரயில் வண்டியில் மதுரை வந்திறங்கினார். இச்சம்பவம் தொடர்பாக, மதுரை இரயில்வே காவல் நிலையக் குற்ற எண் 677/84ல் இ.த.ச. பிரிவு 307-ன்கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு, அவர் பயன்படுத்திய ஆயுதமும் கைப்பற்றப்பட்டது. 18—7—1984 அன்று வடாற்காடு மாவட்டம் வந்தவாசியில் இந்து முன்னணி உறுப்பினர்கள் சுமார் 20 பேர் கடைகளை மூடுமாறு அங்குள்ள கடைக்காரர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதற்கிடையில் 7 முகமதியர்கள் இந்து முன்னணியைச் சேர்ந்த 3 பேர்களைத் தாக்கி காயப்படுத்தினர். 19—7—1984 அன்று இம் முன்னணி உறுப்பினர்கள் சுமார் 150 பேர் ஊர்வலமாகச் சென்று மாவட்டாட்சியரிடம் மனுக் கொடுத்தனர். அந்த ஊர்வலத்தை கலைத்திடும் முயற்சியில் ஈடுபட்ட ஒரு கூட்டத்தினரைக் காவல் துறையினர் விரைந்து சென்று துரத்தினர்.

130. 19—7—1984 அன்று இந்து முன்னணி உறுப்பினர்கள் சுமார் 1,000 பேர் இந்து முன்னணித் தலைவர் சிந்தாமணி முதலியார் தலைமையில் மேலக் கடையநல்லூரிலிருந்து கடையநல்லூருக்கு ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தில் சென்ற கூட்டத்தினரை சிலர் கற்களால் தாக்கியதால் கலகம் ஏற்பட்டது. காவல் துறையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று, குறைந்த பட்ச பலப்பிரயோகம் செய்து கூட்டத்தினரைக் கலைந்து போகச் செய்தனர். இந்தக் குழப்பத்தில் காவலர் ஒருவரும், இந்து முன்னணி உறுப்பினர் ஒருவரும் சிறு காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பாக இ.த.ச. பிரிவுகள் 143, 147, 427, 332, 153 (ஏ), 188, 506 (2) மற்றும் காவல் சட்டப் பிரிவு 30 (2)கீழ் கடையநல்லூர் காவல் நிலையக் குற்ற எண் 220/84-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. 19—7—84 அன்று நடராசன் என்பவரும் மற்றும் 22 பேர்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இந்த வழக்குத் தொடர்பாக காவல் துறையினர் ஆர். எஸ்.எஸ். இயக்கத்தின் தென்காசிக் கிளையின் செயலாளரான கே.ஆர். சுப்ரமணிய ராஜா என்பவரை கைது செய்தனர். இச்சம்பவங்கள் காரணமாக கடையநல்லூரில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே மனக் கசப்பு ஏற்பட்டது. 22—7—1984 அன்று இரவு சிலர் உள்ளூர் முத்துமாரியம்மன் கோயில் பீடத்தில் எலும்புகளையும் செருப்புகளையும் வைத்தனர். இது சம்பந்தமாக கடையநல்லூர் காவல் நிலையக் குற்ற எண். 228/84ல் இ.த.ச. பிரிவு 295-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. திருநெல்வேலி



கோட்டாட்சியரும், தென்காசி காவல்துறை துணைக் கண்காணிப்பாளரும் மற்றும் பிற அதிகாரிகளும் 11—8—1984 அன்று அமைதிக் குழுக் கூட்டம் ஒன்றை நடத்தினர். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உட்பட அனைத்து கட்சிப் பிரதிநிதிகளும், முகமதியர் மற்றும் இந்து இனத்தைச் சேர்ந்த பெரியவர்களும் இதில் கலந்து கொண்டு இன அமைதியை காத்திட ஒப்புக் கொண்டனர். இச்சம்பவம் தொடர்பாக பதியப்பட்ட இவ் வழக்கு கண்டுபிடிக்க முடியாதது என முடிக்கப்பட்டது.

131. 1984 ஆம் ஆண்டில் மாநிலத்தில் கிருத்தவர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே குறிப்பிடத்தக்க மோதல் நிகழ்ந்த சம்பவம் ஏதுமில்லை. எனினும், மதுரையில் 18—7—1984 அன்று திரு. இராம கோபாலன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்து முன்னணி, மற்றும் ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் கிளைகள் தங்களது நடவடிக்கைகளை, அதிகப்படுத்தியதன் காரணமாக, 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் கிருத்தவர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே சிறு சிறு தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்தன. காவல் துறையினர் தலையிட்டு அமைதி ஏற்படுத்தினர்.

132. ஆதி திராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையில் ஒரு சில மோதல்கள் நடைபெற்றன. கீழ்க்காணும் சாதி சண்டைகளில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்டது.

133. சேலம் மாவட்டம் கங்கவல்லியில் உள்ள ஒரு திரையரங்கில் ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக 6 ஆதி திராவிடர்களால் ஒரு சிறுவன் தாக்கப்பட்டான். இதை அடுத்து 15-6-1984 அன்று, ஆதி திராவிடர்களும் சாதி இந்துக்களும் கலவரம் செய்வதற்காகத் தத்தம் ஆட்களைத் திரட்டத் தொடங்கினர். காவல் படையினர் அவ்விடத்திற்கு விரைந்தனர். அங்கு ஆதி திராவிடர் தெருவில் சுமார் 500 ஆதி திராவிடர்கள் கூடியிருந்ததைக் கண்டனர். அவர்கள் காவல் படையினரின் மீது கல்லெறிந்தனர். எனவே, கூடியிருந்த கும்பலை அச்சுறுத்துவதற்காக ஆத்தூர் துணை காவல் கண்காணிப்பாளர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டதால் கூட்டத்தினர் கலைந்தனர். இது சம்பந்தமாக வரகூர் காவல் துறையினர் மூன்று வழக்குகளை பதிவு செய்துள்ளனர். இவ்வழக்குகள் நீதிமன்ற நிலுவையில் உள்ளன.

134. 26—7—1984 அன்று திரையரங்கொன்றில் ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக வடாற்காடு மாவட்டம், திருவண்ணாமலை அண்ணாமலை நகர் காலனியைச்சேர்ந்த ஆதி திராவிடர்கள் சுமார் 500 பேர் பள்ளித் தெருவிற்குச் சென்று சாதி இந்துக்களைத் தாக்கினர். பள்ளித் தெரு, கட்டபொம்மன் தெரு மற்றும் எடத் தெரு ஆகிய தெருக்களில் வசிக்கும் சாதி இந்துக்கள் இரு அணிகளாகச் சேர்ந்து அண்ணாமலை நகரைச் சார்ந்த ஆதி திராவிடர்களைத் தாக்கினர். முறையான எச்சரிக்கைக்குப் பிறகு கூட்டத்தினரைக் கலைப்பதற்காக காவல் துறையினர் தடியடி நடத்தினார்கள். அது பயனளிக்காமற் போகவே காவல் துறையினர் 19 முறை வெற்று வேட்டுக்களை வெடித்தனர். இதில் எட்டு ஆதி திராவிடர்களுக்கு தோட்டாக் காயங்கள் ஏற்பட்டன. கும்பலைச் சேர்ந்தவர்கள் தாக்கியதில் பத்து காவலர்களுக்கு காயங்கள் ஏற்பட்டன.

135. கூலித் தகராறு காரணமாக 31—10—1984 அன்று வடாற்காடு மாவட்டம், கக்குண்டி மற்றும் அருகாமை கிராமங்களைச் சேர்ந்த வன்னியர் கூட்டத்தினர் (விவசாயத் தொழிலாளர்கள்) கரிவேடு கிராமத்திலுள்ள நாயுடுக்களின் (நிலக்கிழார்கள்) வீடுகளைத் தாக்கினர். 1—11—1984 அன்று காவல் துறையினர் கக்குண்டி கிராமத்திற்குச் சென்று 4 பேரைக் கைது செய்தபோது வன்னியர் கூட்டமொன்று காவலரைத் தாக்கி கைது செய்யப்பட்டிருந்த நால்வரையும் விடுவித்தது. அதே தினம் மீண்டும் காவலர் அக்கிராமத்திற்குச் சென்று 18 பேரைக் கைது செய்தபோது, கிராமவாசிகள் காவலரைத் தாக்கியதில் 10 காவலர்களுக்கும் காவல் துறையினர் பயன்படுத்திய தனியார் ஊர்தியின் ஓட்டுநர் இருவருக்கும் காயங்கள் ஏற்பட்டன. கூட்டத்தில் இருந்தவர்கள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டனர். காவலர்கள் உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படுவது உறுதி என்ற நிலையில் காவல் துறையினர் துப்பாக்கியால் 10 முறை சுட்டனர். இதில் ஒரு பெண் அந்த இடத்திலேயே இறந்தார். மற்றொரு பெண் காயமடைந்தார். இது சம்பந்தமாக கலவை காவல் நிலையத்தில் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இச்சம்பவம் தொடர்பாக இராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியரால் விசாரணை நடத்தப்பட்டு, அதன் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

136. 1—11—1984 அன்று செங்கல்பட்டு (கிழக்கு) தாவட்டத்தில் கொட்டிவாக்கம் கடைத் தெருவில் கடை ஒன்றில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது கொட்டிவாக்கம்





காலனியைச் சேர்ந்த . ஆதி திராவிடர்களுக்கும் உள்ளூர் குப்பத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. காவல் துறையினர் தலையிட்டு அமைதியை நிலைநாட்டினர். மீண்டும் மீனவர்கள் ஆதி திராவிடர்களைத் தாக்குவதாகக் காவல் துறையினருக்கு கிடைத்த தகவலின்பேரில் அவர்கள் அக்கிராமத்திற்குச் சென்று கூடியிருந்தவர்களைத் துரத்தினர். அவர்கள் தங்கள் குப்பத்திற்குத் திரும்பிச் செல்லும்போது 2 ஆதி திராவிடர்களைக் கடத்திச் சென்றனர். காவல் துறையினர் கடத்திச் செல்லப்பட்டவர்களை மீட்பதற்கு சென்றபோது மீனவர்கள் காவலர்களைத் தாக்கினர். காவல் படையினர் உயிருக்கு ஆபத்து என்ற நிலையில் ஏழு முறை சிறு தோட்டாக்கள் கொண்டு துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் காயமடைந்த தேசமுத்து என்பவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் போது வழியிலேயே மரணம் அடைந்தார். கடத்தப்பட்ட இரு ஆதி திராவிடர்கள் பின்னர் பத்திரமாக கிராமத்திற்குத் திரும்பினர். இது சம்பந்தமாக திருவான்மியூர் காவல் நிலையத்தில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளன. இது குறித்து சைதாப்பேட்டை உதவி ஆட்சியாளரின் நீதி விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்.

137. தீவிரவாதிகள் என்ற பெயரில் நடமாடும் சமூக விரோதிகளின் இயக்கங்கள் வெளிப்படையான பல நடவடிக்கைகளில் அதிகமாக ஈடுபடத் தொடங்கின. அண்மைக்காலமாக மேற்படி இயக்கம் தமிழ்நாட்டில் சற்றுத் தீவிரம் அடைந்தது. இதன் காரணமாக காவலர்களைத் தாக்குவது, வழிப்பறி, அரசு அலுவலகங்களுக்குள் அத்துமீறி நுழைதல், பலவந்தமாக பிடுங்குதல் மற்றும் அச்சுறுத்தல் ஆகிய வன்முறை சம்பவங்கள் இத் தீவிரவாதிகள் குழுக்களால் நிகழ்ந்தன.

138. 1984ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இத்தீவிரவாதிகளின் குழுக்களும், முன்னணி அமைப்புகளும் தேர்தலைப் புறக்கணிக்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து, சுவரொட்டிகளை ஒட்டியதோடு மட்டுமல்லாமல் பொதுக் கூட்டங்களையும் நடத்தின.

## விவசாயிகளின் நிலைமை.

*139.* நடப்பாண்டில் விவசாயிகளின் நிலைமை பொதுவாக அமைதியாக இருந்தது. ஆயினும், சில முக்கிய சம்பவங்கள் பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட பத்திகளில் கொடுக்கப் பட்டுள்ளன.

*140.* தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் போதுமான வெள்ள நிவாரண நடவடிக்கைகள் எடுக்கக் கோரி 4–4–1984 அன்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாநிலத்தின் பல்வேறு மையங்களில் உண்ணாவிரதம் இருந்தனர்.

*141.* விவசாய விளைபொருட்களுக்கு அதிக விலை, விவசாயத் தொழிலாளர்களுக்கு கூடுதல் ஊதியம் ஆகியவை கோரி 28–6–1984 அன்று ''தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச்'' சேர்ந்த உறுப்பினர்கள் தஞ்சை கிழக்கு மற்றும் தஞ்சை மேற்கு மாவட்டங்களில் பல்வேறு சமயங்களில் ஊர்வலங்கள் நடத்தி வருவாய்த் துறை அலுவலகங்கள் முன்னால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி, அவ்வலுவலகங்களில் மனுக்களை அளித்தனர். விவசாயிகள் கடன்களைத் தள்ளுபடி செய்தல், விவசாய விளைபொருட்களுக்கு அதிக விலை ஆகியவை கோரி 5–7–1984 அன்று இவ்வுறுப்பினர்கள் மாநிலத்தில் சில மையங்களில் வருவாய்த் துறை அலுவலகங்கள் முன்னால் உண்ணாவிரதம் இருந்தனர்.

*142.* 19–8–1984 அன்று சித்திரக்குடியைச் சேர்ந்த சில நிலக்கிழார்கள் சித்திரக்குடியிலிருந்து பூதலூர் வரை ஊர்வலமாக சென்று அங்கே பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினர். ஊர்வலம் செல்லும் வழியில் அவர்கள் மீது விவசாயத் தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் கற்களை வீசித் தாக்கினர். இதில் 5 காவல் துறையினரும் 4 கிராமவாசிகளும் காயமுற்றனர். இதன் பின்னர் காவல் துறையினர் கூட்டத்தினரைக் கலைப்பதற்காக கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி வானத்தை நோக்கிச் சுட்டனர். இந்தச் சம்பவத்தை ஒட்டி பூதலூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 165/84-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 33 பேர்கள் கைது செய்யப்பட்டனர். இச் சம்பவம் தொடர்பாக வருவாய் கோட்டாட்சியரால் விசாரணை நடத்தப்பட்டு அவரின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.





*143.* கடுமையான ஜப்தி நடவடிக்கைகள், மற்றும் மின் இணைப்பைத் துண்டித்தல் ஆகியவை நடைபெறுவதாகக் கூறி, திரு. சி. நாராயணசாமி நாயுடுவும் மற்றும் இக்கட்சி உறுப்பினர்கள் 95 பேரும் 13–2–1984 அன்று வேலூரில் (வட ஆற்காடு) ஊர்வலம் ஒன்றினை நடத்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு மறியல் செய்ய முயன்றனர். வேலூர் (வட ஆற்காடு) (வடக்கு) காவல் நிலைய காவலரால் அவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

## தொழிலாளர்கள்.

*144.* 1984 ஆம் ஆண்டில் பொதுவாக தமிழ்நாட்டில் தொழிலாளர் நிலைமை அமைதியாக இருந்தது. ஆயினும், ஓரிரு தொழிற்சாலைகளில் உள்ளூர் பிரச்சினைகளுக்காக ஆங்காங்கே தொழிலாளர் அமைதியின்மை காணப்பட்டது.

145. மாநில அரசு தொழிலாளர் விரோதப் போக்கினை கடைப்பிடிப்பதாகக் கூறி, அதைக் கண்டித்து அ.இ.அ.தி.மு.க., ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.எஸ். தொழிற்சங்கங்களைத் தவிர பல்வேறு தொழிற்சங்கங்களில் 14–2–1984 அன்று சென்னை நகரம், செங்கை (கிழக்கு) மாவட்டம் ஆகிய இடங்களில் ஒரு பொது வேலை நிறுத்தமும், 12–9–1984 அன்று தமிழகம் முழுவதும் ஒரு பொது வேலை நிறுத்தமும் நடைபெற்றது. 14–2–1984 அன்றைய வேலை நிறுத்தத்தின் போது எவ்வித அசம்பாவிதமும் நடைபெறவில்லை. ஆனால் 12–9–1984 அன்று நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின் போது திருச்சி மாவட்டம் திருவெரம்பூரில் உள்ள பெல் நிறுவனத்தில் சுமார் 2,000 தொழிலாளர்கள் (சி.ஐ.டி.யு. மற்றும் தி.மு.க.) திருச்சியிலிருந்து புறப்பட்ட பேருந்துகள் மீது கற்களை வீசித் தாக்கினர். காவல்துறையினர் அவர்களை விரட்டிய போது அவர்கள் பெல் நகரியத்திற்குள் புகுந்து கொண்டு கற்களை எறிந்ததில் 12 காவல்துறை அதிகாரி களுக்கு காயமேற்பட்டதுடன், 34 பேருந்துகள் 2 ஜீப்புகள் ஆகியவற்றிற்கு சேதமும் ஏற்பட்டது. மேலும் வன் முறைக் கூட்டத்தினர் ஒரு பள்ளிக்கூடத்தின் கூரைக்கும் மற்றும் இரண்டு இடங்களுக்கும் தீ வைத்தனர். சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றிற்கு அவர்கள் தீ வைக்க முற்பட்டபோது காவல் துறையினர் குறைந்தபட்ச பலத்தைப் பிரயோகித்து வன்முறையாளர்களை கலைந்துபோகச் செய்தனர். இது தொடர்பாக பாய்லர் பிளாண்ட் காவல் நிலையத்தில் குற்ற எண். 136/84 இல் (இ.த. சட்டப் பிரிவுகள் 147, 148, 188, 324, 332, 436, 437, 307, 506 (2) ஆகியவைகளிலும்

கிரிமினல் சட்டத் திருத்தச் சட்டம் பிரிவு 7 (ஏ), பொதுச் சொத்து நாசத் தடுப்புச் சட்டம் 3 (1) பிரிவு, இ.த.ச. 149 பிரிவில் இணைந்து படிக்கப்பட்டது. ஒரு வழக்கும், குற்ற எண். 137/84இல் (இ.த.ச. 147, 148, 188, 324, 436, 307 ஆகிய பிரிவுகளில்) பிறிதொரு வழக்கும் பதியப்பட்டன. இரு வழக்குகளில் 87 பேர் கைது செய்யப்பட்டு (குற்ற எண் 136/84இல் 33 பேரும் 137/84இல் 54 பேரும்) காவலில் வைக்கப்பட்டனர். தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டம் தேவராய நேரி கிராமத்திற்கருகில் சில வன்முறையாளர்கள் தஞ்சையி லிருந்து திருச்சிக்குப் புறப்பட்டுச் சென்ற சோழன் போக்கு வரத்துக் கழக பேருந்துகள் மீது கற்களை எறிந்ததில் இரு பயணிகளுக்கு காயமேற்பட்டது. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது ஒருவர் இறந்தார். காயமடைந்த மற்றொரு சிறுவன் மருத்துமனையில சேர்க்கப்பட்டான். இது தொடர் பாக செங்கிபட்டி காவல் நிலைய குற்ற எண் 147/84 இல் இ.த.ச. 147, 148, 307, 302 ஆகிய பிரிவுகளில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்ட 12 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

146. மறுநாள் காலை 13–9–1984 அன்று திருவெரம்பூர், பெல் நிறுவனத்தின் முதல் மற்றும் பொது ஷிப்ட் தொழி லாளர்கள் சுமார் 8,000 பேர்கள் வேலை நிறுத்தம் செய்து, பெல் நிறுவனத்தின் பாதுகாவலர் அலுவலகத்தின் மீது கற்களை வீசி எறிந்தனர். காவல் துறையினர் தலையிட்ட போது, காவல் துறையினர் மீது அவர்கள் கற்களை வீசி யெறிந்ததில் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கூடு தல் காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு அமல் பிரிவு), திருச்சி ஊரக மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் உட்பட 7 பேருக்கு காயமேற்பட்டது. பெல் நிறுவனத்தின் நான்கு பாதுகாவல் பணியாளர்களுக்கும் காய மேற்பட்டது. அதற்குப் பின்னர், காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்து வன்முறைக் கும்பலைக் கலைத்தனர். இச் சம்பவத்தில் ஒன்பது பேருக்குக் காயமேற்பட்டது. திருச்சி அரசினர் மருத்துவமனையில் மாவட்ட காவல் கண்காணிப் பாளரும் மற்றும் மூன்று காவலர்களும் அனுமதிக்கப்பட்டனர். இது தொடர்பாக திருச்சிராப்பள்ளி பாய்லர் பிளாண்ட் காவல் நிலைய குற்ற எண் 138/84இல் இந்திய தண்டனை சட்டப்படி 147, 148, 324, 325, 332, 307, 427, 506 (2) பிரிவுகளிலும், பொதுச் சொத்து நாசத் தடுப்பு 3 (1) பிரிவிலும் வழக்கொன்று பதியப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். காவல் துறையினர் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்து, வழக்குகள் பதிந்து, குற்றவாளிகளைக் கைது செய்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டினர்.



## பிற முக்கிய நிகழ்ச்சிகள்.

147. சென்னை பின்னி ஆலைத் தொழிலாளர்கள் 14–1–1984 முதல் 29–11–1984 வரை நடத்திய வேலை நிறுத்தம்.—வேலை நிறுத்தத்தின் போது பின்னி ஆலையை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோரி பெரம்பூர் சென்னை தொழி லாளர் சங்க அலுவலகத்திலிருந்து தலைமைச் செயலகத்திற்கு பின்னி ஆலையின் சுமார் 2,000 தொழிலாளர்கள் 26–3–1984 அன்று ஊர்வலமாகச் சென்றனர். பிரம்புக் கடைச்சாலை மற்றும் என்.எஸ்.ஸி. போஸ் சாலையில் ஊர்வலம் சென்று கொண்டிருந்த போது ஊர்வலத்தினர் பின்னி காட்சிக் கூடம் மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மீதும் கற்களை எறிந்து சேதப்படுத்தினர். இச் சம்பவம் தொடர்பாக இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஆலையை மீண்டும் திறக்கக் கோரியும், ஆலையை அரசு எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கோரியும் மீண்டும் 23–7–1984 அன்று சுமார் 2,000 தொழிலாளர்கள் பெரம்பூரிலிருந்து தலைமைச் செயலகத் திற்கு ஊர்வலமாகச் சென்றனர். பின்னி ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக, மற்றொரு பிரிவினர் மன்றோ சிலையிலிருந்து ஊர்வலமாகச் சென்றனர். அண்ணா சாலையில் அவ்வூர்வலம் சென்று கொண்டிருந்தபோது ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த சிலர் வன்முறையில் ஈடுபட்டு கார்கள், பேருந்துகள், லாரிகள், சமிக்ஞை விளக்குகள் ஆகியவைகளின் மீது கற்களை வீசியெறிந்து சேதப்படுத்தினர். காவல் துறை யினர் வாலாஜா சாலைக்கருகில் அக் கூட்டத்தைக் கலைத்து அனுப்பினர். இச்சம்பவம் தொடர்பாக டி. 1 திருவல்லிக்கேணி காவல் நிலைய குற்ற எண் 2181/84இல் தமிழ்நாடு பொதுச் சொத்து நாசத் தடுப்புச் சட்டம் பிரிவு, 2 (1) மற்றும் இ.த.ச. 147, 148, 336-பிரிவுகளில் ஒரு வழக்கும், குற்ற எண் 2182/84இல் இ.த.ச. 147, 148, 336, 427 பிரிவு களில் மற்றொரு வழக்கும் பதியப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக 18 பேர் கைது செய்யப்பட்டனர்.

29—11—1984 அன்று ஆலை மீண்டும் திறக்கப்பட்டு 500 தொழிலாளர்கள் பணியில் சேர்ந்தனர்.

## துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

148. 12–3–1984 மற்றும் 13–3–1984 ஆகிய தேதிகளில் டில்லியில் நடைபெற்ற ஒப்பந்த பேச்சு வார்த்தைகள் தோல்வி யடைந்ததைத் தொடர்ந்து சென்னை மற்றும் தூத்துக்குடி உட்பட பத்து பெரிய துறைமுகங்களிலுள்ள துறைமுக மற்றும் கப்பல் கட்டும் தொழிலாளர்கள் 15/16–3–1984 அன்றிலிருந்து

லாளர்கள் பிரதிநிதிகளுக்கும் போக்குவரத்து மற்றும் கப்பல் துறை மத்திய அமைச்சருக்குமிடையே ஊதிய விகித மாற்றத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் 11-4-1984 அன்று கைவிடப்பட்டது. இவ்வேலை நிறுத்தத்தின் போது எவ்வித வன்முறைச் சம்பவங்களும் நடைபெறவில்லை.

### திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளில் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

149. ஊதிய விகித மாற்றம், பஞ்சப்படி உயர்வு ஆகியன கோரி கோயம்புத்தூர் (ஊரகம்) மாவட்டம் திருப்பூரில் உள்ள 1,200 பனியன் தொழிற்சாலைகளில் பணி புரியும் சுமார் 15,400 தொழிலாளர்கள் 17-4-1984 முதல் 29-8-1984 வரை வேலை நிறுத்தம் செய்தனர்.

150. 8-5-1984 அன்று வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட சுமார் 100 பேர், திருப்பூர் கருமந்தம்பாளையத்திலிருந்து சென்னைக்கு சென்று கொண்டிருந்த லாரி ஒன்றினை வழி மறித்து அதிலிருந்து பனியன் கட்டுக்களைச் சேதப்படுத்தி, லாரிக்கும் சேதம் விளைவித்தனர். இதனால் ஏற்பட்ட சேதத்தின் மொத்த மதிப்பு ரூ. 20,000. இச்சம்பவம் தொடர்பாக திருப்பூர் (வடக்கு) காவல் நிலையம் குற்ற எண். 256/84இல் இ. த. ச. 147, 148, 427, 505,506 (ii) பிரிவுகளில் வழக்கொன்று பதியப்பட்டது.

151. 21-6-1984 அன்று ஆலைக்கு, வெளுக்கப்பட்ட துணிகளை ஒரு கூண்டு உந்தில் எடுத்துச்சென்ற போது, குளத்துப்பாளையம், சந்திப்பில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த சுமார் 50 தொழிலாளர்கள் அந்த வண்டியை நிறுத்தி, துணிகளை கீழே இறக்கி கொளுத்தியதுடன், வண்டி ஓட்டுநரையும் பயமுறுத்தினர். இது தொடர்பாக, திருப்பூர் காவல் நிலையக் குற்ற எண். 95/84இல் இ.த.ச. 147, 341, 435. 506 பிரிவுகளில் ஒரு வழக்கு பதியப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக 18 பேர் கைது செய்யப்பட்டனர். இதனால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு 40,000.

152. 26-6-1984 அன்று திருப்பூரில் ஒரு ஆலையிலிருந்து பிராசசிங் யூனிட்டிற்கு துணிகளை எடுத்துச் சென்ற லாரியினை திருமுருகம்பூண்டிக்கு அருகில் வேலை நிறுத்தம் செய்யும் சுமார் 40 தொழிலாளர்கள் வழிமறித்து, லாரிக்கு தீ வைத்தனர்.



இச்சம்பவத்தில் ரூ. 1,50,000 மதிப்புள்ள பொருட்கள் சேதம் அடைந்தன. மேலும் லாரிக்கு ரூ. 20,000 சேதமேற்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக அவினாசி காவல் நிலைய குற்ற எண் 163/84 இல் இ.த.ச. 147, 341, 307, 435 பிரிவுகளில் வழக்கொன்று பதியப்பட்டது.

### உதகமண்டலம் இந்துஸ்தான் புகைப்படக்கருள் தயாரிப்பு நிறுவன தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்.

153. 11-5-1984 அன்றிலிருந்து தொழிலாளர்களின் கருவி தொடா இயக்கத்தைத் தொடர்ந்து, அன்றே, நிர்வாகம் கதவடைப்பை அறிவித்தது. 11-6-1984 அன்று கதவடைப்பு நீக்கப்பட்டு தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர். 11-6-1984 அன்று பிற்பகல் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் சுமார் 200 பேர் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற சேரன் போக்குவரத்துக் கழக பேருந்துகளை வழிமறித்து பேருந்துகளுக்கு காவலாகச் சென்ற காவல் துறையினர் மீது கற்களை எறிந்ததில் 5 காவலர் களுக்கும் ஒரு தொழிலாளி, ஒரு ஊழியர் ஆகியோர்களுக்கும் காயமேற்பட்டது. இதற்குப் பின்னர், தகுந்த முன்னெச்சரிக்கைக்குப் பின்னர் காவல் துறையினர் இலேசான தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தினைக் கலைத்தனர். இச்சம்பவத்தில் 33 பேர்களுக்கு காயமேற்பட்டது. காயமடைந்தவர்களில் 15 பேர் உதகமண்டலம் அரசினர் மருத்துவ மனையில் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக உதகமண்டலம் நகர மேற்கு காவல் நிலைய குற்ற எண். 103/84 இல் வழக்கொன்று பதியப்பட்டது. 11-6-1984 அன்று 79 பேர் கைது செய்யப்பட்டனர். 12-6-1984 அன்று மேலும் 7 பேர் கைது செய்யப்பட்டனர். 19-6-1984 அன்று தொழிலாளர்கள் நிபந்தனையின்றி வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். 22-6-1984 அன்று அனைத்து தொழிலாளர்களும் பணிக்குத் திரும்பினர்.

### சென்னை, மணலி உரத்தொழிற்சாலையில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்.

154. 26-5-1984 அன்று வேலை நிறுத்தம் செய்யும் சில தொழிலாளர்களால் ஒரு ஒப்பந்தக்காரரும் அவருடைய ஓட்டுநரும் ஆலைக்குள் நுழைந்தபோது தாக்கப்பட்டனர். காயமடைந்த ஒப்பந்தக்காரரும் அவருடைய ஓட்டுநரும் மற்றும் இரு தொழிலாளர்களும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு

எடுத்துச் செல்லப்படும்போது வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களின் ஒரு பிரிவினர் அவர்கள் சென்ற ஊர்தியை மணலி பொன்னேரி சாலை சந்திப்பிற்கருகில் வழிமறித்து ஊர்தியிலிருந்தவர்களைத் தாக்கி, காருக்கு சேதமேற்படுத்தினர். காவல் துறையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று தாக்குதலுக்குள்ளானவர்களைக் காப்பாற்றி அப்புறப்படுத்தினர். இச்சம்பவம் தொடர்பாக வன்முறைக் கும்பலை சார்ந்த 14 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், இச் சம்பவத்தில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சார்ந்த ஒருவருக்கு காயமேற்பட்டது. பின்னர், மணலி இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு எதிரில் ஒரு பிரிவினர் கூடி காவல்துறையினர் மீது கற்களை எறிந்தனர். காவல் துறையினர் அவர்களை கலைத்தனர். ஆனால், அக்கூட்டத்தினர் காவல் துறையினர் மீது தொடர்ந்து தாக்கியதில் 9 காவல் துறை அதிகாரிகள், ஒரு ஓட்டுநர் மற்றும் தனியாருக்குச் சொந்தமான ஒரு லாரியினை சுத்தம் செய்பவர் ஆகியோருக்கு காயமேற்பட்டது. காவல் துறையினர் சென்ற தனியார் லாரிக்கு கூட்டத்தினர் தீ வைத்ததுடன், மணலி காவல் சார்பு ஆய்வாளரின் மோட்டார் சைக்கிளுக்கும் தீ வைத்தனர். காவல் துறையினரை, வன்முறை கூட்டத்தினர் இடைவிடாது தாக்கியதைத் தொடர்ந்து காவல் சார்பு ஆய்வாளர், கைத்துப்பாக்கியினால் சுட்டார். இதற்கிடையில், சம்பவம் நடந்த இடத்திற்கு கூடுதல் காவலர்கள் அனுப்பப்பட்டு அவர்கள் கூட்டத்தினரை கலைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 69 பேர் கைது செய்யப்பட்டனர். மணலி காவல் நிலையத்தில் குற்ற எண்கள் 255, 256 மற்றும் 257/84 இல் வழக்குகள் பதியப்பட்டன. நிர்வாகத்தினருடன் ஏற்பட்ட உடன்படிக்கையினையடுத்து 30–7–1984 அன்று ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

உதகமண்டலம், அரவங்காடு கார்டைட் பாக்டரி.

155. அக்விலைப்படி நிலுவையினை உடனடியாக கொடுக்க கோருதல் மற்றும் பல்வேறு கோரிக்கைகளுக்காக கார்டைட் ஆலை தொழிலாளர் சங்கத்தைச்சார்ந்த சுமார் 700 தொழிலாளர்கள் 28–9–1984 அன்று ஆலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். தேசிய ஊழியர்கள் சங்கத்தைச் (ஐ.என்.டி.யூ.சி. சேர்ந்த தொழிலாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தொழிற்சங்கப் போட்டி காரணமாக கார்டைட் ஆலைத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ராஜ்குமார் (ஏ.ஐ.டி.யூ.சி.) என்பவரை தேசிய ஊழியர்கள் சங்கத்தைச் சார்ந்த (ஐ.என்.டி.யூ.சி.) தொழிலாளி ஒருவர் 28-9-1984 அன்று கத்தி



யால் குத்தினார். அவர் 5–10–1984 அன்று வெல்லிங்டன் இராணுவ மருத்துவமனையில் இறந்தார். அரவங்காடு காவல் நிலைய குற்ற எண்கள் 72, 73, 74/84-இல் மூன்று வழக்குகள் பதியப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைத்தறி ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தும்.

156. ஆலை உரிமையாளர்களுக்கும், அனைத்துக் கட்சி தொழிற் சங்கத் தலைவர்களுக்குமிடையே (சி.ஐ.டி.யூ., தி.மு.க., ஏ.ஐ.டி.யூ.சி., அ.இ.அ.தி.மு.க, டி.என்.டி.யூ.சி., ஐ.என்.டி.யூ.சி. யூ.டி.எல்.ஏ.) மிகைச் சம்பளம் ( Bonus ) பற்றிய பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததையடுத்து மேற்கண்ட தொழிற் சங்கங்களை சேர்ந்த பல கைத்தறி ஆலைத் தொழிலாளர்கள் மிகைச் சம்பளம் கோரி 12–10–1984 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னையில் தொழிலாளர் நல ஆணையர் மற்றும் தென் இந்திய ஆலைச் சங்கம் (S.I.M.A.) பிரதிநிதிகளுக்குகிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் 1965 மிகைச்சம்பளம் ( Bonus ) சட்டத்தின்படி உண்டான மிகைச் சம்பளமும் அதனுடன் 3.67 சதவீதம் தற்காலிகத் ( Adhoc ) தொகையும், ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 100, முன்பணம் கொடுப்பது என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தத்தினை சி.ஐ.டி.யூ., தி.மு.க., ஏ.ஐ.டி.யூ.சி, தொழிற்சங்கத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளாமல், அதை எதிர்த்து 12–10–1984 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வது என்று தீர்மானித்தனர். அதன்படி, 12–10–1984 அன்று தென் இந்திய ஆலைச் சங்கம் கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கும் மேற்கண்ட தொழிற் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் 10 என்.டி.சி., ஆலைத் தொழிலாளர்களும் மாநில முழுவதும் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களின் வேலை நிறுத்தம்.

157. காவல் துறையினர் கொடுமை செய்வதாகக் கூறி, அதைக் கண்டித்து 25–1–1984 அன்று சென்னை நகரில் உள்ள ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம் செய்தனர் 28–1–1984 அன்று சென்னை நகர ஆட்டோ ஓட்டுநர்கள் நல சங்கத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் சுமார் 4,000 பேர் நேப்பியர் பூங்காவிலிருந்து தலைமைச் செயலகத்திற்கு

ஊர்வலமாகச் சென்றனர். அவர்களின் பிரதிநிதிகள் சிலர் போக்குவரத்து அமைச்சரை சந்தித்து மனு கொடுத்தனர். ஊர்வலத்தில் சென்றவர்கள் கலைந்து சென்றபோது அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கருகில் இரண்டு குழல் விளக்குகளை சேதப்படுத்தி வாலாஜா சாலையில் கற்களை எறிந்தனர். காவல் துறையினரைப் பார்த்தவுடன் அவர்கள் ஓடிவிட்டனர். ஊர்வலத்தினர் வாலாஜா சாலையில் காவல் துறையினர் மீது கற்களை எறிந்ததுடன் சேப்பாக்கத்திலுள்ள அரசு அலுவலகங்கள் மீதும் கற்களை எறிந்து கண்ணாடிகளுக்கு சேதம் விளைவித்தனர். வன்முறைக் கும்பலை அடக்க காவல் துறையினர் நான்கு கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். அவர்கள் ஓடிச் சென்றபோது ''வாகனங்களை நிறுத்தக் கூடாது'' என்ற இரண்டு அறிவிப்பு பலகைகளை அகற்றியதுடன், பேருந்து நிறுத்துமிடத்தை சேதப்படுத்தி, 7 பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகள், ஒரு மாநகராட்சி லாரி, அரசு விருந்தினர் மாளிகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஊரக தொழில் அமைச்சரின் அலுவலகக் கார் ஆகியவை மீது கற்களை வீசியதுடன், தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய ஜீப் ஒன்றின் மீதும் கல்லெறிந்தனர். மேலும் அவர்கள் ஒரு சேமப் படை ஆய்வாளரையும் தாக்கினர். இச்சம்பவம் தொடர்பாக வழக்குகள் பதியப்பட்டு, 100 ஆட்டோ ஓட்டுநர்கள் கைது செய்யப்பட்டனர்.

158. 1984—ஆம் ஆண்டில், 334 வேலை நிறுத்தங்கள், 15 ஆள் குறைப்புகள், 22 கதவடைப்புகள் ஆகியவை நடைபெற்றன. அதிக போனஸ், அதிகச் சம்பளம், மருத்துவ வசதிகள், வேலை நீக்கம் செய்யப்பட்ட/ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுத்தல், தொழிலாளி-முதலாளிகளுக்கிடையே மோதல் ஆகியவைகள் தான் பெரும்பாலான வேலை நிறுத்தங்களுக்கு காரணமாகும்.

காவல் துறையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள்.

159. 1984—ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 24 சம்பவங்களில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அவற்றில், 7 சம்பவங்களில் அண்டை மாநிலங்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களை கள்ளத்தனமாக கடத்திச் சென்று கொண்டிருந்த வாகனங்களின் மீது, அவைகளை நிறுத்துவதற்காக, காவல் துறையினர் சுட நேரிட்டது பற்றியதாகும். இச்சம்பவங்களில் எவரும் காயமோ அல்லது மரணமோ அடையவில்லை.



160. இவைகளன்றி, 24—11—1984 அன்று தூத்துக்குடி துறைமுகத் தளத்தில் வேகன் ஒன்றிலிருந்து முன்னாள் குற்றவாளி ஒருவர் தன்னுடைய கூட்டாளிகளுடன் யூரியாவைத் திருடிக்கொண்டிருந்தபோது இரயில்வே பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

கீழ்க்கண்ட பத்திகளில் இது பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :—

161. 2—3—1984 அன்று நீலகிரியில் கொட்டடாவில் சேரன் போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்றில் படிக்கட்டில் நின்று கொண்டு பயணம் செய்த படகர் ஒருவரைக் காவலர் ஒருவர் அவ்வாறு பயணம் செய்யக் கூடாதென்று கூறினார். காவலரின் கூற்றினை ஆதரித்த இலங்கை அகதி ஒருவர் மேற்படி படகரால் தாக்கப்பட்டார். மேற்கொண்டு இன்னல் விளைவதை தவிர்க்கும் பொருட்டு அப்பேருந்து ஓட்டுனர் வண்டியை விரைவாக ஓட்டி அதனை ஓம்நகர் அருகே நிறுத்தினார். இச்சம்பவத்தால் ஆத்திரமுற்ற அருகில் வாழும் இலங்கை அகதிகள் ஓம்நகர் அருகே கூடினர். அவ்வழியே வந்த மற்றொரு பேருந்தில் பயணம் செய்த காவல் சார்பு ஆய்வாளர் ஒருவரும், இரு காவலர்களும் அவர்களை கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால், கட்டுக்கடங்காத அக்கூட்டத்தினர் அவர்களைத் தாக்கினர். இதுபற்றி தகவல் கிடைத்து, அவ்விடத்திற்கு விரைந்து வந்த காவலர் குழு ஒன்றும் கோபமுற்றிருந்த கூட்டத்தினரால் தாக்கப்பட்டது. காவல் துறை பணியாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும்போல் இருந்ததால், காவல் துறையினர் துப்பாக்கியால் சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் சேரன் போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்றின் நடத்துனரும் காயமடைந்தார். இச்சம்பவத்தில் மேலும் ஐந்து காவல் அலுவலர்களும் காயமடைந்தனர்.. காயமடைந்த பேருந்தின் நடத்துனர் உதகை அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். குன்னூர் உதவி ஆட்சியாளரை இச்சம்பவம் பற்றி நீதி விசாரணை நடத்துமாறு நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் உத்தரவிட்டார். காவலர் தற்காப்பிற்காக சுட்டது சரியானதே என்ற விசாரணை அதிகாரியின் முடிவினை அரசு ஏற்றுக்கொண்டது.

162. 9—3—1984 அன்று சைதாப்பேட்டை, ஜி.எஸ்.டி. சாலை-தச்சூர் கூட்டுச் சாலையில் (செங்கை கிழக்கு) உரிமம் இன்றி நெல் கடத்திய லாரி ஒன்றை சைதாப்பேட்டை உதவி ஆட்சியாளர் தடுத்தார். அந்த லாரி ஓட்டுனர், வண்டியினை நிற்குமாறு இட்டப்பட்ட கட்டளையை மீறி வண்டியை ஓட்டிச் சென்று விட்டார். காவல் துறைக் குழுவின் துணையோடு

உதவி மாவட்ட ஆட்சியாளர் மேற்படி லாரியை செங்குன்றம் வரை துரத்திச் சென்று, மேற்கொண்டும் நிற்காததால் உதவி மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில், காவலர் ஒருவர் அந்த லாரியை நிறுத்த அதன் டயரை நோக்கிச் சுட்டார். பின்னர் அந்த லாரி பிடிபட்டது. இச்சம்பவம் தொடர்பாக செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின், விசாரணைத் தேவையில்லை என்ற பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டது.

163. 17–3–1984 அன்று, சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் காவல் துறை குழுவினருடன் கிச்சிப்பாளையம் (சேலம்) காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஜருகு மலையிலும், எருமைப்பாளையம் பகுதியிலும் பல்வேறு இடங்களில் மதுவிலக்கு சோதனை நடத்தினார். காவலர் குழுவைக் கண்டவுடன் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் காவல் குழுவினரை கற்களை வீசித் தாக்கினர். அதன் பிறகு காவல் குழுவினர் அவர்களை அச்சுறுத்த துப்பாக்கிச் சூடு நடத்தினர். இத்துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமடையவில்லை. இச்சம்பவம் தொடர்பாக கிச்சிபாளையம் காவல் நிலைய குற்ற எண். 167/84இல் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது. நீதி விசாரணையில் காவல் துறையினரின் செயல் நியாயமானதே என்ற சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தை அரசு ஏற்றுக் கொண்டது.

164. செங்கற்பட்டு (மேற்கு) மாவட்டம், பரனூரிலிருக்கும் தொழு நோயாளிகள் மறுவாழ்வு மையத்தில் தங்கியிருந்த 450 பேர் தங்களுக்குக் கொடுக்கப்படும் உணவுப்படியை உயர்த்த வேண்டுமெனக் கூறி 27–3–1984 அன்று, ஜி.எஸ்.டி. சாலையில் வண்டிப் போக்குவரத்தைத் தடை செய்தனர். காவல் துறையினர் அவர்களை கலைக்க முயன்ற போது அவர்கள் காவலர்களை நோக்கி கற்களை வீசியதில் 10 பேர் காயமடைந்தனர். அதன் பின்னர், காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்தனர். அதுவும் பலனளிக்காமல் போகவே காவல் துறையினர் 2 தடவை வெற்றுக் குண்டுகளைக் கொண்டு சுட்டனர். இச்சம்பவத்தில் 13 பேர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் தோட்டாக்களால் காயம் அடைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தோர் உட்பட மொத்தம் 11 பேர் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக செங்கல்பட்டு தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 68/84 இல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்ற சைதாப்பேட்டை உதவி ஆட்சித் தலைவரின் நீதி விசாரணை அறிக்கையினை அரசு ஏற்றுக்கொண்டது.



165. 11–4–1984 அன்று, செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்
டம் பம்மல், பசும்பொன் நகரில் இரவு ரோந்துப் பணியிலிருந்த
காவல் சார்பு ஆய்வாளர் ஒருவரும், இரு காவலர்களும் உள்
ளூர் பள்ளி அருகில் 4 பேர் சந்தேகத்திற்குரிய முறையில் பதுங்கி
இருந்ததைக் கண்டனர். காவல் துறையினர் அவர்களை
யாரென்று கேட்டபோது, அவர்கள் ஓட ஆரம்பித்தனர்.
ஆயினும் காவல் துறையினர் அவர்களில் ஒருவரைப் பிடித்துவிட்
டனர். இதற்கிடையே சுமார் 50 பேர் காவலர்களைச் சூழ்ந்து
கொண்டு, அவர்களைத் தாக்கி, பிடிபட்ட நபரை காவலர்களின்
பொறுப்பிலிருந்து விடுவித்தனர். கூட்டத்தினர் தொடர்ந்து
காவல் துறையினர் மீது கற்களை வீசியதாலும், காவல் துறை
யினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதாலும், சட்ட விரோத
மான அக் கும்பலைக் கலைந்து போகும்படி கூறிவிட்டு, சார்பு
ஆய்வாளர் தற்காப்பின் பொருட்டு இரண்டு தடவை துப்பாக்கி
யால் சுட்டார். அதன் பின்னர் அக் கும்பல் கலைந்து சென்றது.
இத்துப்பாக்கிச் சூட்டில் யாரும் காயமடையவில்லை, இச் சம்
பவம் தொடர்பாக காவல் துறையினர் ஒரு வழக்கு பதிவு
செய்தனர். தற்காப்பிற்காக காவலர் துப்பாக்கிச் சூடு நடத்திய
யது நியாயமானது என்ற சைதாப்பேட்டை உதவி ஆட்சியரின்
அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டது.

166. சேலம் மாவட்டம், ஆலச்சம்பாளையம் கிராமவாசி
களுக்கும் எடப்பாடி மேட்டுத் தெருவாசிகளுக்குமிடையே நீண்ட
நாள் பகை இருந்து வந்தது. 11–4–1984 அன்று எடப்பாடி
சந்தைப்பேட்டையில் தேங்காய் விலை பற்றி தகராறு மூண்டதை
யடுத்து, ஆலச்சம்பாளையம் வாசி ஒருவர் மேட்டுத் தெருவாசி
ஒருவரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு பதி
லாக ஆலச்சம்பாளையம் வாசிகள் 20 பேர் அதே நாளில்
மேட்டுத் தெருக்காரர் ஒருவரை அடித்து விட்டனர். 12–4–1984
அன்று ஆலச்சம்பாளையம் கிராம வாசிகள் சுமார் 2,000 பேர்
பயங்கர ஆயுதங்களோடும், நாட்டு வெடி குண்டுகளுடனும்
எடப்பாடியை நோக்கி, விரைந்து சென்றனர். காவல் துறை
யினர் இக்கூட்டத்தினரை கலைந்து செல்லும்படி எச்சரித்தபோது
அக்கூட்டத்தினர் காவலர்கள் மீது கற்களை வீசி தாக்கியதில்
6 பேர் காயமடைந்தனர்.

167. காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்து அது பலனளிக்கவில்லை. அக் கும்பல் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து, அவற்றில் ஒரு குழு காவல் ஆய்வாளரைத் தாக்கி, அவரைக் காயப்படுத்தியது. இதனிடையே, வன்முறையாளர்களின் ஒரு பிரிவினர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ. கணேசன், மற்றும் அவரது சகோதரிக்கும் சொந்த

மான வயல்களில் புகுந்து, வன்முறையில் ஈடுபட்டனர். மாட்டுத் தொழுவம், மற்றும் வைக்கோல் படப்புகளும் தீக்கிரையாகியதில் 12 கன்றுக் குட்டிகள் தீயில் கருகி மாண்டன. தொடர்ந்து எச்சரிக்கை செய்யப்பட்டும் அக்கும்பல் கலைந்து செல்லாததால் காவல் துறையினர் 2 தடவை சிறு வெற்றுக் குண்டுகளைக் கொண்டும், 22 தடவை, 410 தோட்டாக்களாலும் சுட்டனர். மணி என்பவர் சம்பவம் நடந்த இடத்திலேயே இறந்தார். துப்பாக்கிச் சூட்டில் 22 பேர் காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் மொத்தம் 5 வழக்குகள் பதிவு செய்து, 159 நபர்களைக் கைது செய்தனர். சேலம் மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவர் தனது விசாரணை அறிக்கையில் தற்காப்பிற்காக காவலர் நடத்திய துப்பாக்கிச் சூடு நியாயமானதே என்று கூறியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

168. 25-4-1984 அன்று, செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம் கம்புலியில், ஆந்திராவிலிருந்து சென்னைக்குச் சென்று கொண்டிருந்த லாரி ஒன்றை நிறுத்துமாறு கும்மிடிபூண்டி வட்டாட்சியர் கொடுத்த சைகையை அந்த லாரியின் ஓட்டுநர் பொருட்படுத்தாமல் லாரியை விரைவாக ஓட்டிச் சென்றார். வட்டாட்சியரின் உத்தரின்பேரில் காவல் துறையினர் அவ்வண்டியை நிறுத்த அதன் டயரை நோக்கிச் சுட்டனர். லாரியின் ஓட்டுநரும் மற்றும் அதிலிருந்தவர்களும் அரிசி மற்றும் நெல் மூட்டைகள் அடங்கிய அந்த லாரியை அப்படியே விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். இச்சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் வழக்கு ஒன்றினைப் பதிவு செய்தனர். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் விசாரணை தேவையில்லை என்ற பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டது.

169. இடைத் தேர்தல்களில் தங்களது கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றதைக் கொண்டாடுவதில் இரண்டு கட்சியினர் 21-5-1984 அன்று காரைக்குடியில் நடத்திய ஊர்வலத்தின் போது ஏற்பட்ட மோதலில் காவலர் தடியடிப் பிரயோகம் செய்தனர். மேலும், காவலர்கள் 3 தடவை ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். இச்சம்பவத்தில் 3 காவல் அதிகாரிகள் கல்லெறிந்து தாக்கப்பட்டதினால் காயம் அடைந்தனர். காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது என்று விசாரணை அதிகாரியின் அறிக்கையினை அரசு ஏற்றுக்கொண்டது.

170. 20-5-1984 அன்று நடந்த இடைத் தேர்தல்களில் தங்களது வேட்பாளர்கள் வெற்றி பெற்றதைக் கொண்டாடுகையில் சென்னை கோட்டூர்புரத்தில் 22-5-1984 அன்று இரண்டு அரசியல் கட்சியினைச் சார்ந்தவர்களிடையே தகராறு மூண்டது.



இச் சம்பவத்தில் சில காவலர்கள் தாக்கப்பட்டனர். ஒரு கட்சியைச் சார்ந்த சிலர் கோட்டூர்புரம் காவல் நிலையத்தைத் தாக்கி அங்கிருந்த குழல் விளக்குகளையும், ஜன்னல் கண்ணாடிகளையும், சேதப்படுத்தினர். மேலும் தொல்லை விளையும் எனக் கருதி, காவல் துறையினர், உரிய எச்சரிக்கைக்குப் பின்னர், ஒரு தடவை வெற்றுக் குண்டால் சுட்டனர். இதில் மூன்று பேர்கள் காயம் அடைந்தனர். இச் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணைக்கு ஆணையிடப்பட்டு அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

171. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், மணலியிலுள்ள 'சென்னை உரத் தொழிற்சாலையில்' வேலை நீக்கம் செய்யப்பட்ட 5 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குச் சேர்க்க வேண்டுமெனக் கோரி சுமார் 900 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 25-5-1984 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். 26-5-1984 அன்று ஒப்பந்தக்காரரர் ஒருவரும் அவரது ஓட்டுனரும் தொழிற்சாலைக்குள் சென்றபோது வேலைநிறுத்தம் செய்யும் சில தொழிலாளர்களால் தாக்கப்பட்டனர். காயமடைந்த ஒப்பந்தக்காரரும் அவரது ஓட்டுநரும் மட்டும் இருவரும் மருத்துவமனைக்குக்கொண்டு செல்லப்படும் போது வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் மணலி சாலையும்— பொன்னேரி சாலையும் சந்திக்கும் இடத்தில், அவர்கள் சென்ற காரை வழிமறித்து, காருக்குச் சேதம் விளைவித்தனர். காவல் துறையினர் தலையிட்டு, தாக்குதலுக்கு உள்ளானவர்களைக் காப்பாற்றினர். அதே நாளில் மணலி 'இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ்' தொழிற்சாலைக்கு எதிரில் ஒரு பிரிவினர் கூடி, காவல் துறையினர் மீது கல் வீசினர்,. காவலர்கள் கூட்டத்தினரைக் கலைத்தனர். ஆனால் அக்கூட்டத்தினர் தொடர்ந்து காவல் குழுவினரைத் தாக்கியதில் ஒன்பது காவலர்களும் மற்றும் தனியார் லாரியின் ஓட்டுநரும், துடைப்பவரும் (Cleaner) கடுமையான காயம் அடைந்தனர்.

காவல் துறையினர் பயன்படுத்திய தனியார் லாரி ஒன்றுக்கும், மணலி காவல் நிலைய சார்பு ஆய்வாளருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளுக்கும் தீயிடப்பட்டது. அக் கும்பல் காவல் துறையினரைத் தொடர்ந்து தாக்கியதால், சார்பு ஆய்வாளர் தனது கைத் துப்பாக்கியால் இரண்டு தடவைகள் சுட்டார். இதனிடையே மேலும் அதிக எண்ணிக்கையில் காவல் துறையினர் அங்கு வந்து சேர்ந்து, கூட்டத்தினரைக் கலைத்தனர். இச் சம்பவங்கள் தொடர்பாக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இது குறித்து சைதாப்பேட்டை உதவி ஆட்சியரின் நீதி விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

172. 14-6-1984 அன்று, உணவுப் பொருள் வழங்குதுறை குற்றப் புலனாய்வுத் துறையினர், கேரள மாநிலத்திற்கு அரிசியை விரைவாகக் கடத்திச் சென்றுகொண்டிருந்த லாரியை நிறுத்த குழித்துறை காவல் எல்லைக்குட்பட்ட மச்சவிளை அருகே துப்பாக்கியால் சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயம் அடையவில்லை. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் விசாரணை தேவையில்லை என்ற பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டது.

173. சேலம் மாவட்டம், கங்கவல்லியில் ஒரு திரையரங்கில் ஏற்பட்ட வாய்த் தகராறை அடுத்து சாதி இந்துவைச் சேர்ந்த சிறுவன் ஒருவனை 6 ஆதி திராவிடர்கள் தாக்கினர். இதன் காரணமாக, 15-6-1984 அன்று ஆதி திராவிடர்களும், சாதி இந்துக்களும் மோதலுக்காகத் தத்தம் வகுப்பினரைத் திரட்டினர். ஆத்தூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் கூட்டத்தினரை அச்சுறுத்த துப்பாக்கியால் சுட்டார். இதன்பின் கூட்டத்தினர் கலைந்தனர். காவலர் துப்பாக்கியால் சுட்டது நியாயமானதே என்ற சேலம் கோட்டாட்சியரின் விசாரணை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

174. திருட்டு வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்ட சில குறவர் குற்றவாளிகளைப் பிடிக்க 1-7-1984 அன்று காவலர் குழு ஒன்று தஞ்சை மேற்கு மாவட்டம், சித்திரைக்குடிக்குச் சென்றபோது, பூதலூர் அருகே அந்தக் குறவர்கள் காவலர்களைக் கத்தியாலும், கற்களாலும் தாக்கினர். காவலர்களின் உயிருக்கு ஆபத்து நேரிட்டதால் திருக்காட்டுப்பள்ளி காவல் ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டார். ஆயினும் இத்துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமடையவில்லை. அக்குறவர்கள் அந்த இடத்திலிருந்து தப்பி ஓடிவிட்டனர். காவலர் துப்பாக்கியால் சுட்டது நியாயமானதே என்று நீதி விசாரணையில் தெளிவாகியது.

175. வடாற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் ஒரு திரையரங்கில் ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக 26-7-1984 அன்று அண்ணாமலை நகர் காலனியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கும், திருவண்ணாமலையில் வசிக்கும் சாதி இந்துக்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. காவல் துறையினர் துப்பாக்கியால் சுட்டு வன்முறைக் கும்பலைக் கலைத்தனர். காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்று நீதி விசாரணையில் தெரியவந்தது.

176. 31-10-1984 அன்று, நாயுடு வகுப்பினர்மீது நடந்த தாக்குதலில் சம்பந்தப்பட்ட சில வன்னியர்களைக் கைது செய்வதற்காக காவலர் குழு ஒன்று 1-11-1984 அன்று வடாற்காடு



மாவட்டம், கக்கண்டி கிராமத்திற்கு சென்றபோது காவலர்கள் தாக்கப்பட்டனர். இச்சம்பவம் காரணமாக காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச் சம்பவம் பற்றி நீதி விசாரணைக்கு ஆணையிடப்பட்டு, அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

177. கன்னியாகுமரி மாவட்டத்தில் 16–11–1984 அன்று நெல் கடந்தலில் ஈடுபட்ட லாரி ஒன்றை நிறுத்துமாறு விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலர் சைகை செய்தும் நிற்காமல் போகவே, அவருடைய ஆணையின் பேரில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் சித்தரல் சோதனைச்சாவடி அருகில் அந்த லாரியின் டயர்களைத் துப்பாக்கியால் 2 தடவை சுட்டு காற்றை இறக்கி நிற்கச் செய்தனர். அதிலிருந்து 140 மூட்டை நெல் கைப்பற்றப்பட்டது. இத் துப்பாக்கிச் சூட்டினால் எவரும் காயமோ அல்லது மரணமோ அடையவில்லை.

178. 20–11–84 அன்று செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், செந்தில் நகரில் ஒரு வீட்டின் கதவை 6 பேர் அடங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் உடைத்து, அவ்வீட்டு பெண்ணைத் தாக்கி ரூ. 10,000 மதிப்புள்ள நகைகள், ரொக்கம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். கொள்ளைக் கூட்டத்தினரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த காவலர் குழு ஒன்று இக் கொள்ளைக் கூட்டத்தினரை கருக்கு கிராமத்தில் செங்கை கிழக்கு) கண்டுபிடித்தது. காவலர் குழு மேற்படி கூட்டத்தினரைப் பிடிக்க முயன்றபோது ஒரு காவல் ஆய்வாளரும் மற்றும் ஒரு காவல் உதவி ஆய்வாளரும், அக் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு காயம் அடைந்தனர். அதன்பின் காவல் துறை ஆய்வாளர் தனது கைத் துப்பாக்கியால் ஒரு தடவைச் சுட்டார். இத் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த ராஜேந்திரன் என்பவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு பின்னர் இறந்தார். அனைத்துக் கொள்ளையர்களும் கைது செய்யப்பட்டு, திருடப்பட்ட சொத்துக்கள் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன. இச் சம்பவம் தொடர்பாக அம்பத்தூர் காவல் நிலைய குற்ற எண் 689/84 இல் இ.த.ச. 147, 148, 322 மற்றும் 307 பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இத்துப்பாக்கிச் சூடு பற்றிய நீதி விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

179. கள்ளத்தனமாக நெல்லை கடத்திச் சென்ற லாரி ஒன்றினை நிறுத்த செங்கல்பட்டு மாவட்ட மாங்காடு வணிக வரித் துறை சோதனைச் சாவடிக் காவலர், தனித் துணை வட்டாட்சியரின் உத்தரவின் பேரில் 3 தடவை தோட்டாக்களால் சுட்டார்.

ஆயினும், அந்த லாரியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இத் துப்பாக்கிச் சூட்டினால் எவரும் காயமோ அல்லது மரணமோ அடையவில்லை.

180. 10–12–1984 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் நெகமத்தில் இரு அரசியல் கட்சிகளினிடையே ஒரு இடத்தினை பொதுக் கூட்டம் நடத்துவதற்காக பயன்படுத்துவது பற்றி தகராறு ஏற்பட்டது. காவல் துறையினர் கூட்டத்தினரைக் கலைந்து செல்லுமாறு வேண்டுகோள் விடுத்ததைப் பொருட்படுத்தாமல் கூட்டத்தினர் காவலர்களைத் தாக்கினர். இத் தாக்குதலில் காவல் துறையைச் சேர்ந்த 17 பேர் காயமடைந்தனர். எனவே காவலர் துப்பாக்கியால் சுட்டனர். நெகமத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி (எ) கிட்டுசாமி அந்த இடத்திலேயே இறந்தார். இக் குழப்பத்தில் கே. வி. கந்தசாமியும் காயமடைந்தார். இச் சம்பவம் தொடர்பாக நெகமம் காவல் நிலையக் குற்ற எண் 158/84 இ.த.ச. 147, 148, 332, 336, 307 மற்றும் கு.மு.ச. 174 பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணைக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

181. செங்கல்பட்டு மாவட்டம், தண்டலச்சேரியில் 1–3–1984 அன்று உணவுப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத் துறையினர் சட்டத்திற்கு புறம்பாக நெல் மற்றும் அரிசி கடத்துவதைத் தடுக்கும் பொருட்டு சோதனையிடும்பொழுது அவ்வழியாக வேகமாக வந்த லாரி ஒன்றினை நிறுத்தும்படி சைகை செய்தனர். வண்டி நிற்காமல் சென்றதால் பணியிலிருந்த காவலர் லாரியின் டயரை நோக்கி சுட்டு வண்டியை நிறுத்த முயன்றும் லாரி நிற்காமல் ஓடியது. இத் துப்பாக்கிச் சூட்டினால் எவரும் காயமடையவில்லை. இச் சம்பவம்தொடர்பாக சைதாப்பேட்டை உதவி ஆட்சித் தலைவர் நடத்திய நீதி விசாரணையில் காவலர் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது என்று தெளிவாகியது.

182. 14–7–1984 அன்று திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் உணவுப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரின் காவல் ஆய்வாளருக்கு, சட்டத்திற்குப் புறம்பாக எல்லையில் அரிசி கடத்தப்படுவதாக வந்த தகவலின்பேரில் செங்கோட்டையில் வனத் துறையில் உள்ள சோதனைச் சாவடியில் நின்று கொண்டிருந்தனர். அவ்வழியாக வந்த அந்த லாரியினைக் கண்டு அதனை நிறுத்துமாறு சைகை செய்தும் அந்த லாரி நிற்கவில்லை. காவல் ஆய்வாளர் தனது கைத் துப்பாக்கியால் லாரியின் முன்பக்க டயரில் சுட்டு, லாரியை நிறுத்தினார். லாரியின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டு, அதிலிருந்த 140 மூட்டை அரிசி



கைப்பற்றப்பட்டது. திருநெல்வேலி கோட்டாட்சியரால் நடத்தப்பட்ட நீதி விசாரணையில் காவலர் நடத்திய துப்பாக்கிச் சூடு நியாயமானது என்று தெளிவாகியது.

183. செங்கல்பட்டு மாவட்டம் ஆவடியில் 30–11–1984 அன்று மத்திய சேமக்காவல் படையினர் முகாம் செய்திருந்தபோது அங்கு ஏற்பட்ட வாய்த் தகராறின்போது கோவிந்தசாமி என்ற தலைமைக் காவலர் மூன்று தடவை துப்பாக்கியால் சுட்டார். இதில் எவரும் காயமடையவில்லை. இது சம்பந்தமாக ஆவடி டாங்கு தொழிற்சாலை காவல் நிலைய குற்ற எண். 303/84-இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் தலைமைக் காவலர் கோவிந்தசாமி கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக சைதாப்பேட்டை கோட்டாட்சியரை நீதி விசாரணை செய்யும்படி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### இரயில்வே பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு பற்றிய விவரம்.

184. 24–11–1984 அன்று தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் ஒரு ரயில் பெட்டியிலிருந்து யூரியா உரத்தை திருடிக் கொண்டிருந்த முன்னாள் குற்றவாளியான ஜோசப் மற்றும் அவனது கூட்டாளிகளை ரயில்வே பாதுகாப்பு படையினர் பிடிக்க முயன்றபோது குற்றவாளிகள் பாதுகாப்புப் படையினரைத் தாக்கி காவலர் ஒருவரை காயப்படுத்தினர். அதன் பின், ரயில்வே பாதுகாப்புப் படையினர் ஒரு தடவை துப்பாக்கியால் சுட்டதில் ஜோசப் என்பவர் அந்த இடத்திலேயே இறந்தார். முத்தையாபுரம் காவல் நிலைய குற்ற எண். 422/84-இல் இ.த.ச. 307 பிரிவின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

### தேர்தல்.

185. தமிழ்நாடு சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்கான 8-வது பொதுத் தேர்தல் 24–12–1984 அன்று நடைபெற்றது. முதன் முறையாக மாநிலம் முழுவதும் தேர்தல் ஒரே நாளில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

186. பொதுத் தேர்தலின்போது தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக 15,000 முன்னாள் இராணுவத்தினரும் 2,000 ஓய்வு பெற்ற காவல் துறை பணியாளர்களும் கூடுதலாக பயன்படுத்தப் பட்டனர்.

[1985 ஜூலை 8

இம்முறை சட்டமன்றம்/பாராளுமன்றத்திற்காக தேர்தல் ஒரே நாளில் நடைபெற்றதால் 44,500 காவல்துறைப் பணி யாளர்களும் மற்றும் 4,500 அதிகாரிகளும் பாதுகாப்புப் பணி புரிந்தனர்.

187. வெகு குறுகிய காலத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்ட தால், காவல் துறையினர் போர்க் கால அடிப்படையில் உடனடி யாக பணியாற்றி திறமையாக செயலாற்றினர். காவல் துறை யினர் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்திருந்ததால் தேர்தல் எந்தவித கலவரமுமின்றி அமைதியாக நடைபெற்றது.

கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு.

188. 1984 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் (ஊரக) மாவட்டம், சேலம், தஞ்சாவூர் (மேற்கு), சென்னை ஆகிய இடங்களில் ஒரு தட்வையும் வடார்க்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் இரு தடவையும் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணிக் காக்கும் பொருட்டு கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்யப்பட்டது.

பகுதி—7.

காவலர் பொதுமக்கள் நல்லுறவு.

189. நீண்ட நாட்களாக மக்கள் கொண்டுள்ள எண்ணத்தின் அடிப்படையில் எழுவதுதான் காவல் துறையினரின் உள்ளுணர் வாகும். இது பொதுமக்களின் போக்கை பெரிதும் மாற்றத் தக்கது. தற்போது காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள நல்லுறவு, மக்கள் காவல் துறையினர்பால் கொண்டுள்ள நல்ல எண்ணத்தை தோற்றுவிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

190. பொதுமக்களிடையே நல்லுறவினை ஏற்படுத்துவதில் காவலர்களின் பங்கு அதிகமாகத் தமிழ் நாட்டில் உள்ளது. பத் திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவை வாயிலாக பொதுமக்கள் கடைப் பிடிக்க வேண்டியவைப் பற்றி யும் மற்றும் தவிர்க்க வேண்டியவை, சாலை விதிகள் பற்றியும் எடுத்துக் கூறப்படுகிறது. அண்மையில் சென்னை நகரைச் சுற்றி யுள்ள பகுதிகளில் நடைபெற்ற முகமூடிக் கொள்ளைகள் பொது மக்களையும் காவல் துறையினரையும் இணைந்து பணியாற்ற வைத்துள்ளது. குற்றங்களை ஒடுக்கவேண்டும் என்ற நோக்கத் துடன் குடியிருப்புப் பகுதிகளில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக் கப்பட்டு அவை காவல்துறையினருக்கு பெரிதும் உதவி வருகின் றன.



1985 ஜூலை 8]

191. குற்றவாளிகளை கண்டுபிடிக்க பொதுமக்களின் ஒத் துழைப்பு எவ்வாறு எல்லாம் பயன்படுகிறது என்பது பொருட் காட்சி போன்ற நிகழ்ச்சிகளின் போது விளக்கப்படுகிறது.

192. காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே யுள்ள நெருக்கத்தை வளர்க்கும் வகையில் காவல் துறையினர் பொதுமக்களுடன் விளையாட்டு போட்டிகள் நடத்தி நல்லதொரு முன்னுதாரணத்தைத் தோற்றுவித்தனர்.

193. காவல் துறையினரின் மாநில விளையாட்டுப் போட்டி கள் 18–1–1984 முதல் 22–1–1984 வரை ராஜரத்தினம் விளை யாட்டரங்கத்தில் நடைபெற்றது. 8–8–1984 முதல் 12–8–1984 வரை டெல்லியில் நடைபெற்ற 33-வது அனைத்திந்திய காவல் துறை நீச்சல் போட்டியில் தமிழக காவல் துறையினர் பங்கு கொண்டனர். தமிழகத்தைச் சேர்ந்த 11 காவல் துறையினர் தொடர் ஓட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு காவல் துறையினர் 400 மீட்டர் நீச்சல் போட்டியில் 4-வது இடத்திலும், 400 மீட்டர் மெட்லி நீச்சல் போட்டியில் 5-வது இடத்திலும் வந்தனர். சரகங்களுக்கிடையேயான போட்டி 8–10–1984 முதல் 12–10–1984 வரை கோயம்புத்தூரில் நடை பெற்றது.

194. பொதுமக்கள்-காவல்துறையினர் நல்லுறவை மேம்படுத் தவும், நல்லெண்ணத்தை ஏற்படுத்தவும் திட்டங்கள் பல திட் டப்பட்டுள்ளன. இதனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நல்லுறவு ஏற்பட வழிவகை ஏற்படும்.

195. மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும். அதில் காவலர் பங்கினைப் பற்றி அறிந்து அதற்கேற்றார்போல் நடந்து கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் காவலர்களுக்கு பயிற்சிக் காலத்திலேயே கற்றுத் தரப்படுகிறது. குற்றங்கள் நிகழாவண்ணம் தடுத்திடவும், குற்றவாளிகளை கண்டுபிடித் திடவும் அமைக்கப்பட்டுள்ள கிராமக் கண்காணிப்புக் குழுக்கள் பொது மக்கள்-காவல் துறையினரிடையே ஏற்பட்டுள்ள நல்லுறவை விளக்கும் சாதனையாக அமைந்துள்ளது.

196. இந்தத் தொண்டு நிறுவனம், காவல் துறையினருக்குத் துணைப்படையாக திறம்படச் செயல் பட்டு வருகிறது. 1984ஆம் ஆண்டு போக்குவரத்தை முறைப்படுத்துதல், இரவு ரோந்துப் பணி, திருவிழாக் கால பாதுகாப்புப் பணி, வட கிழக்கு பருவக் காற்றின்போது வெள்ள நிவாரணப் பணி ஆகியவற்றிற்கு ஊர்க் காவலர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

197. 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் தேதியிலிருந்து 18 ஆம் தேதி வரை சென்னை சிதம்பரம் விளையாட்டரங்கத்தில் இந்திய கிரிக்கெட் அணியினருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் அணியினருக்கும் இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது விளையாட்டரங்கத்தில் நுழைவாயிலில் ஊர்க்காவல் படையினர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கதாகும். கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின் போது அவர்கள் ஆற்றிய சிறப்பான சேவையைப் பொது மக்களும் நிறுவன அதிகாரிகளும் பெரிதும் பாராட்டினர். 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் தேதி முதல் 7 ஆம் தேதி வரை இம்பேக்ட் இந்தியா சவுத் நடத்திய குழந்தைகள் நோய் தடுப்பு இயக்கத்தின்போது தடுப்பூசி போடுவதற்காக ஊர்க் காவல் படையினரின் பணி பயன்படுத்தப்பட்டது.

198. 1984ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தெற்கு ஆந்திரக் கடற்கரைப் பகுதியைத் தாக்கிய புயல், தமிழகத்தில், கடலோர பகுதிகளையும், குறிப்பாக வடக்கு கடற்கரைப் பகுதியையும் தாக்கியது. இதனால் பொருட்களுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டதுடன் மாநிலம் முழுவதும் சுமார் 3,000-க்கும் மேற்பட்ட மக்கள் வீடு இழந்தனர். தமிழகத்திலுள்ள காவல் படையினர். குடிமக்கள் பாதுகாப்புப் பிரிவு மற்றும் ஊர்க்காவல் படையினர் நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற மிகவும் உதவினர். தங்கள் உயிருக்கு ஏற்படவிருந்த ஆபத்தினையும் பொருட்படுத்தாமல் பெருமை கொள்ளத்தக்க வித்தில் ஊர்க்காவல் படையினர் துணிந்து செயல் பட்டு வெள்ளத்தால் சூழப்பட்டிருந்த மக்களைக் காப்பாற்றி அவர்களுக்கு தங்க இடமும் உண்ண உணவும் அளித்திட பாதுகாப்பான இடத்திற்கு வாகனங்களில் அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு அவர்கள் ஆற்றிய பணி அனைவராலும் பாராட்டப்பட்டது.





வீரச் செயலுக்கான விருது.

199. 8—4—1984 அன்று பிற்பகல் 3 மணி அளவில், தூத்துக்குடி தெற்கு காவல்நிலையத்தைச் சேர்ந்த காவலர் சுப்பையா, பணி முடிந்து வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கும் போது அங்குசாமி மற்றும் மாடசாமி ஆகிய இருவர் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். குடி போதையில் அவர்கள் ஒரு இனத்தைச் சார்ந்தவர்களின் வீடுகளுக்கு தீ வைத்து கலாட்டா செய்துவிட்டு ஓடுவதாக பொது மக்கள் தெரிவிக்கவே காவலர் சுப்பையா அவர்களை விரட்டி சென்று மாடசாமி என்பவரைப் பிடித்தார். தலைமறைவாக இருந்த அங்குசாமி திடீரென்று அரி வாளினால் காவலர் சுப்பையாவைத் தாக்கினார். துணிச்சலுடன் போராடிய காவலர் சுப்பையா வெட்டுக் காயங்களினால் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தார். காவலர் சுப்பையா இவ் வீரச் செயலின் மூலம் தனது கடமை உணர்வை வெளிப்படுத்தி யுள்ளார். இவரது வீரச்செயலினைப் பாராட்டி தமிழ்நாடு முதல் அமைச்சரின் பதக்கமும் மற்றும் ரொக்கமாக ரூ. 3,000-மும் அவரது மரணத்திற்குப் பின் அரசு வழங்கியது.

200. 23—4—1984 அன்று தஞ்சை தெற்கு காவல் நிலை யத்தைச் சேர்ந்த காவலர் ஜி. லாரன்ஸ், தஞ்சை புறநகர்ப் பகுதி யிலுள்ள ராஜப்பா நகரில் அண்ணாமலை செட்டியாரின் இல் லத்தில் கொள்ளையடிக்க முயன்று, அம்முயற்சியில் தோல்வி யடைந்து அவ்விடத்திலிருந்து தப்பிச் செல்ல முயற்சி செய்த அடையாளம் தெரியாத 3 பேரைப் பிடிக்க முயன்றார். அச்சம யம் அவர் பணியில் இல்லாத போதிலும், அவர்களுடன் போராடி அவர்களைப் பிடிக்க முயன்றார். பயங்கர ஆயுதங்களுடன் இருந்த அவர்கள், இவரைப் பல இடங்களில் கத்தியால் குத்தி யதால் காவலர் லாரன்ஸ் பின்னர் அரசினர் மருத்துவ மனையில் உயிரிழந்தார். தஞ்சை தெற்கு காவல் நிலையத்தில் இது சம்பந்த மாக வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது. காவலர் லாரன்ஸ் இந்த வீரச் செயலின் மூலம் தனது ஆழ்ந்த கடமையுணர்வை வெளிப்படுத்தியது பாராட்டுதற்குரியது.

201. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஐந்தாவது அணி யினை சேர்ந்த காவலர் அய்யனார் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரிலுள்ள ரிபீட்டர் நிலையத்திற்கு தேவையான பொருட் களை ஒரு ஊர்தியில் ஏற்றிக் சென்றுக் கொண்டிருந்தார். மலை யின் மேற் பகுதியில் ஊர்தி சென்று கொண்டிருந்தபோது, இயந் திரக் கோளாறு காரணமாக ஊர்தி கீழே வழுக்கிவர ஆரம்பித் தது. அவர் ஊர்தியிலிருந்து மற்றவர்களை குதித்துத் தப்பித்தும்

செல்லுமாறு கேட்டுக் கொண்டு அதே சமயத்தில் ஊர்தியை கட்டுக்குள் கொண்டுவர அரும்பாடுபட்டார். அவரது முயற்சி பயனளிக்காமல் அவ்வூர்தியிலிருந்து குதித்த ஒருவர் மரணம் அடைந்தார். 3 பேர் எவ்வித காயமுமின்றி உயிர் தப்பினர். பலத்த காயம் அடைந்த காவலர் அய்யனார் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் உயிரிழந்தார்.

202. ஊர்தியில் பயணம் செய்தவர்களின் உயிரைக் காக்க தன் உயிரையும் பொருட்படுத்தாது செயலாற்றிய அவரது செயல் வீரம் மிக்கது. அவரது இச் செயலைப் பாராட்டி மரணத்திற்குப் பின் வீரச் செயலுக்கான பதக்கத்தை அரசு வழங்கியது.

203. சிதம்பரம் இராமச்சந்திரன் என்பவர், திருநெல்வேலி மாவட்டம், எப்போதும்வென்றான் காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றி வந்தார். கந்தகம் மற்றும் குளோரைடு திருட்டு வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருந்தார். நெடுஞ்சாலையில் அவர் வந்து கொண்டிருந்தபோது தலைமறைவாக இருந்த நான்கு குற்றவாளிகளை அவர் பார்த்தார். அவர்களைப் பிடிக்கச் சென்ற போது குற்றவாளி ஆயுதங்களினால் அவரைத் தாக்கியதில் அவர் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தார்.

204. பயங்கரமான குற்றவாளிகள் என்று தெரிந்தும், தன் உயிரையும் பொருட்படுத்தாது காவலர் சிதம்பரம் இராமச்சந்திரன் அவர்களைப் பிடிக்க முயன்று தனது கடமையுணர்வை வெளிப்படுத்தினார். கடமையின் பால் கொண்ட ஈடுபாட்டினையும் வீர தீரத்தையும் பாராட்டும் வகையில் அவருக்கு வீரச் செயலுக்கான பதக்கம் வழங்கப்பட்டது.

## பகுதி 8.

### நடப்பு ஆண்டில் வழங்கப்பட்ட சில முக்கிய ஆணைகள்

205. காவல் துறையினருக்கு பணியாளர் மற்றும் கருவிகள் பற்றி வளர்ந்து வரும் தேவைகளைக் கருதி 1984-85ஆம் ஆண்டில் கீழே கண்டுள்ளவாறு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

206. புதிய காவல் நிலையங்களைத் திறப்பதற்கும், புறக் காவல் நிலையங்களை, காவல் நிலையமாக தரம் உயர்த்தவும் சிறந்த காவல் ஏற்பாடுகள் மூலம் குற்றங்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் நடை பெறுவதை தவிர்க்கவும், ஒரே நிலையமாக உள்ள பெரிய காவல் நிலையங்களை இரண்டாகப் பிரிக்கவும்





அரசு எப்போதும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தக் கொள்கையை கருத்திற் கொண்டு, இந்த ஆண்டு திருமங்கலம், சங்கர்நகர் (செங்கல்பட்டு கிழக்கு), மறைமலை நகர், சோமங்கலம் (செங்கல்பட்டு மேற்கு), பேர்லாண்ட்ஸ் (சேலம்), பழனி கோயில் அடிவாரம் (மதுரை வடக்கு), தெற்கு தாமரைக் குளம் (கன்னியாகுமரி), திருச்செங்கோடு (சேலம் மாவட்டத்தில் இந்த நிலையம் திருச்செங்கோடு நகர காவல் நிலையம் என்றும் திருச்செங்கோடு ஊரகக் காவம் நிலையம் என்றும் இரண்டாகவும்) ஆகிய 8 இடங்களில் புதிய காவல் நிலையங்கள் திறந்திடவும், கன்னியாகுமரி மாவட்டம் மேல் கோதையாறு என்ற இடத்தில் புதிய புறக் காவல் நிலையம் ஒன்றையும், மேல் மருவத்தூர் (செங்கை மேற்கு), மெலட்டூர் (தஞ்சை மேற்கு), மற்றும் அஞ்சு கிராமம் (கன்னியாகுமரி) ஆகிய இடங்களில் இயங்கிவந்த புறக் காவல் நிலையங்களை காவல் நிலையமாக தரம் உயர்த்தவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

207. மேற்கண்டவற்றைத் தவிர, நாகர்கோவில், தாம்பரம் ஆகிய இடங்களில் இரயில்வே காவல் நிலையங்களைத் திறந்திடவும், பெரம்பூர் ரயில் நிலையத்தில் இருக்கும் புறக் காவல் நிலையத்தை காவல் நிலையமாக தரம் உயர்த்தியும் அரசு ஆணையிட்டுள்ளது.

208. குற்றப் புலனாய்வுத் துறை, திட்டமிடுதலும் மற்றும் ஒருங்கிணைப்பும், உணவு வழங்கல் பிரிவு குற்ற புலனாய்வுத்துறை, கண்காணிப்புப் பிரிவு, காவல் தகவல் தொடர்புப் பிரிவு ஆகியவற்றினை விரிவு படுத்துவது பற்றி நீண்ட நாட்களாகவே அரசின் கவனத்தில் இருந்து வந்தது. இவற்றைக் கருத்தில் கொண்டு, அரசால் அதுவரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல் துறைத் தலைவர் குற்றம் மற்றும் நுண்ணறிவு என்ற பதவியை, காவல் துறை இயக்குநர் (சி.ஐ.டி.) தரத்திற்கு உயர்த்தி மேற்கண்ட பிரிவுகளை நிர்வகிக்க ஒப்புதல் வழங்கியது.

209. தஞ்சை மாவட்டத்திலிருந்து பிற இடங்களுக்கும் நெல் மற்றும் அரிசி கடத்தப்படுவதை திறம்பட தடுக்கவும், கட்டுப்பாடு ஆணைகளை முறையாகச் செயல்படுத்தவும் மாநிலத்தில் எல்லைப் பகுதிகளில் உணவுப்பொருட்கள் கடத்தலைத் தவிர்க்கவும், உணவுப் பொருள் வழங்கும் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையை மேலும் பலப்படுத்த, தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையில் 1 ஆய்வாளர், 1 சார்பு ஆய்வாளர், 1 தலைமைக் காவலர், 4 இரண்டாம் நிலைக் காவலர்கள், 2 ஓட்டுநர் காவலர்கள் மற்றும் ஒரு கடைநிலைக் ஊழியர் அடங்கிய கூடுதல் பிரிவையும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1 ஆய்வாளர், 1 சார்பு ஆய்வாளர் அல்லது 1 தலைமை

காவலர், 4 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1 இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் ஒரு கடைநிலை ஊழியர்கொண்ட பிரிவு ஆகியவற்றை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்காக தஞ்சை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் உணவு வழங்கல் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை சோதனைச் சாவடிகளில் பணியாற்றுவதற்காக 57 இரண்டாம் நிலை காவலர் பதவிகளைத் தோற்றுவிக்கவும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

210. திண்டிவனத்திற்கும் சென்னைக்குமிடையிலான தேசிய நெடுஞ்சாலையில் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. விபத்தினால் காயம் அடைந்தவர்கள் தமது உயிரைக் காத்துக்கொள்ள உரிய நேரத்தில் மருத்துவ உதவி பெற முடியவில்லை. இப்பிரச்சினையின் முக்கியத்துவம் கருதியும், சாலைகளில் போக்குவரத்து விதிகளை மீறி ஊர்திகளை ஓட்டுநலை தடுக்கவும் அரசு அண்மையில் நெடுஞ்சாலை ரோந்துப் பணித் திட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் வழங்கியது.

211. இந்த ஆண்டு மேற்படி நெடுஞ்சாலை ரோந்துப் பணியை பலப்படுத்தவும், விபத்திற்குள்ளான வண்டிகளை அகற்றிடவும், சீரான போக்குவரத்தை ஏற்படுத்தவும், பாதிக்கப்பட்ட மற்றும் இறந்தவர்களுக்கு உடனடி மருத்துவ உதவி அளிக்கவும், 9 காவல் ஆய்வாளர்கள், 28 தலைமைக் காவலர்கள், 20 ஆப்பரேட்டர்கள், 56 இரண்டாம் நிலைக் காவலர்கள், 10 நிழற்படம் பிடிப்பவர்கள் (காவலர்கள்), 10 ஆண் செவிலியர் மருந்தாளுநர்கள், 30 உதவியாளர்கள் (ஆம்புலன்ஸ் மற்றும் கிரேன்), 20 ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், 20 கிரேன் ஓட்டுநர்கள், 20 ரோந்து வண்டி ஓட்டுநர்கள் ஆகிய கூடுதல் பணியாளர் பதவிகளுக்கு ஒப்புதல் வழங்கியது.

212. நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையங்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அரசு மீனம்பாக்கம் விமான நிலையத்தின் பாதுகாப்பு பிரிவிற்கு மேலும் 2 தலைமைக் காவலர்கள், 2 நாயக்குகள், 4 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகிய கூடுதல் பதவிகளுக்கு ஒப்புதல் வழங்கியது. மேலும் நிழல்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்காக தனிக் காவல் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் ஒப்புதல் வழங்கியது.

213. அம்பத்தூர் தொழிற்பேட்டையிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நிகழ்ந்த பெரிய அளவிலான திருட்டுகளும், கொள்ளைகளும் மக்களிடையே நம்பிக்கைக்கு பாதகம் விளைவிப்பதாக இருந்தது. இத்தகைய குற்றங்களுக்கு முற்றுப்





புள்ளி வைக்கவும், கவலையளிக்கும் நிலைமையைக் கட்டுப்படுத்தவும், உரியதோர் நடவடிக்கையாக அம்பத்தூர் தொழிற்பேட்டைப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளின் பாதுகாப்பிற்காக 1 சேமப்படை ஆய்வாளர், 1 சேமப்படை இளநிலை உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர்கள், 4 நாயக்குகள் 4 லான்ஸ் நாயக்குகள் மற்றும் 48 இரண்டாம் நிலைர் காவலர்கள் அடங்கிய ஒரு சேமக் காவல் படை ஆகியவற்றை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது.

214. அதிகரித்து வரும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு தருமபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா ஒரு கூடுதல் சேமக் காவல் படையை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

215. சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றங்களுக்கு கைதிகளையும், விசாரணைக் கைதிகளையும் பாதுகாப்பாக கொண்டு செல்ல, அரசு இரண்டு கூடுதல் சேமப்ப படைகளை ஏற்படுத்தியுள்ளது.

216. சமீபத்தில் தொடர்ந்து நடைபெற்ற எண்ணெய் திருட்டின் காரணமாக, இந்திய எண்ணெய்க் கழகத்தின் எண்ணெய் குழாய்களை பாதுகாப்பதற்காக, 1 காவல் உதவி ஆணையாளர், 2 ஆய்வாளர்கள், 4 சார்பு ஆய்வாளர்கள், 6 தலைமைக் காவலர்கள், 1 தலைமைக் காவலர் ஓட்டுநர், 4 லான்ஸ் நாயக்குகள், 76 இரண்டாம் நிலைக் காவலர்கள் 2 நாயக்குகள், 3 இரண்டாம் நிலை காவலர் ஓட்டுநர்கள் மற்றும் 1 இளநிலை எழுத்தர்—தட்டச்சர் ஆகியோரைக் கொண்ட ஒரு சிறப்புக் காவல் படையை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

217. நடைமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களை ஒட்டி அரசால் செய்யப்பட்ட வெவ்வேறு காவல் சட்டத் திருத்தங்களை கருத்திற் கொண்டு, "தமிழ்நாடு காவல் சட்டத் தொகுப்புகளை உருவாக்க 1 காவல் துறை துணைத் தலைவர் (தமிழ்நாடு காவல் சட்டம்), 1 சுருக்கெழுத்தர் மற்றும் 2 அலுவலக உதவியாளர்கள் ஆகிய பதவிகளை அரசு உருவாக்கியுள்ளது.

218. நீலகிரி மாவட்டத்தில் குன்னூரில் கள்ளத்தனமாக மரங்கள் வெட்டப்படுவதை கட்டுப்படுத்தவும் குற்ற நடவடிக்கைகளிலிருந்து வனச் செல்வங்களைக் காக்கவும் இரண்டு பறக்கும் படை அணியினை உருவாக்க, 2 காவல் ஆய்வாளர்கள், 4 முதல் நிலைக் காவலர்கள் மற்றும் 2 ஊர்தி ஓட்டுநர்கள்ள் ஆகிய பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியது

(ஆ) மிகச் சிறிய குற்றங்கள் குறித்து இயன்ற வரையில் அக்குற்றங்களைச் செய்தோரை எச்சரித்து விட்டுவிட வேண்டும். காவல் துறை, நீதிமன்றங்கள், சிறைத்துறை மற்றும் குற்ற வாளிகள் நன்னடத்தையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகியவை அடங்கிய மாநிலக் குற்றவியல் நிர்வாகம் தன் வசமுள்ள வரையறுத்த அளவு வசதிகளை அநாவசியமாகப் பயன்படுத்தவோ சிதறடிக்கவோ கூடாது. மது விலக்கைப் பொறுத்தவரையில் கள்ளசாராயம் காய்ச்சுதல், அவற்றைக் கடத்தல், அவற்றைப் பெருமளவு கையிருப்பு வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றைத் தடுப்பதில் தீவிரகவனம் செலுத்த வேண்டும்.

(இ) காவலரிடம் முறையிடவோ, குற்றம் சாட்டப் பட்டவராகவோ அல்லது உதவிக்கோரியோ வருபவர்களின் பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாகவும் சமூகத்தின்கீழ் மட்டத்தில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை காவல் துறையினர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எனவே அவர்களிடம் காவலர் அன்புடனும், அனுசரணையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

(ஈ) காவல் துறையினர் நேர்மையாகவும், திறமையாகவும் இருப்பார்கள், இதற்காகக் கட்டுப்பாடு மற்றும் எல்லாப் பணி களிலும் உயர்வான தரம் ஆகியவை நிலைநாட்டப்படும். மேலும் குறிப்பாக நேர்மையும் மற்றும் திறமையுற்றவர்களைப் பொறுத்தவரை தயவு தாட்சண்யமின்றி செயல்படுத்தப்படும். இவ்வாறு செயல்படும்பொழுது காவலர்களைவிடக் காவல் துறை அதிகாரிகளைப் பொறுத்தவரையில் இது மேலும் தரக் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படும்.

(உ) காவல் துறையினரின் தூய்மையையும், திறமையையும் உறுதி செய்யும்பொருட்டு அவர்களது ஒழுங்குணர்வையும் கட்டுப் பாட்டையும் உயரிய நிலையில் பேணி வரவேண்டும். இதை சாதிப்பதற்கு வேண்டிய இன்றியமையாத அடிப்படை நட வடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

(ஊ) பொதுமக்கள் சிறந்த காவல் பாதுகாப்பிற்கு உரிமை உடையவர்கள் ஆவர் எனவே இது காறும் போதிய அளவு காவலர் பாதுகாப்பு இல்லாத பகுதிகளில் காவல் நிலையங்கள் அமைத்து அவற்றில் நன்கு பயிற்சி பெற்ற காவலர்கள் போதிய எண்ணிக்கையில் நியமிக்கப்படுவர்.





(எ) அவ்வாறு திறம்படைத்த காவல்பாதுகாப்பு கிட்டுவதை உறுதி செய்யும் பொருட்டு காவல் துறையின் பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்படும். ஆராய்ச்சி வசதிகள் வலுப்படுத்தப்படும். காவல்துறையை நவீனப்படுத்தலும் தொடரும்.

(ஏ) இயன்றவரை வனம் மற்றும் வனவிலங்குகளைப் பாது காத்தல், விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதைத் தடுத்தல், துப்புரவுக் கேடு, சப்தத்தால் வரும் கேடு, தூய்மைக்குக் கேடு ஆகியவற்றைத் தவிர்த்தல் போன்ற ஏனைய பணிகளிலும் காவல்துறை முனைப்புடன் உதவி புரிய வேண்டும்.

(ஒ) பொதுமக்களின் நன்மதிப்புடன் பெறும் ஆதரவு இன்றி யமையாதது என்பதைக் காவல்துறையினர் உணர்ந்து இத் தகைய ஒத்துழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில் மக்கள் தொடர்பைச் சீர்படுத்திக் கொண்டு மேலும் தங்கள் பணிகளைத் தொடர வேண்டும்.

230. சமுதாயத்தின் நன்மதிப்பையும், அன்பையும் பெறு வதுதான் காவல்துறையினரின் தலையாய கடமையாகும்;
அதற்குப்பின் தான் அவர் தன் குடும்பத்தின் மீது அக்கறை
செலுத்த வேண்டும். அவர் தன் பணிக் காலத்தில் பெறுகின்ற
வெகுமதிகள் மற்றும் பதவி உயர்வுகள் போன்றவற்றால் பெற
முடியாத மன நிறைவினை இதன்மூலம் மட்டுமே அவர்கள்
பெற முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, காவல் துறை
யினர் சட்டம் ஒழுங்கைக் காக்க கடும்பணி ஆற்றுவதோடு
குற்றக் கண்டுபிடிப்பு, மற்றும் சமூகப் பணி ஆகியவற்றில் அவர்கள்
தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். காவல்துறையின
ருக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து அரசியல்
தலைவர்கள் செயல்பட்டு தங்களின் ஒத்துழைப்பை நல்கினால்
காவல்துறையினரின், பணி, மற்றும் கடமைகள் எளிய
தாகும்.

231. மேலே வரையறுத்துக் கூறப்பட்டுள்ள வழி முறை
களுக்கு ஏற்ப தமிழ்நாடு மாநில காவல் துறையினர்
தொடர்ந்து செயல்படுவர்; வருங்காலத்திலும் மேலும் அவர்கள்
திறம்படப் பணியாற்றும் வகையில் எல்லா நடவடிக்கைகளையும்
தமிழ்நாடு காவல்துறை மேற்கொள்ளும்.

## இணைப்பு II

(....56-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

மானியக் கோரிக்கை எண் 16

கொள்கைக் குறிப்பு—1985-86.

நம்நாட்டில் ஆண்டுதோறும் தீ விபத்து காரணமாக எண்ணற்ற உடைமைகளுக்குச் சேதமும் அதிக உயிரிழப்பும் ஏற்படுகின்றன. தமிழ்நாட்டிலும் தீயினால் கணிசமான அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் தீயினால் சேதமடைந்த உடைமைகளின் மதிப்பு ஏறத்தாழ 8.14 கோடி ரூபாயாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தீயினால் சுட்ட வடு ஆறுவதற்கு முன்னரே வெள்ளத்தினாலும் பிற இயற்கைச் சீற்றங்களினாலும் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும், பயிர்களுக்கும் சேதம் ஏற்பட்டு அதனால் மக்கள் சொல்லொணாத் துயரத்தில் மூழ்கி விடுகின்றனர். எனவே, தீ விபத்துக்களைத் தடுப்பதும், தீயினாலும் பிற இயற்கைச் சீற்றங்களினாலும் பாதிக்கப்பட்டோரை மீட்டு அவர்களின் துயர் நீக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் தீயின் அழிவைக் குறைப்பதும் தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் முக்கிய குறிக்கோளாக இருந்து வருகின்றன.

2. மத்திய அரசினரால் அளிக்கப்படும் கடன், உதவித் தொகைகளை ஏற்றுக் கொண்டும் மத்திய அரசால் அங்கீகரிக்கப் பெற்ற நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் வசதிகள் மூலமாகவும் இம்மாநிலத்தின் நிதி நிலைமைக்குட்பட்டும் முடிந்த அளவு அதிகமான எண்ணிக்கையில் இம்மாநிலத்தில் தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதே அரசின் குறிக்கோளாகும். இம்மாநிலம் முழுவதும் 25 கி.மீ. தூரத்துக்கு ஒன்று வீதம் ஒவ்வோரிடத்திலும் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கு அரசு பெருமுயற்சி எடுத்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தீ விபத்துக்கள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புடைய தொழிற்சாலைகள் அல்லது குடிசைகள் நிறைந்த பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழகத்தில் புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டிய நகரங்களின் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒப்பளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நிதி நிலைமைக்கேற்ப ஒவ்வோராண்டும் தீயணைப்பு நிலையங்கள் தொடங்க அரசு ஒப்புதலளித்து வருகிறது.





3. சிறந்த நவீன தொழில் நுட்பம் வாய்ந்த புதிய ஊர்திகளையும் இதர தீயணைப்புச் சாதனங்களையும் வாங்குவதன் மூலம் இம்மாநிலத்தின் தீயணைப்புத் துறையை நவீனப்படுத்துவதற்கு அரசு பெரிதும் முயன்று வருகிறது. இதற்காக இந்தியப் பொது ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 1.41 கோடி கடனாகப் பெறப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டிற்கும் சில நவீன தீயணைப்பு சாதனங்கள் வாங்குவதற்கு இந்திய அரசு ரூபாய் 1.06 கோடி பொது ஈட்டுறுதிக் கழகம் மூலமாக அண்மையில் இம் மாநிலத்திற்கு ஒதுக்கியுள்ளது. இத் தொகையை பொது ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்றுக் கொள்ள அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

4. தீயணைப்புப் பணியாளர்களின் நலன் காக்க அரசு உரிய கவனம் செலுத்தி வருகிறது. கோட்டத் தீயணைப்பு உதவி அலுவலர் மற்றும் கீழ்நிலைப் பதவிகளிலுள்ள பணியாளர்களுக்கு சில இன்றியமையாத உணவுப் பொருட்கள் மலிவு விலையில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

5. தீயணைப்புத் துறையின் முக்கியப் பணிகளும் 1984–35 ஆம் ஆண்டில் இத்துறையின் சாதனைகளும் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன :—

1967 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித் துறை
யாக இயங்கிவரும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை இந்நாட்டி
லேயே நற்பணிகள் புரிந்துவரும் மிகப் பெரிய துறைகளுள் ஒன்
றாகவும் சீரிய திறன் வாய்ந்த துறைகளுள் ஒன்று என்ற நற்
பெயரையும் தொடர்ந்து நிலைநாட்டி வருகிறது. தீ விபத்துக்
களினின்று உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றுவதே
இத்துறையின் முக்கியக் குறிக்கோளாகும். தீ விபத்தினைத் தடுப்
பதும், தீயை அணைப்பதும் இத்துறையின் தலையாய பணியா[illegible]
னும், பிற வகையிலும் பல நிலைகளில் பொதுமக்களின் நலனுக்
காகப் பேருதவி புரிந்து சீரிய பணியாற்றி வருகிறது. பொருட்
காட்சிகளிலும், திருவிழாக்களிலும் தீத்தடுப்பு ஏற்பாடுகளை மேற்
கொள்வதுடன், சிதைந்த கட்டிடங்களின் இடிபாடுகளில் சிக்கிய
வர்களையும் ஆழ்கிணற்றில் வீழ்ந்தவர்களையும் வெள்ளம் அபா
யம் விளைவிக்கக்கூடிய பூச்சிகள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட
வர்களையும், மற்றும் இது போன்ற பிற இடர்களில் சிக்கிய
மக்களையும் கால்நடைகளையும் மீட்டு நற்பணி புரிந்து வருகிறது.
மிகப் பெரிய நகரங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களில் நோயா
ளர் ஊர்திகளையும் பராமரித்து வரும் இத்துறை, இவ்வூர்திகளின்

மூலம் நோயுற்றவர்களையும். காயமுற்றவர்களையும், உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு விரைந்து அழைத்துச் செல்ல உதவுகிறது. தீ விபத்து ஏற்படுவதைத் தடுத்தல், தீயணைக்கும் பணியைச் செய்தல் ஆகிய பணிகளுடன் இத்துறை பொது மக்களுக்கு அவசரக் கால இடருதவிப் பணியையும் செய்து வருகிறது. தீ விபத்துக்களால் மட்டுமன்றி, வெள்ளம், புயல், நிலநடுக்கம், கட்டிடம் இடிதல் போன்ற இயற்கைச் சீற்றங்களாலும் விஷக் குளவிகள். விஷப் பாம்புகள், வெறிநாய்கள் போன்றவைகளால் ஆபத்து ஏற்படும் போதும் மற்ற எல்லாவித விபத்துக்களின் போதும் உயிரையும் உடமைகளையும் பாதுகாப்பதில் தங்கள் சேவை முழுவதையும் இவர்கள் இலவசமாகவே அளிக்கின்றனர். விபத்துக்கள் ஏற்படும் இடத்திலேயே முதலுதவி அளித்தல், கொள்ளை நோய் மேலும் பரவாமல் தடுக்கும் வகையில் உடனடி மருத்துவச் சிகிச்சைக்காக நோயாளிகளை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுதல், காயமுற்றவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுதல் போன்ற பணிகளையும் தீயணைப்புப் படையினர் மேற்கொள்கின்றனர். அரசுக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள் பொதுமக்கள் கூடுமிடங்கள் முதலியவற்றிற்கு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை சென்று ஆய்வு செய்து தீ விபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது பற்றி அறிவுரை வழங்குவதும் இவர்களுடைய பொறுப்பாகும். தீ விபத்தின் போது எல்லாவிதமான உதவியும், நிவாரணமும் அளிப்பதில் இத்துறை தனித் தன்மையுடன் திகழ்கிறது. எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் தவறுதல்கள் காரணமாகத் தீ விபத்து ஏற்படுமென்று அஞ்சி சென்னை மாநகரிலுள்ள இல்லத்தரசிகளிடமிருந்து வரும் அவசர அழைப்புகளை மேற்கொள்வதுடன் அனைத்துச் சூழ்நிலைகளிலும் உதவி வேண்டுவோருக்கு இத் துறையினர் உதவி செய்கின்றனர்.

இத்துறையினர் இரவு பகலெனப் பாராது எந் நேரத்திலும் பொதுமக்களுக்கு உதவக் காத்திருக்கின்றனர். தொத்து நோய்கள் பெருவாரியாகப் பரவும் காலங்களில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இத்துறை பெரிதும் உதவி புரிகிறது. தேர்தல் காலங்களின் போதும் கலவரங்களின் போதும், பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போதும் காவல் துறையினருடன் இணைந்து பணியாற்றத் தீயணைப்புப் பணியாளர்களும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவ்வாறு பலதரப்பட்ட வகையில் மனிதப் பண்புடன் தொண்டாற்றுவதோடு இத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள், கீழ்க்கண்ட பல்வேறு சட்டங்களின் மூலம் தீயணைப்பு விதிகளைப் பின்பற்றி தொழிற்சாலைகளை ஆய்வுச் செய்யும் பணிகளை மேற்கொள்கின்றனர்.





| சட்டங்கள். | ஆய்வுச் செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை. |
| --- | --- |
| (அ) மெட்ராஸ் சினிமா ரெகுலேசன் ரூல்ஸ்.. | 118 |
| (ஆ) தி சினிமாட்டோகிராப் பிலிம் ரூல்ஸ் 1948 | 121 |
| (இ) பிளேசஸ் ஆப் பப்ளிக் ரிசார்ட் ஆக்ட் .. | 115 |
| (ஈ) மெட்ராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிப்பாலிடீஸ் ஆக்ட் அண்ட் சிட்டி முனிசிபல் ஆக்ட் | 433 |
| (உ) மெட்ராஸ் டிஸ்டரிக்ட் போர்ட் ஆக்ட் அண்ட் மெட்ராஸ் வில்லேஜ் பஞ்சாயத்ட் ஆக்ட் | 37 |
| (ஊ) பேக்டரி ரூல்ஸ் .. .. .. .. | 848 |
| (எ) ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டிடங்கள் | 1,524 |
| (ஏ) ஆர்ம்ஸ் ஆக்ட் மற்றும் ரூல்ஸ்-ன் கீழ் ஆய்வு செய்யப்பட்டவை .. .. .. | 362 |

### 6. நிருவாக அமைப்பு

இத்துறை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இம்மாநிலம் இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்று சென்னையையும், மற்றொன்று மதுரையையும் தலைமையிடமாகக் கொண்டு தனித் தனி துணை இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கீழ் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு நிருவாக மற்றும் செயல் பணிகளில் கோட்டத் தீயணைப்பு உதவி அலுவலர் உதவி புரிகிறார். அண்மையில் பல புதிய தீயணைப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டதன் காரணமாக, ஒரு கோட்ட தீயணைப்பு அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. படிப்படியாக தற்போதுள்ள மண்டலங்கள் மற்றும் கோட்டங்களை மேற்கொண்டு பிரிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக

ஏற்றவாறு இவ்வூர்தியில் தனித் துணை பாகங்கள் பொருத்தப் பட்டுள்ளன. இது போன்ற பணிகளுக்காக 1984 ஆம் ஆண்டில் இவ்வூர்தி கட்டணம் செலுத்தப்பட்ட 14 அழைப்புகளையும் 2 இலவச அழைப்புகளையும் மேற்கோண்டு இதற்கென ரூபாய் 4,344 ஈட்டித் தந்தது.

பல மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களின் போது தீத்தடுப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக 1980ஆம் ஆண்டு ''ஸ்நார்க்கல்'' என்ற, நவீன வசதிகள் கொண்ட ஓர் ஊர்தி இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னை மாநக ருக்கு வழங்கப்பட்டது. இப்புதிய ஊர்தி, சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் ஏற்படும் சில பெருந் தீ விபத்துக்கள் மற்றும் குடிசை தீ விபத்துக்களின்போது பங்கேற்று பணியாற்றுவதில் இத்துறைக்கு பெரிதும் உதவி புரிந்தது. துறை ஊர்திகள், சாதனங்கள் பெருமளவில் பழுதுறும் போது அவற்றைச் செப்பனிடுவதற்காக சென்னையில், மாநிலப் பணிக் களறியை இத்துறை பராமரித்து வருகிறது. மேலும் இத்துறை யின் மாநிலப் பட்டறையை புனரமைக்கும் முகமாகவும் இப் பட்டறை செம்மையாக இயங்கவும் ஓர் உதவிப் பொறியாளர் (தானியங்கி) பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அப்பதவி யில் நியமனம் செய்யப்படவிருக்கும் உதவிப் பொறியாளர் மேற் பார்வையின்கீழ் இம் மாநிலப் பட்டறை இயங்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

## 13. பயிற்சி

சென்னையில் உள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப் பள்ளி, நேரடியாக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தொடர்ந்து பயிற்சியளித்து வரு கிறது. இப்பயிற்சிப் பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலு வலரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு, அவரது பணிகளில் நிலையத் தீயணைப்பு அலுவலர் இருவரும் முன்னணித் தீயணைப்பு அலு வலர் இருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி வகுப்புகளில் சென்ற ஆண்டில் பயிற்சி பெற்றவர்களின்எண்ணிக்கை விவரங்கள் கீழே வருமாறு :—

| | | துறையைச் சார்ந்த வர்கள். | மற்ற வர்கள் |
|---|---|---|---|
| நிலையத் தீயணைப்பு அலுவலர் பயிற்சி. | | 13 | 2 |
| தீயணைப்போர் பயிற்சி | .. | 153 | 15 |
| தீயணைப்போர் ஓட்டி பயிற்சி | .. | 84 | .. |
| இயந்திர கம்மியர் ஓட்டி பயிற்சி | .. | 7 | .. |
| தீயணைப்போர் மறு பயிற்சி | .. | 88 | .. |



இந்த ஆண்டு நிலைய அலுவலர்கள்/பயிற்றுவிப்போர் பயிற்சி பெற நிலையத் தீயணைப்பு அலுவலர் இருவரும் கோட்ட அலு வலர் பயிற்சி பெற தீயணைப்புத் துறை துணை இயக்குநர் ஒரு வரும் நாகபுரி தேசிய தீயணைப்பு கல்லூரிக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். மேற்குறிப்பிட்ட மூவரும் வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்தனர்.

## 14. வெகுமதி

தீயணைப்புத்துறை அதிகாரிகளும் பணியாளர்களும் வீரச் செயல் புரிந்ததற்காகவும், அவர்களின் தன்னிகரற்ற கடமைப் பற்றுறுதிக்காகவும் குடியரசு தினத்தன்றும், சுதந்திர தினத் தன்றும் தீயணைப்புத் துறையினருக்கான குடியரசுத் தலைவரின் பதக்கங்களும். தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கங்களும் வழங்கப்படுகின்றன.

இவ்வாண்டில் வீரதீரச் செயல்களுக்காக முன்னணித்தீயணைப் போர் ஒருவருக்கும், தீயணைப்போர் ஒருவருக்கும் இந்தியக் குடி யரசுத் தலைவர் பதக்கமும், தன்னிகரற்ற பணிக்கான இந்தியக் குடியரசுத் தலைவர் பதக்கம் நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் இருவருக்கும், நிலைய அதிகாரி ஒருவருக்கும் (போக்குவரத்து) தீயணைப்போர் ஒருவருக்கும் வழங்கப்பட்டன.

தகைசால் பணிக்கான தமிழ்நாடு முதல் அமைச்சரின் காவல் பதக்கங்கள் நிலைய அதிகாரி ஒருவருக்கும் தீயணைப்போர் மூவ ருக்கும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புத் துறையினருக் கான பரிசு என்ற புதிய பரிசை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள் ளது. இப்பரிசு பொங்கலன்று வழங்கப்படுகிறது. இப்பரிசைப் பெறும் தீயணைப்போருக்கும், அவருக்குச் சமமான பதவியிலுள்ள வர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு, ஒருவருக்கு ரூ. 20 ரொக்கப் படியும், முன்னணித் தீயணைப்போருக்கும், அவருக்குச் சமமான பதவியிலுள்ளவர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ. 25 ரொக்கப் படியும் பரிசாக வழங்கப்படுகிறது. இப்பரிசு மொத் தத்தில் 120 பேருக்கு 1985 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் வழங்கப்படும். 1985 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளன்று 31 முன்னணித் தீயணைப்போர்கள், 8 இயந்திர கம்மியர் ஓட்டிகள், 38 தீயணைப்போர் ஓட்டிகள் மற்றும் 43 தீயணைப்போர்கள் ஆகிய 120 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புத் துறையினருக்கான பரிசு வழங்கப்பட்டது.

[1985 ஜூலை ?

செயல் திறனை அதிகரிப்பதற்காகச் செயற்படுத்தப்பட்ட இல
திட்டங்கள் :

i) குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்கள்

பெரும்பான்மையான தீ விபத்துக்கள் அடிக்கடி குடிசைப் ாகுதிகளில் ஏற்படுகின்றன. இதனால் பெரும் இழப்பு ஏற் படுகிறது. தீ விபத்து அடிக்கடி ஏற்படும் காலங்களில் பற்கோல், கூரைத் தீக்கொக்கி முதலிய எளிய தீயணைப்புச் சாதனங்களுடன் புறநகர் தீயணைப்பு நிலையங்களை குடிசைப் பகுதிகளில் ஏற் படுத்துவதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. தண்ணீரைச் சேமித்து வைப்பதற்காக வண்ணம் தீட்டப்பட்ட ஒவ்வொன்றும் 45 காலன் நீர் பிடிக்கும் 100 டிரம்களை இந்திய எண்ணெய் கழகம் வழங்கியது. இப்புறநகர் தீயணைப்பு நிலையங்களில் எந்நேர மும் தீயணைப்போர் இருந்தனர். அவர்கள் இப்பகுதிகளை விழிப்புடன் கண்காணித்து வந்தனர். தீயணைப்பதில் நிலையங்கள் மிகவும் உதவியாக இருந்ததால், சென்னை மாநகரில் இந்த ஆண்டில் குடிசைப் பகுதிகளில் தீ விபத்து ஏற்படுவது மிகவும் குறைந்து விட்டது. இது பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | | | தீயணைப்பு அழைப்புகள். |
|---|---|---|---|---|
| 1982 | .. | .. | .. | 386 |
| 1983 | .. | .. | .. | 362 |
| 1984 | .. | .. | .. | 291 |

(ii) கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியருக்குப் பயிற்சி.

தீ விபத்து அதிகமாக ஏற்படாத காலங்களில் தீயணைப்புத் துறை அதிகாரிகள், பணியாளர்களின் பணியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதப்பட்டது. அதன்படி இக்காலங் களில் அவர்கள் தங்கள் பகுதியிலுள்ள கல்லூரிகளுக்கும், பள்ளி களுக்கும் சென்று, தீயணைப்பு பற்றியும், தீ விபத்து ஏற்படாம லிருப்பதற்கு எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றியும் மாணவ, மாணவியருக்குப் பயிற்சியளிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இத்திட்டத்தினால் பள்ளிக் குழந் தைகள் இளம் வயதிலேயே தீயினால் ஏற்படும் அபாயங்கள் பற்றி அறிந்து கொள்ள இயலும். இதுவரை 8 கல்லூரிகள் மற்றும் 130 பள்ளிகளைச் சேர்ந்த மொத்தம் 57,203 மாணவர் களுக்கு தீயணைப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.



1985 ஜூலை 8]

16. தீயணைப்புத்துறை சேமநல நிதி:

துயருற்ற தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கு நிதியுதவி செய்யவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேமநல நிதி தொடங்கப்பட்டது. காசநோய், தொழுநோய், அல்லது புற்று நோயினால் அவதியுறும் பணியாளர்களுக்கோ அல்லது அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கோ அவர்களின் சத்துணவிற்காக வும், பணியாளர்களுடைய பிள்ளைகளின் உயர் கல்விக்கும், பணியாளர்களோ, அவர்களை சார்ந்தவர்களோ, இறக்க நேரிட்டால், அவர்களின் ஈமச் சடங்கு செலவிற்கும் இந்நிதியி லிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பணியாளர்கள் அவர்களின் பணிக் காலத்தில் இந்நிதியிலிருந்து உதவித் தொகை ஏதும் பெறாமல் ஓய்வு பெற்றால், அவர்களுக்கு அடையாள உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பணிக் காலத்தில் உதவித் தொகை ஏதும் பெறாதவர்களுக்கு அவர்கள் செலுத்திய மொத்த சந்தா தொகையில் மும்மடங்கு அல்லது ரூபாய் 150 எது குறைவோ அத்தொகை அடையாள நிதி உதவித் தொகை யாக தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேம நல நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 1984 ஆம் ஆண்டில் 17 ஓய்வு பெற்ற சந்தா தாரர்களுக்கு அடையாள நிதி உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது. வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,501.25 தீயணைப்புத் துறை சேமநல நிதியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 3,514. 1984 ஆம் ஆண்டில் உறுப்பினர்களி மிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த சந்தா தொகை ரூ. 29,147 1984 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து 174 உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகையின் மதிப்பு ரூ. 20,991. இந் நிதிக்கென அரசு ஆண்டு மானியமாக ரூ. 10,000 வழங்கியது.

17. நலன் :

கோட்டத் தீயணைப்பு உதவி அலுவலர் பதவி, அதற்கு கீழ்நிலைப் பதவிகளிலுள்ள பணியாளர்களுக்கு சில இன்றியமை யாத உணவுப் பொருட்களை காவலர்களுக்கு வழங்குவது போன்று அரசு மலிவு விலையில் வழங்குகின்றது. இத்திட்டம் 1–1–1981 முதல் அமுலுக்கு வந்தது. இதற்காக கடந்த இரண்டு ஆண்டு களில் அரசு செய்துள்ள செலவுத் தொகையின் விவரம் பின்வரு மாறு :—

| நிதி ஆண்டு | | | | செலவுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1983–84 | .. | .. | .. | 12.61 |
| 1984–85 | .. | .. | .. | 14.49 |

[1985 ஜூலை 8

(2) அனைத்து அலுவலர்கள், பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதியளிக்க வேண்டி முதற்கண் தீயணைப்புப் பணியாளர்களுக்கு ரூ. 40.5 இலட்சம் செலவில் உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த இடங்களில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மற்ற நகரங்களிலுள்ள பணியாளர்களுக்கும் படிப் படியாக குடியிருப்பு வசதி செய்து தரக் கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு தீயணைப்புத் துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சம்மந்தமாக அரசு அறிவித்த சலுகைகளின் விவரங்கள் இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

18. பொது :

அரசினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையின்படி திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு மற்றுமொரு வட்டாரம் ஏற்படுத்தப்படும். மேலும் ஒரு பெரிய கோட்டமான தென் ஆற்காடு—செங்கற்பட்டு கோட்டம் பிரிக்கப்பட வேண்டியுள்ளது. இது, இந்த ஆண்டு செயற்படுத்தப்படும். இந்திய அரசு அளித்துள்ள மாதிரி தீயணைப்புச் சட்ட முன் வடிவின் அடிப்படையில் சட்டமுன் வடிவு தயாரிக்கப்பட்டு நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிமுகம் செய்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சட்டமுன் வடிவு நிறைவேற்றப்படும்போது இத்துறையின் நிருவாக மற்றும் செயல் திறனில் பெருமளவில் முன்னேற்றம் ஏற்படுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறாக, தீயணைப்புத்துறை பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது.

V211.31 N85
N85-12-2
ஆவணக்காப்பக
136416
சென்னை-600 008.